என் சிறுகதை தொகுப்பு - கல்கி வெளியீடு

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

என் சிறுகதை தொகுப்பு - கல்கி வெளியீடு

யாதும் ஊரே ! யாவரும் கேளீர் !!

SELVARAJ

Raman
Kumbakonam

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

என் சிறுகதை தொகுப்பு - கல்கி வெளியீடு *Copyright © 2026 by selvaraj. All Rights Reserved.*

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

CONTENTS

ராமன் செல்வராஜ் xiii

Part I. Main Body

1. எந்த ஊரு சென்றாலும் அது நம்ம ஊரு போல வருமா ? 1
2. திண்ணையில் நடந்த டிஜிட்டல் டீடாக்ஸ்! 7
3. கடவுளைக் காண !! 11
4. "எதுவாகினும் நான்"! 15
5. ரகசியம் ஒன்று சொல்கிறேன் ! 22
6. அறிவு -ஆற்றல் இரண்டையும் பெறுவது எப்படி ? வாழ்க்கையை மாற்றும் எளிய பார்முலா ! 28
7. கந்தசாமி-கடவுள்-கண்ணதாசன் ; 33
8. சிறுகதை : புலம்பலால் வெளிவந்த உண்மை 37
9. தேவகியிடம் ஒரு கேள்வி ? 43

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

10. ஒரு நிமிடக் கதைகள் 2 ;1.ஆகச் சிறந்த காதல் 2.ஆகச் சிறந்த அரசியல் 47
11. 'மினி' கதை-"கர்ம வாதி" 51
12. 12.மனமே மாமருந்து : சிதைந்து போகும் உடலை செதுக்குவது எப்படி? 54
13.சிறுகதை : மக்களே ஆளும் அரசு(சர்)கள் 58
14.அனுபவ யாத்திரை 62
15.சிறுகதை : காலையில் ஒரு வசந்தம் 68
16.எல்லாம் நம் செயல் ! 72
17.முத்தான 2 கதைகள் !! 78
18.அசத்தல் கதைகள் 2 83
19.அவரே தமிழர் !! 89
20.இயல்பாய் இருப்பதே வாழ்வின் அர்த்தம்: BOYHOOD திரைப்படம் சொல்லும் தத்துவம் 96
21. பிரியம் தான் நிஜம் -உங்களைத் தேடி ஒரு பயணம் 101
22.சிறுகதை : சாமி குத்தமா?சதி திட்டமா? 105
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

23."நான் யார்"?- இந்த கேள்விக்கு விடை தெரிந்தால் உங்கள் வாழ்க்கை 113
24. இதய வாசல் 118
25.நானும் ஒரு அநாதை தான் !? 122
26.தொழிலில் வெற்றி பெற மேலிருந்து கீழ் பார்க்காதீர்கள்!இந்த 11 விஷயங்களை கீழிருந்து மேல் பாருங்கள்!! 130
27.வாங்க "டீ "சாப்பிடலாம் !! 133
28.சரக்கு சாரளம் ஆனது! 138
29. சிறுகதை : பாசப்பிணைப்பு 144
30. மாறனின் தாடி!தாடி வளர்ப்பதன் தத்துவம்! 148
31.காதலில் இடை சருகல் 152
32.ஆண் ஆதிக்க வெறி! ஏன் பெண்களுக்கு ஆளத் தெரியாதா? 162
33."ஏன் இந்த முரண்கள்"?-போர்களில் தொடங்கி ஆன்மீகம் வரை ஒரு அலசல் ! 167
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

34.மனம் என்னும் பெர்முடா முக்கோணம்-மாயை முறியடிக்கும் மந்திரம் 170
35."நான்"-என்கிற புரிதல்;உங்களை நீங்களே அறியுங்கள்!? 176
36.தனிமை உங்களை நெருங்கும் முன்...வாழ்க்கையை ருசிக்க தொடங்குங்கள்.. 180
37. "Placebo effect" என்றால் என்ன? 186
38.சிறுகதை : இப்படியும் நடக்குமா ? 190
39.கோபம் உங்கள் உடலையும் மனதையும் அளிக்கிறதா? இதோ stoicism தரும் தீர்வு !! 196
40.நீங்கள் வாழ்வது உங்களுக்கான வாழ்க்கையா? அல்லது மற்றவர்கள் வடிவமைத்த வாழ்க்கையா? 200
41.தேவை உள்ளவரை தான் உறவா? 207
42.நட ! போராடு !! 210
43. "கொசு"வாகிய "நான்".. 213

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

44.சிறுகதை: "காத்திருப்பு"-ஒரு வீரவணக்கம்! 219

45. சிறுகதை :நண்பேன்டா !! 223

46.சகிப்புத்தன்மை,பொறுமை,பெருமை-ஒரு ஆன்மீகப் பயணம் 230

47.102 முறை நிராகரிக்கப்பட்ட புத்தகம் காட்டிய வாழ்வியல் ரகசியம் 235

48.உலக அமைதி சாத்தியமா?-இந்திய தத்துவ ஞானி " ஜே.கே" தரும் விளக்கம் 241

49.உப்பு மூட்டை விளையாட்டு முதல் ஜெயகாந்தன் தத்துவம் வரை 70s பள்ளிப் பருவ நினைவலைகள் 248

50.சிறுகதை:மன்னிப்பால் மணக்கும் மனம் !! 253

51.அமைச்சரவையில் அதிரடி மாற்றம் 261

52.சிறுகதை: வாழ்க்கை எட்டிப் பார்க்கும் தூரம் தான்!! 267

53.அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்!! 273

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

54.ஜென் தத்துவம்:வார்த்தைகளுக்கு அப்பால் வாழ்க்கையை உணரும் ரகசியம் 281

55.பரம்பொருள் என்பது என்ன?பஞ்சபூதங்களின் ரகசியமும் செயற்கை நுண்ணறிவு எழுச்சியும்!! 288

56.கும்பகோணம்-கற்கள் பேசும் காவியம்;அரட்டைகளும் ,அழகியலும் 296

57.வாழ்க்கையின் மதிப்பையும், காலத்தின் அவசியத்தையும் மிக நுணுக்கமாகப் பேசும் 2 சிறுகதைகள் 303

58.."இயல்பாய் இரு": உங்கள் வாழ்க்கையை மாற்றும் ஜென் தத்துவத்தின் மந்திரம்! 311

59.கதை எழுதுவது எப்படி? ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் ரகசிய டைரிப் பக்கங்கள்! 316

60.புத்தகம் படிக்கும் பழக்கம் எப்படி உங்களை சிறந்த மனிதராக மாற்றும்? 323

61.சிறுகதை: புனர்ஜென்மம்! 331

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

62.அபத்தத்திற்கு அர்த்தம் தந்தவர்கள்! 339
63. "கேலி"யை "வேலி"யாக்கி 346

Appendix 355
47 வது புத்தக கண்காட்சி சென்னை 356
48 வது புத்தக கண்காட்சி சென்னை 358
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ராமன் செல்வராஜ்

kalki online

முகப்பு கல்கி மங்கையர் மலர்

ராமன். செல்வராஜ்

கோவில் நகரம் குடந்தையில் வசித்து வரும் இவர் விலங்கியலில் முதுகலை பட்டமும், வெகுஜன தொடர்பு மற்றும் பத்திரிகை துறையில் முதுகலை பட்டமும் பெற்றவர். தற்சமயம் EXNORA , 'உலக தமிழர் அறக்கட்டளை போன்ற அமைப்புகளில் தன் பங்கை ஆற்றி வருகிறார்.

இவரது இலக்கியத் தொடர்பு என்பது ஒரு கவிதை மூலமாக 'கவிநானூறு' என்கிற இணையதளத்தில் தொடங்கியது. தொடர்ந்து கட்டுரைகளும் வேறுசில தளங்களில் வெளியாகின.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

செப்டம்பர் -17- 2025 முதல் கல்கி குழுமத்துக்காக சிறுகதைகள், தத்துவங்கள், ஆன்மீக புரிதல்கள் ஆகியவற்றை எழுதி, பகிர்ந்து வருகிறார். இவரது கதை கட்டுரைகளை கல்கி ஆன்லைன் இதழ்களிலும் Motivation, பசுமை/ சுற்றுச்சூழல், மற்றும் கலை கலாச்சாரம், ஆன்மீகம், தத்துவம் ஆகிய பகுதிகளிலும் காணலாம்.

Connect:

Media Attributions

- Screenshot_2026_0730_063041
- Screenshot_2026_0730_063102

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

This book was produced using

PRESSBOOKS

Pressbooks provides educators, authors, & scholars with powerful tools for creating, adapting, & sharing their ideas.

Learn more about how you can use Pressbooks to publish beautiful and accessible books on the web and in print-ready formats at https://pressbooks.com/get-started.

This book was produced using

PB PRESSBOOKS

Pressbooks provides educators, authors, & scholars with powerful tools for creating, adapting, & sharing their ideas.

Learn more about how you can use Pressbooks to publish beautiful and accessible books on the web and in print-ready formats at https://pressbooks.com/get-started.

1.

எந்த ஊரு சென்றாலும் அது நம்ம ஊரு போல வருமா ?

முகப்பு கல்கி மங்கையர் மலர்

சோழர்களின் தொன்மையும் குடந்தை வீதிகளின் வரலாறும்!

பிரபஞ்சத்தின் இயக்கம் மற்றும் வாழ்வின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் ஆன்மிகப் பயணம்.

வாழ்வியல் தத்துவம் - Life philosophy, AI Image

ராமன். செல்வராஜ்

சோழநாடு சோறுடைத்து என்பது பழமொழி. எனவே சோறுடைத்த நாடு 'சோற நாடு'ஆகிப் பின், 'சோழ நாடா'கியது என்பர்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இங்கே செவி வழி கேட்ட, உணர்ந்த செய்திகளை பதிவிடுகிறேன்.

குடந்தையைச் சுற்றி உள்ள சிற்றூர்களின் பெயர்கள் அதற்கான காரணங்களை ஆராயும்போது ஒரு ஒற்றுமையை காணமுடிகிறது.

‘பழையாறை’:

சோழ நகரத்திற்கு ‘பழையாறை’ தலை நகரமாக விளங்கி இருக்கிறது. அதற்கு ஆதாரமாக அரண்மனைகாரத் தெரு , ஆரியப்படையூர், காவல்காரன் தெரு, பம்பப்படையூர் போன்ற பெயர் உடைய தெருக்களும், கிராமங்களும் கோயில் நகரை அலங்கரிக்கின்றன.

மேலும் சில விவரங்கள்:

‘மாதுளம் பேட்டை’ என்பது “மகாதளம் பேட்டை” என்ற சொல்லின் மருவுதல் எனக் கொள்ளலாம்.

மகா தளம் பேட்டை அருகில் ஆனைக்காரன்பாளையம் உள்ளது.

இதுவே யானை படைக்கான தளமாகவும் இருந்து இருக்கக்கூடும். எனவே, நம் முன்னோர்கள் பல படைகளை அமைப்பதற்கு மகா தளம் அமைத்து அதை “பேட்டை” என்று அழைத்தனர்.

மேலும் குடந்தையயின் வரலாற்று, தொழில் மற்றும் வணிகச் சான்றுடைய அடையாளங்கள்:

1. பழைய அரண்மனைத்தெரு,

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

2. கம்பட்ட (நாணயம், நிதி தொடர்புடைய) விஸ்வநாதர் தெரு,

3. பஞ்சுக்காரத் தெரு,

4. நெல்லுக்கடைத் தெரு,

5. வேம்படித் தெரு (பித்தளை வியாபாரம்)

6. காசுக்காரத் தெரு,

அந்தணர்கள் குடியிருப்பு பகுதிகள்

A. சோலையப்பன் தெரு,

B. பக்த புரித்தெரு,

C. வேத பாடசாலை போன்றவை.

அரசலாற்றங்கரையில் நெசவாளர்கள் குடியிருப்பு நடந்து இருக்கிறது.

அங்கே ‘சவுராஸ்டிரா மக்கள்’ அதிகம் வாழும் பகுதி. அவர்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்ததுதான் – 'ராஜ ராஜேந்திரப் பேட்டை கூட்டுறவு சங்க பண்டகசாலை.'

ஆக, சோழ மன்னர்கள் 'குடிகளாக மக்களை' பிரித்து அவர்கள் செய்யும் தொழிலை வைத்து குடி அமர்த்தினர் என்று சொல்லலாம்.

ஆரிய படையூர் என்ற சிற்றூரில் 'சோழன் மகாதேவின் சிலை' இருப்பதாக கூறுகின்றனர்.

உடையாளுர் – பட்டீஸ்வரம் போகும் வழியில் சில சிவன் கோயில்களை பார்க்கலாம் – பாழடைந்த நிலையில்!

அவைகள் யாவும் ஊர் 'பிரபுக்கள் மற்றும்

நிழக்கிழார்' வாழ்ந்து மறைந்த நினைவுச்சின்னங்கள்.

இது மந்திரிகள் போன்றோரையும் உள் அடக்கும். அவர்கள் ராஜராஜ சோழனிடம் (ராஜாவிடம்) பணியாற்றியதற்கு மரியாதை நிமித்தமாக உருவாக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

மேலும் பல உதாரணங்கள்:

இன்றும் ‘திருவாடுதுறை ஆதீனத்தில் உள்ள தென்னத்தோப்பில் குட்டிக் கோயில்களை பார்க்கலாம்’ – இவை யாவும் ஆதீன கர்தாக்கள் மறைவுக்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட நினைவுச் சின்னங்கள்.

****

வாழ்வியல் தத்துவம் - Life philosophy, AI Image

அறம் செய்ய விரும்பு

தென்னாட்டுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

நான் இருக்கிறேன்; ஆதலால் நான் நானாக இருக்கிறேன் – இருத்தலியல் கோட்பாடு.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நான் சிந்திக்கிறேன்; அதுவே நானாக இருக்கிறேன் – கருத்தியல் கோட்பாடு.

இந்த பிரபஞ்சம் (எல்லா உயிர்கள் உட்பட) பொருளால் ஆனது – பொருள்முதல் வாதம்.

வாழ்வியல் தத்துவம், கோட்பாடுகளை கடந்து நம்மிடையே வாழ்ந்து, நமக்கு அறத்தையும்; சத் சித் ஆனந்தத்தையும்; வாழ்கையை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் யார் என்றால்:-

ஏசு பிரான்,

முகம்மது நபிகள்,

புத்த பிரான்,

பிரம்மாக்கள், சிவ யோகிகள், பெருமாள் புகழ்பாடும் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதல் வள்ளலார் வரை...

Judaism, Sikhism, Jainism, zenism போன்ற இன்ன பிற மதங்களும் ஒன்றையே போதிக்கிறது; அது யாதெனில்...

சுயம் தவிர்

இதன்மூலம் நம் மூல மந்திரமான நாம் நம் கடமையை செய்வோம்;

1. குடும்பத்திற்கு,
2. சமூகத்திற்கு,
3. நாட்டிற்கு,
4. உலகிற்கு.

'பலன்' பற்றி பிரபஞ்சம் தீர்மானிக்கும்!

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இதற்கு பொருளோ, பணமோ தேவை இல்லை. மனம் ஒன்றே போதுமானது.

மனதில் சிறு மாற்றம் – 'மரங்களை பாதுகாப்பது' – அது நம்மை வாழ வைக்கும்.

இந்த பிரபஞ்சம் எல்லா உயிர்களாலும் இயக்கப்படுகிறது என்கிற உண்மையை உணர தவறினால் நாளை மனித இனம் அழிவை சந்திக்கும்.

இருப்போம்;

செயல் புரிவோம்;

எல்லாம் 'அவன்' செயல்.

அந்த 'செயல்' – நல்வினையாக மாற நம் சிந்தனையை ஒன்று இணைப்போம்.

உலக சகோதரத்துவத்தையும், உலகலாவிய அறத்தையும் போற்றுவோம்.

Media Attributions

- Screenshot_2026_0730_051411
- Screenshot_2026_0730_015613

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

2.

திண்ணையில் நடந்த டிஜிட்டல் டீடாக்ஸ்!

இப்படியும் ஒரு சம்பவம் நடக்கும் என்று நான் நினைத்து கூட பார்க்கவில்லை.

இப்படித்தான் எல்லோரும் சொல்லிக் கொண்டு தங்களை பற்றிய ஒரு ஆதர்சன கனவுகளை ஏற்படுத்தி வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அப்படி என்ன நடக்க முடியாதது நடந்து விட்டது?
நீ நினைத்துக் கூட பார்க்க முடியாதது என்று ஏதாவது இந்த உலகத்தில் உள்ளதா!
நாம் நம் மனதில் கோபம், காமம், பொறாமை, கர்வம் ஆகிய முகங்களை சுமந்து கொண்டு திரிகிறோமே? அது தெரியாமல் அப்படி என்ன நடந்து விட்டதாக என் நண்பன் சொன்னதை உங்களுடன் பகிர்கிறேன்.

ஏஐ-ஐ திறந்து ஆகிவிட்டது; Youtube அரட்டை, x- troll , இன்ஸ்டா உடான்ஸ், பேஸ்புக் லைக் எல்லாம் போர் அடிக்க இந்தப் பக்கம் வந்தான் நடேசன்.

அவன் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட பொது புத்தியுடைய, மாற்று சிந்தனை ஏற்படுத்தக்கூடிய ஒரு செயற்கை நுண்ணறிவு பெட்டகம் -ஏஐ முன் கையை சொடிக்கி, ‘என் பொறாமை, காமம், கர்வம், கோவம் ஒழிக்க என்னால் முடியவில்லை; அதற்கு மாறாக என்ன செய்தால் இந்த தீய குணங்களை குறைக்க முடியும்? என்று கேட்க......

அதற்கு அது ஒரு புத்தகமே எழுதி விடும் அளவிற்கு செய்தியை தர, அதை விட்டு ஒழித்து கூகுள் நோட்புக் LM language model முன் வந்து தன் விளக்கத்தைக் கேட்டான்.
அது ஒரு விளக்கம் தந்தது. அந்த விளக்கம் முற்றிலுமாக வேறுபாடாக இருந்தது. மேலும்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இத்தகைய மனித இயல்புகளை முற்றிலுமாக விட்டு ஒழித்தால் சித்து பிடித்து சித்தனாக வாய்ப்புள்ளதாக கூறியது.

உடனே அவன் என்னிடம் வந்தான். நான் அவனை என் வீட்டு திண்ணையில் உட்கார வைத்து அவன் செல்போனில் உள்ள எல்லா அப்ளிகேஷன்ஸையும் முழுமையாக அன்-இன்ஸ்டால் செய்து ஒரு யோசனை கூறி-னேன்.

அதாவது நீ தினமும் என் வீட்டுக்கு வர வேண்டும். நாம் திண்ணையில் உட்கார்ந்து ஒரு இரண்டு மணி நேரம் பேசுகிறோம். அவ்-வாறு ஜாலியாக பேசும் போது முடிந்தால் சைட் அடித்து அப்படியே ஒரு அப்ளிகேஷன்ஸ் போட்டு வாரத்திற்கு ஒரு முறை ஒரு சினிமா-விற்கு சென்று வருவோம். அப்படியே பக்கத்து வீட்டு அக்கப்போர்களை பேசி விவாதித்து ஒரு விவாத மேடையை நமக்குள்ளே உருவாக்கு-வோம்.

வீட்டில் டிவி முன் சீரியல் பார்ப்பதை விட்டு-விட்டு நம் உடலில் ஏற்படும் பல சீரியஸ் உபா-தைகள் பற்றி விவாதித்து அதற்கான தீர்வுகளை நமக்கு நாமே கண்டு ஆராய்ந்து ஒரு கலந்தாய்வு செய்வதாக எங்கள் இருவ-ருக்கும் ஒரு கருத்து உடன்படிக்கை ஏற்பட்டது.

இவ்வாறாக ‘செல்போன் அடிக்சன்’ என்று

சொல்லி வந்த என் நண்பனுக்கு ஆறுதல் கூறி அவனை கண்காணித்து வருகிறேன். N

முடிந்தால் நீங்கள் ஏதாவது அறிவுரை கூற-லாம்! நன்றி! வணக்கம்!!

Media Attributions

- Screenshot_2026_0730_063649

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

3. கடவுளைக் காண !!

ஆன்மிகம்

கடவுளைக் காண...

Aanmeegam

ராமன். செல்வராஜ் X

Published on: 20 Oct 2025, 10:30 am

பெரிய கல்யாண மண்டபம். விழா ஏற்பாட்டாளர்கள் 1000 நபர்கள் அமரும் அளவிற்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள். ஒலிப்பெருக்கி ஒளித்துக் கொண்டே இருந்தது. யார் கடவுள்? கடவுளைப் பற்றிய ஒரு புரிதல். எங்கே நாம் செல்கிறோம்? வாழ்நாள் பயன்தான் என்ன? என்பது போன்ற வாசகம் பொருந்திய விளம்ப-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ரங்கள் தெரு ஓரம் வரிசையாக வைக்கப்பட்டு இருந்தன.

இதை எல்லாம் பார்த்துவிட்டு இது, ஒரு ஆன்மீக நிகழ்வு என்று கருதி கட்டிடத்திற்குள் நுழைந்தான் அவன். சரியாக மாலை 6 மணிக்கு விழா ஆரம்பம் ஆகி இருந்தது. முன் இருக்கைகள் சில காலியாக இருந்ததால் அங்கு சென்று அமர்ந்தான். எல்லா சம்பிரதாயங்களும் முடிந்து நட்சத்திர பேச்சாளர் பேச ஆரம்பித்தார்.

தனக்கு கொடுக்கப்பட்ட ‘கடவுளைக் காண’ பற்றி பேச அழைத்த விழாக் குழுவினர் எல்லாருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். கடவுள் என்பது ஒரு பொருளா? கருத்தா? எண்ணமா? செயலா? அல்லது கற்பனையா!? என்று நமக்கு ஒரு ஐயப்பாடு, அவ்வப்போது நமக்கு எழக்கூடும். அல்லது இந்த விழா முடிந்த பிறகு, பல கேள்விகளுக்கு உங்களை நீங்களே உட்படுத்திக் கொள்வீர்கள். இது இருக்கட்டும்; முதலில் ‘உங்களைப் பற்றி’ எத்தனை பேருக்கு ஒரு புரிதல் இருக்கிறது என்று பார்வையாளர்களை நோக்கி கேள்வி எழுப்பினார்?“

அதாவது உங்கள் மீது நம்பிக்கை கொண்ட நபர்கள் முதலில் கை உயர்த்தவும். மேலும் நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு பதில் சொல்ல தயாராக இருப்பவர்கள் தைரியமாக கையை உயர்த்தலாம்” என்றார்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருக்கும் போது இவன் மட்டும் கையை உயர்த்தினான். எல்லோர் பார்வையும் அவனிடம் சென்றது. அவனை அழைத்தார். தயக்கமின்றி மேடைக்கு சென்றான். அவரை வணங்கினான். பிறகு எல்லோரையும் வணங்கினான்.

அந்த சொற்பொழிவாளர் பிறகு நிதானமாக அவனை அழைத்து மீண்டும் தன் இருக்கைக்கு செல்லுமாறு அனுமதித்தார். இதுதான் சூட்சுமம் என்று கூறிய ஆன்மீகவாதி பேச்சை தொடர்ந்தார். அதாவது எல்லோருக்கும் தெரியாத ஒன்றை அறிய ஆவலாக இருக்கிறது. அது பிறரிடம் இருந்து கிடைத்தால் வாங்கிக் கொள்ளலாம் என்கிற மனநிலையில் நாம் எல்லோரும் இருக்கிறோம். ஆகவே, நான் அவரிடம் உள்ள "நானை" என்னால் அறிய முடியாது. ஆகவே, அவரை திரும்ப அனுப்பி விட்டேன்.

மிகுந்த கரவோசம். விண்ணை பிளந்தது. ஆகவே இறைநிலை, இறைத்தன்மை என்பது ஒவ்வொருவருடைய நம்பிக்கை சார்ந்தது. உங்களை நீங்களே கேள்விக்கு உட்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கேள்விக்கு ஏற்ற பதிலை நீங்களே பெறுவீர்கள். அதுதான் அனுபவம்.

கடவுள் என்பது ஒரு பொருள் – (நம் உடல்

ஐந்து பூதங்களின் தொகுப்பு)
கடவுள் என்பது ஒரு செயல் (ஐந்து பூதங்களின் செயல்பாடு)
கடவுள் என்பது கருத்து (ஐந்து பூதங்களின் ஒரு வடி அமைப்பு)
கடவுள் என்பது எண்ணம் (ஐந்து பூதங்களின் தன்மை அறிந்து செயல்படுதல்)
ஆகவே, நண்பர்களே உங்கள் எண்ணங்கள் உங்களை மேம்படுத்தும். அவற்றை கோர்த்து மாலையாக அணிய உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள உண்மை தன்மை வெளிப்படும். அது அன்பாக, கருணையாக மாறும் போது பயம் நீங்கும் – பல கதவுகள் திறக்கும்.

அப்படியாக இந்த உலகில் நமக்கு தரிசனம் தந்து நம்மிடம் வாழும் கடவுள்கள் தான் காந்தியாக, ஏசுபிரான் ஆக, முகம்மது நபிகள் ஆக, புத்தர் ஆக, நம் நெஞ்சில் நீங்கா இடம்பெற்று உள்ளார்கள். நம் மனமே மார்க்கம். அறிவு கொண்டு சிந்தனை செய். இதயம் கொண்டு செயல்படு. வானம் கைக்கு எட்டிய தூரம் தான்.

Media Attributions

- Screenshot_2026_0730_064302

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

4.

"எதுவாகினும் நான்"!

Motivation

'எதுவாகினும் நான்'!

life philosophy

ராமன். செல்வராஜ்

Published on: 13 Nov 2025, 9:05 am

என்ன பேசுவது; எதைப் பற்றி பேசுவது; என்ன பொருளைப் பற்றி பேசுவது; ஒரே குழப்பம்!!

சற்று நேரத்தில் நிதானித்துக் கொண்டு எல்லோருக்கும் தெரிந்த ஒரு கருத்தை கேட்பவர்களுக்கு தெரியாதது போல நினைத்து, அவர்களுக்கு ஒரு புது செய்தியாக ஏன் சொல்-

லக் கூடாது என்று நினைத்தான் அருட்செல்வன்.

அவனுக்கு அழைப்பு அரை மணி நேரத்திற்கு முன்பு தான் வந்தது. அந்த நூற்றாண்டு அரங்கில் ஒப்பந்தப்படி வரவிருக்கும் நபர் உடல்நலக் குறைவால் வர முடியவில்லை என்பதால், இவனுக்கு அழைப்பு விடுத்து உடனே, தயாராக இருக்கச் சொல்லி விழா ஏற்பாடு செய்பவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் ஒரு முடிவுக்கு வந்தான் அவன்.

கார் வீட்டுக்கு முன் வந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அந்த அண்ணா நூற்றாண்டு நூல் நிலைய வளாகத்தை அடைந்து விடுவோம்.

கொடுத்த தலைப்பு – ‘எதுவாகினும் நான்’ அல்லது எந்த ஒரு சமுதாய புரிதலுக்கு உட்பட்ட தலைப்பை தேர்ந்து எடுத்து கொள்ளலாம் என விழா ஏற்பாட்டாளர்கள் கூறி இருந்தனர்.

அருட்செல்வன்:- தமிழ் முனைவர் பட்டம். தற்போது ‘இளைய சமுதாயம்’ – தொலைக்காட்சி ஊடகத்தில் ‘கதை கள தேர்வு’ உறுப்பினராகவும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் சிறுகதை, புனைவு என தன் திறமைகளை பல தளங்களில் வெளிக்கொண்டு வந்து இருக்கும் 27 வயது இளைஞர்.

மாணவர்கள் படை சூழ, விழா இனிதே தொடங்கியது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நன்றி!! வணக்கம்!!!
'நன்றி' – எனக்கு வாய்ப்பு அளித்த விழா நடத்துனர், மற்றும் பொறுப்பாளர்களுக்கு....
'வணக்கம்' – என்னை தெரிந்துகொள்ள நினைக்காமல், "சொல்ல வருகிற செய்தி என்ன?" என்பதை உள்வாங்க வந்து இருக்கும் சக மாணவ, மாணவிகளுக்கும்... மாணவ பெருஞ் செல்வங்களே! எனக்கு அளிக்கப்பட்ட அல்லது இடப்பட்ட, சொல்லப்பட்ட தலைப்பு – 'எதுவாகினும் நான்'.

இவ்வாறாக பேச அழைக்கப்பட்டவரின் உடல்நிலை சற்று பின்னடைவு காரணமாக நான் எதுவாகினுமாக மாறினேன்.

"கரவோசை மேல் எழும்ப; ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தான் அருட்செல்வன்.

"நண்பர்களே, நாம் நினைப்பது போல வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியும்; இது சத்தியம்; உண்மை; இந்த தைபூசத் திருநாளில் ஒரு உண்மையை சொல்கிறேன்.
நாம் பிறப்பதில் இருந்து இறக்கும் வரை நம்மிடையே ஒன்றி, உறவாடி, ஒற்றுமையாய் உளவி, திரும்பச் திரும்ப செயல்புரிந்து நம் எண்ணத்திற்கும், செயலுக்கும், இயக்கத்திற்கும் ஒரு வடிவம் கொடுத்து நாம் நம்மை அறியாமலே நம்மை ஆட்கொண்டு இருக்கும் ஒரு

ஜீவ காருண்ய இயக்கம் நம் அருட்பெருஞ் ஜோதியாக விளங்கும் நம்முடைய சுவாசம்.

அந்தப் பெரும் சக்தியை உணராமல் (நம்மை நாமே சீர்படுத்திக் கொள்ள முடியாமல்) புற நிகழ்வுகளில் அடிமைப்பட்டு, அதனால் ஆட்கொண்டு, அலைக்கடிக்கப்பட்டு நம் சுயத்தை இழந்து கொண்டு இருக்கிறோம்.

“மேலும் கூட்டத்தில் இருந்து பாராட்டுகள், கைத்தட்டல்கள். சற்று சுதாரித்துக் கொண்டு பேசலானான்.

“அதாவது நாம் நம்மை சுயமாக அறிவது நமக்கு 3 வயது முதல் என்று சொல்கிறார்கள். முழுமையாக அறிந்துகொள்ள காலம் ஒரு இடைவெளி.

அதற்குள் நாம் மரித்துப் போகிறோம் என்பது தான் நிதர்சனம்.

அப்படி இருக்க, நாம் ஏன் நம்மை வளர்த்து ஆளாக்கிய தாயை, தந்தையை, உறவினர்களை, நண்பர்களை ஆராதிக்க கூடாது?!

நான் சொல்வது என்பது இந்த உலகத்தில் யாரும் யாருக்காக கடமைபட்டவர்கள் கிடையாது. இது அன்பால் அரவணைக்கப்படுகிறது. இது ஈ, எறும்பு, முதல் மனித வளர்ப்பு வரை உள்ள ஒரு பிரபஞ்ச ஒழுக்கம்.

இந்த ஒழுக்கம் மனிதனுக்கு 100% சாத்தியம். ஆனால் அவன் தன் அறத்தை நினையாமல், சுயத்தை பற்றி புரியாமல், நலமே கருதி சுயந-

லமாக மாறிவிட்டதன் விளைவு.
யாரும் பிறந்தவுடன் மருத்துவராக, பொறியாளராக, ஆட்சியாளராக வந்து அவதானிப்பது இல்லை. எல்லோரும் சமூகம் சார்ந்து இயங்கி வருகிறோம்.

இதில் உணவு உற்பத்தி செய்பவனுக்கு ஒரு நியதி; உணவை பகிர்பவனுக்கு ஒரு நியதி; அதை உண்டு களிப்பவனுக்கு ஒரு நியதியா?
இங்கே அறிவு என்பது படிப்பு என்கிற மாயையில் இயங்குகிறது. இந்த மாயை ஒழிய ஞானக் கதவு திறக்கப்பட வேண்டும்.
எது அறிவு? இதுவரை புலப்படாததை பிரபஞ்சத்தில் உள்ளதை சமூக நலத்திற்கு கண்டுபிடித்து பயன் அளிக்கிறது.
உதாரணம்: இன்று உள்ள நவீன மயமாக்கப்பட்ட கருவிகள் மருத்துவ மற்றும் மற்ற பிற எல்லா சேவைகளையும் உள் அடக்கும். eg: கணினி;
எது ஞானம்? எதையும் அறிவு கொண்டு சாதித்து விடலாம் என்று நினைத்து செயல்படும் போது ஏற்படும் பெரிய ஆபத்தில் இருந்து காப்பது ஞானம்.
விதி இயற்கை சார்ந்து இயங்குவது;
ஞானம் கர்மம் சார்ந்து இயங்குவது;
கர்மம் தர்மம் சார்ந்து இயங்குவது;
தர்மம் செயல் சார்ந்து இயங்குவது;
செயல் கருத்து சார்ந்து இயங்குவது;

THIS BOOK IS PRODUCED WITH PRESSBOOKS

கருத்து எண்ணம் சார்ந்து இயங்குவது;
எண்ணம் உடல் சார்ந்து இயங்குவது;
உடல் உயிர் சார்ந்து இயங்குவது;
உயிரே ஜீவன்; ஆதி; அங்கம்.
நான் இப்போது மைக் (mike) பிடித்து அறிவாளியாக நினைத்து கேட்பவர்களுக்கு மட்டும் இந்த உரையானது, என்னால் ஆகிறது என்று நினைக்கும் போது அது சூன்யமாக மாறுகிறது.
என் அறிவை ஞானம் கொண்டு பகிரும் போது அது ஒரு உணர்வாக, ஒரு தன்மையாக மலர்கிறது.
இப்படித்தான் நாம் நம் கர்மாவை ஞானம் கொண்டு மாற்ற வேண்டும். அது நாம் நினைத்தால் தான் முடியும். அங்கே அறிவு பகிரப்படும்.
அது ஆனந்தமாக, பெரிய ஆனந்தமாக, சத், சித், ஆனந்தமாக இந்த உலகை ஆட்கொள்வது.
அப்படித்தான் இந்த உலகை பிரபஞ்ச சக்தி கொண்டு அதை உணர்ந்த நம் சித்தர்கள், ஞானிகள், புலவர்கள், பாடல்கள், இலக்கியங்கள் என படைத்து சென்று உள்ளனர்.
ஆக படிப்போம்! பகிர்வோம்!
நாம் நாமாக எல்லாம் வல்ல ஜோதியை வழிபடுவோம்.”

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“வணக்கம”கூறி விடை பெற்றான் – அருட்செல்வன்.

Media Attributions

- Screenshot_2026_0730_065020

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

5.

ரகசியம் ஒன்று சொல்கிறேன் !

கல்கி

ரகசியம் ஒன்று சொல்கிறேன்...

universe

ராமன். செல்வராஜ்

Published on: 17 Nov 2025, 3:05 pm

நாமே பரம்பொருள் !
நாமே கடவுள் !
நமக்குள்ளே
நம்அமைதியை தேடுவோம் !
அந்தத் தேடுதல்,
நமக்கு அமைதியை,

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கொடுக்கும்.
நம்மை பிரிந்தவர்கள்,
எங்கேயும் போகவில்லை.
நம் சிந்தனையில் ;
நம் செயலில் ;
நம் விளைவில் ;
நம் அனுபவத்தில் ;
நம் அனுமானத்தில் ;
நம்மை வழிநடத்தி
நம்மை முடக்காமல்
முன்னேற வைப்பவர்கள் .
நாமே பரம்பொருள் !
நாமே கடவுள் !!
ரகசியம் ஒன்று உங்களுக்கு சொல்கிறேன்.

நமக்கு உள்ளே செல்ல செல்ல நம்மை நாம் ஒரு பொருளாக , செயலாக, உயிராக , இதன் ஊடாக மனிதனாக நினைக்கிறோம்.

எதுவும் நம்மால் முடியும் என்கிற சிந்தனை பெரிது அல்ல.

என்ன அதிர்ச்சியாக இருக்கிறதா?
ஆம் ! அது தான் உண்மை .
அந்த உண்மை இது தான்.
நாம் பிறப்பது தெரியாமல் பிறக்கிறோம்.
அதற்கு பெற்றோர்களின் அறவனைப்பு காரணம் ஆகிறது.
அதற்கு மேலே இந்த உலகில் வாழ , வழி தேட இந்த மனித சமுதாயம் நமக்கு பல வகையில்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உதவிக் கொண்டு தான் இருக்கிறது.
இங்கே யாரும் யாருக்கும் அடிமை இல்லை. ஆனால் எல்லாம் சரியாக இருக்கிறாக நினைத்து நமக்கு நாமே ஒரு கடிவாளம் போட்டுக் கொள்கிறோம்.
‘எல்லாம் என்னால்’ என்று நினைத்து
இந்த நாடு,
இந்த வீடு,
இந்த தெரு,
இந்த குடும்பம்
என வகைப்பட்டாலும் , எந்த வகைமைக்கும் கட்டுப்படாத ஒரு
புயல்,
காற்று,
மழை,
சுனாமி,
தீ,
காட்டுத் தீ
தூரத்தில் நடக்கும் போது தெரியாது. பார்த்து பரிதப்பது நமது சுபாவம்.
அது நமக்கு நடக்கும் என்று தெரியாமல் போவது பாவத்தினும் பாவம்.
அந்த பாவம் அனுபவப்பட்டவனுக்கு மட்டும் தான் தெரியும்.
பணமே , காசோ மனித மனங்களுக்கு ஆறுதல் இல்லை.....
அவனுக்கு அவனே சாட்சி ;

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அந்த சாட்சி இந்த சமுதாயம் வளர்த்து எடுத்த அடையாளம்.
அடையாளம் என்பது ?
ஒரு உடலுக்கு தேவை உணவு மட்டும் அன்று ; மாறுதலாக அது வெளியேறவும் வேண்டும்.
அந்த வீடு அமைந்து இருக்கும் கீழே ஒடும் சாக்கடை ஒழுங்காக , நேர்த்தியாக செல்ல என்ன நேர்மையை நாம் கடை பிடிக்கிறோம் ??
நாடு நலம் பெற ;
வீடு சுகம் பெற ;
பெற்ற பிள்ளைகள் வளம் பெற ;
கொடு ; உழைப்பை கொடு ;
உன் உழைப்பே உனக்கு நீ கொடுக்கும் சன்மானம்.
அந்த சன்மானம் நம் துப்புறிவு பணியாளர்கள் , நம் பணியாளர்கள் என விரிந்து போர் புரியவர்கள் வரை நம்மை விழும்பு நிலையில் இருந்து விழித்து பார்க்க வைத்து நம்மை ஆளாக்கியவர்கள்.
இந்த உலகம் பிரபஞ்ச சக்தியால் இயங்குகிறது.
காற்று மாசுபடாமல் இருக்க ;
நல்ல நீர் நிலைகள் உண்டாக,
நிலங்களில் வளம் பெற,
நாடும் வீடும் செழிக்க ,
மரங்கள் வனங்களாக மாற,
நாம் என்ன செய்தோம் ;

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

செய்து கொண்டு இருக்கிறோம்.
பார்ப்பதும், படிப்பதும், படித்து உணர்வதும் தான் அறிவு என்றால் ஏன் இந்த நிலை .....
மனிதனின் மனதில் கோளாறு,
குணம் கெட்டு விட்டது,
அவசர கதி போராட்டம்.
பூமியின் சுரண்டல் ;
நாம் சுரண்டலாக மாறசுனாமி வழி வகுக்கும்.
இங்கே ஆன்மா, மனசு, அறிவு, சிந்தனை , செயல் , விழிப்புணர்வு ,மனம் எல்லாம் தாண்டி ஒன்று செயல் படவேண்டும்.
அது தான் பேச்சு வார்த்தை;
பேசுவதை கேட்பதும்,
பொறுமையாக இருப்பதும்,
நல்லது, கெட்டது ஆராய்வதும் மனித பண்பு எனில் அதை கடை பிடிப்போம்.
சகிப்புத் தன்மை என்பது அடிமைத்தனம் இல்லை.
பிறரிடம் அதை கடத்துவது.
இந்த சகிப்புத் தன்மை பெண்மையிடம் இல்லை என்றால் ஆண்மை அழிந்து போய் இருக்கும்.
பெண்மை என்பது பால் சார்ந்து மட்டும் இல்லை.
அது எல்லோரும் கடைபிக்க வேண்டிய ஒரு தர்மம்.
தர்மம் தலை காக்கும்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

காக்கட்டும் .நம்புவோம்.
நடப்போம்.நன்றியுடன்,
நாள் தோறும்...

Media Attributions

- Screenshot_2026_0730_070748

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

6.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அறிவு -ஆற்றல் இரண்டையும் பெறுவது எப்படி ? வாழ்க்கையை மாற்றும் எளிய பார்முலா !

Motivation

அறிவு - ஆற்றல்... இரண்டையும் பெறுவது எப்படி? வாழ்க்கையை மாற்றும் எளிய ஃபார்முலா!

Book reading

ராமன். செல்வராஜ்

Published on: 24 Nov 2025, 6:01 am

அறிவா?... ஆற்றலா?

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

படித்தால் அறிவு வரும்!
பழகினால் ஆற்றல் பெருகும்!
ஆக படிக்க வேண்டும்,
பிறகு பழக வேண்டும்.
எதைப் படிப்பது...
ஏன் படிக்க வேண்டும்...
எதற்கு படிக்க வேண்டும்...
எங்கே படிப்பது...
எப்போது படிப்பது...
யாரைப் படிப்பது...
இப்படி கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தால் அறிவு வளரும்...
ஆனால் ஆற்றல் பெற்றால்தான் நாம் நாமாக இருக்க முடியும்.
அதற்காக எல்லா அனுபவங்களையும் ஒருவரால் ஒரு பிறவியில் பெற முடியாது. ஆகவே, பிறர் படித்து, புரிந்து கொண்டு பகிர்ந்த புத்தகங்களை நாம் படிக்க படிக்க, நம் செயல்திறன் பல மடங்கு அதிகமாகும்.

அங்கே நம்முடைய மனம் ஒரு வழியை காட்டும்; காட்சிகள் தென்படும்; பாதைகள் புலப்படும்; பயணங்கள் தொடர்கதையாக மாறும்... வாழ்வு சிறக்கும்... பிறர் வாழ்விற்காக போராட தோன்றும்.

அந்தப் போராட்டம் முதலில் நம்முள் நிகழும். நம் கற்பனை சிறகுகள் விரியும். பறக்கும் பரவசம் காணும். காலம் நம் கையில் வசப்ப-

டும். ஆக படிப்பை ஏணி ஆக பயன்படுத்த வேண்டும். நம் எண்ணங்களை சீர் அழிக்கும் எரிமலையை களைய வேண்டும்.

முதல் படி: சமுதாய ஊடகங்களை பயன்படுத்தும் போது ஒரு கால அளவை மேற்கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் பண்பாளர்களுக்கு பஞ்சம் இல்லை. பஞ்சம் மக்களின் மனதில் இருக்கிறது. மான்பு, அறம் போன்ற நீதிகள் நிலைக்க படிக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு ஒரு பக்கம்... மக்களை மயக்க வல்லது பேச்சு.

மக்கள் உணர்வுகளின் ஒரு தொகுப்பு. காட்சிகள் மக்களை சிந்திக்க வைக்கவும் பயன்படும்... சந்தி சிரிக்கவும் வழிகோலும்.

ஆனால் ஒருவர் தனக்கு விரும்பிய புத்தகத்தை படிக்கும் போது, நின்று, நிதானமாக, கண்டு களித்து அதனுடன் உறவாடி பின் பிரியா விடை கொடுப்பார்.

திரும்ப திரும்ப அந்த புத்தகம் அவரிடம் பல புதிய கதவுகளை திறந்து பல நல்ல வழிகளுக்கு அழைத்துச் செல்லும்.

இதைத்தான் கவிஞர் கண்ணதாசன்...

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்...
தெய்வம் ஏதுமில்லை...
நடந்ததையே நினைத்திருந்தால்...
அமைதி என்றுமில்லை...என்கிறார்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இருப்பதைக் கொண்டு இல்லாதவனுக்கு அளித்து, இன்பமாய் வாழ புத்தகம் ஒரு திறவு-கோல்.

புத்தகமே கடவுள்...

Media Attributions

- Screenshot_2026_0730_071118

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

7.

கந்தசாமி-கடவுள்-கண்ணதாசன் ;

Motivation

கந்தசாமி - கடவுள் - கண்ணதாசன்!

Kandasamy, God, Poet Kannadasan

ராமன். செல்வராஜ்

கந்தசாமிக்கு ஒரு கனவு வந்தது. அந்த கனவில் கடவுள் வந்தார். அந்த கனவில் கடவுள் கந்தசாமிக்கு “என்ன வேண்டும் – கல்வியா? செல்வமா? வீரமா?” என்றார்.

‘சரஸ்வதி சபதம்’ பாடலை எழுதிய கண்ணதாசன் தான் கடவுள் உருவத்தில் வருவதாக

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நினைத்தான்.
அப்போது அவனுக்கு ஒரு புதுக்கவிதை தோன்றியது.
“வறுமையால் படிப்பை நிறுத்திவிட்டனர்.எதிர்வீட்டு லட்சுமியும் சரஸ்வதியும்.”
இப்போது கடவுள் மறைந்து கண்ணதாசன் வந்தார்.
உடனே கந்தசாமி, கண்ணதாசனிடம், “கவிஞரே! எனக்கு ஒரு ஆலோசனை சொல்லும்! நீ கடவுளுக்கே கட்டளை இட்டவன்; அந்த கடவுளே இப்போது என்னிடம் வந்து இவ்வாறு கேட்கிறார்; இந்த சந்தர்ப்பத்தை நான் நழுவ விட்டால் நான் வாழ்க்கையை வாழ தெரியாதவன் ஆவேன்! என் செய்வது!?” என்று கோட்டார்.

“சபாஷ்! உன் புத்தியை பாராட்டுகிறேன்; ஆனால் ஒன்று, வரம் பெற்ற பிறகு என்னை மறந்து விடு” என்றார் கவிஞர்.
“அது எப்படி கவிஞரே? கவிஞர் என்றால் கண்ணதாசன் என்று தமிழர்கள் எல்லோருக்கும் தெரியும். உனக்கு மரணம் இல்லை என்பதை பாட்டிலும் பாடினாய். அதன் படி பல சங்க தமிழையும், அகநானூறு, புறநானூறு வாழ்வில் தந்துவங்களையும் பாடல்களாக எழுதி என் போன்ற பாமர மக்களையும் உள்ளத்தால் கவர்ந்த கள்வன் நீ அல்லவோ? எப்படி உன்னை மறப்பது?” என்று கேட்டார்.

உடனே கவிஞர் "அது சரி, கடவுள் ரொம்ப நேரம் வெயிட் பண்ண மாட்டார் – உடனே இவ்வாறு கேட்டு விடு! அதாவது, ஒவ்வொரு பிரதி திங்களும் எனக்கு ஒரு நாளாக கழிய வேண்டும்!" என்று ஆலோசனை கூறினார்.

கந்தசாமிக்கு பொறுக்கவில்லை. "என்ன சொல்கிறீர்கள்? சுத்த தமிழில் பேசினால் அவர் (கடவுள்)குழும்பி விடுவார்? வரம் கிடைக்க தாமதம் ஆகும்!" என்றார் கந்தசாமி.

கவிஞரும், "ஆகட்டும். நீ, ஒவ்வொரு பிரதி திங்களும் எனக்கு ஒரு நாளாக கழிய வேண்டும்! என்று கேட்டால், ஒவ்வொரு திங்கள் முடிய மற்றவர்களுக்கு 'ஏழு' நாட்கள் ஆகும் போது உனக்கு ஒரு நாளாக கணக்கிடப்பட்டு பெரு வாழ்வு வாழலாம்." என்று சொன்னார்.

அதை கேட்ட கந்தசாமி "அய்யோ! அது கொடுமையிலும் கொடுமை! என் பேரன்கள், பேத்திகள் வளர்ந்து என்னை தாத்தா என்று கூப்பிடுவதற்கு பதிலாக நண்பா என்றும் , Bro என்றும் அழைப்பார்கள். அதற்கு நான் இயற்கையாக வாழ்ந்து மடிவதே மேல் என்றான்!"

"ஆகா! இதைத் தான் கடவுளும் எதிர்பார்த்து இருப்பார்" என்று சொல்லி மறைந்தார் கவிஞர்.

கந்தசாமிக்கு இப்போது புரிந்தது நாம் வாழ்வது AI உலகம். இதில் கண்ணால் பார்ப்பதும் பொய்! காதல் கேட்பதும் பொய் ! தீர விசாரனை

செய்தாலும் கிடைப்பது பொய்யாக தான் இருக்கும். ஆக, ‘சிவனே என்று சர்வ காலமும் காலத்தை கணக்கிடாமல், கடமையை ஆற்று-வோம்’ என்று கந்தசாமி உணர்ந்தான். கனவு கலைந்தது; கவலைகள் மறைந்தன.

கண்ணதாசனுக்கு நன்றி!

Media Attributions

- Screenshot_2026_0730_071418

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

8.

சிறுகதை : புலம்பலால் வெளிவந்த உண்மை ....

கல்கி

சிறுகதை: புலம்பலால் வெளிவந்த உண்மை...

old lady selling keerai and bharathi dasan

ராமன். செல்வராஜ்

“அவன் உறங்கட்டும்; அவனை சற்று உறங்க விடுங்கள். அவன் நினைவுகள் அவனை ஆசுவாசப்படுத்தட்டும்.

“இப்படியாக அவனை பார்த்த அந்த மருத்துவர்

THIS BOOK WAS REPRODUCED WITH PRESSBOOKS

அவனின் பெற்றோரிடம் கூறிக் கொண்டிருந்தார்.
அப்படி என்ன அவனுக்கு ஆனது என்பதை பற்றி அவனுடைய பெற்றோர் புலம்பி கொண்டு இருந்த நிலையில், மருத்துவர் ஒரு முடிவுக்கு வந்தார்.
பிறகு பெற்றோரிடம் விசாரித்தார்.
அவர்கள் அவன் தூக்கத்தில் ”கீரை, கீரை, கீரை” என்று புலம்புகிறான் என்றனர்.
‘தம்பி எந்த ரூம்ல தூங்குவார்? எத்தனை மணிக்கு தூங்குவார்? ஏதாவது படித்துக் கொண்டிருப்பாரா?’...
இப்படியாக பெற்றோர்களிடம் கேள்விகளை கேட்டுவிட்டு அதற்கான பதிலை நாளை கூறும்படி சொல்லி சென்று விட்டார் !
பெற்றோர்களுக்கு அவன் படிக்கிறான் என்பது மட்டும்தான் தெரியும். எதை படிக்கிறான் என்பதை பற்றி தெரிவதற்கு வாய்ப்பில்லை; காரணம் அவர்களுக்கு ஒரே குறிக்கோள் தன் பிள்ளை ஒரு மருத்துவராக வேண்டும் என்பது மட்டுமே!

மருத்துவர் அடுத்த நாள் அவன் பெற்றோரிடம் “கொரியன் தமிழ் சங்கம்” நடத்திய உலகலாவிய சிறுகதை போட்டி 2025ல் வெளிவந்திருந்த கதையை பற்றி சொல்லிவிட்டு, அதற்கு கீழ் ‘பிரபு தாசன்’ என்கிற அந்த கலைஞனை பற்றியும் அவன் புகைப்படத்தை-

யும் பெற்றோரிடம் காட்ட, அவர்களுக்கு மயக்கம் தெளிய அரைமணி நேரம் ஆகியது.

பிரபல வார இதழ் ‘கல்கி’ தன் பிரசுரத்தில் ‘Motivation’ என்கிற பக்கத்தில் இந்த கதையைப் பற்றிய ஒரு ‘Review’ பதிவு செய்ததையும் காட்டினார்.

*****************அதை இங்கே காண்க...

பச்சைக்கீரை, கரிசலாங்கண்ணி, மணத்தக்காளி, பொண்ணாங்கண்ணி, முளைக்கீரை...
முளைக்கீரை, பச்சைக்கீரை, மணத்தக்காளிக் கீரையோ, கீரை, கீரை...

இப்படி சொல்லிக் கொண்டே போகும் ஒரு வயது முதிர்ந்த பாட்டியை தினமும் நடைப்பயணத்தில் எதிர்கொள்வது இயல்பாக அமைந்தது.

அன்று காலை 7 மணி. என் வீட்டிற்கு திரும்பும் போது அந்த கீரை அம்மாவும் நானும் ஒருசேர நடந்து வந்தோம்.

ஒரு 50 அடி சென்ற பின், ஒரு வீட்டின் மதில் சுவரில் தன் கூடையை தாங்கலாக வைத்தார்.

இதுதான் சமயம் என்று, என் விவாதத்தை தொடங்கும் முன், அந்த பாட்டியிடம் இருந்து 3 கீரை கட்டை ரூபாய் 60 கொடுத்து வாங்கிக் கொண்டேன்.

“பாரம் குறைந்ததா?” என்று ஆரம்பித்தேன்.

“இதில் 15 கிலோவிற்கு மேலே என் முதலாளி ஏற்றி வைத்து இருக்கிறார்! அங்க, அங்க

நின்னு சற்று இளைப்பாறிய பின் என் வியாபாரத்தை தொடர்ந்து கொண்டு இருக்கிறேன்," என்றார்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"மாத்தூர்." (இது குடந்தையில் இருந்து 5 கிலோ மீட்டர் இருக்கும்)

அங்கு உள்ள அந்த நிலக்கிழார் தன் வயலில் விளைந்த விளைச்சலை வியாபாரத்திற்காக இந்த பாட்டியிடம் கொடுத்து இருக்கிறார் என்பதை அறிந்தேன்.

"வயது...?"

"அது என்ன... 60-க்கு மேலத்தான் இருக்கும்."

"சரி; இதில் எவ்வளவு ரூபாய்க்கு கீரை இருக்கும்?"

"ரூபாய் 2000 முதல் ரூபாய் 2500 வரை..."

"இன்னும் எவ்வளவு தூரம் நடப்பீர்கள்?"

"மாகமகம் குளம் வரை..." (இது செல்ல இன்னும் 8 கி.மீ செல்ல வேண்டும்)"

ஆக நீங்க ஒரு நாளைக்கு சுமார் 13 to 15 கி.மீ நடக்குறீங்க?"

"அதெல்லாம் எனக்கு தெரியாது!"

"அப்புறம்?""மணி 11 அல்லது 12 மணிக்கு எல்லா கீரையும் விற்ற பிறகு (சில சமயம் தங்கிவிடும்) டவுண் பஸ் பிடித்து மதியம் 2 மணிக்கு மாத்தூர் சென்று விடுவேன்.

அங்கே போய் தான் சாப்பாடு...

"நெஞ்சம் கன கனத்தது...

தினமும் 10000 அடி நடந்தால் மன அழுத்தம், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், மூட்டு வலி, இன்னும் பிற வியாதிகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள பகிரப்படும் செய்தியை இந்த அம்மையார் அறிந்து இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் அந்த வாய்ப்பு வரமாக நெளிந்த உடலுடன், தினமும் தன் உழைப்பை மூலதனமாக கொண்டு செயல்படும் இந்த 65 வயது பாட்டியின் தேகமே ஒரு சான்றாக இருந்தது.

நான் நடந்து செல்ல எனக்கு வேண்டிய விட்டமீனையும், தாது சத்துக்களையும் (கீரை) கொடுத்து விட்டு இயற்கை தந்த அந்த சூரிய ஒளியில் தன் தேகத்தை மிளிர வைக்கும் அந்த 'மாதா' என் குடும்ப விளக்கு.

அந்த 'மாதாவின் குரல்' என் தேசிய கீதம் என்பேன்!

“கீரை... கீரை... பச்சைக்கீரை, கரிசலாங்கண்ணி, மணத்தக்காளி, பொண்ணாங்கண்ணி, முலைக்கீரை...

“நகர்ந்தாள் அந்த அம்மையார்.

அந்த ஒலி இன்றும் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

வீட்டில் பேரனோ, பேத்தியோ அந்த ஒலியை நம்பி காத்துக்கொண்டு இருப்பது நிச்சயம்.***************

இனி பெற்றோர் 'பிரபு தாசன்'னை பற்றி கவலைப்பட தேவை இல்லை.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_071638

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

9.

தேவகியிடம் ஒரு கேள்வி ?

மங்கையர் மலர்

தேவகியிடம் ஒரு கேள்வி...

women in social media

ராமன். செல்வராஜ்

Published on: 11 Dec 2025, 4:50 pm

தேவகி, ஒரு சமூக செயல்பாட்டாளர்; எழுத்தாளர்; ஓவியர் என்று பன்முகத்தன்மை கொண்டவர்.

அவருக்கு இப்போது வயது 80 ஆகிறது. இன்றும் அவரை சந்தித்து நேர்காணல் காண, காட்சி ஊடகங்கள் காத்து இருக்கின்றன.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அவருடைய பேச்சு இப்போது அதிகம் பகிரப்-பட்டு வருகிறது.
ஒரு நிருபர் அவரிடம் பேட்டி காணும் போது:
“மேடம், நீங்கள் சமூக அக்கறை கொண்டவர்; பெண்கள் விஷயத்தில் குரல் கொடுக்கத் தவறியது இல்லை. அது அவர்களுடைய ‘உடையைப் பற்றியோ, மதரீதியான தடைகள் பற்றியோ’, ‘அடிப்படை நீதி’ எல்லா மனித குலத்திற்கும் பொருந்தும் என்று பேசிவந்து உள்ளீர்கள்.”
என்னுடைய நேரடியான கேள்வி...
நடிகைகளும், அவர்களைப் பின் தொடர்ந்து பெண்கள் (பள்ளி, கல்லூரி உட்பட) தங்களை கேலிப்பொருளாகக் காட்டிக் கொண்டு, முகநூ-லிலும், இன்ஸ்டாகிராமிலும் பகிர்ந்து வரு-வதை எப்படி பார்க்கிறீர்கள்?

“இது ஒரு மாயை. Like பெருவதற்காக செய்-யப்படும் ஒரு விளையாட்டு வலை, சிறிது காலம் கழித்து
புளித்துவிடும்.மனிதனுக்கு மறதியே வரம்.
இது தனி மனித உரிமை; மேலும் இந்த செயல் பிறர் மனதை, மதத்தை, இனத்தை புண்படாத விதத்தில் இருக்கும் பட்சத்தில் இதை, ஒரு ‘பொழுது போக்காக’ எடுத்துக் கொண்டு கடந்து செல்வதே மேல்!
ஆண் தன்னை ஆளுமையாக காட்டிக்கொள்ள பல வழிகளை நாடுகிறான். பெண்கள் தங்கள்

‘ஆளுமையை’ வெளிக்கொணர்கிறார்கள் என்று இதையும் ஒருவகையில் எடுத்துக்கொள்ள வேண்டியது தான்.

இதில் பெண்மை, கற்பு என்று தொடர்புப்படுத்தி பேசுவது அபத்தம். இது ஒரு மனப்போராட்டத்தின் வெளிப்பாடு; இதை ஏற்றுக் கொள்வதும்; நிராகரிப்பதும் அந்தந்த சமூகத்தின் சிந்தனைக்கு விட்டு விடுகிறேன். இதுவே உளவியில் ரீதியான பதிலாகவும் இருக்கும்.

வேறு ஏதாவது ‘விஷயம்’ இருந்தால், இந்த காணொளியைப் பார்ப்பவர்கள், ‘கமெண்ட்’ செய்ய கேட்டுக் கொள்கிறேன். சமூகமாக இருந்து சுமூகமாக என்ன செய்ய முடியும் என்பதைப் பார்ப்போம்.

மேலும் கோட்பாடுகளும், சிந்தனைகளும் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், அரசியலுக்கு அரசியல் வேறுபடும்.

அமெரிக்காவில் ‘பொருளதாரக் குற்றம்’ பெரிய குற்றம். ஒருவருடைய விருப்பத்தில் அல்லது சுதந்திரத்தில் தலையிட அரசுக்கும் உரிமை இல்லை.

ஆனால், நம் நாட்டில் ‘தலைகீழ்.’ பொருளாதாரக் குற்றம் மன்னிக்கப்படுகிறது. தனிநபரின் அந்தரங்கம் பேசு பொருளாக மாறுகிறது.

வாழ்வியலும், ஒழுக்கமும் பொருளாதாரத்தில் இருந்து மீட்கப்பட வேண்டும்.

தெளிவு வரும்; தெளிவோம்!”
பேட்டி இனிதே முடிந்தது!

Media Attributions

- Screenshot_2026_0730_072019

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

10.

ஒரு நிமிடக் கதைகள் 2 ;1.ஆகச் சிறந்த காதல் 2.ஆகச் சிறந்த அரசியல்

Kalki Strip

1. ஆகச் சிறந்த காதல்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு அழைப்பித-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ழின் பேரில் சென்றபோது அந்த வீடு பழைமை காத்தது. பெரிய திண்ணை... பிறகு முற்றம்... நல்ல பரந்த வழிநடப்புகள்.

சிறிய அறை; பெரிய சமையல் அறை. என்ன சொல்ல! அந்த வீட்டைப் பார்ப்பதற்காகவா சென்றான் சாமி?

இல்லை; இல்லவே இல்லை. அந்த அழகை, தேவதையை அவள் குடியிருக்கும் வீட்டில் பார்ப்பதற்கு ஏதோ சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டு போக வேண்டிய தருணம் பார்த்து போனான் என்பது தான் உண்மை!

விதவை அம்மா, சகோதரன் கல்யாணம் ஆகவில்லை; கரிசனங்கள்; கவனிப்புகள்; அந்த உரையாடல்கள்... என்று எல்லாம் பிடித்து இருந்தது சாமிக்கு.

அப்போ, எதற்கு இந்த ஒப்பனை. எல்லாவற்றையும் நாளை சொல்லிவிட வேண்டியதுதான்' என்று நினைத்து காத்து இருந்தான்.

அவளே சொன்னாள்: "எனக்கு முறைப்படி வரும் ஞாயிறு பெண் கேட்டு வருகிறார்கள். அதற்காக முதல் நாள் சனிக்கிழமை நாங்கள் குடும்பமாக குலதெய்வ வழிபாடு செய்ய வேண்டி இருப்பதால் 'விடுப்பு வேண்டும்' என்று நீட்டினாள் கடிதத்தை.

மேலாளர் சாமி, ஆமோதித்தார்; அனுமதித்தார். இதயம் கேட்டது..."இனிமேல் 'நீ எனக்குத்-

தான்’ என்று யாரிடம் சொல்வாய்?”

2. ஆகச் சிறந்த அரசியல்

நன்றாகவே தெரியும், இந்த காரியத்தை செய்தால் எதிர்வினை இப்படித்தான் இருக்கும் என்று.

எதற்கும் தன் நெருங்கிய, ரகசிய நபர்கள் சிலருடன் இதைப் பற்றி யோசித்து, இந்த source-ஐ பயன்படுத்தி இந்த lead-ஐ பிடித்து ஒரு அரசியல் செய்ய வேண்டும் என்று மேலிடம் சொல்வதாக பகடி ஆடினான் தலைவன்.

“ஏன், செய்தால் என்ன?” இதில் ஒன்றும் நமக்கு இழுக்கு இல்லை என்று ஒரு சாரரும்; ‘இருந்தாலும் நாமும் அக்கா, தங்கையுடன் பிறந்து இருக்கிறோம் எதற்கு இந்த வம்பு’ என்று மற்றொரு சாரரும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

‘எல்லாம் காலத்தால் மறக்கப்படும், அல்லது மறைக்கப்படும்’ என்கிற ‘நியதி’ உண்மை என்பதை உணர்ந்த தலைவன், தன் ‘இரண்டு’ செயலாளரிடமும் இப்படிச் சொன்னான்..

.”உங்கள் இருவரில் ஒருவர் நம் கட்சியை விட்டு விலகுவதாக அறிவித்து அதற்கு காரணம் ‘நீதி கேட்டேன்; நிதி வந்தது’ என்று சொல்ல வேண்டும்.

அதற்கு மறுநாள் ‘நான்’ ஒரு press meet ஏற்பாடு செய்து அதற்கு விளக்கம் அளிப்பேன்.

“இருவரும் கைநீட்டினர் – “எவ்வளவு தொகை

கொடுப்பதாக இருக்கிறீர்கள்?”
அடுத்த நாள் செய்தி:
அந்த உறுப்பினர்கள் இருவரும் கட்சியின் அடிப்படை பதவியில் இருந்து நீக்கப்பட்டனர்.

Media Attributions

- Screenshot_2026_0730_072330

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

11.

'மினி' கதை-"கர்ம வாதி"

Kalki Strip

சரியாக 6.05 காலை ...

தொலைபேசியில் அழைப்பு ....

அழைத்தது வங்கியில் இருந்து 10 வருடங்களுக்கு முன்பு மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வணக்கம் சார் சொல்லுங்க!

“செல்வராஜீ ! நம்ப ‘கார்த்திக்கு’ வங்கியில் இருந்து கடிதம் வந்திருக்கிறது. அவன் வாங்கிய வீட்டுக் கடன் பத்திரத்தை அவனிடம் ஒப்படைக்கவும். மேலும் அதில் உள்ள நிலுவை தொகை எல்லாம் சரி செய்யப்பட்டு மேலும் ₹1.95 லட்சம் அவனுக்கு வரையோலையாக இன்று கொடுக்க உள்ளார்கள்.”

“சார் ரொம்ப நன்றி ! நல்ல செய்தி சொல்லி இருக்கீங்க!”

“நான் என்ன செய்து விட்டேன் ! எல்லாம் அவன் செயல்.”

“அவன் என்னை ஆட்டிவித்து செய்யச் சொன்னான்” என்று சொல்லி பேச ஆரம்பித்தார்.

“மேலிடத்தில் முறையிட்டேன். அவர்கள் கார்த்திக்கின் நடத்தை மற்றும் செயல்பாடுகள் திருப்தியாக இருந்ததால் இன்றே வங்கிக்கு வரச் சொல்லி கடன் விடுப்பு கடிதம் மற்றும் மூல பத்திரத்தை வாங்கிச் செல்லுமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்கள்...” என்று மேலும் விளக்கினார்.

“ஆட்டிவிப்பது ‘அவனாக’ இருந்தாலும், அதற்கு ஒரு மனம் வேண்டும்,” என்று நான் அவரிடம் சொல்ல ....

கிச்சாவின் (கிருஷ்ணமூர்த்தி) உற்சாகம் என்னை பரவசப்படுத்தியது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

பிறருக்கு உதவி செய்யும்போது; அது நடந்து நல்லபடியாக நிறைவேறும் போது ஏற்படக்கூடிய அந்த ‘ஆத்ம திருப்தியை’ இன்று கிருஷ்ணமூர்த்தியும் அவர் மூலம் நானும் சேர்ந்து கொண்டாடினோம்.

உண்மையில் செயல்படுவது தான் தர்மம் .

‘உண்மை’ தர்மத்தின் பக்கம் இருக்கும் போது ‘காலமும், இடமும் ‘ ஒன்றாக கைகூடும்.

Media Attributions

- Screenshot_2026_0730_072636

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

12.

12.மனமே மாமருந்து : சிதைந்து போகும் உடலை செதுக்குவது எப்படி?

ஆன்மிகம்

மனமே மாமருந்து: சிதைந்து போகும் உடலை செதுக்குவது எப்படி?

Arthanareeswarar

ராமன். செல்வராஜ்

Published on: 19 Jan 2026, 1:29 pm

நான் யார்?
நான் இருப்பதா?
நான் சிந்திப்பதா?

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நான் செயல்படுவதா?
நான் ஒரு பொருளா?
நான் ஒரு கருத்தாக்கமா?
நான் ஒரு செயலின் வடிவமா?
நான் என்று அறியப்படுவது எதனால்! அறிவுதான் நானா!
அறிவின் பிறப்பிடம் நானா!
அறிவின் ஆக்கம் எது!
மனமா? மனம் என்பது எதனைத் தேடுகிறது!
இறந்தகால எச்சங்களையா? நிகழ்கால நிதர்சனங்களையா? எதிர்கால எதிர்பார்ப்புகளையா? எண்ணங்களை நான் ஏன் பிரிக்கிறேன்?
எண்ணங்கள் இதயத்திற்கு சொந்தமா?
எண்ணங்களின் உதயம் மூளை!

மூளை இன்றி எதுவும் இல்லை. அந்த மூளையை ஆட்டி வைப்பது யார்? புறக்காரணிகளா அல்லது அக அழுத்தங்களா?
பிரபஞ்சம் என்கிற உண்மையை விளக்க விளக்க விரிவாகிக்கொண்டே போகும் ஒரு விந்தை-'கால விசை' .
அதை கணக்கிட முடியாது. காலத்தில் எல்லாம் கரைந்து போகும்.

உயிர் எப்படி உருவானது? பிரபஞ்ச கோட்பாடுபடி 'சக்தியும் சிவனும்' சேர்வதால். அதாவது பொருள் மற்றும் உணர்வுகள், இங்கே பொருளை சிவனாகவும் (உடலாகவும்), உணர்-

வுகளை சக்தியாகவும் கொள்ளலாம். The matter is shiva and energy is sakthi. ஆக உடல், உயிர் கொண்ட இந்த இயக்கம் கால வெளியில் (time and space) பிரவேசித்து பிறகு காலத்தின் கட்டுப்பாட்டில் வளர்ந்து மூப்பு அடைந்து பிறகு மாய்கிறது. இந்த மாயையை இருக்கும் வரை உண்மை என கொள்கிறோம்.

பிரிந்த பிறகு அது ஒரு ஆன்மாவாக காற்றாக நம்மிடம் பயணப்படும் ஒரு உந்து விசை. இந்த விசையை அறிந்துதான் திருமூலர் பாடி வைத்தார். ‘எச்சமும் மிச்சமும் இந்த பிரபஞ்சத்திற்கு’ சொந்தம். இங்கே ஏற்பது கோட்பாடு. அது விதியன்று. ஏற்கும் இடத்தில் எல்லாம் இன்பமயம்.

‘உடல் இன்றி அமையாது உயர்; உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே!’

ஆக, உடலின் இயக்கம் உண்டாக உயிர் தேவை; ஆனால் முதலில் தோன்றியது பொருளாகிய உடலே! எப்படி என்றால் விந்து என்கிற ஒரு பொருள் முட்டை என்கிற ஒரு பொருளோடு கலந்து ஒன்றுசேர அங்கே கரு உருவாகி வளர்ந்து உயிர் உதயமாகிறது. ஆக, பிரபஞ்சம் எல்லாவற்றையும் பொருளாகப் பார்த்து, வளர்த்து, பிறகு பிரித்து தன்னிடம் ஆட்கொள்கிறது.

பொருளுக்கு தேய்மானம் உண்டு. இது இயற்கை நியதி. இந்த உண்மையை அறிந்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

தால், வாழ்க்கை என்பது ஒரு பயணம் என்று புலப்படும். பயணப்படுவது படகாகிய உடல்; உயிர் என்கிற அந்தத் துடுப்பை நாம் செலுத்தி நம் உடலைப் பாதுகாக்க வேண்டும். அப்போது பயணம் இனிமையாக இருக்கும்.

உடலே உயிரை ஆள்கிறது. உயிர் நேர்வி-னையாற்ற, நல்ல சிந்தனை செழிக்க, செயல் திறன் மேம்பட, மனதை ஆற்றல் பெற செய்ய வேண்டும். மனமே மா மருந்து; அதை அவ்வப்-போது பாதுகாத்து, பதப்படுத்தி, படிப்படியாக வேலை வாங்க வேண்டும். ஆக, உடலைப் போற்றுவோம். உள்ளம் என்பது கோயில். அதில் உயிர் என்பது தெய்வம். அந்த தெய்வம் எல்லோராலும் வணங்கப்பட வேண்டும். அதற்கு வீடாகிய உடலை உள்ளம் உள்ள வரை பாழாகாமல் புத்துயிரோடு வைத்துக் கொள்-வோம்.

Media Attributions

- Screenshot_2026_0730_072854

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

13.சிறுகதை : மக்களே ஆளும் அரசு(சர்)கள்

கல்கி

சிறுகதை: மக்களை ஆளும் அரசு(சர்)கள்!

இயற்கையின் நீதி பற்றி மகனுக்கு எழுந்த சந்தேகத்திற்கு தந்தை உதாரணத்துடன் புரியவைக்கும் அர்த்தமுள்ள சிறுகதை.

father and son AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 21 Jan 2026, 4:55 pm

Kalki Strip

‘ஏம்பா! நேஷனல் ஜியோகிராபிக் சேனலில் ஒரு பெரிய எருமை மாடு, அதை 10 சிங்கங்கள் போராடி உண்ணுகிறதே? இதைப் பார்க்கும் போது பயம்மா இருக்கிறது. சிங்கம் ரொம்ப மோசம்பா!? சரிதானே.’

ஏழு வயது பையன் கேள்விக்கு பதில் சொல்லும் நிர்ப்பந்தத்தில் இருந்தேன்.

அதற்காக “யூடியூப்” சேனலில், ‘prey vs Predator’-ஐ search செய்து எடுத்து என் மகனை முழுவது-மாக பார்க்கச் சொன்னேன்.

அதில் அங்குளம் அங்குளமாக ஆங்கிலத்-தில் சதுப்புநிலம், மழை வருகை, அடர்ந்த புல்-வெளிகள், பசுமையின் வரவு, எருமைகளின் அணி வகுப்பு, அவைகளின் மேய்தல் என பின்-னோட்டமாக தமிழில் ஒலிநாட ஓடிக்கொண்டு இருந்தது.

திடீரென்று ஒரு பீடுகை, எறுமைகளின் பதற்றம், திக்குத் தெரியாமல் சிதறிய காட்சி-கள் என்று ஓடிக்கொண்டு இருந்தது.

அதில் ஒரு எருமை தனியாக மாட்டிக்-கொள்ள, அதனை மற்ற சிங்கங்கள் கூட்டம் உண்டு உணவாக கொண்டது.

என் கேள்விக்கு இப்போது என் மகன் பதில் கூற ஆரம்பித்தான்,

சிங்கம் எத்தனை – 7 to 10,

எருமை 40 to 50,

அப்போ எது ஜெயிக்கும்;

எருமை – ஏன் ஜெயிக்கவில்லை?

அது ஓடுகிறது; பயப்படுகிறது.

எதற்காக – உயிருக்காக,

ஏன் பயப்பட வேண்டும்?

சிங்கத்தின் பற்கள் ‘கூர்மையாக இருக்கும்’ கிழித்து விடும்.

அப்படியா? எருமைக்கு ஒன்றும் இல்லையா?

என்ன இல்லை: இதோ பார்!

கூர்மையான கொம்புகள், முட்டி உதைத்தால் தாங்கக் கூடிய பரந்த நெற்றிகள்;

இருந்தாலும் 5-ல் 1-முறை சிங்கம் ஜெயிக்கிறது.

அப்படி ஜெயிக்கவில்லை என்றால், சிங்கம் இறந்துவிடும். இல்லாமலே போய்விடும்.

அய்யோ பாவம் சிங்கம்!

ஆக அது உணவாகச் சாப்பிடுகிறது. “வேட்டை” என்பது விளையாட்டு அல்ல, அப்படியா! சிந்தித்தான் – என் பையன்.

இது இயற்கையின் நீதி.

“எருமைகள் ஒன்றாக மேயும்; அதைப் பிரித்து பந்தாட சிங்கம் சூழ்ச்சி செய்யும்.”

“சூழ்ச்சி சில சமயம் பலிக்கும்.” இப்படியாக நான் சொல்லிக் கொண்டு போக,

எதிரே, செய்தியில் ரஷ்ய உக்ரைன் போரில் இறந்தவர்களின் சடலங்கள் தெரு வீதியில் கேட்பார் அற்று கிடப்பதையும் பார்த்தான்.

அப்ப இது:-

மனிதர்கள், விசித்திரமானவர்கள்; இயற்கையை மீறுபவர்கள். மீறித்தான் பார்ப்போம் என்று சூளுரைப்பார்கள்.

இப்படித்தான் அரசர்கள், அரசுகள் தங்களை சிங்கங்களாக நினைத்து மக்களை ஆளுகின்றனர்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அய்யோ பாவம் என்றான் என் பையன் – ஆமாம் என்றேன் நான்.

அடுத்து வருவது,

சீன – தைவான் போர்மேகம்.

“கட்” செய்தேன் நான்.

Media Attributions

- Screenshot_2026_0730_073551

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

14.அனுபவ யாத்திரை ....

தீபம்

அனுபவ யாத்திரை!

Old couple travel through bus   Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 24 Jan 2026, 5:30 pm

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Old couple go to temple through bus Img credit: AI Image

deepam strip

எனக்குள் ஒருவனாக இருந்து, வங்கியில் 36 வருடங்கள் சேவை செய்து இப்போது ஓய்வு பெற்று 4 வருடங்கள் ஆகின்றன. மகள் கல்யாணத்திற்கு மனனவி அழகாபுத்தூர் சென்று வர கேட்டுக் கொண்டார்.

பி.எஃப்., கிராஜூவிட்டி மற்றும் PL பண வசதி (Privilege Leave) மூலம் வந்த தொகையில் வட்டியாக ரூ.25000 வருகிறது.

தேவைகளை பூர்த்தி செய்து, விருப்பங்களுக்கு அப்பால் வாழ பழகிவிட்டோம். அழகாபுத்தூர் செல்ல இரு சக்கர வாகனம் வீட்டில் உண்டு. குறைந்தது 1/2 மணி நேரத்திற்குள் கோவிலுக்கு சென்று வர முடியும்.

குடந்தையில் இருந்து 7 கி.மி தூரத்தில் அமைந்த படிகாசு நாதர் கோயில் சொர்ணபுரீசுவரை வணங்கி, பிறகு தாயார் பாதம் (அழகாம்பிகை) தொட்டு பிரார்தனை செய்து கடைசியாக முருகப்பெருமானை (சங்கு சக்க-

ரத்துடன் காட்சி அளிப்பவர்) தரிசித்து வந்தால் வீட்டில் சுபகாரியம் நடக்கும் என்பது ஐதீகம்.

நான் என் உள் உணர்வுக்கு அடி பணிவேன். அதில் பெரும் நம்பிக்கையும் உண்டு.

காரணம், நான் தற்பொழுது நிகழ்கால நிஜங்களை தரிசித்துக் கொண்டு இருக்கி-றேன். அதில் கிடைக்கும் அனுபவம் என்னை வழிநடத்துவதாக உணர்கிறேன்.

இந்த ‘உள் உணர்வு’ என்னை நானே பரிசோ-தனை செய்து கொள்வதில் தொடங்கி, தற்சம-யம் அந்த உணர்வே இல்லாமல் பயணப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். அதாவது என் நிகழ்-வுகளை ஆராய்வதைவிட அதை பார்வையா-ளனாக இருந்து கடந்து செல்ல விளைகிறேன். அந்த விதத்தில் என் செயல்கள் சற்று முன்மு-னைப்போடு செயல்படுவதாக உணர்கிறேன்.

மேலும் என் எண்ணங்களை ஒரு குறிப்பிட்ட கால அளவுகளில் முடிக்க இந்த சுய நினைவு பெரிதும் உதவியாக இருக்கிறது என்றால் அது உண்மையே!

அதே சமயம் எந்த ஒரு செயலும் நடக்க, நடந்து முடிய ‘நானே’ காரணம் என்று கருதா-மல் அது – சுய நினைவு; என்னை ஆட்-கொண்டு, சிறிது காலம் இயங்கி பின் என்னை விட்டுப் பிரிவதாக எண்ணுகிறேன்.

என் குருவின் வாக்கியம் இப்போது நினை-வுக்கு வருகிறது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

1.நீ சில சமயங்களில் பார்வையாளனாக இரு;

2.கடந்து செல்;

3.சில சமயங்களில் பங்கேற்பவனாக இரு;

4.செயல் புரி;

அப்போது தான் உன் அகம் தூய்மை பெரும்.

அவரின் பொன்னான சிந்தனைகள்:-

இங்கே யாவரும் யாசிக்கத் தான் பிறந்து இருக்கிறார்கள்; பிழைப்பு நடத்துகின்றனர்;

அரசியல்வாதி வாக்குகளை யாசிக்கிறான்;

ஆசிரியர் அறிவை யாசித்து அருளுகிறார்;

தொழில் நடத்துவோர் நுகர்வோரை யாசிக்-கின்றனர்;

தொழிலாளி இறைவனை யாசிக்கிறான்.

காலம் என்கிற சக்கரம் எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

அதுவே உண்மை!!! அதுவே எல்லாம்!!!

சுனாமிக்கு ஏழை, பணக்காரன் என்கிற பேதம் இல்லை. நில பூகம்பத்திற்கு ஏழை, பணக்கார நாடு என்கிற வேற்றுமை இல்லை.

வளமுடன் வாழ்வோம். அன்பு, இறக்கம், ஆதரவு ஆகிய பண்புகள் நம்மை ஆட்கொள்ள அந்த பரம்பொருளை நாடுவோம்.

‘தென்னாடுடைய சிவனே போற்றி,

எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி.’

மேலே கூறிய அநுபூதி எனக்கு Mini Bus-ல்

பிரக்ஞையுடன் பிரயாணப்பட்டதால் கிடைத்தது.

காலை 10 மணிக்கு தாராசுரம் வீட்டுல் இருந்து புறப்பட்டு குடந்தை பஸ் நிலையம் 10.20 அடைந்தேன்.

10.40- க்கு அழகாபுத்தூர் (Mini Bus) புறப்பட்டது. சாக்கோட்டை தாண்டி சிவபுரம் வழியாக அழகாபுத்தூர்.

நடவே 5 அழகான கிராமங்கள். அவர்களுக்காக இந்த வண்டி தினமும் செல்கிறது.

ஒரு புறம் அரசலாறு; மறுபுறம் வயல், வாய்க்கால், நெல், சாகுபடி என விவசாயம்.

நான் பார்பது வெறும் பார்வைகளே !!!

என் பார்வைக்கு உயிர் கொடுக்கும் ஒவியங்கள் – பஸ், ஓட்டுநர், விவசாயம், விவசாயி. திடீரென்று பஸ் சிவபுரம் தாண்டி நின்றது. ஊர் கூடி தேர் இழுப்பது போல, கிராமமே வந்தது. நாங்களும்தான்!

அந்த பங்கேற்பில் எல்லோருக்கும் மகிழ்ச்சி; பஸ் இனிதே நகர்ந்தது.

பேருந்து ஒட்டுநர் அந்தப் பகுதிகாரரே! நடத்துனரும் ஓட்டுனரும் அந்தப் பகுதி மக்களின் அன்பையும், மரியாதையும் அதிகம் சம்பாதித்து வைத்து இருக்கின்றனர்.

அழகாபுத்தூர் கோயில் பூசாரி எந்த எதிர் பார்ப்பும் இல்லாமல், இருப்பதைக் கொண்டு

இறைவனை பூஜித்து, பக்தர்களை மகிழ்விக்கிறார்.

இங்கே எல்லா நேரமும் நல்ல நேரமாகக் கருதப்படுகிறது.

ஆம்! இறைவன் திருவடியில் எல்லோரும் குழந்தைகளே !!!

பேதமை இல்லை; எந்த பேதமும் இல்லவே இல்லை.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_074156
- Screenshot_2026_0730_074217

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

15.சிறுகதை : காலையில் ஒரு வசந்தம்

மங்கையர் மலர்

சிறுகதை: காலையில் ஒரு வசந்தம்!

சில சமயங்களில் நமக்கு உணர்த்தும் 'சிறு சிறு' ஆலோசனைகள் நம்மை நல்வழியில் நடத்தி செல்லும் என்பதை உணர்த்தும் சிறுகதையை பார்க்கலாம்.

Poor lady walking with children   AI Image

ராமன். செல்வராஜ்

Mangayar malar strip

காலையில் நடைப்பயணம் சென்று கொண்டிருந்த போது, ஒரு காட்சி என்னை நானே கண்டறிய காரணமாகியது.

சில நபர்கள் என் பாதையில் நடந்து வந்து கொண்டு இருந்தார்கள்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அவர்கள் பின்னே வருவது மட்டும் என்னால் யூகிக்க முடிந்தது. அவர்களின் குரல்களை வைத்து அவர்கள் பெண்கள் என்று அனுமானித்துக் கொண்டேன்.

நான் அப்படியாக எந்த ஒரு சம்பாசணைகளையும் ஒட்டு கேட்பது இல்லை. அந்த அளவிற்கு நான் என் நடைப்பயணத்தில் அல்லது என் உடம்பின் மீது அதிக அக்கறை செலுத்திக் கொண்டு இருக்கிறேன் என்று, நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பல்ல!

இருந்தாலும் இதில் ஒரு உண்மை இருப்பதாக உணர்கிறேன். அதுவே எனக்கு ஒரு வலியை தந்தது.

அந்த வலியை இப்போது காண்போம்.

"அம்மா பசிக்குது" – இது ஒரு சிறுமியின் குரல்.

"எனக்கும் தான்..." தொடர்ந்தது மேலும் இரண்டு ஜீவன்களின் குரல்கள்.

"இதோ, இங்கே டீக்கடை போய் சாப்பிடுவோம் வாங்க."

இதில் இருந்து பின்புறம் வருபவர்கள் நால்வராக இருக்கக் கூடும் என்பது என் கணிப்பு.

"அம்மா, எனக்கு பசிக்குது. வடை, டீ வாங்கிக் கொடு" – குழந்தைகள் கேட்க, அவளும் அங்கு டீ சாப்பிட வந்தவர்களிடம் "சாமி இந்த பொண்ணுக்கு பசிக்குது, ஏதாவது..." என்று சொன்ன-

வுடன், ஒருவர் 8 வடைக்கு உள்ள காசை உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு சாப்பிட சொல்லிவிட்டு சென்றார்.

நானும் என் பங்கிற்கு டீ சாப்பிடேன்.

“அம்மா ‘டீ’ வேணும்.”

உடனே நான்கு டீக்கு உள்ள காசையும் கடைக்காரிடம் கொடுத்து அவர்களுக்கும் டீ கொடுக்க சொன்னேன்.

அந்த வடையை அந்த பெரிய பெண் சாப்பிட்ட விதம் இருக்கிறதே, அப்பா, எவ்வளவு சந்தோஷம். தம்பி, தங்கச்சிக்கு ஒன்றை கொடுத்து சாப்பிடச் சொல்லி பிறகு, டீயை கரிசனத்துடன் ஊட்டிய விதம் அன்பின் பரிபூரணம்.

அவர்களிடம் இருந்த ஊசி மற்றும் பாசி மாலையை வாங்கினேன். என்னைப் பார்த்து இன்னும் சிலர் வாங்கத் தொடங்கினர்.

பிறகு மெதுவாக அவர்கள் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர்.

நான் அவர்கள் பின் சற்று மெதுவாக சென்றேன். இப்போது என் கையில் ‘கைபேசி’ – அதில் பாட்டு ஒலித்து கொண்டு இருந்தது.

நான் அவர்களை கவனிக்கவில்லை என்பதற்கான ஏற்பாடு.

பேச்சு தொடர்ந்தது.

“மீனா, உனக்கு ஒன்னு சொல்றேன். நமக்கு அப்பா இல்லை. அம்மா முடியாம இருக்கா.

அதனால அவ சொல்ற அந்த லோடுமேனை கட்டிக்கோ; அம்மாவையும் பார்த்துக்கிட்டு, உன் வாழ்க்கையும் பார்த்துக்கொண்டு இந்த ஊரிலே இருக்கலாம். எதிர்வீட்டு ஏஜெண்ட் வெளிநாடு போய் வீட்டு வேலை செய்து பிழைக்க ரூ.10000 கேட்கிறான் பாரு, அதை கண்டு ஏமாறதே? இங்கேயே நீ 4 வீட்டில் பாத்திரம் கழுவி நல்ல பெயர் வாங்கி வைத்து இருக்கிறாய். போதும் உனக்கு இது என்று எனக்கு தோன்றுகிறது. நம்ம ஊரு தான் நமக்கு சுகம்.”

சம்மதம் என்று சொன்னாள் என்று நினைக்கிறேன். அதற்குள் அவர்கள் பேச்சு மாறி வேறு விதமாக சென்றது.

வாழ்க்கையில் சிறு சிறு ஆலோசனைகள் நம்மை கட்டிப் போடுகின்றன.

அன்பு திழைக்கும் – அங்கே உண்மை இருக்கும் பட்சத்தில்.

Media Attributions

- Screenshot_2026_0730_083807

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

16.எல்லாம் நம் செயல் !

deepam strip

சுரேஷ் நடந்து கொண்டே இருந்தான். நடப்பது அவனுக்கு பிடிக்கும் என்பதற்காக அல்ல, நடப்பது ஒரு கடமையாகப்பட்டது. குளிப்பது, உண்பது, வேலைக்கு செல்வது, மாலை வருவது, மீண்டும் உண்பது, உறங்குவது போல அதுவும் வாடிக்கையாகிவிட்டது.

ஐராதீஸ்வரர் (குடந்தை-தாராசுரம்)

கோயிலை 6 முறை சுற்றுவது அவனுக்கு அவனே இட்டுக்கொண்ட கட்டளை.

“இன்று சற்று மயக்கம் வருகிறதே” என்ற எண்ணம் உதிக்க, சற்றே இளைப்பாற உட்கார்ந்தான்.

சிந்தனை சிறை கைதியாக, அமைதியாக இளைப்பாற முடியவில்லை. “உடம்புக்கு ஏதாவது இருக்குமோ, மாலை ஆபிஸ் முடிந்தவுடன் இன்றே மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.”

“சே, ஒரு வேலையை ஒழுங்காக முடிக்க முடியவில்லை. என்னுடைய அடுத்த நகர்வை இந்த ஓய்வு கெடுத்துவிட்டது. இப்படித்தான் எந்த வேலை எடுத்துக் கொண்டாலும், ஒரு தடை என்னை வாட்டுகிறது; வாட்டுவது என்பதைவிட வதைக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

அவனவன் தன் காரியத்தை எப்படி சுலபமாக செய்து கொண்டு போகிறான். எனக்கு ‘வந்ததாலும்’, ‘வாய்த்ததாலும்’ எந்த சந்தோஷமும் இல்லை. முயற்சி செய்து வீட்டில் எல்லோரையும் கரிசனத்துடன், அக்கறையுடன் செயல்பட்டு அமைதியாக வாழ முனைகிறேன்.

ஏனோ? கடவுள் எனக்கு அந்த பாக்கியத்தை அருளவில்லை.

எதற்கு எடுத்தாலும் குறைகாணும் மனைவி; சந்தேகப்படும் மேனேஜர்; ஒத்துழைக்காத சக

ஊழியர்கள்; ஆக, நிம்மதிக்காக நடந்தால் என் எண்ணம் என்னை வாட்டுகிறது.

கடவுளே!! உன்னிடம் சரணாகதி அடைந்து-விடுகிறேன்; என்னை எப்படியாவது காப்-பாற்று!” கும்பிட்டுக்கொண்டே வெளி பிரகாரத்தில் தன்னை மறந்து தியானித்துக்-கொண்டு நின்றான்.

தன்னை மறக்க நினைத்தபோது, உடல் உதரியது; தலையை வேகமாக ஆட்டினான். அப்போதுதான் உணர்ந்தான். காக்கா தலை-யில் மூச்சா போய் இருப்பது.

ஆமாம். தம் இருத்தலை உணராமல், உணர்த்தி சென்ற காக்கையை அண்ணாந்து பார்த்தான்.

பார்க்கத்தான் முடியும்.
பரவசம் அடைய பழக வேண்டும்.
பழக்கப்பட வேண்டும்.
எல்லாம் நம் செயல்!
வாழ்க்கை என்பது எவ்வளவு தூரம் ?
எவ்வளவு தூரம்;
எவ்வளவு தூரம்;
எவ்வளவு தூரம்;
அளக்க முடியவில்லை;
எல்லை இல்லா வாழ்வு;
எதற்கு இப்படி அலைகிறது;
மனமே பேதம் கொள்ளாதே;
உன் குணம் எனக்கு தெரியும்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உறவை, நட்பை, பழக்க,
வழக்கத்தை, மாண்பை, மதிப்பை,
மதி இழக்க செய்ய வல்ல,
ஆற்றல் உனக்கு இருக்கிறது.
என்ன செய்ய?
பாவி மனிதர்கள் நாங்கள்!
படைக்கப்பட்டோம்,
வளர்க்கப்பட்டோம்,
வாழ்வதற்காக வழிகாட்டப்பட்டோம்.
பார்ப்பவை எல்லாம் பறக்கின்றன.
நான் மற்றும் ஒற்றை ஆளாய் நிற்கிறேன்.
என்ன செய்ய...
இனி என்ன செய்ய முடியும்...
என்ன செய்ய வேண்டும்...
சொல் – உன்னிடமே கேட்கிறேன்.
பிறப்பு என்பது ஜனனம்.
தெரியாமல் நடக்கிறது.
இறப்பு என்பது மரணம்.
தெரிந்தே நடக்கிறது.
நடப்பதை நிறுத்த முடியாது.
முயற்சிக்கிறோம்; முடிந்த வரை போராடுகிறோம்.
பிரிவும் இயற்கையே!!
வாழ்வும் இயற்கையே!!
இறப்பும் இயற்கையே!!
இதில் ஏங்க என்ன இருக்கிறது??

சொல்ல எளிதாக இருக்கிறது – நினைத்தால் சுடுகிறது.

எவ்வளவு நாள் இந்த எண்ணங்களை சுமப்பது?

சுமப்பது சுவை;

அப்படியானால் எதை சுமப்பது,

எதிர் காலத்தையா?

நிகழ் காலத்தையா?

இறந்த காலத்தையா?

சொல் மனமே சொல்.

என் மனசு எனக்கு தெரியவில்லை.

என் இதயம் துடிப்பது எனக்கு உணர்த்துகிறது.

என் துள்ளல் தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் இருந்து கொண்டு என்னை ஆட்டிவிக்க வேண்டும்.

ஆட்கொள்ள வேண்டும்.

என் “இதயம்” என் “மனதை” ஆட்கொள்ள வேண்டும்.

இறைவா,

இயற்கையே,

எல்லாம் வல்ல

பரம்பொருளே,

வழி செய்,

வழி செய்,

வழி செய்....

வழி செய்வாயாக...

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_084742

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

17.முத்தான 2 கதைகள் !!

கல்கி

முத்தான 2 கதைகள்!

1. தற்காப்பு 2. சிலையை விட்டு தெய்வம் புறப்பட்ட கதை

Husband and wife - Sanitation worker AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 02 Feb 2026, 9:55 am

Kalki Strip

. 1. தற்காப்பு

நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று ஆராய்வதற்கு இது நேரமில்லை. உடனே ஏதாவது செய்து ஆக வேண்டும். என்ன செய்யலாம்? எதைச் செய்தால் இந்த சூழல் மாறும் என்று யோசித்துக் கொண்டு இருந்தான் மோகன்.

ஒரு வாரத்திற்கு முன்புதான் தன், மச்சானிடம் ஏற்பட்ட மனக் கசப்பால் சற்று ஆடித்தான் போய் இருந்தான்.

அதற்கு முழுக் காரணமும் தன்னைச் சார்ந்தது என்று இப்போது உணர்ந்து ஒரு முடிவுக்கு வந்தான்.

ஏன் நாம் அத்தான் சொல்வது போல் அவர் கம்பெனியில் மேலாளராக பணி செய்யக்கூடாது?

இதில் என்ன கௌரவம் குறைந்துவிடப்போகிறது! மேலும் நமக்கு கட்டட கலையும் தெரியும், அதில் உள்ள சிரமங்களும் அதை எப்படி கையாள்வது குறித்த 10 வருட அனுபவமும் இருக்கிறது.

இதை வைத்துத் தான் ‘கந்தன் கன்ஸ்டிரக்ஸன்’ முதலாளியான முருகன் நமக்கு, ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கிறார்.

முருகன் எங்களுக்கு ஒரு நல்ல குடும்ப மாப்பிள்ளை என்பதைத் தாண்டி, தன் ஹார்டுவேர்ஸ் பிசினஸ்க்கு தன் வாடிக்கையாளர்கள் மூலம் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும் உதவி இருக்கிறார்.

என்ன என் பேராசை, அவரைக் கேட்காமல் ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் ஈடுபட்டு, ஒரு பெரிய பில் தங்கி வங்கிக்கு கட்ட வேண்டிய வட்டி, அசல், பாக்கி என தன் தொழிலையே முடித்துக் கொள்ள வேண்டி இருந்தது.

இப்போது எந்த கடனும் இல்லை; மனைவியும் எல்லாவற்றையும் உணர்ந்து இருக்கிறாள்.

இப்போது தன் தங்கைக்கு வளைகாப்பு; அப்பா இல்லாததால் குறைந்தது 4 பவுனுக்கு ஏதாவது சீர் செய்ய வேண்டும்.

“செய்வோம்” என்றாள் ஆண்டாள் – மோகன் மனைவி.

“ஒரு யோசனை; யாருக்கும் தெரிய வேண்டாம். நேற்று உங்கள் வீட்டு மாப்பிள்ளையுடன் பேசினேன். உங்களுக்கு மாதம் ரூபாய் 50,000 சம்பளம் என்றார். அதில் இருந்து 10 மாதத்திற்கு ரூபாய் 25,000 வீதம் பிடித்துக் கொள்ள நானே உறுதி அளித்தேன்.”

“இப்படி செய்தால் நாமும் சீரும் செய்யலாம்; சிரமம் இல்லாமல் நம் வாழ்விலும் ஒரு வழி உருவாகும்” என்றாள்.

உண்மை தான். வேலைக்கு செல்ல ஆயத்தமானான்.

2. சிலையை விட்டு தெய்வம் புறப்பட்ட கதை...

அன்று ஞாயிறு. காலை 12 மணி இருக்கும். வீட்டு வாசல் கதவின் அருகில் ஒரு கம்பீரமான நபர் நின்று கொண்டு இருந்தார்.

அவர் கோட்டும், சூட்டும் அணிந்து இருந்தார். நல்ல சிகப்பு நிறம். வயது 45 வரை இருக்கலாம்.

வாசல் அருகில் ஒரு ஜீப் நின்று கொண்டு

இருந்தது; அதன் மேற்கூறையில் சிகப்பு கலர் லயிட் எரிந்து கொண்டு இருந்தது.

வீட்டிற்குள் வரலாமா என்று கேட்டவரை "வாங்க" என்று சொல்லி வரவேற்றான் செல்லதுரை.

குடும்பத்தில் உள்ள அனைவரையும் கூப்பிட்டார் அந்த நபர். மனைவி மக்கள் என்று ஒன்று திரண்டனர். முதியவர்கள் இருவர் உட்பட மொத்தம் 7 நபர்கள், அதில் 3 குழந்தைகள்.

ஆக முதியவர்கள் துரையின் பெற்றோர்கள் தான் என்று முடிவுக்கு வந்தார் அந்த வெள்ளை நிற ஆசாமி.

நீண்ட கவரை எடுத்தார்; அன்புதுரையிடம் கொடுத்து, எல்லோரையும் சேர்த்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பெரியவர்கள் இருவரையும் அழைத்தார். அவர்கள் காலில் விழுந்து வணங்கினார்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் புகைப்படம் மற்றும் ஒளிப்படமாக எடுக்கப்பட்டது.

'சால்வைகள்' செல்லதுரைக்கு போத்தப்பட்டு, குழந்தைகளுக்கு இனிப்புகள் கொடுக்கப்பட்டன. மனைவி செல்லம்மாள் பூங்கொத்தை பரிசாக பெற்றாள்.

என்ன நடக்கிறது என்று எல்லோரும் வியந்தனர்.

அவரே மேலும் சொன்னார்;

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“நான் உங்கள் மாவட்டத்தின் கலெக்டராக நாளை பொறுப்பு ஏற்க உள்ளேன். உங்கள் சேவையால் ‘சின்னப்பட்டி’ கிராமம் தொடர்ந்து 10 வருடங்களாக ‘பசுமை கிராமம், தூய்மை கிராமம், தன்னிறைவு கிராமம்’ என மாநில அளவிலும், இந்திய அளவிலும் ஏன் உலக அளவிலும் பேசப்பட்டு வருகிறது என்றால், அதற்கு உங்களுடைய அளப்பரிய உழைப்பே காரணம்” என்றார்.

நாளை என் பதவி ஏற்பு விழாவில் இந்தப் ‘புகைப்படம்’ மற்றும் ‘ஒளி நாடா’ வெளியிட திட்டமிட்டு உள்ளேன் என்று சொன்னவுடன் எல்லோரும் சிலை ஆனார்கள்.

தெய்வம் மட்டும் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டது.

மெதுவாக கவரை எடுத்து படிக்கலானான்.

அதில் அவனுக்கு மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு இருந்தது.

இது நாள்வரை தூய்மை காவலராக தன் பணியினை செய்தவனுக்கு நாளை செய்ய வேண்டிய பணிகளை திட்டமிட தொடங்கி-னான்.

Media Attributions

- Screenshot_2026_0730_085842

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

18.அசத்தல் கதைகள் 2

'நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன்?' என்று ஆராய்வதற்கு இது நேரமில்லை. உடனே ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்யலாம்? எதைச் செய்தால் இந்தச் சூழல் மாறும்? என்று யோசித்துக்கொண்டு இருந்தான் மோகன்.

ஒரு வாரத்திற்கு முன்பு தன் மச்சானிடம் ஏற்பட்ட மனக்கசப்பால் சற்று ஆடித்தான் போய் இருந்தான். அதற்கு முழுக்காரணமும் தன்-

னைச் சார்ந்தது என்று இப்போது உணர்ந்து ஒரு முடிவுக்கு வந்தான்.

நாம் ஏன் அத்தான் சொல்வதுபோல் அவர் கம்பெனியில் மேலாளராக பணி செய்யக்கூடாது?

இதில் என்ன கௌரவம் குறைந்துவிடப்போகிறது! மேலும், நமக்குக் கட்டடக் கலையும் தெரியும்; அதில் உள்ள சிரமங்களும் அதை எப்படிக் கையாள்வது குறித்த 10 வருட அனுபவமும் இருக்கிறது.

இதை வைத்துத்தான் ‘கந்தன் கன்ஸ்டிரக்ஷன்ஸ்’ முதலாளியான முருகன் நமக்கு, ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கிறார்.

முருகன் எங்களுக்கு ஒரு நல்ல குடும்ப மாப்பிள்ளை என்பதைத் தாண்டி, தன் ஹார்டுவேர்ஸ் பிசினஸ்க்கு தன் வாடிக்கையாளர்கள் மூலம் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும் உதவி இருக்கிறார்.

என் பேராசையால் அவரைக் கேட்காமல் ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் ஈடுபட்டு, ஒரு பெரிய பில் தங்கி, வங்கிக்குக் கட்ட வேண்டிய வட்டி, அசல், பாக்கி என தன் தொழிலையே முடித்துக்கொள்ள வேண்டி இருந்தது.

இப்போது எந்தக் கடனும் இல்லை; மனைவியும் எல்லாவற்றையும் உணர்ந்து இருக்கிறாள்.

மோகனின் தங்கைக்கு வளைகாப்பு.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“அப்பா இல்லாததால் குறைந்தது 4 பவுனுக்கு ஏதாவது சீர் செய்யவேண்டும்.”

“செய்வோம்” என்றாள் ஆண்டாள் – மோகனின் மனைவி.

“ஒரு யோசனை; யாருக்கும் தெரிய வேண்டாம். நேற்று உங்கள் வீட்டு மாப்பிள்ளையுடன் பேசினேன். அத்தான் கம்பெனியில் மாதம் மாதம் ரூபாய் 50,000 சம்பளம் என்றார். அதில் இருந்து 10 மாதத்திற்கு ரூபாய் 25000 வீதம் பிடித்துக்கொள்ளலாமா?” என்றார்.

“என்னுடைய சம்பளப் பணத்திலிருந்து 25000 எடுத்துக்கொள்ள உறுதி அளித்தேன்” – மோகன்.

“இப்படிச் செய்தால் நாமும் சீரும் செய்யலாம்; சிரமம் இல்லாமல் நம் வாழ்விலும் ஒரு வழி உருவாகும்” என்றாள் ஆண்டாள்.

உண்மைதான். வேலைக்குச் செல்ல ஆயத்தமானான்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கதை 2: கண்ணும் கண்ணும் மோதிக்கொண்டால்!:

Two old friends speaking on the phone   Img credit: AI Image

2: கண்ணும் கண்ணும் மோதிக்கொண்டால்…

நண்பன் கோபியிடம் இருந்து மூன்றாவது முறையாக ஹரிக்கு அலைபேசியில் அழைப்பு வந்து கொண்டே இருந்தது.

'செல்லை' எடுத்த தேவி, "இதோ பாருங்க உங்க நண்பருக்கு நீங்க மேனேஜராக இருக்கும் போது வீடுகட்ட உதவுனீங்க… அவர் மகன் வெளிநாடு சென்று படிக்க மேலும் கடன் உதவி செய்தீங்க!… இப்ப, நம்ம ஒரே பொண்ணு கல்யாணம் இருக்கு; ஏதாவது 'கமிட்' பண்ணீங்க? நான் என் வீட்டோடு 'கமிட்' ஆகி விடுவேன்."

குளித்து, சற்று ஆசுவாசமாக 'சைலண்ட்' மோடில் உள்ள போனை ஆன் செய்து பேசினான் – ஹரி.

"டேய்! எப்படி இருக்க. நான் ஓய்வுபெற்று 3

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வருடம் ஆகிறது. அப்போது வந்தது தான் நீ. 'அதற்கு அப்புறம் வரவே இல்லை கோபி' என்று என் பொண்டாட்டி ரொம்ப ஆதங்கப்படுகிறாள். மகளுக்கு அடுத்த மாதம் கல்யாணம் வைத்து இருக்கிறேன். அதற்கு குடும்ப சகிதமாக வந்துவிடு."

'அப்பா! ஹரி பிழைக்க கற்றுக்கொண்டார். நல்ல ராஜதந்திரம்; உண்மையை எப்படி பக்குவமாக சொல்லித் தப்பிக்கிறார்...' என்று மனைவி நினைப்பதை எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டு பேச்சை தொடர்ந்தான் ஹரி.

"அப்படியா, ரொம்ப சந்தோசம்!"

"இப்படி ஒரு வாய்ப்பு எங்களுக்கு கிடைக்காது. ஆனால் இதை நான் ஏற்றுக்கொண்டால் என் மனைவி சம்மதிக்க மாட்டாள். Sorry, நட்புதான் முக்கியம். இங்கே வரும் போது நாங்கள் வந்து பார்க்கிறோம். என்றும் எங்கள் ஆசீர்வாதம்."

கண்கள் நீண்டன; பிறகு விரிந்தன. என்ன என்பதற்குள் "voice recorder" ஒலித்தது.

"என் மகன் கௌசிக்; உனக்கும், எனக்கும் குடும்பத்தோடு LONDON சென்று வர TICKET ஏற்பாடு செய்து உள்ளான்."

"உன் மகள் கல்யாணத்திற்கு பிறகு இரண்டு மாதம் கழித்துத்தான் என்பதால், நானும் அவனிடம் சரி என்று சொல்லிவிட்டேன். உன் சம்மதம் இருக்கும் என்று நானும் உறுதி

அளித்துவிட்டேன். இது அவன் உனக்கு செய்யும் ‘கைமாறு’ அல்ல… எனக்கு செய்யும் கடமை. தப்பாக நினைக்காதே?!”

கண்களில் கண்ணீர் கரைந்து வற்றத்தொடங்கியது.

Media Attributions

- Screenshot_2026_0730_090406
- Screenshot_2026_0730_090516

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

19.அவரே தமிழர் !!

கலை / கலாச்சாரம்

அவரே தமிழர்!

தமிழ் மேல் உள்ள ஆர்வம் ஒரு ஜெர்மானியரைத் தமிழராக மாற்றி இருக்கிறது.

foreigner and indian man AI Image

ராமன். செல்வராஜ் X

Published on: 09 Feb 2026, 10:10 am

அவரே தமிழர்!

தமிழ் மேல் உள்ள ஆர்வம் ஒரு ஜெர்மானியரைத் தமிழராக மாற்றி இருக்கிறது.

வயது 70ஐ கடந்து இருக்கும். அடர்ந்த புருவம். எடுத்து வாரிக் கட்டிய முடி. சடை போடவில்லை. நல்ல சிவப்பு நிறம். பார்த்தால் ஐரோப்பியர் என்று சொல்லிவிடலாம்.

இடம்: ஐராவதீஸ்வரர் கோயில், தாராசுரம். காலை 7.30 மணி, சனிக்கிழமை.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

தனியாக கோயிலில் வலம் வந்துகொண்டு இருந்தார்.

நான் தினமும் அங்கே நடைப்பயிற்சி மேற்கொள்வேன்.

அவர் தெய்வநாயகி அம்மன் உடன் உறை ஐராவதீஸ்வரர் சாமி கோயிலுக்குள் நுழைவதைக் கண்டேன். ஏதோ என்னுள் மனசு தவித்துக்கொண்டு இருந்தது. அது அவரை நோக்கி நடக்கச் செய்தது. கால்கள் நடந்தன.

அவர் வெளிக் கோபுரத்தைப் பார்வையிட்டார். மெதுவாக நடந்தார். பிறகு பின்புறம் உள்ள விமானத்தைப் பார்த்து அதை கேமராவிற்குள் பதிவு பார்த்து ஏற்றுக்கொண்டார். பிறகு ஒவ்வொரு கற்சிற்பத்தை உற்று நோக்கி அங்கேயே மூன்று நிமிடங்களுக்கு மேல் நின்று பார்த்து, சிலாகித்து, உணர்ந்து, குறிப்புகளை எடுப்பது என்னை பெரிதும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

அவரிடம் மெதுவாக சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

அவர் ஆங்கிலத்தில் புரியும்படி பேசினார்; தன்னை ஒரு ஜெர்மானியர் என்றும் சொன்னார்.

நான் அவரிடம் அக்கறை இருப்பதுபோல் காட்டிக்கொள்ளலாம் என நினைத்து 'ஏதாவது லோக்கல் கைடு (Local Guide) கொண்டு தெளிவு

பெறலாமே' என்று சொன்னவுடன் என்னை ஒரு பார்வை பார்த்தார்.

'நீ எல்லாம் இந்த மண்ணின் மைந்தன்; என்ன தெரியும் உனக்கு எல்லாம்?' என்பது-போல் இருந்தது.

சற்றே சுதாரித்துக்கொண்டு மீண்டும் பேச்-சைத் தொடர்ந்தேன் – அவர் தன்னைப் பற்றிய சிறு குறிப்பை என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

“நான் ஜெர்மனியில் உள்ள 'குட்டன் பெர்க்' என்ற நகரில் இருந்து வருகிறேன்; உங்களுக்-குத் தெரிந்து இருக்கும், முதன்முதலில் எழுத்தை காகிதத்தில் அச்சடித்து புரட்சி பண்-ணிய ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நகரம் அது,” என்றார்.

“ஆமாம்... தெரியும்” என்றேன்.

இதற்கு எதிர்வினையாக, தான் பல சிற்பங்-களை ஆய்வு செய்து வருவதாகவும், பல கோயில்களுக்குச் சென்று வந்ததாகவும் கூறி-னார்.

“இங்கு வருவதற்கு முன்பு திரு.தெய்வநாய-கம் (தொல்பொருள் ஆய்வாளர் கரந்தை, தஞ்சை) அவர்களைச் சந்தித்து வந்தேன். அவர் பல குறிப்புகளும், விளக்கங்களுடன் கூடிய புத்தகத்தை எனக்குப் பரிசளித்தார்,” என்று அவர் சொன்னதும் நான் வாயடைத்து நின்றுவிட்டேன்.

எத்தனை பேருக்குத் தெரியும் தெய்வநாய-

கம் – தராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலைப் பாரம்பரிய சொத்தாக மாற்ற காரணமாய் இருந்த முன் முதற் சிற்பி என்பது.

வணங்கினேன் என் ஜெர்மானிய நண்பரை. அவர் என்னை தட்டிக்கொடுத்து, "தமிழ் மரபு அறக்கட்டளை நடத்தும் முனைவர் மற்றும் தலைவர் சுபாஷிணியின் குழுவில் இணைந்து, பல இடங்களுக்குப் பயணப்பட்டு இருக்கிறேன்," என்று சொன்னவுடன் எனக்கு மயக்கமே வந்துவிடும்போல் இருந்தது.

தமிழ் மேல் உள்ள ஆர்வம் ஒரு ஜெர்மானியரைத் தமிழராக மாற்றி இருக்கிறது.

அவர் என்னிடம் பகிர்ந்துகொண்டவை:

1. தமிழர், தமிழர் நாகரிகம், வாழ்வியல், வானவியல், மருத்துவம், உணவு என பல நூல்களை ஜெர்மானிய மொழியில் கற்று வைத்து உள்ளார்.

2. உங்கள் ஐராவதீஸ்வரர் கோயிலில் உள்ள சிற்பங்களில் பல வரலாற்று உண்மைகள் புதைந்து இருக்கின்றன... மகாபாரத போர் ஒரு உதாரணம்,

3. தமிழர்கள் நடனக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு, இங்கே உள்ள கலை கல்வெட்டுகளே சாட்சி!

4. கோயில் விமானத்தின் அமைப்பு ஒரு போர் களத்தில் உள்ள தேரைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த தேரை இழுக்க தமி-

ழனின் பிராதன போர் விலங்கான யானைகள்; மேலும் இதன்மீது வாள் ஏந்தி போராடும் பெண்கள் என கூடுதல் சிறப்பு.

அவர் மேலும் தொடர்ந்தார்

* பண்டைய காலத்தில் (சோழர் காலத்தில்) தமிழர்கள் வாழ்வியலில் பெண்கள் குடும்பத்தில் முதன்மை பெற்றும், வீரத்தோடும், விருப்பப்படியும் வாழ்ந்து பெருமை சேர்த்த பெண் இனம். அவர்களது தன்மானம், தன்னம்பிக்கை, தற்சார்பு பல புராணங்களை ஆங்கிலத்தில் படித்து தெரிந்துகொண்டதாகத் தெரிவித்தார்.

* சோழர் காலத்தில் பெண்கள் ஆண்களைவிட இயல், இசை, நாடகம் ஆகிய பண்பாட்டு தளங்களில் தங்கள் விடையங்களை ஆழப் பதிவு செய்துவிட்டு சென்று உள்ளனர்.

* கல்வி என்பது அறம் சார்ந்தும், பாலியல் என்பது உணர்வு சார்ந்தும் பெண்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஆண் மகன்களைத் தேர்வு செய்தும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

* ஆண்கள் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினர். மேலும் ஆண்களே அரசர்களாகவும், அதிக அளவில் புலவர்களாகவும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

* பாலியல் வன்கொடுமைக்கு மாறாக அதைப் பற்றிய ஒரு புரிதல் இருந்தது.

* குழந்தை பிறப்பைச் சிற்பங்களாக பல கோயில்களில் இன்றும் காணலாம்.

* புறம் பேசுவதும், புறமுதுகு காட்டுவதும் ஆண்களுக்கு அழகு அல்ல.

இவ்வாறாக அவர் பேசிக்கொண்டே போனார்...

நான் அவரிடம் ஒன்று சொல்லிவிட்டு வந்தேன்.

“உங்கள் ஆய்வுகளை ஒரு புத்தகமாக வெளியிடும்போது, அதன் ஒரு பிரதியை எனக்கு அனுப்பி வையுங்கள்,” என்று சொல்லிவிட்டு என் முகவரியைக் கொடுத்து, மேலும் தபால் மற்றும் இதர செலவுகளுக்காக ரூ.1000-ஐ அவரிடம் நீட்டினேன்.

முகவரியை பெற்றுக்கொண்ட அவர், இந்தப் பணத்தில் நல்ல பயனுள்ள தமிழ் புத்தங்களை நூல் நிலையத்திற்குப் பரிசளிக்குமாறு சொல்லி என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அந்தச் சமயத்திலேயே எனக்கு தெரிந்தது ஒன்றுதான். நாம் ஒன்றாக சேர்ந்து ஒரு இயக்கத்தை – நூலக இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதே?

இந்தக் கால சந்ததியைப் படிக்க வைக்க வேண்டிய மேலான பொறுப்பு நமக்கு அதிகம் இருப்பதாக உணர்கிறேன்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இரண்டு நிலையில் மனிதன் தன் மனதை ஆட்கொள்கிறான்.

ஒன்று – விளையாட்டு,

இரண்டாவது – வாசித்தல்.

புத்தக வாசித்தல்; நானே இதற்கு ஒரு காரணியாக இருக்க வேண்டும் என்று நினைத்து அனுதினமும் (பிரதி வியாழன் விடுமுறை) எங்கள் வீதி ‘சிவ குருநாதன் செந்தமிழ்’ நூல் நிலையத்திற்குச் சென்று படித்து வருகிறேன்.

அவரே தமிழர்; நான் தமிழனாக மாற முயற்சிக்கும் ஒரு தமிழன்.

Media Attributions

- Screenshot_2026_0730_090926

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

20.இயல்பாய் இருப்பதே வாழ்வின் அர்த்தம்: BOYHOOD திரைப்படம் சொல்லும் தத்துவம்


Motivation

'இயல்பாக இருப்பதே வாழ்வின் அர்த்தம்' - 'Boyhood' திரைப்படத் தத்துவம்!

The Philosophy of a Perfect Life

ராமன். செல்வராஜ்

Published on: 15 Feb 2026, 11:05 am

காணப்படும் காட்சிகள் நம்மை ஆட்கொள்கின்றன; இதனை நம் புலன்களால் அறிகிறோம். இப்படி இயற்கை நியதிகள்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இருக்கும்போது, எப்படி நம்மால் நிகழ்கால நிகழ்வுகளை ஆட்கொள்ள முடியும்? அப்படிச் செய்வதால் நாம் நம் இயல்பு நிலையை விட்டு, ஏதோ ஒரு மாற்றத்திற்கான வழியை நமக்கு நாமே தேடிக்கொள்வது போல் ஆகிவிடாதா?

இயக்குநர் ரிச்சர்ட் லிங்க்லேட்டர் மற்றும் 'Boyhood': புகழ்பெற்ற ஆங்கிலத் திரைப்படமான 'Boyhood', ரிச்சர்டு லிங்க்லேட்டர் (Richard Linklater) என்பவரால் இயக்கப்பட்டது. 2002-ல் தொடங்கி 2013-ல் முடிக்கப்பட்ட இத்திரைப்படம், சுமார் 12 ஆண்டுகள் அதே நடிகர்களை வைத்துப் படமாக்கப்பட்டது. இதனால் வாழ்க்கையின் ஓட்டத்தைத் தங்கள் கண்களின் முன்னால் பார்ப்பவர்களால் எளிதாகத் தரிசிக்க முடிந்தது.

இதன் மூலம் இயக்குநர் கூறுவது என்னவென்றால்:

"நமக்கு ஏற்படும் நிகழ்வுகள், சோதனைகள், வேதனைகள், இழப்புகள், பிரிவுகள் என எல்லாமேதான் நம்மை வழிநடத்துகின்றன. நடப்பவை ஒவ்வொன்றும் நம்மை 'இருத்தல்' (Being) செய்கிறது. நாம் இங்கே 'இருத்தலியல்' (Existential) காரணிகளால் செயலாற்றுகிறோம்."

இயற்கை நியதிகள் இப்படி இருக்க, நம்மால் எப்படிச் செயற்கையாக யோசித்து, கவனித்துச் செயல்பட முடியும்? இதுவும் ஒரு சில

நொடிப் பொழுதில் மாறக்கூடியது. ஆக, ‘இயல்பாக இருப்பதே வாழ்வின் அர்த்தம்’ என்கிற நோக்கில் இத்திரைப்படம் எடுக்கப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் கொண்டாடுகிறார்கள்.

தத்துவார்த்தப் பார்வை: ஆனால், தத்துவ ஞானிகள் இந்தப் போக்கைச் சற்றே மறுக்கின்றனர். மார்க்சியம் மற்றும் இருத்தலியல் கோட்பாடு ஆகிய இரண்டையும் வாழ்க்கையின் இரண்டு கண்களாகப் பார்க்க வேண்டும். அகம், புறம் ஆகிய இரண்டையும் சமநிலையில் கொண்டு பார்ப்பதே ஆகச்சிறந்தது. எது சரியானது என்பதைக் காலம் பதில் சொல்லட்டும்.

அலாதியான இறுதிக்காட்சி: 165 நிமிடங்கள் ஓடும் இத்திரைப்படத்தின் தொடக்கத்தில், மேசன் எனும் 6 வயதுச் சிறுவன் இருப்பான். அவன் வளர வளரப் பல அனுபவங்களைப் பெற்று, இறுதியில் கல்லூரியில் அடியெடுத்து வைக்கும்போது படம் முடிகிறது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Boyhood Movie Brainsnorts

அத்திரைப்படத்தின் இறுதிக்காட்சியில், மேசன் தன் நண்பர்களுடன் ஒரு மலைப்பகுதியில் நடைப்பயணம் மேற்கொள்வான். அங்கு ஒரு இளம்பெண்ணுடன் சேர்ந்து சூரிய அஸ்தமனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போது அவள் மேசனிடம் ஒரு முக்கியமான கருத்தைச் சொல்வாள்:

"நிகழ்கணத்தைக் கைப்பற்றிக் கொள் (Seize the moment) என்று இப்போது எல்லோரும் முழங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதை என்னால் இப்படித்தான் பார்க்க முடிகிறது: நிகழ்கணங்கள்தாம் நம்மைக் கைப்பற்றிக் கொள்கின்றன!"

இச்சிகோ இச்சியே (Ichigo Ichie): இந்தக் காட்சி, 'இச்சிகோ இச்சியே' (ஒரு கணம், ஒரு சந்திப்பு) எனும் ஜப்பானிய தத்துவத்துடன் தொடர்புடையது. நாம் 'நிகழ்கண வேட்டையாடிகளாக' மாறும்போது, இக்கணத்தில் நாம் அனுபவிப்பது மீண்டும் ஒருபோதும் நிகழாது என்ற புரி-

தல் நமக்கு ஏற்படும். அப்போது நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு கணமும் அலாதியான அனுபவங்களாக மலரும்.

Media Attributions

- Screenshot_2026_0730_091347
- Screenshot_2026_0730_091435

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

21. பிரியம் தான் நிஜம் -உங்களைத் தேடி ஒரு பயணம்

ஆன்மிகம்

சுயம்தான் நிஜம்: உங்களைத் தேடி ஒரு பயணம்!

A journey in search of you!

ராமன். செல்வராஜ்

Published on: 17 Feb 2026, 3:50 pm

நமக்கு இந்த உலகில் வாழ யாரும் கற்றுக் கொடுக்கவில்லை, மாறாக இயற்கை அல்லது பிரபஞ்ச படைப்பில் எல்லா உயிரினங்களுக்கு இருப்பது போன்று பிறந்தவுடன் நாம் இரண்டு காரியங்களை செய்கிறோம்.

ஒன்று அழுவது மற்றொன்று மூச்சு விடுவது.

அழுவதன் நோக்கம் உடலுக்கு உணவு. மூச்சு விடுவதன் நோக்கம் அந்த உணவு ஜீரணமாக வேண்டும்.

இதுவே சக்தி வடிவில் நம்மை வழி நடத்துகி-றது.

அடுத்ததாகத்தான் நமக்கு “சுய சிந்தனை ” வருகிறது. அப்படி வரும்போது நம்மால் பார்த்து, கேட்டு, பேசி, முகர்ந்து, உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஆக, மனம் கொஞ்சம் கொஞ்சமாக செயல்பட தொடங்குகிறது.

அதுவே உள்ளவைகளையும், அல்லவைக-ளையும் பிரித்து நம்மை மகிழ்ச்சி அல்லது சோகத்திற்கு ஆளாக்குகிறது.

கடைசியாக நாம் ‘அறிவைக்’ கொண்டு ‘மனதை’ பிரித்து ஆள கற்றுக்கொள்கிறோம்.

அப்போது நமக்கு ‘தெளிவு’ கிடைக்கிறது.

அந்த தெளிவு என்பது ‘இருத்தலை’ முன்னி-றுத்துவது.

அது ‘இறந்தகால’ நிகழ்வுகளில் சிக்காமல், ‘எதிர்கால’ ஏக்கங்களை புறந்தள்ளி நம்மை இருப்புக்கொள்ள செய்யுமானால் நாம் நம்மை உணர தொடங்குகிறோம் என்று அர்த்தம்.

அதாவது இந்த உலகில் “சுயம்” தான் “நிஜம்”.

அது எப்போதும் நம்மை பாராட்டி, சீர்படுத்தி, சிதலம் அடையாமல் ஆற்றலைப் பெருக்கி

நீரோடை போல ஓடிக்கொண்டே இருக்க செய்யக்கூடிய வல்லமை உடையது.

இதைத்தான் நாம் “ஆன்ம சக்தி” என்று சொல்கிறோம்.

இந்த “ஆன்மாவிற்கு” அழிவு கிடையாது.

காரணம் அது “காலத்தை” கடந்தது. “வெளிக்கு” அப்பால் கடந்து செல்வது.

என்றும் நிலையானது;

சபலம் அற்றது;

ஆற்றல் மிக்கது.

இந்த ஆற்றலைத்தான் புத்தரும்,அல்லாவும் ,இயேசுவும் கிருஷ்ணரும் பெற்று நம்மை வழி நடத்துகின்றனர்.

ஆகவே “அகந்தையை ” ஒழிப்போம் “ஆற்றலை” பெருக்குவோம்.

அவ்வாறு பெருகும்போது...

முயற்சி பெருகும்,

சக்தி வளரும்,

அறிவு தெளிவும்,

மனசு வசப்படும்,

மூச்சு சீராகும்,

உடல் உயிர் தன்மை பெறும்.

இந்த “புத்தியிர்ப்பு” தான் நம்மை காக்க வல்ல ஆயுதம்.

அது அமைதியை; நாடும் ஆனந்தம் என்பது நம்முள் தோன்றும் ஒரு சுனை.

அது பெரிய ” வெள்ளம் போல் “என்றும், எங்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கும் பரவ ஒரு மேம்பட்ட சமுதாயம் மறுமலர்ச்சி அடைய உதவும்.

ஆகவே எந்த ஒரு தேடுதலும் “தனிநபரிடம் ” இருந்துதான் தொடங்குகிறது.

அது செல்லும் பாதையில் செழுமையும்,பசுமையும் பரப்பி வாழ வழி செய்கிறது.

இந்த உண்மையை உணர்ந்தால் நாம் என்றும் அந்த நிரந்தரமான ஆற்றல்மிக்க ஆனந்தம் என்கிற பெருங்கடலை நீந்தி பெருவாழ்வு வாழலாம்.

முயற்சி திருவினை ஆக்கும்!

Media Attributions

- Screenshot_2026_0730_095325

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

22.சிறுகதை : சாமி குத்தமா?சதி திட்டமா?

கல்கி

சிறுகதை: சாமி குத்தமா? சதி திட்டமா?

Tamil short story | Car in the ground AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 20 Feb 2026, 1:30 pm

Kalki Strip

அந்த மனை சுமார் 50 வருடங்களுக்கு மேலாக காலியாகவே இருந்தது. அதன் எதிரே அரசினர் ஆரம்பப் பள்ளிகூடம். இருபுறமும் வீடுகள்.

பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் அந்த மனைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவது இல்லை. இது ஒரு சாபமாகப் பார்க்கப்பட்டது. அந்தக் காலிமனையில் விளையாடினலோ

வேறு எந்தச் செயல் செய்தாலும் சாமி குத்தம் ஆகிவிடும் என்ற கருத்து அங்கே நிலவியது. காலி மனை சுமாராக 6 சென்ட்.

மூட நம்பிக்கையைப் போக்க அந்த தெரு கவுன்சிலர் அங்கே ஷெட் அமைத்து 10 கார்கள் நிற்பதற்கு வழி வகை செய்தார். இதன்மூலம் அங்கே மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. ஆரம்பித்து ஒரு சில மாதங்கள்தான் ஆகி இருக்கும்.

திடீரென்று ஒருநாள் சுமார் 8 மணி அளவில் காலையில் கூட்டம் கூடியது. அதுவே சிறுக சிறுக பெரிய போர்க்களமாக மாறியது. எங்கும் கூச்சல், குழப்பம்.

காவல்துறைக்குச் செய்தி அனுப்பப்பட்டு எஸ்.பி. காவலர்களுடன் அங்கு வந்தார். மனை சுத்தமாகத் தடுக்கப்பட்டு அங்கு செல்ல யாவருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

செய்தி அறிந்து ஊடகங்கள் அங்கு கூடின. மேலும் காமிராக்கள், செய்தி சேகரிப்பவர்கள் என 100-க்கும் மேற்பட்டவர்கள் கூடியதால் அங்கே, பரபரப்புக்கு பஞ்சம் இல்லாமல் இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். பிறகு செய்தி வெளியானது; அதுவே 'Breaking News' ஆக 'Viral' ஆனது.

அங்கே நிறுத்தப்பட்டு இருந்த கார்களின் பின் வரிசையில் உள்ள ஒரு வண்டியின் பின் இருக்கையில் ஒரு வித்தியாசமான நபர் சடலமாக இருக்கிறார். இதுபற்றிய முழுவிவரம்

பிறகு தெரிவிப்போம் என்றும் எஸ்.பி. தன் முதல்கட்ட அறிக்கை வாயிலாக மீடியாவிற்கு சொன்னார்.

அதற்குள் அந்த மனைப் பற்றியும், அந்த மனையின் வாயிலாக வந்த கற்பனைக் கதைகளும் you – tube முதல் உள்ளூர் பாட்டி வரை உடனே பேசு பொருள் ஆனது. கவுன்சிலர் அதற்குள் தலைமறைவு என்கிற Flash News பின்னோட்டமாக ஒளிபரப்பப்பட்டது.

காவலர்கள் ஒருவழியாக அந்தக் காரை அப்படியே எடுத்து வந்தனர். இப்போது முழுவதும் மறைக்கப்பட்டு இருந்தது. முன்புறம் இருந்த கார் ஓட்டுனர் மட்டும் எல்லா மீடியாக்களுக்கும் தெரியும்படி இருந்தார். உள்ளே உள்ள அந்த இறந்த நபரைப் பற்றிய செய்தி இன்னும் வெளிவரவில்லை.

பல வகையான photos எடுக்கப்பட்டது. கைரேகை நிபுணர்கள் தங்கள் ரகசியத்தை கட்டிக் காத்தனர். தமிழ்நாடு முழுவதும் எங்கள் பள்ளியும், தெருவும் திரும்பத் திரும்ப ஒளிபரப்பு செய்யப்பட்டது. பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு எங்கள் தெருவின் Entry & Exit points மூடப்பட்டன.

அன்று மாலை மாநகர காவல் ஆணையர் சென்னையில் இருந்து மீடியாக்களுக்கு பதில் கூறினார். “காரின் உள்ளே வித்தியாசமான உருவமைப்புடன் உள்ளவர் ஒரு Asian from

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

China.” குற்றவாளியை கூடிய விரைவில் பிடித்து விடுவோம் என்று அவர் தன் முதல்கட்ட அறிக்கையில் சொன்னது Viral ஆனது.

அடுத்து, கவுன்சிலர் காட்டுமன்னார்குடி அருகே பிடிபட்டார் என்ற செய்தியும் பேசுபொருள் ஆனது.

எங்கள் தெரு கவுன்சிலர் கூறுகையில் “செய்தி கிடைக்கப் பெற்றேன்; நான் எந்தத் தவறும் செய்யவில்லை. வதந்திகளை நம்ப வேண்டாம்; நான் திருப்பதி சென்று திரும்பி வருகிறேன், வரும் வழியில் என் மைத்துனர் வீட்டில் இருந்து பேசுகிறேன். மேலும், அங்கு நான் சென்றது என் மகள் வழி பேத்தி பிறந்தமைக்கு,” என்று மிகுந்த கவலையுடன் சொன்னார்.

“என் பங்கிற்கு எல்லா ஒத்துழைப்பையும் அரசுக்கும், சம்பந்தப்பட்ட துறைக்கும் முழுமனதுடன் எந்த ஒரு பாரபட்சமின்றி எடுத்துரைக்க கடமைப்பட்டு இருக்கிறேன் என்பதை உங்கள் (செய்தி மற்றும் காட்சி ஊடகங்கள்) வாயிலாக மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்” என்றும் சொன்னார்.

அதற்குள் அங்கே உள்ள மீடியாக்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தெருவாசிகளிடம் ‘மனை பற்றியும், மனையின் மர்மம்’ பற்றியும் பேட்டி எடுத்துக்கொண்டு இருந்தனர். ஒவ்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வொருவரும் அந்த மனையைப் பற்றி விதவிதமான தகவல்களைக் கூறினர்.

எல்லாவற்றையும்விட தெருவின் ஆஸ்தான ஜோதிடர் ஒருவரின் பேட்டி 10 நிமிடங்கள் நீடித்தது. அவர் ஏற்கனவே அங்கு பில்லி, சூன்யம் வைத்து இருப்பதாகவும் இந்தப் பேயை விரட்ட கேரளா சென்று மாந்திரியம் கற்று வந்ததாகவும் தெரிவித்தது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

“யாரும் எந்த ஒரு மீடியாவிற்கும் எந்த ஒரு தகவலையும் சொல்லக்கூடாது; அப்படி மீறினால் அவர்களுக்கு 1 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்” என்றும் அரசு பிரகடனப்படுத்தியது. பிரச்னைகள் அதிகமாகவதைத் தடுக்கத்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நிலைமை சகஜமாக 10 நாட்கள் ஆகின. பள்ளி மாணவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினர்.

10 நாட்கள் கழித்து வந்த அரசு செய்தி:

“அந்த பகுதியில் ஏதோ பேய் இருப்பதாகவும் அங்கே செல்லக் கூடாது என்கிற செய்தியும் அறிந்தோம்; ஊர் மக்களின் மன நிலையை நன்கு அறிந்து இருக்கிறோம். ஆகவே அமைதி காத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்” என்று முதன்மை செயலாளர் செய்தி வெளியிட்டு இருந்தார்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“இந்தத் தெரு கவுன்சிலர் மூன்று முறை தொடர்ந்து வெற்றி பெற்று நல்ல பல காரியங்களைச் செய்து உள்ளார். ஆகவே எந்த ஒரு வதந்தியையும் நம்ப வேண்டாம்”- பள்ளியில் பெரிய விளம்பரம் செய்யப்பட்டது.

“இறந்து போனவர் ஒரு அயல்நாட்டுக்காரர் என்பதால், நாங்கள் டெல்லியில் உள்ள Consulate General-ஐ தொடர்பு கொண்டு இதுவரை நடந்த நிகழ்வுகளை மத்திய அமைச்சகத்திடம் சமர்ப்பித்து உள்ளோம். உங்களுக்குத் தெரிந்த தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்தினால் துப்பு துலங்குவதில் பெரும் உதவியாக இருக்கும்,” என்றும் கூறப்பட்டது.

பதினைந்து நாட்கள் சென்றுவிட்ட நிலையில் மக்கள் தத்தம் வேலைகளை பார்ப்பதில் மும்முரமாக இருக்கத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை காட்சி ஊடகத்திற்கு பகிர்ந்த வண்ணம் இருந்தனர். உண்மையைக் கண்டுபிடிக்கவில்லையென்றால் இது ஒரு மாபெரும் போராட்டமாக மாறும் என்றும் எச்சரித்தனர்.

‘விசாரணைக்குட்பட்ட பகுதி’ என்று அறிவித்து, கண்காணிப்பு கேமராக்கள் வைக்கப்பட்டன. அங்கே ராட்சச மின் கம்பம் நிறுவப்பட்டது. அது அந்த தெருவிற்கே நல்ல வெளிச்சத்தைத் தந்தது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ஒரு மாதத்திற்கு பிறகு கிடைத்த செய்தி:

கவுன்சிலரின் தாய்மாமாவின் நண்பரானவர் அதே தெருவில் 30 வருடங்களாக வசித்து வருகிறார். அவருடைய மகன்கள் அமெரிக்காவில் பெரிய சாப்ட்வேர் நிறுவனங்களில் பணிபுரிந்து வருவதாக தெரியவந்துள்ளது. அந்த நபரிடம் விசாரணை மேற்கொண்டதில் artificial intelligence மூலம், இந்த உடலை Embalming செய்து உள்ளதாக அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அதிர்ச்சி ஊட்டும் வகையில், ‘இறந்த உடல் ஒரு மனிதக் குரங்கு; மனிதக் குரங்கைப் பதப்படுத்தியதால் வந்த விளைவுதான்’ என்பதை காவலர்கள் தெரிவித்தனர். அனைவரும் இவ்விடத்தை உபயோகப்படுத்தலாம் என்றும், பேயுமில்லை, இது எல்லாம் சாமி குத்தம் என்றும் சொல்ல வேண்டாம் என்றும், வீண்வதந்திகளுக்கு காவலர்கள் முற்றுப்புள்ளி வைத்தனர்.

கவுன்சிலரின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க வேண்டுமென்பதும், அரசியல் காழ்ப்புணர்ச்சியும்தான் காரணம். இந்தச் செயலுக்குக்காக அவருடைய தாய்மாமன் மற்றும் அவரைத் தூண்டிய நண்பரையும், மனிதக்குரங்கை மனிதனைப் போல் பதப்படுத்திய நண்பரையும் மகனையும் கைது செய்தனர்.[1]

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_095657

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

23."நான் யார்"?- இந்த கேள்விக்கு விடை தெரிந்தால் உங்கள் வாழ்க்கை

முகப்பு கல்கி மங்கையர் மலர்

Motivation

"நான் யார்?" - இந்த கேள்விக்கு விடை தெரிந்தால் உங்கள் வாழ்க்கை ராயல் தான்!

motivation article a woman

ராமன். செல்வராஜ்

Published on: 23 Feb 2026, 10:05 am

இந்த உலகத்தில் பிறந்த எல்லா உயிரினங்களுக்கும் வாழ வேண்டும் என்கிற ஆசை இயற்கையாக உண்டு. இது பிறவி குணம். அந்த குணம் தான் நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அப்படி வாழ, பல வழிமுறைகளையும், கோட்பாடுகளையும், நெறிகளையும், சித்தாந்தங்களையும், கொள்கைகளையும் நம்முடைய மதங்கள் நமக்கு கற்பித்துக் கொண்டிருக்கின்றன.

இப்படியாக அதை கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு அமைதியான, ஆனந்தமான வாழ்க்கை நமக்கு கிடைக்கும் என்று ஒரு நம்பிக்கை மனித குல வாழ்வியலில் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது.

மற்ற உயிரினங்கள் போல மனிதன் இருந்தாலும் அவனால் கவலை இன்றி வாழ முடியுமா என்றால் அது ஒரு பெரிய கேள்வி குறிதான்!

காரணம் மனிதன் ஆளப்பிறந்தாலும், அடிமையாக வாழ பழகிக் கொண்டாலும் அவனை ஆட்கொள்வது அவனுடைய மனம் தான்.

அந்த மனதிற்கும், மனிதனுக்கும் உள்ள தொடர்பை, தத்துவம் விளக்கி, ஒரு தத்துவத்தை முன்வைக்கிறது. அது காலப்போக்கில் மாற்றமடைந்து தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது.

மனம், மனிதன் மற்றும் இந்த உலகம் பற்றி ஒரு உறவை சொல்லும்போது பல மதங்கள், பல மத கோட்பாடுகளை ஏற்படுத்தி மனித குலத்தை வழிநடத்தி அதன்படி ஒரு புரிதலையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இப்படியாக அடையாளப்பட்டு மனிதன் தன் வாழ்க்கையை வாழத் தொடங்குகிறான். அவனுடைய தத்துவார்த்த புரிதல் அவனை வாழ்க்கை முழுவதும் கைகுலுக்கி அழைத்துச் செல்கிறது.

மனிதன் அவனுடைய உறவை இந்த உலகத்தில் எவ்வாறு ஏற்படுத்துகிறான் என்பதுதான் ஒவ்வொரு தத்துவ அறிஞர்களுக்கும் சவாலான காரியமாக இருக்கிறது.

ஒரு காட்சியை மனம் காணும்போது அதை ஆன்மீகம், தத்துவம் மற்றும் விஞ்ஞானம் எவ்வாறு எதிர்கொள்கிறது என்பது நம்முடைய புரிதலை மேலும் அதிகமாக்கும்.

உதாரணமாக, சூரியன் மேற்கே மறைகிறது என்கிற காட்சி ஒரு ஆன்மீகவாதிக்கு ஒரு ஆற்றலாக புலப்படும்.

அதுவே, ஒரு விஞ்ஞானிக்கு ஒரு புவியீர்ப்பு இயக்கமாக புலப்படும்.

ஒரு தத்துவஞானிக்கு ஒரு பொருளாகவோ, ஒரு கருத்தாகவோ, ஒரு செயலாகவோ புலப்படும்.

நாம் இந்த உலகத்தினுடைய உறவை வெளியில் இருந்து தான் பெறுகிறோம்.

அந்த உறவை நாம் நம் மனதில் ஆழ செலுத்தி, ஆராய்ந்து அதன் மூலம் நாம் இருப்பை நாம் உணரத் தொடங்கும் போது அங்கே ஒரு உண்மையானது புலப்படும்.

அந்த உண்மையானது வாழ்க்கையில் பல படிமங்களில் நம்மை ஆட்கொள்ளும் அல்லது அனுபவமாக நம்மை வழிநடத்தும்.

அந்தப் படி நிலைகள்,

இன்பம் -துன்பம்,

ஏக்கம்- எதிர்பார்ப்பு,

நல்லது -கெட்டது,

கருப்பு- சிவப்பு,

நல்லவர் -கெட்டவர்,

என்கிற பாகுபாடு.

காரணம் நம் மனதானது எல்லாவற்றிலும் ஒரு இருமை தன்மையுடன் செயல்படுகிறது. அது எழாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒரே வழி எல்லாவற்றையும் ஒருமையில் காண பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு தெளிந்த நீரோடையாக, ஓடும் ஆறாக, விழும் நீரோடையாக என்றும் பயணித்துக் கொண்டே இருக்கக்கூடிய ஒரு இயக்கம்.

அந்த இயக்கம் கீழ்காணும் குணாதிசயங்களை கொண்டுள்ளது.

1. என்றும் மாறக்கூடியது.

2. மாற்றங்கள் இயல்பானவை.

3. சிந்தனைகள் செம்மைபடுத்தப்பட வேண்டும்.

4. சிந்தனையை கட்டுப்படுத்தவோ, அடை-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

யாளப்படுத்தவோ, உருவகப்படுத்தவோ செய்யாமல் நமக்குள்ளே அந்த புரிதல் ஏற்பட வேண்டும்.

5. நான் யார்? இந்த கேள்வி நம்மிடம் தான் இருக்கிறது. நம் இருப்பு தான் நம் சுயம். அதை உணர்ந்தால் நமக்கு ஏற்படும் ஜெயம்.

6. இந்த உணர்வு இயல்பாக இருக்க வேண்டும்.

7. அப்போது அங்கே பயம் இருக்காது. தான் என்கிற தன்முனைப்பு இருக்காது.

8. எப்பொழுதும் போல் வாழ்க்கையை நாம் கொண்டாடிக் கொண்டே இருப்போம்.

9. முடிவாக சொன்னால் நாம் காலத்தையும் இடத்தையும் மீறி நம்முடைய அனுபவமானது நம்மை ஆட்கொண்டு அதனூடே பயணித்து அதன் மூலம் நாம் அடையக்கூடிய அந்த வெறுமை தான் நம் வாழ்க்கைக்கு முழுமையை தரும்.

அந்த அருமையான சமயத்தில் நம்முடைய சிந்தனையும் செயலும் ஒன்றாக பயணித்து ஒருமைப்பட்டு ஒரு உன்னத அனுபவத்தை நமக்கு கொடுக்கும். இந்த அனுபவம் நம் இருப்பில் எந்த நொடியிலும் ஏற்படலாம்.

Media Attributions

- Screenshot_2026_0730_100014

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

24. இதய வாசல்

மங்கையர் மலர்

சிறுகதை: இதய வாசல்!

காதலை இந்த அளவிற்கு மிகவும் அழகாகவும், நளினமாகவும் சொல்லலாம் என்பதற்கு இந்த கதை ஒரு உதாரணம்.

Tamil Short Story AI Image

ராமன். செல்வராஜ்

காதலை இந்த அளவிற்கு மிகவும் அழகாகவும், நளினமாகவும் சொல்லலாம் என்பதற்கு இந்த கதை ஒரு உதாரணம்.

Mangayar malar

எனக்கு இது புதிதாக இருந்தது. அந்த அனுபவம் இதுவரை எனக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை. இது என்ன, சபலமா, சஞ்சலமா, சங்கடமா ... என்ன ஒரு உபாதை.

உபாதை என்று சொல்வதை விட ஒரு

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உன்னத அனுபவம் என்று தான் சொல்ல வேண்டும்.

காரணம், நான் என் வீட்டுக்கு ஒரே பெண் குழந்தை. செல்லமாக வளர்ந்தவள். அப்பா தமிழ் ஆசிரியர். அம்மா சும்மாவா. எல்லாம் அவள் தான். ரொம்ப கெடுபிடி.

அடிக்கடி "உலகம் கெட்டுப் போய் இருக்கி-றது. ஜாக்கிரதை, ஜாக்கிரதை" என்று சொல்லி சொல்லி வளர்த்தவள்.

கடைசியாக ராமநாதபுரத்தில் இருந்து தஞ்-சைக்கு தலைமை ஆசிரியராக மாற்றப்பட்டார் என் அப்பா.

வேறு வழிஇன்றி அப்பா அரவணைப்பில் இருந்த நான் 10வது வகுப்பில் Co – Ed Schoolல் சேர்க்கப்பட்டேன்.

பல நாட்கள் கடந்தன. தோழிகள் கிடைத்-தனர். பலர் தோழர்களுடன் சகஜமாக பழகி-னர்.

எனக்கோ பயம். அதை விட கூச்சம் என்று தான் சொல்ல வேண்டும்.

அப்படி இருந்தும் சுரேஷ் மட்டும் என் மனதில், கற்பனையில், கனவில் அடிக்கடி வரு-கிறான்.

அவன் அவ்வளவு அழகு இல்லைதான். நண்-பர்களுடன் பார்ப்பது அரிது. தனிமை விரும்-பியோ என்ற சந்தேகம் வேறு எனக்கு.

என்னைப் பார்த்து ஒரு நாள், உணவு இடை-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வேளையில் கேட்டான். “நீங்க பக்கத்து தெரு தமிழ் ஆசிரியர் பொண்ணுதானே?”

“ஆமாம்” என்றேன். ” “நீ?”

“நான் ஒரே பையன் அப்பா கிடையாது. அம்மா வீட்டு வேலை செய்து என்னை படிக்க வைக்கிறாள்.”

எனக்கு அவன் மீது பரிதாபம் ஏற்பட-வில்லை. ஏனெனில், அவனிடம் அந்த வெளிப்-பாடு இல்லை.

பின் ஏன், நான் அவனை நினைக்க வேண்-டும்?

எப்படி சொல்வது...?

ஒருமுறை பள்ளி கவிதைப் போட்டிக்கு நான் தயார் செய்த ஒன்றை அவனிடம் கொடுத்து படிக்கச் சொன்னேன்.

படித்து விட்டு திரும்ப கொடுத்தான். அதில் எந்த மாற்றமும் செய்யவில்லை – தலைப்பு தவிர.

என்றும் வாஞ்சையுடன் – (என் தலைப்பு)
“மனம் என்பது குரங்கு அல்ல,
மானுடத்து மகுடம் !
அதற்கு பல பார்வை உண்டு...
காதல், கனிவு, கருணை,
கலக்கம், கலங்கம், கபடம்,
கண்ணியம் – ஆனால்,
உன்னைப் பார்த்தவுடன்
நான் கற்றுக் கொண்டது –

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

காதல் மட்டுமே!”

இதய வாசல் திறந்தது – அவன் மாற்றி எழுதிய தலைப்பு!

இதய வாசல் திறந்தது.

கவிதையை சமர்பிக்க மனசு இல்லாமல் தன் இதயத்தில் சுமந்து கொண்டு வீடு சென்றேன்.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_100545

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

25.நானும் ஒரு அநாதை தான் !?

கல்கி

சிறுகதை: நானும் ஒரு அநாதைதான்!

Tamil short story | Poor woman with child and Man AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 28 Feb 2026, 1:05 pm

நானும் ஒரு அநாதை தான் !?

வாழ்க்கை எல்லோருக்கும் ஒன்றாகத் தான் இருக்கிறது .வளர்ந்த பின் தான் அது வெவ்வேறாக மாறுகிறது .அந்த மாற்றத்திற்கு காரணம் அவர்களுடைய கோட்பாடுகள் ,அவர்களுடைய கலாச்சார பின்னணிகள், மற்றும் அவர்களுடைய வாழ்வியல் வழிகாட்டல்கள்....

இது தவிர நம்முடைய அடையாளப்படுத்துதல் ,அந்த அடையாளத்திற்கு காரணமான நாம் வளர்ந்த சமூகம் , நம் பெற்றோர்கள், ஏன் நாம் படிக்கும் பாடத்திட்டங்கள் .....

பல சமயங்களில் ஒரு மதமோ, ஒரு இனமோ, ஒரு மொழியோ, ஒரு சமுக பின்புலமோ கற்றுத் தறாத ஒரு பாடத்தை “மௌனம் ” நமக்கு தெளிவு படுத்திவிடும்.

ஆக இங்கே எல்லோரையும் குறை கூறிவிட்டு நம்மை தனிமைப்படுத்திக் கொண்டு வாழ விரும்புவது ஒரு அபத்தம்

ஆனால் என்ன செய்வது வாழ்க்கை என்பது ஒரு அபத்தமாக தான் இருக்கிறது.

குடந்தை ‘கிருஷ்ணபவன்’ இல் இருந்து தினமும் சிற்றுண்டி சாப்பிட்டு அதன் அருகே இருக்கும் சாரங்கபாணி கோயில் கோபுரத்தை கும்பிட்டு “ஓம் நமச்சிவாய” என்று சொல்லி பக்கத்து தெருவில் தான் வேலை பார்த்த வங்கியில் தினமும் செல்வது வாடிக்கையாக இருந்தது பாஸ்கரனுக்கு.

அப்படியாக தான் அன்றும் அவன் வெளியே வந்தான் . அப்போது அவன் கண்ட காட்சி அவனை சற்று செயலிழக்க செய்தது.

அந்த சம்பவம் தான் அவன் எதிரே வந்து நின்று யாசகம் கேட்ட ஒரு நடுத்தர வயதுடைய பெண்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

எதிரே மணல் திட்டில் அவளுடைய குழந்தை கோபுரம் கட்டி விளையாடிக் கொண்டிருந்தது.

சில்லறை இல்லை என்று தட்டிக் கழிக்க மனமில்லை நம்ம பாஸ்கரனுக்கு.

எப்போதுமே கோவிலுக்கு செல்லும் முன் பழைய செருப்பை வெளியே விட்டு செல்வதற்கென்று சில காலணிகளை வைத்திருப்பான்.

அவன் சேலத்தில் இருந்து வந்து இங்கே தங்கி இருந்து வேலை செய்து வந்தான்.

ஹோட்டலில் வாரத்திற்கு இருமுறை தனக்கு பணிவிடை செய்யும் ஊழியருக்கு உபரியாக 10 ரூபாய் கொடுப்பது வழக்கம்.

ஆனால் எந்தவிதமான சேவையையும் எதிர்பார்க்காமல் தன் மனது தன் பாக்கெட்டில் இருந்து 50 ரூபாய் எடுத்தது.

அதை அந்த அம்மாவிடம் கொடுத்தது.

இதை அவன் முற்றிலுமாக மறந்து இருக்க வேண்டும்.அதை அவனிடம் திரும்பவும் ஞாபகம் படுத்தியது அதே ஹோட்டலில் தினமும் வாடிக்கையாளராக வந்து உணவு அருந்தும் ஒரு 60 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர்.

அவரிடம் அவ்வப்போது பேசி பழகியது உண்டு.

ஆனால் இன்று அவர் சற்று கோபத்துடன் பாஸ்கரனை பார்த்து “நீ நேற்று செய்தது முற்றிலும் தவறு” என்றார்.. அந்தப் பெண்ணுக்கு நீ

ரூபாய் 50 கொடுத்தை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்.

உனக்கு தெரியுமா? அது நன்னிலத்தில் இருந்து தினமும் பஸ் ஏறி 10 மணி முதல் 5 மணி வரை இந்த ஹோட்டலில் தான் சுத்தி வரும்.

போகும்போது இருக்கும் பணத்தில் சரக்கு வாங்கி இதே யாசகம் செய்யும் தன் கணவருக்கு எடுத்து செல்வதாக, சொன்னதை நான் கண்கூடாக பார்த்திருக்கிறேன். அப்படி இல்லை என்றால் அடி விழுமாம் !!

“நாம் செய்யும் உதவி பிறருக்கு உதவியாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது ” இவ்வாறாக அவர் முடித்தார்.

‘இவ்வளவுதான் நான் கூற முடியும்’ மற்றபடி உன்னை நான் குறை சொல்லவில்லை. உன் உதவியும் நான் குறைத்து மதிப்பிடவில்லை.

இவ்வாறாகக் கூறியது அவனுக்கு மனதில் ஒரு பெரிய சங்கடத்தை ஏற்படுத்தியது.

ஏன் நாம் வாரம் இரு முறை இந்தப் பெண்ணுக்கு மதிய சாப்பாடு கொடுக்க இந்த ஹோட்டலில் சொல்லிவிட்டு பணத்தை செலுத்தி விட்டால் என்ன என்று தோன்றியது...

இதை யாரிடமும் சொல்லாமல் அவன் அந்த வேலையை செய்தான்....

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இவ்வாறாக சில வாரம் ஓடியதும் ,அதே பெரியவர் பாஸ்கரனிடம் வந்து, “அப்பா நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காத ! நீ சாப்பாடு எல்லாம் வாங்கி கொடு ; அதெல்லாம் ஒன்னும் தப்பு இல்லே ! ஆனா ஒன்று தெரியுமா ?நம்ம கவர்மெண்ட் இதே மாதிரி யாசகம் செய்பவர்களுக்கு மத்திய உணவு உண்பதற்கு பக்கத்தில் உள்ள ” ராமசாமி கோயிலில்” டோக்கன் கொடுத்து தினம் 1 மணிக்கு உதவி செய்கிறார்கள்”.

‘அப்படி இருக்க நீ ஏன் உன் பணத்தை வீணடிக்கிறாய்’ என்று சொல்லும் போது என்ன சொல்ல சொல்வது என்றே புரியாமல் பாஸ்கரன் ஒரு சிறிய புன்முறுவலுடன் அவரிடமிருந்து விலகிச் சென்றான்.

என்னடா இது? இங்கே கொடுத்தாலும் பிரச்சனையா? கொடுக்காவிட்டாலும் நம்மை யாரும் ,எதுவும் கேட்கப் போவதில்லை !!

அப்படி இருக்க நான் ஏன் மற்றவர்களுக்காக என் இயக்கத்தை முடக்கி கொள்ள வேண்டும்?

“நான் உயிருடன் இருக்கிறேன் ” என்பதை விட “நான் வாழ்கிறேன் ” என்பதே எனக்கு இனிமையாக இருக்கிறது.

“நானும் ” நான் தினமும் பார்க்கும் “அந்த யாசகம் செய்யும் அந்த பெண்ணின் மகனும் ” ஒரு விதத்தில் அனாதைகளே.

அவனுக்கு பசிக்கும் போது எப்படியோ சாப்பாடு கிடைக்கிறது ...

எனக்கு பசிக்கும்போது என் பசியை என் சம்பளம் மூலம் பூர்த்தி செய்கிறேன்.

நான் யாருக்கும் உதவி செய்யவில்லை. மாறாக என் எண்ணம் ஒரு செயலை செய்யத் தூண்டுகிறது. அந்த செயலின் வடிவாக ஒரு இயக்கம் நடக்கிறது.

அந்த இயக்கத்தில் உள்ள நல்லது கெட்டதுகளை ஆராய்வது என் நோக்கம் அல்ல ...

எனக்குப் புரிந்த வரையில் நான் யாருக்கும் உதவி செய்யவில்லை.

அதிகம் படிக்கும் பழக்கம் உள்ள அவனுக்கு அன்று கையில் ஆறத் தழுவி வழிகாட்டியது அன்று படித்துக் கொண்டிருந்த அந்த புத்தகம்.

இதன் மூலம் அவன் தெரிந்து கொண்ட சில உண்மைகளை அடுத்த நாள் அந்த ஹோட்டல் மேலாளர் இடம் கொடுத்துவிட்டு அதை தன் சக சாப்பாட்டு நண்பரான பெயர் தெரியாத அந்த வாடிக்கையாளருக்கு கொடுக்கும்படி சொல்லிவிட்டு சென்றான் ...

அந்த கடிதம் ஒரு உரையில் மூடப்பட்டிருந்தது ...

மேலும் தங்களை நேராக பார்த்து சொல்லாதற்கு வருந்துகிறேன். நேற்று உடனடியாக நிர்வாக அலுவலகத்தில் இருந்து வந்த

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உத்தரவின்படி நான் சேலம் புறப்பட்டு விட்டேன்

நேரில் சொல்ல வேறு எந்த விஷயமும் இல்லை. நான் எழுதிய இந்த கடிதத்தில் ஏதாவது குறை தென்பட்டால் எனக்கு மின்னஞ்சல் மூலம் முடிந்தால் தெரியப்படுத்தவும்.

அவன் விட்டுச்சென்ற செய்தி...

எந்த ஒரு கோட்பாடும் ,எந்த ஒரு கலாச்சாரமும் எந்த ஒரு சமூகமும் கற்றுக் கொடுக்க முடியாத ஒரு வசந்தத்தை, ஒரு வாழ்வியல் உண்மையை அதன் எதார்த்தத்தை படம்பிடித்து காட்டுவது போன்று ஒரு புத்தகத்தை வாசித்தேன். அந்த புத்தகத்தின் பெயர் உருமாற்றம் அதை எழுதியவர் திரு ஃபிரான்ஸ் காஃப்கா....

நானும் ஒரு காலத்தில் அனாதையாக தான் போகிறேன்.அதனை முன்கூட்டியே அறிவித்த நிகழ்வு தான் “நான் தினமும் எதிர்கொண்ட அந்த அனாதைச் சிறுவனும் அந்த சிறுவனை வளர்த்து வந்த பெயர் தெரியாத அந்த பெண்மணியும்”.....

எனக்கு எந்த விதத்திலும் உறவு இல்லை ....

என்றாலும் ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு சமயத்தில் ,ஏதோ ஒரு காலகட்டத்தில் நான் தனிமைப்பட்டு வாடும்போது என் சிந்தனையில் அவர்கள் நிச்சயம் வருவார்கள்...

அவர்களை இந்த பிரபஞ்சம் பார்த்துக் கொள்ளட்டும்.

Frank Kafka எழுதிய ஒரு குறுநாவல். உருமாற்-றம் – metamorphosis .அது அவனிடம் மனமாற்-றத்தை நடத்த தொடங்கிவிட்டது.

நன்றி வணக்கம்.

ராமன். செல்வராஜ்

Media Attributions

- Screenshot_2026_0730_100749

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

26.தொழிலில் வெற்றி பெற மேலிருந்து கீழ் பார்க்காதீர்கள்!இந்த 11 விஷயங்களை கீழிருந்து மேல் பாருங்கள்!!

Motivation

தொழிலில் வெற்றி பெற 'மேலிருந்து கீழ்' பாக்காதீங்க.. இந்த 11 விஷயங்களை 'கீழிருந்து மேல்' யோசிங்க!

business success strategy 11 essential factors Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

துணிவு எப்போது வரும்; துக்கம் வரும்போது தான்.

துக்கம் எப்போது வரும்; துணிந்து ஒரு 'செயல்' செய்யும் போது தான்.

செயல் என்பது பல வினைகளால் கட்டமைக்கப்படுகிறது; காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; இடத்தால் மாற்றி அமைக்கப்படுகிறது.

இவ்வளவு 'காரணிகள்' கொண்டு ஒரு துணிவு நம்மிடம் பிறக்க எது காரணமாக இருக்கிறது.

'சுயநலம்' என்று உடனே சொல்லி விடலாம்! உண்மைதான்!

ஆனால், அது ஒன்றே போதுமா?

உதாரணத்திற்கு ஒரு முதலாளி ஒரு உணவகம் ஒன்றை அமைக்க முனைகிறார்.

அதற்கு அவருக்கு முதலில் 'சுயநலம்' என்ற ஒன்று காரணமாக இருக்கிறது. காரணம் அவர் ஒரு பெரிய முதலீட்டை வைத்து ஒரு வணிகத்தை, ஒரு வியாபாரத்தை தொடங்க முடிவெடுப்பதற்கு முன் அதில் உள்ள 'நிறை குறைகளை' அறிய அவரே ஒரு தொழிலாளியாக பணியாற்றி இருக்க வேண்டும்.

இல்லையென்றால் குறைந்த பட்சம் தன் குடும்பத் தொழில் என்று எடுத்துக் கொண்டாலும் அதன் வளர்ச்சிக்கு பல 'விழுமியங்களை' ஒன்று கூட்டி அமைக்க தெரிந்திருக்க வேண்டும்.

அதற்கான ஏற்பாடுகள் என்ன? என்ன?

இதே இங்கே பார்க்கலாம்…

1. இடம்
2. முதலீடு
3. கடன் பெறுதல்
4. சொத்துக்கள் அடைமானம்
5. தொழிலாளர்கள் நேர்த்தி
6. பயன்படுத்தும் பொருள்கள்
7. போக்குவரத்து சம்பந்தமான செலவீனங்கள்
8. தொழில்முறை போட்டிகள்
9. அணுகுமுறை
10. தரம்
11. நிரந்தரத் தன்மை பற்றிய புரிதல்…

இதையே கீழிருந்து மேலாக யோசித்து செயல்படுவீர்கள் என்றால் உங்களுக்கு வெற்றி நிச்சயம்!

Media Attributions

- Screenshot_2026_0730_101013

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

27.வாங்க "டீ "சாப்பிடலாம் !!

கலை / கலாச்சாரம்

வாங்க 'டீ' சாப்பிடலாம்!

Tea shop Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 20 Mar 2026, 3:22 pm

'டீ' சாப்பிடும் போது ஏற்படும் ஒரு சில சாகசங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறேன்.
"டீ" என்பது ஒரு 'குடிநீர்' என்பதைத் தாண்டி, அது ஒரு, ஊக்க சத்தியாக,
உந்து சக்தியாக, சிந்தனைப் பெருக்காக,
சிறகடிக்கும் எண்ணங்களை சீர் செய்யும் ஒரு யாகமாக, சமூக உரையாடல்களின் ஒரு அங்கமாக, மேலும் சொல்லப் போனால் ஏழைகளின்

பங்காளியாக,
ஒரு விருந்துக்கு ஒப்பான ஒரு மனநிறைவை ஏற்படுத்தித் தரும் ஆன்ம பலமாக...

(அறிமுகம் ஏற்பட்டு ஒரு சில நொடிப்பொழுதில் நாம் அழைப்பது – வாங்க 'டீ' சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்.

ஆக இங்கே பணம் பெரிது இல்லை; பெரிதினும் பெரிது அகம்!!)

நம்மிடையே குடிகொண்டு இருக்கும் இந்த 'டீ' அதிக செலவு இல்லாமல், நம்மை பலரிடம் அறிமுகம் செய்கிறது.

இந்த 'உளவியலை' ஆராய்ச்சி செய்பவரிடம் விட்டு விடுகிறேன்.

என்னுடைய வாதம்; ஏழை, பணக்காரன் பேதம் இன்றி ஒரு சில நேரங்கள் நம்மை இணைக்கின்றன. (உதாரணமாக ரயில் பயணங்கள்) இதை தமிழில் "தேனீர்" என்று சொல்கிறோம்.

மீண்டும் – தேனீர் பற்றிய உண்மை தரவுகள் எழுத்து அறிவித்த இறைவனுக்கே சாத்தியம்.

ஆம்! தேனும், (ஆம் Tea Cation தேன் மாதிரி இருப்பதனால்) பாலும் ஒருசேரக் கலந்து அதில் சிறிது சர்க்கரை இட்டு நன்றாக ஆற்றி, இளஞ்சூட்டுடன் பருகும் போது ஏற்படும் ஒரு "தனிமை"; முதல் தன்னை மறந்து பிறரிடம் உலாவும் போது ஏற்படும் "அலப்பறை" வரை

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நம்மை கொண்டு செல்லும் சக்தி இந்த “தேனீருக்கு” உண்டு.

பல ரகசியங்கள் ‘டீ’ கடையில் உடைக்கப்படலாம்.

eg: வங்கியில் கிளை மேலாளரின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய புரிதல் “off the record” – வங்கி ஊழியர்களின் உரையாடல்கள், மாலைப் பொழுதில் தேனீர் – கடைகளில் நடக்கும்.

ஆகவே நமக்கு முதலில் தோழனாய், சகோதரனாய், நண்பனானாய், உற்ற உறவினனாய், ஏன் எதிரியை கூட சமாளிக்கும் உத்தியினை கற்றுக் கொடுக்கவல்ல திறன் வாய்ந்தது அந்த “டீ” என்றால் மிகையாகாது.

அந்த சமாளிக்கும் திறன் என்ற கற்பனை “டீ”யினால் தான் எனக்கு வந்தது. “டீ க்கு” என் வந்தனம்.

ஆகவே! ஒன்று மட்டும் உறுதியாய் சொல்வேன். நீங்கள் செலவு செய்ய வேண்டாம்.

ஏதாவது சந்தர்பத்தில், உங்களுக்கு வேலை செய்த பணியாளர்களிடம் சேர்ந்து “டீ” அறுந்திப் பாருங்கள்.

நாமும் “பாரதி” ஆகலாம். முதலில் “டீ”-யிலிருந்து தொடங்குவோம்.

ஜப்பானியர்கள் “டீயை” சொட்டு சொட்டாக அறுந்துவார்கள் என்றும், அது அவர்களின்

கலாச்சார, பண்பாட்டு குறியீடு என்றும் படித்து இருக்கிறேன்.

சரி, நம்ப விஷயத்துக்கு வருவோம்:

ஒரு பஸ் பிரயாணம் அல்லது ரயில் பிரயாணம் நாம் ஒரு 5 அல்லது 6 மணி நேர அளவலாவிய பிறகு, பிரியும் நேரத்தில் "நம் சுயபுராணத்தையும் அவரது பெரிய புராணத்தையும்" மீண்டும் அசைபோட்டு புதுப்பிக்க வல்ல வல்லமை "டீக்கு" உண்டு என்பதை அறிவேன்.

"டீக்கடை" என்றால் 'நாயர் கடை' என்ற நிலைமை மாறி இன்று – 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஒரு இனம்' – என்று பாகுபாடு தெரியாமல் நம்மை இணைக்கும் ஒரு இனிய நாதமாய் எந்த பிரச்சாரமும் இன்றி மத நல் இலக்கணத்தை தெருகோடி மக்களும் ஒன்று சேர்ந்து இசைக்கிறார்கள்.

அதனால்தான் என்னவோ "தலைவர்கள் டீ அருந்தும் புகைப்படம்" அதிக அளவில் Troll ஆகிறது.

"மீளும்" நம் Tea Time.

ஒரு அசாதாரண கேள்வி.

நேர்காணல் செய்பவர் வேலைக்கு வந்த ஒரு நபருக்கு ஒரு கப் காபி order செய்தார்,

வந்ததும், அது அவருக்கு முன்னால் வைக்கப்பட்டது, பின்னர் அவரிடம் கேட்கப்பட்டது.

உங்களுக்கு முன்னால் என்ன இருக்கிறது?

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வேலை தேடி வந்தவர்: உடனடியாக TEA என்று பதிலளித்தார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் ஏன் TEA என்றார் தெரியுமா?

அது காபி என்று அவருக்கு தெரியும்?

கேள்வி: “உங்களுக்கு முன்னால் என்ன இருக்கிறது?” what is before “U” YOU

(U -YOUஎன்கிற alphabet முன்) பதில் TEA (T என்கிற alphabet)

U என்ற எழுத்துக்கு முன் T என்ற எழுத்துக்கள் வருவதால்.

Media Attributions

- Screenshot_2026_0730_101305

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

28.சரக்கு சாரளம் ஆனது!

கல்கி

சிறுகதை: சரக்கு சாளரம் ஆனது!

Mathi standing in class Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 23 Mar 2026, 11:15 am

Kalki Strip

“எல்லாம் சரி மச்சி! எனக்கு நூறு ரூபா குடுடா?”

உடனே இல்லை என்று சொன்னான் சூரி.

“டேய்.. ரொம்ப டிராமா போடாத? 100 ரூபாயை கொடுத்துவிடு. இல்லன்னா நம்ப பிரண்ட்ஷிப்பை இழக்க நேரிடும்” இப்படிக் கூறிய மதியை ஒரு அரை விட்டான் சூரி.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“இதோ பார்..! இதுதான் முதலும் கடைசியும், நான் இனிமேல் பணம் கொடுப்பதாக இல்லை” மேலும் தொடர்ந்தான்...

“இனிமேல் இதே மாதிரி யார் கிட்டயும் நீ கேட்பது தெரிந்தால் என் அப்பாவிடம் சொல்லி உன்னை இந்த கல்லூரியில் இருந்து நீக்கி விடுவேன். ஜாக்கிரதை!”

இதை சற்றும் எதிர்பாராத மதி, “டேய்.. உங்க அப்பா டி.எஸ்.பி. என்கிற நினைப்பில் என்னை மிரட்டுகிறாயா?”

இப்போது அடி அடுத்த கன்னத்தில் மிகவும் காட்டமாக விழுந்தது.

நிலைகுலைந்த மதி தட்டு தடுமாறி “மாமே..! என்னை மன்னிச்சுக்கோ? தெரியாமல் சொல்லிட்டேன். இனிமேல் நம்ம பிரண்ட்ஷிப்பே வேண்டாம். என்னை என் பாதையில் போகவிடு.

“டேய் லூசு! உன்னை தடுப்பதற்கு நான் யாரு. உன் முயற்சி படி உன் வாழ்க்கை அமையப் போகிறது. அதில் எனக்கு ஒன்றும் பொறாமை கிடையாது. நான் பெருமைப்படும் அளவிற்கு நீ வளர்ந்தால் அது எனக்கு சந்தோசம் தான்” இவ்வாறாக பேசிவிட்டு தன் வகுப்பிற்கு சென்றான் சூரி.

சுற்றியும் யாரும் இல்லாததால் சுகாரித்துக் கொண்டு வகுப்பறைக்கு பின் தொடர்ந்தான் மதி.

ஆசிரியர் மதியைப் பார்த்து, “என்ன ரொம்ப தீர்க்கதரிசனமா இன்னைக்கு வந்து இருக்கீங்க..” என்று கேட்டார்.

வகுப்பில் எல்லோரும் சிரித்தனர்.

“ஆமாம் சார்.. எனக்கு ஞானம் பிறந்து விட்டது என் வழி இனி தனி வழி கிடையாது!”

இனி எல்லோரிடமும் சேர்ந்து பயணித்து படித்து இந்த கல்லூரிக்கும், என் சக ஆசிரியர்களுக்கும், என் மாணவர்களுக்கும், என் குடும்பத்திற்கும், ஏன் என் நாட்டிற்கும் இன்று முதல் என்னை நான் மாற்றிக் கொண்டு விட்டேன்”.

“அடே! பலே!! புத்தருக்கு போதி மரத்துல ஞானம் கிடைத்தது போல மதிக்கு இந்தக் கிளாஸ் ரூம்ல ஞானம் கிடைத்திருக்கு போல!’

மதி இவ்வாறு பேசியது எல்லோருக்கும் ஆச்சரியம் தான்.

“பார்ப்போம்!!” என்று சொல்லி ஆசிரியர் தன் வகுப்பை தொடர்ந்து நடத்தினார்.

காலங்கள் உருண்டோடின...

கல்லூரியின் கடைசி நாள்..

எல்லோருக்கும் நல்ல மதிப்பெண்கள் இருந்ததால் தேர்ச்சி என்பது 100% சந்தேகமே கிடையாது. ஆனால் அவர்கள் மனதில் ஒரு பெரிய வெறுமை தெரிந்தது.

கடைசியாக மதி பேசினான்...

“நண்பர்களே!! உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்! நான் குடித்தது மட்டும்தான் உங்களுக்கு

தெரிந்தது. அதற்கான காரணம் சொல்லி நான் ஒரு நியாயம் கற்பிக்க விரும்பவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு விடைபெறுகிறேன். தயவுசெய்து கேளுங்கள்! ‘எனக்கு யாரும் இல்லை’ என்று நினைத்தபோது எனக்காக கிடைத்த நண்பன் தான் சூரி. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் எனக்கு வழிகாட்ட யாரும் இல்லை; அன்பு காட்ட அம்மா இல்லை; அப்பாவிற்கு குடிப்பதற்கு மட்டுமே நேரம் இருந்தது. இப்படியாக எல்லாம் இல்லாத போது, எனக்கு எல்லாமே இருப்பது போன்று கிடைத்தவன் தான் என் சூரி. என்னையும் ஒரு மனிதனாக மதித்து, எனக்கு பண உதவி செய்து, படிப்புக்கு வழிகாட்டி, என்னை உயர்த்துவதற்கு தன்னலம் பாராமல் உழைத்த என் நண்பனை நான் இன்று நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். அவன் எனக்கு செய்த மற்ற உதவிகளை விட நான் பெரும் பேராக கருதியது அவன் எனக்காக செலவிட்ட பல மணி நேரங்கள். தினமும் என்னிடம் குறைந்தது இரண்டு மணி நேரம் பேசுவான். பேச்சில் ஒரு அக்கறை இருக்கும்; ஒரு அன்பு இருக்கும்; ஒரு அரவணைப்பு இருக்கும்; நான் இருக்கிறேன் என்கிற ஒரு தன்னம்பிக்கை இருக்கும்!

ஒட்டு மொத்தமாக சொன்னால், என் அப்பா, அம்மா இருவருமாக இருந்து செயல்பட்ட சூரி

என் வாழ்க்கையில் எனக்கு கிடைத்த ஒரு மாபெரும் வெளிச்சம். இந்த வெளிச்சமானது என் உயிர் உள்ளவரை பிரகாசமாக எரிந்து, என் நாட்டிற்கும், என் குடும்பத்திற்கும், என் நண்பனுக்கும் எப்பொழுதும் கடமை ஆற்றிக் கொண்டிருக்கும்.

உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். நான் படிக்கும்போதே ஐ.எஃப்.எஸ் அதாவது இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ்-இல் பாஸ் பண்ணி விட்டேன். என்னுடைய இலக்கு இயற்கை பாதுகாத்து, இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, இதன் மூலம் மானுடம் செழிக்க என்னால் ஆன சிறிய உதவி எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். வாழ்க்கையின் அர்த்தத்தை என்னுடைய சூரி சொல்லாமல் செயலால் செய்து காண்பித்தான்.

நான் அறிவால் என் ஆணவத்தை ஒழித்து என்னை ஆளாக்கிய இந்த சமுதாயம் ஒரு நல்ல சமுதாயமாக மறுமலர்ச்சி அடைய இந்த பிரிவு உபசார விழாவில் உங்களிடம் ஒரு நிபந்தனையை விதிக்கிறேன். தயவுசெய்து அதைப் பின்பற்றி உங்களுடைய வாழ்க்கையை, ஒரு அர்த்தமுள்ள, அமைதியான, அழகான, வாழ்வியலை உண்டாக்க ஒழுக்கத்தை முதல் கல்வியாக கொண்டு செயல்பட வேண்டும்! என்பதே. இதுவே நம் குடிக்கின்ற பழக்கத்தை மறந்து நம் குடியை உயர்த்தும்

ஒரு சாமானியனுடைய சாளரம். என்னுடைய சாளரம் எப்போதுமே திறந்திருக்கும். வாருங்கள்! சேர்ந்து பயணிப்போம் சமுதாயம் மேம்பட.. பல சூரிகள் நமக்கு கிடைத்திட..! நன்றி..!"

நண்பர்கள் பிரிந்தனர்; ஆனால், அவர்களுடைய இதயங்கள் இனி ஒன்று சேர்ந்து இயங்கும் என்பதில் எந்த சந்தேகமும் யாருக்கும் வரப்போவது கிடையாது.

Media Attributions

- Screenshot_2026_0730_101626

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

29. சிறுகதை : பாசப்பிணைப்பு

மங்கையர் மலர்

சிறுகதை: பாசப் பிணைப்பு!

sibling's love tamil short story Credit AI Image

ராமன். செல்வராஜ்

Published on: 26 Mar 2026, 5:10 pm

அத்தைக்கு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது; இது எங்களுடைய கணிப்பு. கடவுளுடைய சித்தம் என்பது யாருக்குத் தெரியும்? ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது; வயது ஆகிறது, “இதற்கு மேல் இவர்கள் இன்னமும் கஷ்டப்படக் கூடாது” என்கிற பேச்சு நாலாபுறமும் கேட்கிறது. ஆனால், மனம் மட்டும் கேட்க மாட்டேன் என்கிறது!

என் அத்தையினுடைய உடல்நலம் இப்படியாக இருக்கிறது என்பதை உங்களுக்கு விவரிக்கிறேன். அத்தைக்கு வயது இப்போது 89; என் அப்பாவிற்கு இப்போது 92 வயதாகிறது. அவருக்குக் காது கேட்கவில்லை. அவ்வப்போது எதையோ புரிந்துகொண்டு தலையை ஆட்டிக்கொண்டு, மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு, தனக்கு வேண்டியதை உரக்கச் சொல்லி, அதன் மூலம் தன் சுயநம்பிக்கையை இழக்காமல் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு ஜீவன் அவர்.

என்னதான் அவருக்குத் தனியாக ஆள் போட்டுப் பணிவிடை செய்து கொண்டிருந்தாலும், அவருடைய வேலையை அவரே முடிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய விருப்பம். வயோதிகம் அவரை முழுமையாகச் செயல்பட அனுமதிக்காத நிலையிலும், அவரே குளிக்கிறார்; அவருக்குப் பணிவிடை செய்யப்படும் எளிய உணவுகளைக் கேட்டு விரும்பிச் சாப்பிடுகிறார்.

அவருக்கு இப்போது இரத்த உடன் பிறந்த உறவு என்று இருப்பதோ ஒரே தங்கை மட்டும்தான். கடந்த இரு வருடங்களாக அவருடைய இரண்டு அண்ணன்மார்களும், ஒரு அக்காளும் மூப்பின் காரணமாகச் சிவலோகம் அடைந்தனர். இதனை அவ்வப்போது கால இடைவெளி விட்டு மெதுவாக அவரிடம்

சொல்லி வந்தோம். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு காலத்தின் போக்கைக் கணக்கிடவே செய்தார்.

ஆனால், கொடுமை என்னவோ வேறு விதமாக இருக்கிறது. அவருடைய தங்கையின் பாசம் எங்களுக்குத் தெரியும். எப்போதுமே தங்கையைப் பற்றியும், அவள் கூட்டுக் குடும்பமாக இருந்தபோது பொறுப்புடன் செயல்பட்டு நாத்தனார், கொழுந்தியார் என எல்லோருடனும் சுமுகமாக இருந்ததையும், வாழ்க்கையில் சிக்கனம் மற்றும் கஞ்சத்தனம் இவற்றின் வேறுபாடுகளைத் தன் வாழ்நாள் முழுவதும் உணர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மாபெரும் பெண் ஆளுமையைப் பற்றியும் அவர் பெருமையாகப் பேசுவார்.

என் அத்தையை இன்றும் கவனிக்கப் பேரனும், ஏன் கொள்ளுப் பேரனும் கூட அன்பு செலுத்திப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் என்னவோ, “என்னப்பா, ஏன் அத்தையை அடிக்கடிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்?” என்று நாங்கள் வியக்கிறோம்.

“ஏன் ஒரு மாதமாக என்னை பார்க்க வரவில்லை?” என்று அவர் கேட்கிறார். இதற்கான காரணத்தை நாங்கள் மூடி மறைத்துச் சொன்னாலும், ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

பாசப்பிணைப்பு அவரைக் கட்டிப்போட்டிருக்கிறது. காலம் அவரை கடுமையாகத் தாக்கினாலும், தன் பாசத்தால் தன் தங்கையின் நலனை இன்றளவும் சிறிதும் குறையாமல் விசாரிப்பதும் வேண்டுவதுமாக இருக்கிறார். இப்படியான ஒரு உன்னத வாழ்வு என் அப்பாவினுடையது என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இப்படியான ஒரு குடும்பத்தில் பிறந்து, இப்படியான ஒரு உறவைக் காணும்போது என் மனசு முழு நிறைவடைகிறது.

அப்பா தன் துணைவியாரை இழந்து 7 வருடங்கள் ஆகின்றன. தனிமை ஒருபுறம்; தங்கை மறுபுறம். எப்படியாவது தன் தங்கையைப் பார்த்துப் பேச, படுத்த படுக்கையில் இருக்கும் ஒரு அண்ணன் முற்படுகிறான் என்றால், அது இந்தியப் பண்பாட்டின் ஒரு உன்னதக் கூறு!

இந்த அளவோடு இந்தச் சம்பவங்களை முடித்துக்கொள்கிறேன்.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_101850

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

30. மாறனின் தாடி!தாடி வளர்ப்பதன் தத்துவம்!


கல்கி

மாறனின் தாடி … தாடி வளர்ப்பதன் தத்துவம்!

தாடி வளர்ப்பது என்பது வெறும் முகத்தில் வளரும் முடி மட்டுமல்ல; அது ஒரு தத்துவம் என்பதை இந்த உரையாடல் மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

Beard

ராமன். செல்வராஜ்

Published on: 05 Apr 2026, 4:24 pm

கல்கி :தாடி வளர்ப்பது என்பது வெறும் முகத்தில் வளரும் முடி மட்டுமல்ல; அது ஒரு தத்துவம் என்பதை இந்த உரையாடல் மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

Kalki Strip

என் நண்பன் மாறன் சமீபகாலமாக தாடி வளர்த்துக் கொண்டு வருகிறான்.

எப்போதுமே நமக்கு ஒரு சுவாரஸ்யம் தேவைப்படுகிறது.

அது நண்பனிடம் இருந்தால் மேலும் கூடுகி-றது.

ஏதோ விசேஷம் என்று எண்ணத் தோன்று-கிறது.

“தாடி ஏன் வளர்க்கிற?”

“சும்மாதான்”!!

“சும்மாதான் என்றால்?”

“சும்மா வளர்த்து பார்ப்பது என்பதுதான்” ...

“அப்ப அது ஒரு சுமையா தெரியலையா ?”

“அப்படி நினைச்சாதானே” ...

“இருந்தாலும் நினைக்காம இருக்க முடி-யாதே” ....

“ஏன் நினைக்கணும்?”

“சும்மா அதை தடவி கொடுத்துக் கொண்டே இருக்கணும்....”

“அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.”

ஆமாம் !! ஆமாம் !!!

நம்மை அசுவாசப்படுத்திக் கொள்ள ஏதோ ஒன்று தேவைப்படுகிறது. அது தாடியாக இருந்துட்டு போகட்டும்.

ஆஹா !!

“மனமே ரிலாக்ஸ் ப்ளீஸ்” படித்திருக்கி-றேன்”...

தாடி மூலம் ஒரு “ரிலாக்ஸ்” வந்தால் எவ்வ-ளவு பெரிய விஷயம்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

மனதினுடைய மார்க்கம் அல்லவா தாடி ?

“நானும் வளர்க்கலாம் என்று இருக்கிறேன்!”

“வளர்த்துப் பார்!”

“என்ன தெரியும் நண்பா?”

“அது ‘இருப்பதே’ தெரியாமல் போகும்”..

“அப்படிபோனால்”....

“அதுதான் நம்மை “இருத்தலில்” இருந்து “இல்லாததை” தேடி அலையும் மனதை கட்டுப்படுத்தும் ஒரு விசேஷ திறவுகோல்”.

எது என்னவோ பா; என்னைப் பொறுத்தவரையில், இந்த தாடி என்பது பலருக்கு பலவிதமாக காட்சியளிக்கிறது ...

சிலருக்கு அதன் மூலம் ஒரு மவுசு கிடைக்கிறது..

சிலருக்கு அடையாள சின்னமாக மாறுகிறது..

பலருக்கு மார்க்கத்தின் உடைய வழியாக காணப்படுகிறது ..

பெரும்பாலும் மரியாதையை சமுதாயத்தில் ஏற்படுத்திக் கொடுக்கிறது..

தாடியை பல பேர் பல விஷயத்திற்கு வளர்க்கிறார்கள்.

கல்யாணம் ஆவதற்கு;

கருமாதி முடிவதற்கு;

கல்யாணம் ஆகி குழந்தை பிறப்பதற்கு;

குழந்தை நன்றாக படித்து தேர்ச்சி பெறுவதற்கு;

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

பிறகு வேலை வாய்ப்பு; கல்யாணம்;

இத்யாதி; இத்யாதி...

தாடி ஒருவருக்கு ஆன்மீக அந்தஸ்தை கொடுக்கிறது.

சிலருக்கு பக்தியின் வடிவமாக காட்சியளிக்கிறது..

மாணவச் செல்வங்களுக்கு இது ஒரு ஃபேஷன் ஸ்டேட்மென்ட்..

ஆனால், தாடி வளர்ப்பதில் ஒரே ஒரு நன்மை

நம்மை சூரிய வெப்பத்தில் இருந்து காக்கிறது .

நம்மால் முடியாதது தாடியால் முடிந்தால் சரி!

Media Attributions

- Screenshot_2026_0730_102045

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

31.காதலில் இடை சருகல்

கல்கி

சிறுகதை: காதலில் இடை சருகல்...

இந்தக் கதை தியாகம் கலந்த காதல் எத்தகைய வலிமை வாய்ந்தது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

தியாகம் கலந்த காதல்

ராமன். செல்வராஜ்

Published on:
09 Apr 2026, 9:20 pm

’11 – H – அசோக் நகரில் இருந்து குருநானக் நகர் வழியாக வேளச்சேரி செல்லும் எம் டி சி பஸ்’ – கோபியின் கனவில் அடிக்கடி வந்து சென்றது.

அந்த பஸ்ஸில் என்ன விசேஷம் என்று அவனுக்கு தெரியாமல் இல்லை.

இந்த பஸ்ஸில் அவன் கடந்த ஒரு வாரமாக பயணப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். ஆனால் கடந்த இரு தினங்களாக அவன் மனது அவனிடம் இல்லை.

எப்போது அந்த பஸ் வரும்; அதில் எப்போது அந்த தேவதை ஏறும்? அந்த தேவதை ஏறியவுடன் பின் தொடர்ந்து, அவள் குருநாத் கல்லூரி பக்கத்தில் உள்ள ஒரு கம்ப்யூட்டர் சென்டரில் இறங்கி செல்வதை பார்த்து மனம் குதூகலம் அடைந்த பிறகுதான், தான் வேலை பார்க்கும் கனரா வங்கியின் வேளச்சேரியை அவன் மனசு சென்று அடையும்.

கோபி, கனரா வங்கியில், உதவி மேலாளர், மார்க்கெட்டிங் பிரிவில் வேலை பார்ப்பதால் பல இடங்களுக்கு பிரயாணப்படுவது என்பது தொழில்முறையில் தேவையாக இருந்தது.

பலமுறை பார்த்திருந்தாலும் இன்று அவளிடம் பேசுவது என்று அவன் திட்டமிட்டு இருந்தான்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“நீங்க அசோக் நகர் ப்ளாக்ல மூன்றாவது பிரிவுல இருக்கீங்க?”

“நீங்க யாரு?”

“என் பெயர் கோபி...”

“நானும் உங்க பிளாக்ல தான் இருக்கேன்.”

“ஓ ஐ சீ!”

“உங்க அப்பாவும் எங்க அப்பாவும் ரொம்ப பிரெண்ட்ஸ். போன வாரம் முதல் ப்ளாக்கில் உள்ள எங்க வீட்டுக்கு வந்து எங்க அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.”

“மேலும் நீங்க குருநாத் கல்லூரியில் இந்த வருடம் தான் பிஎஸ்சி ஜூவாலஜி முடித்தீர்கள் அல்லவா?”

“ஆமாம்.”

“உங்க பெயர் அனிதாதானே?”

“ரொம்ப கரெக்ட்.”

“உங்க அப்பா ஓய்வு பெற்ற இந்தியன் வங்கியின் பொது மேலாளர்..?.”

“ரொம்ப ரொம்ப சரி.”

“வேறு என்ன எல்லாம் தெரியும் உங்களுக்கு?”

“நீங்க மேலும் கேட்டீங்கன்னா நான் சொல்ல தயாரா இருக்கேன்!”

“இப்போதைக்கு இது போதும். கல்லூரி வந்துவிட்டது நன்றி!”

அவளுடைய இந்த சிரிப்பு அவனுக்கு

ஆனந்த பூங்காற்றை அலை அலையாய் அள்ளித்தந்தது.

அடுத்த முறை சந்திக்கும் போது தன்னைப் பற்றியும் தன் குடும்பம் பற்றியும் அவளிடம் சொல்லி தன் விருப்பத்தையும் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்திருந்தான்.

ஐயகோ!!

அவன் அன்று கண்ட காட்சி அவனுக்கு மனதில் ஒரு சுனாமியை ஏற்படுத்தியது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

அன்று அவள் ஒரு பியட் காரில் தன் காதலனுடன் வந்து இறங்கினாள்...

'மனம் என்னும் மகா சக்திக்கு மாமருந்து என்பது அமைதியாக இருந்து தன்னை ஆட்கொண்ட மனதை ஆழ துணிவது' என்று நினைத்துக் கொண்டான்.

இப்போதெல்லாம் கோபி பஸ்ஸில் வருவதை தவிர்த்து பைக்குக்கு மாறினான்.

அது அவனுடைய மார்க்கெட்டிங்க்கு உதவியது என்பதை விட மனதிற்கு வேறு என்ன பதில் சொல்ல முடியும்?

அவனுக்கு மேலும் இன்னொரு அடி காத்திருந்தது.

அந்த மகா கயவன் ஒரு மாதத்திற்கு பிறகு வேறொரு பெண்ணிடம் மவுண்ட் ரோட்டில் தன் பல்சரில் பாய்ந்து செல்வதை பார்த்தான்.

இப்படியான பெண்களை மயக்கும் ஒரு பித்-

தலாட்டக்காரனிடம் தன் அனிதா மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக திரும்பவும் தன் பஸ் பயணத்தை தொடர்ந்தான்.

அவள் பஸ்ஸிலிருந்து இறங்கி அசோக் நகர் வீடு செல்வதற்குள் பேச்சை ஆரம்பித்தான்.

“அனிதா...”

திரும்பியவள், முறைத்தாள்.

“நான் ஒன்று சொல்கிறேன்; தயவு செய்து கேட்டுக் கொள்ளுங்கள்.”

“உன் காதலன் பல பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு பல இடங்களில் சுற்றி வருவதை நான் கண்கூடாக பார்த்தேன். கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவும்.”

இதைக் கேட்டவுடன் அனிதா அக்னியாக மாறினாள்.

“It is none of your business; shut up; I know my route; this is my life -my way, my highway... don’t interfere.”

இந்த முறை மனம் உடையவில்லை. நல்லது நடக்க எல்லாம் வல்ல இறைவன் வழி செய்யட்டும் என்று நகர்ந்து சென்றான்.

காலம் யாரை விட்டு வைத்தது.

ஒருமுறை அனிதா ஒரு அபார்ஷன் கிளினிக்கில் இருந்து வெளிவருவதை பார்த்தவுடன் அதிர்ச்சிக்கு உள்ளானான்.

அவள் சென்றவுடன் கிளினிக்கு சென்று தன்னை அனிதாவின் கசின் பிரதர் என்று

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

சொல்லி அந்த மருத்துவச்சியிடம் விவரம் அறிந்தான்.

அந்த மருத்துவச்சியும் இவனுடைய நல்ல குணாதிசயங்களை உணர்ந்து உண்மையை கூறினார்.

“வந்த பெண்ணுக்கு 5 மாதத்தில் குழந்தை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அதை தடுக்க வேண்டாம் என்று நாங்கள் ஆலோசனை கூறி வீட்டுக்கு அனுப்பியுள்ளோம். மற்றவற்றை பொறுப்பாக பார்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட கோபியினுடைய மனம் வெடித்து சிதறியது.

ஒரு முடிவுக்கு வந்தான்.

இது அவளுடைய வீட்டிற்கு தெரிந்தால் நிச்சயம் அவளுடைய கடைசி வருட படிப்பு பாதிக்கும்; மேலும் அவளுடைய வாழ்க்கை சீரழிவதை கோபியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

உடனே தன் ஆபீஸில் இரண்டு நாள் விடுப்பு எடுத்து அவளுடைய காதலனுடைய இருப்பை நோக்கி பயணப்பட்டான்.

அந்தக் கள்வன் பெயர் தீபக் என்பதும், மேலும் விசாரித்ததில் அவன் மோட்டார் சைக்கிள் ஆக்ஸிடன்ட்டில் இறந்து ஒரு மாதம் ஆகிறது என்கிற செய்தி கிடைத்தது.

இதைச் சொன்னால் அனிதா அதிர்ந்து விடு-

வாள். மேலும் பொறாமையால் நான் இவ்வாறாக சொல்கிறேன் என்று நினைக்கவும் கூடும்.

முடிவெடுத்தான் இனி காலதாமதம் கூடாது.

சரியாக ஆறரை மணி; பொது மேலாளராக இருந்து இந்தியன் வங்கியில் இருந்து பணி ஓய்வு பெற்ற பரசுராமருக்கு ஒரு தொலைபேசி மூலம் அழைப்பு வந்தது.

“Sir, நான் கோபி பேசுகிறேன். வேளச்சேரி, கனரா பேங்கில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன்.”

“நானும் நீங்கள் வசிக்கும் அசோக் நகர் காலனியில் உள்ள முதல் பிளாக்கில் வசிக்கிறேன்.”

“என்னுடைய அப்பா குமாரலிங்கம், ஓய்வு பெற்ற சுங்கத்துறை அதிகாரி. ஒரே மகன்; செல்லமாக வளர்த்து விட்டார்.”

“பொறுப்பு தவறி ; வாழ்க்கையில் ஒரு தப்பு செய்துவிட்டேன் என்னை மன்னிக்கவும்.”

“நாளை 6.30 மணிக்கு உங்களை என் பெற்றோர்கள் உடன் வந்து பார்க்கிறேன். மற்றவற்றை கூறுகிறேன் என்று சொல்லி வைத்தான். தொலைபேசியானது முடிவுக்கு வந்தது.”

இதைக் கேட்ட பரசுராமன் அதிர்ச்சிக்கு உள்ளாகி தன் மனைவியிடம் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தார்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

"எது எப்படியோ; நாளை வரட்டும் மற்றவற்றை பேசிக் கொள்ளலாம். அவசரப்பட்டு எந்த காரியத்தையும் செய்து விடாதீர்கள்" – மனைவி மங்களம் பொறுமையாக பேசினாள்.

அவர்களுக்கு ஒவ்வொரு மணி நேரமும் ஒரு வருடங்களாக கழிந்தது.

அடுத்த நாள் சரியாக ஆறு அரை மணி; பெற்றோர்களுடன் வந்த கோபி பரசுராமனின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றான் .

கோபியின் பெற்றோர் தன் மகனின் உடைய செயலுக்கு மன்னிப்பு கேட்டு மன்றாடினர்.

கோபி தொடர்ந்தான்... "உங்க பொண்ணு இப்போ 5 மாத கர்ப்பிணி. இதை வெளியில் சொன்னால் உங்களுக்கு அவமானம். ஏதோ தெரியாம நடந்த ஒரு விபரீதம். நான் முழு பொறுப்பையும் எடுத்துக்கிறேன்."

"கல்யாணம் பண்ணிக்கிறதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எங்க அப்பாவ பத்தி தெரியும் உங்களுக்கு ... நல்ல குடும்பம்; ஒரே பையன் நான். நீங்க விரும்புனீங்கன்னா நாளைக்கு காலையில் சிவன் கோயிலில் கல்யாணம் முடிச்சுக்கலாம். எங்க வீட்டுல எல்லாரும் சம்மதம்தான்."

"இந்த விஷயத்தை கோபி தன் பெற்றோரிடம் சொன்னபோது தன் காலனியில் இப்படி ஒரு செயல் நடந்தது தனக்கு ஏற்பட்ட அவமானமாக கருதினாலும் அதை பொறுப்பேற்று

அதற்காக கல்யாணம் வரை பேசிய தன் மகனை ஒரு விதத்தில் தைரியமாக பாராட்டினார் என்று தான் சொல்ல வேண்டும்".

கோபியின் அம்மாவும் தன் மருமகளை விட்டுக் கொடுக்காமல் பேசினாள்..

"எனக்கு தெரியும். அனிதா நல்ல பொண்ணு தான். ஏதோ நடந்திருச்சு! நாங்க இருக்கோம். வா போகலாம்" ...

"பரமசிவத்தினுடைய மனைவி தன் மகள் அனிதாவை பார்த்து வெளியில் வா, உன் கணவர் இங்கே வந்திருக்கிறார் எல்லாம் நல்லதுக்கு தான் என்று சொல்ல..."

அனிதா முகம் வெளிறிப் போய், தலை நிமிர்ந்தாள்.

மயக்கம் அடைந்தாள். கீழே சரிந்த சரீரத்தை ஆற தழுவிக் கொண்டான் கோபி.

"நாளை நமக்கு கல்யாணம். அதற்கு வேண்டி சிவன் கோயிலில் என் நண்பன் வரதராஜன் ஏற்பாடு செய்துவிட்டார்," என்று கோபி சொல்ல...

இது தன்னை பழிவாங்கும் படலம் என்று நினைத்துக் கொண்டு அமுதா கண்ணீர் விட, பக்கத்தில் இருப்பவர்களுக்கு அது ஆனந்த கண்ணீராக தென்பட்டது.

கல்யாணம் நடந்து முடிந்தது.

கடைசிவரை எல்லா பொறுப்புகளையும் சற்றே குறைவில்லாமல் ஏற்று, தன் நன்நடத்-

தையால் எல்லோருடைய பாசத்தையும் அன்-பையும் பெற்றான் கோபி.

அனிதாவின் கல்நெஞ்சம் கொஞ்சம் கொஞ்-சமாக கரைய தொடங்கியது.

குழந்தையும் பிறந்தது.

இரு வீட்டாரும் மகிழ்ந்து குலாவிட, பெயர் வைக்கும் படலமும் தொடர்ந்து வந்தது.

"எல்லோரும் குழந்தை கோபி போல் இருக்-கிறது" என்று சொல்லும் போது...?

கோபி குழந்தைக்கு 'தீபக்' என்று பெயர் இட்-டான்.

கண்கள் மயங்க, கைகள் செயல் இலக்க, கோபியிடம் தஞ்சம் அடைந்து கீழே விழுந்தாள் அனிதா!

அவளை மேலே தூக்கி கெட்டியாக அணைத்-தான் கோபி..

உடல்கள் ஒன்று சேர்ந்தன. உணர்வுகள் பொங்கி எழுந்தன.

இது உணர்வுகளின் சங்கமம் என்று எல்-லோரும் நினைத்தனர்.

இவ்வாறாக இவர்களுடைய இரண்டாவது பயணம் இனி தொடரும்....

Media Attributions

- Screenshot_2026_0730_104932

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

32.ஆண் ஆதிக்க வெறி! ஏன் பெண்களுக்கு ஆளத் தெரியாதா?

கல்கி

ஆண் ஆதிக்க வெறி... ஏன், பெண்களுக்கு ஆளத் தெரியாதா?

வரலாறு ஏன் ஆண்களை மட்டும் கொண்டாடுகிறது என்பதையும், பெண்மையின் ஆளுமை ஏன் ஒரு வட்டத்திற்குள் சுருக்கப்படுகிறது என்பதையும் விளக்கும் அதிகாரப் பகிர்வு குறித்த கட்டுரை.

Male Chauvinism

ராமன். செல்வராஜ்

உலக வரலாற்றில்

அலெக்சாண்டர் தி கிரேட்,

அக்பர் தி கிரேட்,

அசோகா த கிரேட்...

என்று சொல்லி பழகி விட்டோம் . . . .

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இது என்ன ஆங்கில எழுத்துக்களில் வரும் முதல் எழுத்தின் பெருமையை சொல்லும் ஒரு சொல்லாடலா ?

இதை மேலோட்டமாக பார்க்காமல் அதில் உள்ள ஆண் ஆதிக்க சிந்தனையை கொஞ்சம் உற்று நோக்க வேண்டும்.

ஆண் என்பது ஆளுமைக்கும்; பெண் என்பது சக்திக்கும் ஆக நாம் வடிவமைத்து விட்டு அதற்கான விழுமியங்களை நம் கலாச்சாரத்தோடும், பண்பாடோடும் இணைத்து விட்டதன் விளைவு இன்று ஒரு சாபக்கேடாக மாறி இருக்கிறது .

ஏன் பெண்களுக்கு ஆளத் தெரியாதா?

பெண் என்பவள் குடும்பத்தை ஆளவும், ஆண் என்பவன் சமுதாயத்தை ஆளவும் படைக்கப்பட்டதாக கருதுகிறோம்.

ஆண்கள் போர்க்குணம் படைத்தவர்கள்; போராட வல்லவர்கள்; போராடி ஜெயிப்பவர்கள், ஆகவே நாட்டை ஆளத்தக்க வல்லமை படைத்தவர்கள் ....

எனவே தான் ஆண்களை சமூகத்தின் மேல் தளத்தில் வைத்து பல காலங்களாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இப்படி பெண்கள் கையாலாகாத இருப்பதற்கு யார் காரணம் ? என்பதை நாம் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் இதனுடைய உண்மையான விளக்கம் நமக்கு தெரிய வரும்...

போராடுதல் என்பது பொறாமையின் வெளிப்பாடு..

பொறுமையற்ற சமூகம் பெருமைக்காக பொறுப்பற்றதாக மாறி அழிந்துவிடும்.

அப்படிப்பட்ட அழிந்த சமுதாயத்தை பற்றி வரலாறு நமக்கு போதித்துக் கொண்டுதான் இருக்கிறது.

எல்லா வல்லரசுகளும் ஒரு காலத்தில் வல்லமை இழந்து வாழ வழி இன்றி பிறகு மடிந்து தான் போயிருக்கிறது.

இந்த ஞானம் பிறக்க வேண்டும் என்றால் அது பெண்ணிலிருந்து தான் உருவாக வேண்டும்.

புராணங்களும் இதிகாசங்களும் நமக்கு போதித்தது போரை அல்ல. போரின் மூலம் விளையும் விளைவுகளை தான் நமக்கு போதனைகளாக சொல்லிப் போயின.

நாம் போதனைகளை சாதனைகளாக நினைத்து நம் வாழ்வில் செயல்படுத்தும் போது தான் இந்த பிரச்னைகள் மேலும் நம்முடைய சிந்தனையில் வேரூன்றி நம்மை சித்து பிடித்து ஆட்டுகிறது.

பெண்களிடம் “பொறுப்பும், பொறுமையும் கையாளும் திறனும்” இருக்கும்போது அதனுடைய விளிமியங்கள் நம் சமுதாயத்தை எப்பொழுதுமே செழுமைப்படுத்திக் கொண்டுதான் வந்திருக்கிறது.

தமிழர்களுக்கு ‘சிலப்பதிகாரம்’ போதும் – பெண்ணின் சிறப்பை இதைவிட மேம்பட்டு சொல்ல எந்த இலக்கியமும் தேவை இல்லை.

நாம் ஒன்றை கவனித்தே ஆக வேண்டும்!

நம்மைப் பொறுத்தவரை “நம் தாய், நம் சகோதரி, நம் குழந்தை என்று வரும்போது நமக்கு பொறுப்பு அதிகமாக இருப்பதாகவும், நாம் ஒரு சரியான பாதையில் செல்வதாகவும் நினைக்கிறோம்”.

அதையே புறம் கூறும்போது, “நம் வசை பாடுகள் பெண்களைப் பற்றி தான் இருக்கிறது”.

எந்த உள் காரணமும் இன்றி நாம் சொல்லும் ஒரு வார்த்தை தேவைக்கு மீறி ஒரு பெண்ணினுடைய குணத்தை சீரழித்து அதுவே ஒரு பொதுப் பயன்பாடாகவும் மாறுகிறது.

சட்டம் விதி எல்லாம் ஆண்களுக்கு ஒரு மாதிரியாகவும் பெண்களுக்கு வேறு மாதிரி ஆகவும் தான் இருக்கிறது.

இது சமுதாயத்தில் சாத்தியப்பட; நடைமுறையில் நாம் செயல்படுத்த; நம் முன்னோர்கள் நமக்கு கதைகளாகவும், கவிதைகளாகவும், ஓவியங்களாகவும் நமக்காக படைத்து அதன் மூலம் ஒரு மேம்பட்ட சமுதாயத்தை வளர்த்தெடுக்க பாடுபட்டு சென்று இருக்கிறார்கள் .

அந்த விடியலை நோக்கி நாம் பயணப்பட

பெண்களிடையே ‘அரசியல் புரிதல்’ மேம்பட வேண்டும்.

அவர்களை அரசியல் படுத்தவேண்டும்.

‘அரசியல் அநாகரிகம்’ என்றால் என்ன என்பதை அவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் .

அது ஓட்டு உரிமையில் மூலம் நடக்கும் போது அவர்களுடைய பலம் அவர்களுக்கு தெரியும்.

நம் பெற்றோர்களே நமக்கு முதல் எதிரியாக இருக்கும்போது நாம் என்ன செய்ய?

குழந்தைகளை பாகுபாடு படுத்தாமல் பண்பாட்டை பட்டவர்த்தமாக சொல்லி புரிய வைக்க வேண்டும்.

மாற்றம் என்பது மதிப்பீடுகளில் இல்லை; மாறாக தொடர்ந்து போராடி அதைப் பெறுவதில் தான் இருக்கிறது.

இதில் அரசின் பங்கு, ஆசிரியர்களின் பங்கு, பெற்றோர்களின் பங்கு, சமுதாயத்தின் உடைய பங்கு என பல கூறுகளாக இருந்தாலும் எல்லாம் ஒன்று கூடி வரும்போது, இது எல்லாருக்குமான சமூகமாக மாறும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

ஒன்றுபடுவோம்! செயல்படுவோம்!

Media Attributions

- Screenshot_2026_0730_105336

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

33."ஏன் இந்த முரண்கள்"?-போர்களில் தொடங்கி ஆன்மீகம் வரை ஒரு அலசல் !

உண்மை என்று ஒன்று இந்த உலகத்தில் இருக்குமானால், ஏன் இந்த உலகம் ஒன்றாக இல்லாமல் பிளவு பட்டு சண்டைகள், போர்கள்,

THE BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இழப்புகள் என நடந்தேறி அதில் இருந்து திருந்தாமல், திரும்பவும் அதே சகதியில், சாக்கடையில் மாட்டிக்கொண்டு பிறகு அமைதி, பேச்சு என்று அலப்பறித்துக் கொண்டிருக்கிறது.

நம் உடலே ஒரு உலகம். இந்த உலகத்தில் பல தேசங்கள் (உறுப்புகள்) தங்களை காப்பாற்றிக்கொள்ள போராடிக் கொண்டிருக்கிறது.

இதயத்தை யார் இயக்குகிறார்கள்? பதில் இல்லை!

ஆனால் தானாக இயங்குகிறது. அதற்கு வேண்டிய சக்தியை யார் கொடுக்கிறார்கள்?

தெரியாது!

“அதில் உள்ள பிராணவாயுவை யார் கடத்துகிறார்கள்”? என்று நமக்குத் தெரியும்.

ஆனால் அது ஏன் காலம் ஆக ஆக தன் சக்தியை இழந்து மெதுவாக நின்று விடுகிறது.

வயது ஆகிறது!

ஆனால் தெரியவில்லை!

உடல் உறுப்புகள் வளர்கின்றன .

ஆனால் தெரியவில்லை?

இந்த உடல் உருவாகுவதற்கு வேண்டிய எல்லா சக்திகளும் இந்த பூமியில் இருந்துதான் பெறப்படுகிறது. இருந்தாலும் நாம்தான் அதை பாழாய் படுத்துகிறோம். எப்படி என்று எனக்கு தெரியும்; ஏன் என்று தெரியாது; என்பதுதான் விஞ்ஞானம். ஏன் என்பதை எப்படி எல்-

லாம் புரிய முயற்சிக்க முடியும் என்று ஆராய்வது தத்துவம்.

மெய்யியலும், அறிவியலும் ஒன்று சேரும் இடம்தான் மெய்ஞானம்.

1.உடல் ஒரு பொருள்

2.உயிர் என்பது உணர்வு.

3.உணர்வை பார்க்க முடியும், விளக்க முடியும், உணரமுடியும், கேட்க முடியும், பேச முடியும், கடத்த முடியும்.

4.உலகம் உருவாவதற்கு உணர்வே காரணம்.

5.அதில் ஏன் முரண்கள்?

6.முரண் இன்றி அரண் அமைய அறம் செய்ய விரும்பு என்று சொல்லி வைத்தார்கள்.

7.அது அமையவேண்டி வந்ததுதான் அறிவின் விளக்கமும், ஆன்மீக தேடலும்.

8.நம்மை அறிவோம்.

9.பிரபஞ்சம் புலப்படும்.

Media Attributions

- Screenshot_2026_0730_105653

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

34.மனம் என்னும் பெர்முடா முக்கோணம்-மாயை முறியடிக்கும் மந்திரம்

Motivation

மனம் எனும் பெர்முடா முக்கோணம்: மாயைகளை முறியடிக்கும் மந்திரம்!

Mind - Bermuda Triangle

ராமன். செல்வராஜ்

Published on: 16 Apr 2026, 8:35 am

நாம் பெர்முடா முக்கோணம் பற்றி சரித்திரத்தில் படித்திருப்போம். நம் மனமே ஒரு முக்கோணமாக செயல்படுகிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா?

எதை எடுத்தாலும், எதைப் பார்த்தாலும்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

எதை செய்வதற்கு முன்பும் நாம் கெட்டதே நடக்கப் போவதாக எண்ணி நம் சிந்தனையை குழப்பும் குட்டையாக மாற்றிக் கொண்டிருக்கி-றோம்.

இதற்கான காரணத்தை ஆராயும் போது சில வெளிப்படையான உண்மைகள் நமக்கு புரிய வருகிறது.

அந்த உண்மைகள்...

ஏன் நாம் சிந்திக்கிறோம்?

நம் சிந்தனை என்பது நம்மை செழுமைப் படுத்துவதற்கா? அல்லது வருமை / இன்மை படுத்துவதற்காக?

மனதில் நம்பிக்கை என்பது ஒரு தெளிந்த நீரோடையாக இல்லாமல் சலனப்பட்டு சாக்க-டையாக மாறுவதற்கு என்ன காரணம்?

பயம்?

பயம் ஏன் வருகிறது?

எங்கிருந்து வருகிறது?

எதனால் வருகிறது?

எப்படி வருகிறது?

****

Yuval Noah harari தன்னுடைய மாபெரும் படைப்-பான மனித இனத்தின் வரலாறு ஒரு பார்வை என்கிற புத்தகத்தில் இவ்வாறு கூறுகிறார்...

“மனிதர்கள் இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்-பட்ட பிறகு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையில்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

எப்போதுமே சவால்களை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது.

அந்த இன்னல்கள் முதலில் மிருகங்களிடம் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற அச்சம் வர காரணம்!

இரண்டாவது காரணம் உண்ண உணவு?

அதற்கான போராட்டம்!

இப்படியே அவர்கள் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்ததால் அது மனித இனத்தின் ஒரு கூராகவே நம்முடைய மரபு அணுக்களில் பல படிமங்களாக படிந்து அதைப் போக்கிக் கொள்ளவே அவன் தன்னுடைய பழக்கங்களில் மாறுதல்கள் உண்டு பண்ண சில சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் தனக்குத் தானாகவே ஏற்படுத்திக் கொண்டான்.

மனிதனுடைய மனமானது எப்போதும் நேர்மறையில் இருந்து எதிர்மறைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பெர்முடா முக்கோணம்.

இந்த மாய முக்கோணத்தில் மனமானது மாட்டிக்கொண்டு தவிக்கிறது.

முதலில் இந்த பெர்முடா முக்கோணம் என்றால் என்ன என்பதை பார்ப்போம்.

பெர்முடா முக்கோணம் என்பது வடக்கு அட்லாண்டிக் கடலின் ஒரு சிறப்பான முக்கோண வடிவப் பகுதி. இதில் மூன்று முக்கிய புள்ளிகளாக பொதுவாக புளோரிடா தீபகற்பம், பெர்முடா தீவு மற்றும் போர்ட்டோ ரிக்கோ அல்லது

பஹாமாஸ் போன்ற பகுதிகள் கருதப்படு-கின்றன.

இந்தப் பகுதியில் கப்பல்கள் மற்றும் விமா-னங்கள் சில சமயங்களில் திடீரென காணா-மல் போவதாகவே பல இடங்களில் எழுதப்பட்டு, பேசப்பட்டு வருகிறது.

இதனால் இது ‘சாத்தானின் முக்கோணம்’ என்ற பெயருடன் பயம்-கலந்த கதைகளுக்கு இடம் தந்துள்ளது.

இத்தனை கதைகளுக்கு பின்னால் உண்-மையில் மர்மம் எதுவும் இல்லை என்பதை அறிவுகள் அமைப்புகள் நிராகரித்துள்ளன.

கடும் காற்று, சூறாவளிகள், கப்பல்/விமான செயல்பாடுகளில் ஏற்படும் தவறுகள், கடும் கடல் சீற்றங்கல் மற்றும் சூழ்நிலைகள் போன்ற சாதாரண இயற்பியல் காரணங்க-ளால்தான் இந்த விபத்துகள் ஏற்பட்டிருக்க-லாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.”

****

இதை எளிதாக புரிய வைக்க வேண்டுமா-னால் நான் இவ்வாறாக சொல்லி என் கருத்தை பதிவிடுகிறேன்...

இங்கே கடும் காற்று சூறாவளி என்பது நம்-முடைய நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்-கங்கள் கப்பல்கள் மற்றும் விமானங்கள். காணாமல் போவதாக கூறப்படும் கூற்றுகள் நம் மனதினுடைய பயத்தினுடைய விளைவு-

கள். இந்த மனதை நாம் சிந்தனை செறிவின் மூலமும் , அறிவின் ஆற்றல் மூலமும், செழுமைப்படுத்தி, மனதில் சிறுமைகளை, போக்கிக் கொள்ள வேண்டும்.

மனம் என்பது மாமருந்து!?

அதனை அளவுக்கு அதிகமாக சிந்தித்து செயலிழக்க செய்வது அறிவீனத்தின் உச்சம்!

மாறாக அதை மாற்று சிந்தனைகள் மூலம் திருப்பி விடுவதன் மூலம் நாம் நம் மீதும், நம் ஆற்றலின் மீதும் நம்பிக்கை எனும் விதையை விதைக்க முடியும்.

கண்ணதாசன் எழுதிய காதல் காவியமே இதற்கு சாட்சி...

வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்

ஆழ்கடலும் சோலையாகும் ஆசையிருந்தால் நீந்தி வா

பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும் பார்த்து நடந்தால் பயணம் தொடரும்

பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும் கதவு திறந்தால் காட்சி கிடைக்கும்

காட்சி கிடைத்தால் கவலை தீரும் கவலை தீர்ந்தால் வாழலாம்...

கண்ணில் தெரியும் வண்ணப் பறவை கையில் கிடைத்தால் வாழலாம்

கருத்தில் வளரும் காதல் எண்ணம் கனிந்து வந்தால் வாழலாம்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கன்னி இளமை என்னை அணைத்தால் தன்னை மறந்தே வாழலாம்...

ஏரிக்கரையில் மரங்கள் சாட்சி ஏங்கித் தவிக்கும் இதயம் சாட்சி

துள்ளித் திரியும் மீன்கள் சாட்சி துடித்து நிற்கும் இளமை சாட்சி

இருவர் வாழும் காலம் முழுதும் ஒருவராக வாழலாம்

காதல் கடலில் தோணி போலே காலம் முழுதும் நீந்துவோம்...

Media Attributions

- Screenshot_2026_0730_110717

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

35."நான்"-என்கிற புரிதல்;உங்களை நீங்களே அறியுங்கள்!?

Motivation

'நான்' என்கிற புரிதல்... உங்களை நீங்களே அறியுங்கள்!

நம் பழக்கத்தால், 'நான் இப்படித்தான்' என்கிற புரிதலை ஏற்படுத்தி நம் பாதையை சரியாக செப்பனிட வேண்டும்.

நான் என்கிற புரிதல் AI Image

ராமன். செல்வராஜ்

d on: 17 Apr 2026, 8:00 pm

நான்" மற்றும் என்னுடைய "எண்ணம்."

இப்படிச் சொன்னால் 'எனக்கு புரியும் என்று நான் நினைக்கிறேன்'...

அதாவது "நான்" உயிருடன் இருக்கும் போது,

'என்னை நானே' கொண்டாடிக் கொண்டு இருப்பது இல்லை.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அப்படி ஆனால் "நான்" இப்போது இறந்த பின் ஆவியாக பேசுகிறனா? நான் ஒன்றும் "P.T.சாமி" (பிசாசு கதை எழுத்தாளர்) இல்லை.

இப்போதே விஷயத்துக்கு வருகிறேன்.

எவ்வளவுக்கு, எவ்வளவு நான் என்னை சுயநலமாக எண்ணி என்னைப் புரிந்து கொண்டு செயல்படுகிறேனோ, அவ்வளவுக்கு, அவ்வளவு நான் பிறரைப் பற்றிய புரிதல் மற்றும் சமூக அக்கறை ஆகியவற்றில் தெளிந்து, சிந்தனையுடன் செயல்பட்டு ஒரு பொறுப்பு உள்ள குடிமகனாக வாழ பழகிக்கொள்ள முடியும்.

அதற்கு முதற்படி நம் பெற்றோரைப் பற்றிய ஒரு புரிதல் வேண்டும்.

அவர்களைப் பற்றி அதிகம் குறை கூறாமல், நாம் பிறக்க ஒரு கருவியாக இருந்து நம்மை வாழ வைப்பதற்காக, ஒரு நன்றியை எப்போதும் செலுத்திக் கொண்டு இருக்க வேண்டும்.

நாம் வாழ வழி தெரியாமல் நிலையற்று இருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம்.

இப்போது என்ன செய்வது என்கிற சிந்தனை வரும்.

அதற்கு இரண்டாம் படி:- நம்மை பிறரிடம் இருந்து பிரித்துப் பார்க்க பழகிக் கொள்ள வேண்டும்.

பிறருடைய எண்ணங்கள், செயல்கள் நம்மை நாமே பாதிக்காத அளவுக்கு நம்மை நாமே பாதுகாக்க பழகிக்கொள்ள வேண்டும்.

எப்படி?

1. நல்ல உணவினாலா?

2. நல்ல உடையினாலா?

3. நல்ல படிப்பினாலா?

4. அதிக நண்பர்கள் சூழ வாழ்வதினாலா?

5. அதிக சிநேகிதிகள் உண்டு என்று கூறி கொள்வதினாலா?

6. நன்றாக செலவு செய்து பிறர் மதிப்பை பெற முயற்சிப்பதினாலா?

எப்படி?

எப்படி என்றால் – ஒரே வழிதான்!!!

உன்னை மதித்து, உன் உடலை மதித்து உன் மனதை எந்த சபலத்திற்கும் உட்படுத்தாமல் உன் உணர்வுகள் சொல்வதற்கு ஏற்ப, உன் பாதையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

சமுதாயம் மிகவும் முக்கியம்.

அதில் வாழும் நலிந்த, கடைகோடி மக்களை, உழைப்பை நாம் உண்டு, உறங்கி, உலாவி வருகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

நம் பழக்கத்தால், நான் இப்படித்தான் என்கிற புரிதலை ஏற்படுத்தி நம் பாதையை சரியாக செப்பனிட வேண்டும்.

பிறரின் மதிப்பீடுகள் நம்மை சிறுமை படுத்தவிடக் கூடாது.

மேலும், இந்த செயல்கள் நம்மை அடுத்த நகர்வுக்கு உள்ளாக்கி, நம் ஒத்த எண்ணங்கள் உடைய நண்பர்களை நமக்கு உருவாக்கி நம்

படைப்புக்கு ஒரு புதுப்பொழிவை ஏற்படுத்தி நம்மை இந்த பிறப்பின் மேன்மை பற்றி நன்கு உணர வைக்கும்.

இது சத்தியம்!

இது உண்மை!

🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_111101

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

36.தனிமை உங்களை நெருங்கும் முன்...வாழ்க்கையை ருசிக்க தொடங்குங்கள்..

Motivation

தனிமை உங்களை நெருங்கும் முன்... வாழ்வை ருசிக்கத் தொடங்குங்கள்!

வாழ்க்கையில், சிந்தனையில் காந்தியத்தையும், பாரதியையும் தன் உணர்வாகக் கொண்டு செய்கிற வேலையில் முழுமை பெறுவோம்.

Loneliness

ராமன். செல்வராஜ்

Updated on: 22 Apr 2026, 7:30 pm

தனிமை என்பது தவிர்க்க முடியாத ஒன்று. பிறப்பில் இருந்து இறப்பு வரை நம்மிடையே வரும் ஒரு உலகம்-தனிமை.

THE BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ஒரு கூட்டத்தில், குடும்ப விழாவில், அலுவலகத்தில், பள்ளிப் பருவத்தில் என பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் நம்மை கடக்க முடியாமல் தனிமையில் வாடி இருப்போம்.

இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

நம் வலி, நம் குடும்பம், நம் சந்தோஷம், நம் வாழ்வு என்று இருப்பவர்களுக்கு இந்த வலி 'அதிகம்' வரும்.

இதுவே ஒரு சந்நியாசியின் நிலையில் இருந்து பார்த்தால், அவர் உலகமே இதற்கு எதிர்மறையாக இருக்கும்.

காரணம்; அவர் தம் தன்னுணர்வு.

நாம் தன் உணர்வு கொள்ளும்போது நம்மிடையே,

ஒரு மீட்சி,

ஒரு அறம்,

ஒரு முழுமை,

தோன்றுவதை உணரலாம். அதுவே பரிபூரண வாழ்வு;

இதைத்தான் 'பாகவதம்' கூறுவதாக 'ஜெயமோகன்' – தமிழில் இன்றைய இலக்கிய வட்டாரங்களில் அதிகம் பேசப்படும் எழுத்தாளர் – தன் 'Magnum opus' என்று அறியப்படும் 'வெண்முரசில்' கூறுகிறார்.

எப்போது உங்கள் தனிமை தன்னிறைவு பெறும்.

Eg: Mahatma Gandhi,

சராசரி இந்தியனின் அடையாளமாக இருந்தார் – Simple Attire – ஒரு கோமணத் துண்டு.

அவர் கூறுகிறார்: “நான் காட்டில் இருந்து கொண்டு ‘ஜிலேப்பிக்கு’ ஆசைப்பட்டது இல்லை. ஜிலேப்பிக் கடையில் இருந்து கொண்டு ஜிலேப்பியை ஜிலேப்பியாக பார்ப்பவன்.”

சாவி – எழுத்தாளர் – நவகாளியாத்திரை.

அவ்வாறாக தன் உணர்வு கொள்பவர்களுக்கு,

குடும்பத்தில்,

வாழ்க்கையில்,

சமூகத்தில்,

அலுவலகத்தில்,

நண்பர்கள்,

உறவுகள் மற்றும் இன்ன பிற ஜீவன்களிடமும் ஒரு ‘உன்னத உணர்வு மூலம் உறவுகொண்டு வாழ்வாங்கு வாழ்வார்கள்.’

‘முதுமை என்ற தனிமை’ வரை காத்துக்கிடக்கத் தேவை இல்லை.

இரண்டு உதாரணங்கள்:

முதுமையிலும் இளம் துடிப்புடன் செயல்பட்ட,

1. மகாத்மா காந்தி.

இளமையிலேயே தன்னை மறந்து சமூக மேம்பாட்டிற்காக காலத்தை வென்ற,

2. மகாகவி பாரதி.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இதே நம் மகாகவி சொல்கிறார்.

“காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள

கடலும், மலையும் எங்கள் கூட்டம்,

நோக்கம் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை

நோக்க நோக்கக் களியாட்டாம்.”

கடலையும், மலையையும் நம் இனமாகவே பார்த்தார். பரவசம் அடைந்தார்.

இதுவே இன்று ‘Global warming’ என்ற பட்டத்துடன் ‘Green-Revolution’ என்ற அடைச்சொல்லுடன் ஒரு சொல்லாடலாகப்பட்டு தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது.

பாரதி போன்ற ஒரு கவிஞன் இனி பிறக்கப்போவது இல்லை. ஜாதி, மதம், இனம், மொழி கடந்து எல்லோரையும் நேசித்த மகாத்மாவாக பாரதி வாழ்ந்தார்.

வாழ்க்கையில், சிந்தனையில் காந்தியத்தையும், பாரதியையும் தன் உணர்வாகக் கொண்டு செய்கிற வேலையில் முழுமை பெறுவோம்.

தனிமை என்று தனித்து ஒன்று இல்ல.

அது ஒரு மனநிலை.

இரா. செ.

As A Feed Back To The Following WhatsApp Massage.

இந்த உறவுகள் அற்புதமானவை. மனைவி என்ற ஒருத்தியோடு பேசிக்கொண்டே இருங்கள்; இல்லாவிட்டால் ஏதாவது சண்டையாவது

போடுங்கள். பின்பு சமாதானம் ஆகி உறவாடுங்கள். எல்லா ஆண்களுக்கும் ஒரு நாள் வரும். ஒருவேளை அவள் முந்தி மரணமடைந்தால் அப்போது தெரியும், பிரிவு என்றால் என்னவென்று. ஆகவே இப்போது கிடைக்கும் ஒவ்வொரு நொடியும் அற்புதமானவை; வீணாக்க வேண்டாம். அதிலும் பிரிந்து இருக்கவே வேண்டாம்.

அடுத்து, பிள்ளைகள்; பள்ளி படிப்பு முடியும் வரைதான் அவர்கள் உங்களோடு இருப்பார்கள். அதன்பின் அவர்கள் உலகம் வேறு; அதில் நீங்கள் நிச்சயமாய் இருக்கவே மாட்டீர்கள். அப்போது நீங்கள் அவர்களோடு தொலைபேசி மூலமாக பேசக்கூடநேரம் பார்க்க வேண்டும்.

இப்போது அவர்களிடம் அதிக நேரம் செலவு செய்யுங்கள். இப்படி இல்லாமல், உங்கள் பிள்ளைகள் உங்கள் அருகிலேயே இருந்தால் இது அற்புதமான தருணம். ஒரு நொடியைக்கூட வீணாக்க வேண்டாம். சும்மா அவர்களை பார்த்துக் கொண்டாவது இருங்கள்.

அடுத்து உறவுகளும், உடன் பணி செய்யும் தோழர்களும்.

இதைப்பற்றி தெரிந்து கொள்ள, நீங்கள் அடுத்த மாநிலத்திலோ அல்லது வேறு நாட்டிலோ இருந்தால், இது புரியும்.

வடநாட்டில் இருந்தால் அங்கு உள்ள சர்மாவும், பாண்டேயும், தூபேயும், நம்மோடு நட்பாக

இருப்பார்கள். ஆனால் தோள் மேல் கைபோட்டு ‘வாடா மாப்பிளே’ என்று கூற முடியாது. ஒரு இடைவெளி இருந்து கொண்டேதான் இருக்கும்.

எல்லாம் ஒரே இடத்தில் கிடைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே! வாழ்கையை ருசியுங்கள்; அனுபவியுங்கள். காலமே ஒரு நாள் நம்மை தனிமைப்படுத்த போகிறது. அன்று யாரும் நம்மை வந்து பார்க்கப்போவது இல்லை. நாம் நினைத்தால் கூட வெளியே போக முடியாது.

தனிமையே நம்மை கொல்லப்போகிறது.

அதுவரை, சினேகங்களோடு பேசுவோம்; சண்டையிடுவோம்; கொஞ்சி குலாவுவோம்; ஏதாவது செய்வோம். ஆனால் தனிமை வேண்டாம்; அது மோசமானது.

காலங்கள் திரும்ப கிடைக்காது !

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_111350

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

37. "PLACEBO EFFECT" என்றால் என்ன?

Motivation

'Placebo Effect' என்றால் என்ன?

Placebo Effect Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 28 Apr 2026, 11:30 am

"Placebo Effect" என்றால் என்ன ?

நம்பிக்கை,
நாணயம்,
கைராசி.

இது "லலிதா ஜூவெல்லர்ஸ்" இன் விளம்பர உத்தி என்று நீங்கள் நினைத்தால் , அது நமக்கு புத்தியை கொடுக்கிறது என்று நான் சொல்கிறேன் ! உங்களால் நம்ப முடிகிறதா ?

மேலே சொன்ன அந்த மூன்று ‘காரணிகளும்’ நம்மிடையே இருக்கின்றன.
இவைகள் நம்முடைய இருப்பை உணர்த்தும் ‘விழுமியங்கள்’.

இவற்றையெல்லாம் நாம் கவனித்து வலுப்பெற செய்து, வளம் பெற்று, மதிப்பு கூட்டி நாம் வாழ வேண்டுமானால் அதற்கு நம்மிடையே முதலில் “நம்பிக்கை” பிறக்க வேண்டும்.

இவையெல்லாம் நம்மிடையே இருக்கிறது. இவற்றை தேடி நாம் எங்கும் அலைய வேண்டிய தேவை இல்லை.

இவையெல்லாம் வெளியில் இருந்து பெற வேண்டுமானால் அதற்கு ஒரு “குரு” தேவை.

அந்த குருவை “நாம்” முதலில் “நம்ப வேண்டும்”.

அந்த குரு தன்னுடைய ஆன்மீக ஆற்றலை நம்மிடம் செலுத்துவதற்கு தயாராக இருக்கும்போது, அதனை உள்வாங்கி செயல்பட ஒரு புரிதல் வேண்டும்.

குருவானவர் தன்னுடைய செயலை பின்வருமாறு வெளிப்படுத்துவார்.

1.நயனம்
2.தொடுதல்
3.சிரிப்பு
4.சிறு உரையாடல்கள்....

இவற்றை புரிந்து கொண்டு நாம் செயல்ப-

டும்போது நம்மிடையே அந்த ஆற்றலானது சிறிது சிறிதாக வெளிப்படும்.

உதாரணத்திற்கு ஒரு கதையை உங்களிடம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது உலகப் போரில் ஒரு அமெரிக்கன் தன் சக போராளி காயப்பட்டு
துன்பத்தால் துடித்துக் கொண்டு இருக்கும்போது ஒரு காரியத்தை செய்தான்.

அதுதான் "placebo effect" என்று சொல்லப் படுகிறது.

விஷயம் என்னவெனில் ; அவனுக்கு தன்னிடம் இருந்த ஒரு ஊசியை எடுத்து அதில் தண்ணீரை ஊற்றி ,அந்தப் போராளியிடம் இதில் உள்ள pain killers உன் வலியை வெகுவாக குறைக்கும் ; நாம் பிறகு பக்கத்தில் உள்ள பதுங்கு குழியில் சென்று முதல் உதவி பெற்று விடலாம் என்று சொல்லி அதை செலுத்தியவுடன் தன் சக வீரன் நம்பியதன் விளைவு அவனுக்கு பெரும் சக்தியாக மாறி உடலை காப்பாற்றியது.

இதை விஞ்ஞான ரீதியாக சொல்ல வேண்டுமென்றால் , நம் மூளையில் உள்ள முற்பகுதி நம் வார்த்தைகளை ,நம் எண்ணங்களை முழுவதுமாக உள்வாங்கி அதற்கு நேர்மறையாக வினையாற்றி உடலை காப்பாற்ற வல்ல "anti immuno bodies" உருவாக்குகிறது என்று பிறகு கண்டுபிடித்தனர்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இதன் மூலம் தான் நாம் இந்த ‘உளவியல்’ உண்மையை தெரிந்து கொண்டோம்.

‘இறைவன்’ அல்லது ‘பரம்பொருள்’ அல்லது ‘பிரபஞ்சம்’ நம் ஒவ்வொருவரையும், தனித்தி-றமையுடன் படைத்து அதனை வெளிப்படுத்-திக் கொள்ள வேண்டிய அவகாசத்தையும் அள்ளித் தந்து விட்டு சென்று உள்ளது.

அதனைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டிய “அறிவு” நம்மிடம் தான் இருக்கிறது.

அதற்கு வேண்டிய “நாணயம்”-நேர்மை,பொறுமை,சத்தியம் எல்லாம் ஒரு-வனிடம் இருக்கும் போது அது நிச்சயம் வெளிப்படும்,

அதை நாம் “கைராசி” என்று சொல்கிறோம்.

காலத்திற்குள் கைராசி இருக்கிறது.

காலத்தை அறிந்து, அதற்கான “இருப்பை” உணர்ந்து, உள்ளதைக் கொண்டு நிறைவு பெற்று ,அல்லதை விட்டு அகன்று நம்மை செழுமை படுத்தி கொள்ள முடியும்.

ராமன்.செல்வராஜ்

https://www.kalkionline.com/author/raman-selvaraj

Media Attributions

- Screenshot_2026_0730_111644

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

38.சிறுகதை : இப்படியும் நடக்குமா ?

கல்கி

சிறுகதை: இப்படியும் நடக்குமா?

இந்த கதை சமூக மாற்றம் என்பது மேடைகளில் முழங்குவதல்ல; அது நம்முடைய அன்றாட பழக்கவழக்கங்களில் இருந்து தொடங்க வேண்டும் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

கஜேந்திரனின் ஒரு விரல் புரட்சி AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 29 Apr 2026, 9:55 am

Kalki Strip

இப்போது தேர்தல் திருவிழா. மற்ற மாநிலங்கள் உற்று நோக்க செய்யும் அளவிற்கு ஒரு காரியத்தை எங்க ஊர் கவுன்சிலர் செய்தார்.

கவுன்சிலர் குசேலனுக்கு பலமுனை போட்டிகள் இருந்தாலும், அவர் தன்னுடைய நேர்மையால், பழக்க வழக்கங்களால், பல சேவைகளை செய்து தெருவாசிகளின் குடும்ப

விஷயங்களிலும் நல்லது, கெட்டதுகளிலும் பங்கேற்று சேவை செய்ததனால், இந்த முறையும் தனது சுயேட்சை சின்னமான 'வேஷ்டி சட்டை' சின்னத்தில் வெற்றி பெறுவது உறுதி என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

அவருக்கு போட்டி என்றால் அது அவராகத் தான் இருக்க முடியும். கடந்த 7 முறைகளாக தன்னுடைய ward இல் வெற்றி பெற்றதனால் பிரதான கட்சிகள் தங்களுடைய வேட்பாளர்கள் அவருக்கு எதிராக நிற்பதையும் நிறுத்திக் கொண்டன.

ஆனால் இந்த முறை அவருடைய சித்தாந்தங்களுக்கும், சேவைகளுக்கும் ஒரு மாற்றாக கஜேந்திரன் ஒரு பெரிய முன்னெடுப்பை கொண்டு வந்து எல்லோரையும் தன் பக்கம் ஈர்த்து 'ஒரு விரல் புரட்சி' ஏற்படுத்திக் கொண்டு இருந்தார் என்றால் அது மிகையாகாது !

கஜேந்திரனின் ஒரு விரல் புரட்சி

இது எல்லா தேசிய ஊடகங்களிலும், பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வந்தது. எல்லோரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொண்டுதான் இதை பார்த்தார்கள்.

உள்ளூர் ஊடகங்கள் தொடர்ந்து 30 நாட்களாக அவரை பேட்டி எடுப்பதே வேலை என இருந்தன.

அவர் ஒரு 'வார்டு கவுன்சிலர்'கான போட்டி-

யில் பங்கு பெறவில்லை! மாறாக ஒரு புதிய சித்தாந்தத்தையும் , ஒரு புதிய படைப்பையும் தன்னுடைய மானுடத்துக்கு பரிசாக அளிப்பதற்காக போராடிக் கொண்டிருக்கிறார் என்று எல்லா ஊடகங்களும் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

அப்படி என்னதான் அவருடைய சித்தாந்தம் என்பதை இப்போது பார்ப்போம்...

****

அவருடைய தேர்தல் அறிக்கை இவ்வாறாக பிரசுரிக்கப்பட்டு தன் மக்களுக்கு கொடுத்திருந்தார்.

அன்பான தெருவாசிகளே !!

உங்களால் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

என்னுடைய ஆலோசனைகளை ஏற்று என்னுடன் உழைத்தற்கு நன்றி.

அன்பான வேட்பாளர்களே !!

தயவுசெய்து எங்கள் தெருவை பாருங்கள்.

இங்கே 50 குடும்பங்கள் இருக்கின்றன.

நாங்கள் சில சத்தியங்களுக்கும், உண்மைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டு ஒரு நடைமுறை சித்தாந்தத்தை முன்னெடுத்துள்ளோம். அவைகளை உங்களிடம் சமர்ப்பிப்பதில் பெருமை அடைகிறோம்.

1. இங்கே “மக்கும்” மற்றும் “மக்கா” குப்பைகள் சரியாகப் பிரிக்கப்பட்டு ஒழுங்காக துப்பு-

ரவு பணியாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகிறது.

2. நாங்கள் எல்லோரும் “நெகிழி” பயன்பாட்டை 100% புறக்கணித்து உள்ளோம்.

3. எங்கள் தெருவில் “தண்ணீர் குழாய்கள்” உடைபட்டு வீணாவதை கண்டால், அதை உடனடியாக நாங்களே சரி செய்து ஒரு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறோம்.

4. நாங்கள் “நுகர்வு கலாச்சாரத்திற்கு” எதிரானவர்கள்.

5. என்னுடைய தேவைகளுக்கே முன்னுரிமை.

6. எங்களுடைய விருப்பம் அல்லது ஆசை அல்லது பேரவா என்னவென்றால், அடுத்தவனைப் பார்த்து பொறாமைப்படுவதை முற்றிலுமாக அகற்றுவது.

7. அதற்காக எங்கள் பிள்ளைகளை முதல் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படிக்க வைப்பது கட்டாயமாக்கப்படுகிறது.

8. மேலும் அங்கே பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மற்றும் அந்தப் பள்ளியின் மேம்பாட்டிற்காகவும் ஒவ்வொரு குடும்பமும் தன்னால் முடிந்த உதவியை முன்வந்து செய்வதால் எங்களுக்கு இது சாத்தியமாக உள்ளது.

9. ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லா குழந்தைகளுக்கும் மத, இன, மொழி வேறுபாடு

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இன்றி ஒரு சமத்துவமான சமுதாயம் படைப்பதற்கான அடித்தளத்தை உருவாக்க முன் முயற்சி எடுக்கப்பட்டு அதன் காரணமாக 'வாசிப்பு பழக்கத்தை' சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம்.

அரசிடம் நாங்கள் எதிர்பார்ப்பது இதுதான்:

a. நல்ல பாதை வசதி

b. பாதை தோறும் மரங்கள் வளர்க்க அனுமதிப்பது.

C. எங்கள் தெருவிற்கு ஒரு 108 ஆம்புலன்ஸ் வசதி (24*7 மருத்துவ வசதி)

d. வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் விளையாட ஒரு பூங்கா.

இப்படிக்கு உங்கள் நலம் விரும்பும் தொண்டன் கஜேந்திரன் .

****

இந்த அறிக்கை மத்திய அரசின் மனித வள மேம்பாட்டிற்கு தெரிய வந்ததால் அரசு அதிகாரிகள் உடனடியாக வந்து பல உண்மைகளை கண்டறிந்து இந்த ஒரு செயலாக்கத்தை ஒரு "National Agenda" வாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று எங்களிடம் சொல்லிவிட்டு சென்றார்கள்.

கஜேந்திரனின் ஒரு விரல் புரட்சி

தேர்தலின் வேட்பு மனு திரும்பப் பெறும் நாள் வரும்போது குசேலன் தன் வேட்பு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டு அதனை கஜேந்தி-

ரனிடமும் கொடுத்து அவருடைய வெற்றியை உறுதி செய்தவுடன் தன்னுடைய பங்கிற்காக ஒரு பெரிய தொகையை அவர் வழங்கி சென்-றார்.

இது ஒரு எதார்த்தத்திற்கான பயணம்!
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_111949

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

39.கோபம் உங்கள் உடலையும் மனதையும் அளிக்கிறதா? இதோ STOICISM தரும் தீர்வு !!

Motivation

கோபம் உங்கள் உடலையும் மனதையும் அழிக்கிறதா? இதோ Stoicism தரும் தீர்வு!

Stoicism Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 01 May 2026, 3:00 pm

உறுதிப்பாட்டுவாதம் – Stoicism என்பது நம் செயல்களால் அல்லது நம்முடன் எந்தத் தொடர்பும் இல்லாத மற்றவர்களின் செயல்க-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ளால் வரும் துன்பங்களை எதிர்கொள்ளும் ஒரு தத்துவம்.

இவ்வாறாக வரும் வாழ்க்கையின் துன்பங்களால் தாக்கப்படாமல், நடுநிலையைப் பின்பற்றுவதைக் குறிக்கிறது.

கர்மா, நம் சொந்த செயல்களின் விளைவுகளாக விளக்கப்படுகிறது.

ஆனால், சுனாமி, நிலச்சரிவு, நில நடுக்கம், வெள்ளம் மற்றும் தீ போன்ற இயற்கை பேரழிவுகளுக்கான செயல்களுக்கு, நாம் பிரபஞ்ச சட்டத்தை கேள்வி கேட்க முடியுமா?

ஆனால், இவற்றின் காரணங்களைப் புரிந்துகொண்டு, சரிசெய்தல் நம்மால் முடியும் தானே!!

ஆனால், பிரபஞ்ச சட்டத்தின் முதன்மை கோட்பாடு – பிறப்பு மற்றும் இறப்பு.

அதை மதித்து செயல் ஆற்றும் விழுமியங்களை நமக்கு வழங்கியவர் தான் Marcus Aurelius.

உறுதிப்பாட்டுவாத (Stoicism) தத்துவத்தின் முக்கிய மெய்யியலராகப் புகழ்பெற்றவர்.

Seneca, Epictetus போன்றோருடன் இணைந்து இத்தத்துவத்தின் உருவகமாக விளங்கினார்.

இவர் எழுதிய தனிப்பட்ட குறிப்புகள் 'சிந்தனைகளாக' வெளி வந்து – ஆங்கிலத்தில் Meditations – உலகப் புகழ் பெற்றது.

உறுதிப்பாட்டுவாதம் என்பது ....

துன்பங்களைப் பரிசீலிப்பது,

தீர்வுகளை கண்டு அறிவது,

காரணத்துடன் தொடர்ந்து செல்வது.

இதற்கு நேரமும், காலமும் நமக்கு உதவி செய்யும். ஆனால், அதற்கு பொறுமை அவசியம்.

இடம், காலம் அறிந்து செயல் ஆற்றினால் இதற்கான தீர்வுகளைக் காணலாம்.

நம்முடைய எல்லா உணர்வுகளும் வெளிப்புற காரணிகளால் வருகின்றன.

அவை கோபங்களாக மாறாமல், நல்ல விழுமியங்களாக வெளிப்பட நம் நுட்பமான சிந்தனைகள் நமக்கு உதவும்.

ஏனென்றால், கோபம் உடலை அழிக்கிறது; அதே நேரத்தில் மனதையும் பாதிக்கிறது.

இதற்கு தியானம் உதவிகரமாக இருக்கும். அதற்கு நிதானம் தேவை.

நேரமும், காலமும் கைகூட நேர் வினை ஆற்ற வேண்டும்...

ஒருவேளை கட்டாயமாக எதிர்வினை செய்ய வேண்டி இருந்தால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

'முன்னெச்சரிக்கை'க்கு நேர்மறை சிந்தனை அவசியம்.

தினமும் ஒரு எளிய நன்றி பிரார்த்தனை. நாம் கற்பனை செய்யாதவற்றை விட அதிகமாக அளித்ததற்காக..

நமக்கு வாழ்க்கை அளித்ததற்காக..

என்றும் நம்மை ஆசீர்வதித்து நல்லவற்றைச் செய்யும் குடும்பமும் நண்பர்களும் அளித்த- தற்காக.. கடவுளுக்கு நன்றி தெரிவிப்பது.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_112517

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

40.நீங்கள் வாழ்வது உங்களுக்கான வாழ்க்கையா? அல்லது மற்றவர்கள் வடிவமைத்த வாழ்க்கையா?

தபம

நீங்கள் வாழ்வது உங்களுக்கான வாழ்க்கையா? மற்றவர்கள் வடிவமைத்த வாழ்க்கையா?

அன்பின் பெயரால் நாம் செய்யும் தவறுகள்... அதற்கான தீர்வுகள்...

true love redefining freedom   Img credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 07 May 2026, 8:00 am

பள்ளிக்கு செல்வது என்பது ஒரு அனுபவமாக

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இருக்கிறது. அதை ஒரு அனுகூலமாக மாற்ற நாம் முயற்சிக்க வேண்டும்.

பெரும்பாலான குழந்தைகள் வளர்வது பெற்றோர்களிடம் அல்ல... ஆசிரியர்களிடமும் அல்ல...அவர்களுடைய சூழ்நிலைகளே அவர்களது வளர்ச்சிக்கு காரணமாகின்றன.

அந்த சூழ்நிலைகள் பல புரிதல்களையும், சந்தேகங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும் ஏற்படுத்தும் போது, அவற்றை எதிர்கொள்ள போதிய ‘மனப்பக்குவம்’ நம்முடைய மாணவர்களுக்கு உண்டாகி இருக்கிறதா என்பது கேள்விக்குறியே?

இதற்கு ஒரு சமூகமாக யார் பொறுப்பேற்று நடப்பது ?

பொறுப்பு என்கிற வார்த்தையே ஒரு பெரிய பாரமாக ஆகிவிட்ட நிலையில், அதை தட்டிக் கழிப்பதே இப்போது ஒரு சாதுரியமாக பார்க்கப்படுகிறது.

“ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தை தான் இந்த பூமியில் பிறக்கையிலே” என்கிற வார்த்தையிலேயே ஒரு ‘இருமை’ பண்பு இருப்பதாக நான் உணர்கிறேன்!

அதாவது ‘நல்லது’ என்கிற போது ஒரு ‘கெட்டது’ என்கிற ஒரு சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்தியாக வேண்டும் இல்லையா?

குழந்தைகள் பிறக்கின்றன. அவற்றிற்கு நல்லது கெட்டது தெரியாது. ஆகவே ‘நல்ல

குழந்தைகள்' என்கிற ஒரு சொல்லாடல் மற்ற குழந்தைகளை விட இந்த குழந்தைகள் மேம்பட்டவை என்கிற ஒரு மேம்போக்கு சிந்தனைக்கு வழிகோலும்.

இதுவே முரண்பாட்டிற்கு முதல் காரணம்.

'படிப்பு' என்பது பண்பை வளர்ப்பதற்காக இருக்க வேண்டும்; பாகுபாட்டை கலைப்பதற்கு 'படிப்பு' துணை போக வேண்டும்.

நாம் 'படிக்கும் போது' நாம் வளர்கிறோம் என்கிற ஒரு சிந்தனை நம்மிடம் பிறப்பது இல்லை. அதேபோன்று நம்மிடம் உள்ள அம்சங்கள் எல்லாரிடமும் இருக்கின்றன என்று வைத்துக் கொண்டாலும், அவற்றில் சில வெளிப்பாடுகள் சிலரை பேச்சாளராகவும் சிலரை எழுத்தாளராகவும் சிலரை இசையமைப்பாளராகவும் பலரை ரசிகர்களாகவும் மாற்றுகின்றன.

இங்கே படிப்பவனுக்கும், படைப்பவனுக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. காரணம் எல்லோரும் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த உலகத்தில் பிறப்பதாக நினைக்கிறோம்.

பாவ புண்ணியத்திற்கு ஏற்ப நம்முடைய செயல்கள் நம்மை ஆட்கொள்வதாக நினைக்கிறோம்.

நம்முடைய விழிப்பு நிலை என்பது நம்மிடம் போதிக்கப்பட்ட ஒரு கட்டுப்பாடு. நம் கட்டுப்பா-

டுகள் நம்மை கலகக்காரர்களாக மாற்றி விடுகின்றன.

நாம் சிந்திப்பதும், செயல்படுவதும் நம்முடைய சுதந்திரம். அந்த ‘சுதந்திரம்’ என்பது அன்பின் அரவணைப்பில், எல்லோரையும் ஏற்றுக் கொள்வதில், அவர்களை வழி நடத்துவதில்தான் இருக்கிறது.

எல்லாக் குழந்தைகளும் எந்த ஒரு வடிவமைப்பும் இல்லாமல் இந்த உலகில் பிறக்கின்றன.

அவர்களின் மனம் ஒரு வெற்று பலகை போல – எந்த எழுத்தும் எழுதப்படாத, எந்த வரையறையும் இட்டிடப்படாத தூய நிலை.

அதில் மதம் இல்லை, ஒழுக்கம் இல்லை, கலாச்சாரம் இல்லை.

‘நான் இப்படித்தான் இருக்க வேண்டும்’ என்ற கட்டுப்பாடும் இல்லை.

அது இயற்கையின் முழுமையான சுதந்திரம்.

ஆனால் அந்த சுதந்திரம் நீண்ட நாட்கள் நிலைக்கவில்லை.

குழந்தை வளர ஆரம்பிக்கும் போது, சுற்றியுள்ள உலகம் அதை மெதுவாக வடிவமைக்க தொடங்குகிறது.

“இது சரி”, “அது தவறு”,

“இப்படி பேச வேண்டும்”, “அப்படி நடக்கக் கூடாது”,

“இந்த மதம் உன்னுடையது”, “இந்த வழி தான் உன் பாதை” என்று

ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு விதியும் அதன் மனதில் பதிக்கப்படுகிறது.

அவர்கள் அதை அன்பு என்று நினைக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் அது ஒரு வடிவமைப்பு.

ஒரு மரத்தை வளர்ப்பது போல அல்ல, ஒரு கல்லை செதுக்குவது போல மனிதன் குழந்தையை மாற்றுகிறான்.

அது இயற்கையான வளர்ச்சி அல்ல, கட்டாயமான உருவாக்கம்.

இந்த உலகில் பெரும்பாலானவர்கள் நம்மை புரிந்துகொள்ள முயலுவதில்லை. அவர்கள் தங்கள் அனுபவங்களையும், தங்கள் பயங்களையும், தங்கள் நம்பிக்கைகளையும் நம்மில் பதிக்க முயல்கிறார்கள்.

அவர்கள் நம்மை நேசிப்பதால் இதை செய்கிறார்கள் என்று நம்புகிறார்கள். ஆனால், அன்பு என்பது ஒருவரை அவராகவே இருக்க அனுமதிப்பது. அவரின் சுதந்திரத்தை மதிப்பது. ஒரு பறவை தனது குஞ்சை பறக்க கற்றுக்கொடுக்கிறது, அதை கூண்டில் அடைத்து வைக்கவில்லை. அதுவே உண்மையான அன்பு.

ஆனால் மனிதன் என்ன செய்கிறான்? அவன் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறான்.

ஒழுக்கம், பண்பு, சிந்தனை, வாழ்க்கை வழி. இவ்வுலகில் நாம் வாழும் பல விஷயங்கள் நம்மால் தேர்வு செய்யப்பட்டவை அல்ல. அவை நம்மிடம் திணிக்கப்பட்டவை. அதனால் தான் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் மனிதன் தன்னைத்தான் கேட்க வேண்டும்.

“நான் உண்மையில் யார்?”

நாம் வாழ்வது நம்முடைய வாழ்க்கையா அல்லது மற்றவர்கள் வடிவமைத்த வாழ்க்கையா? உண்மையான சுதந்திரம் என்பது அனைத்து கட்டுப்பாடுகளையும் எதிர்க்குவது அல்ல, அவற்றை புரிந்து கொண்டு நாம் தேர்வு செய்யும் வாழ்க்கையை வாழ்வது.

அன்பு என்றால் ஒருவரை மாற்றுவது அல்ல, அவரை முழுமையாக ஏற்றுக்கொள்வது.

அன்பு என்றால் கட்டுப்பாடு அல்ல, சுதந்திரம். அன்பு என்றால் திணிப்பு அல்ல, அறிதல்.

அன்பு என்றால் ஒருவரை தன்னாக இருக்க விடுவது.

அந்த சுதந்திரத்தை நாம் நமக்குள் கண்டுபிடிக்கும் போது தான் உண்மையான வாழ்க்கை ஆரம்பமாகிறது.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_112954

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

41.தேவை உள்ளவரை தான் உறவா?

மங்கையர் மலர்

குட்டி ஸ்டோரி: தேவை உள்ளவரைதான் உறவா?

15 வருடங்களுக்குப் பிறகு சந்தித்த தோழிகள்: கல்பனாவின் நிஜ முகம் என்ன? உறவுகளின் கசப்பான உண்மை!

Next-gen relationship reality Image credit: AI

ராமன். செல்வராஜ்

Updated on: 08 May 2026, 3:30 pm

அவளுக்கு ரொம்ப திமிரு டீ !!

ரொம்ப திமிரிடி அவளுக்கு !!

என்ன பார்த்தும் பார்க்காம போறா?

என்ன 'டிவில' செய்தி வாசிச்சா பெரிய ஸ்டார் என்கிற நினைப்பு போல.....

இப்படி தன்னுடன் படித்த கல்பனா பற்றி மீனாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் அபி-ராமி.

15 வருடங்களுக்கு முன்பு கல்பனா, மீனா,அபிராமி மூவரும் ஏழாவது எட்டாவது வகுப்புகளில் மயிலாப்பூர், சாந்தோம் பள்ளியில் படித்தவர்கள்.

மீனா தொடர்ந்தாள் ....

அப்படியா ?

ஒரு நான்கு மாதத்திற்கு முன்பு கல்பனாவை மயிலாப்பூர் பஜாரில் பார்த்தேன்!

அங்கே ரொம்ப கூட்டமாக இருந்ததால, தன் காரில் ஏறிக் கொள்ள சொன்னாள். பக்கத்தில் உள்ள பார்க்கில் சென்று இருவரும் அமர்ந்தோம்.

அரை மணி நேரம் அரட்டைக்கு பிறகு Ratna cafe சென்று டிபன் சாப்பிட்டோம்.

பேச்சு ரொம்ப இயல்பாக இருந்துச்சு.

எனக்கு அவளை 15 வருடங்கள் பிறகு சந்தித்து பேசியது ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு !!

"உனக்கு இப்படி நடந்தது" என்று நீ சொல்லும்போது அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை?

இருந்தாலும் கல்பனா வீட்டு அட்ரஸ் மற்றும் செல் நம்பர் என்னிடம் இருக்கிறது என்று மீனா சொன்னாள்.

இப்ப நான் cell எடுத்துட்டு வராததனால வீட்டுல போய் அவளிடம் பேசிட்டு உனக்கு போன் பண்றேன் .உன் போன் நம்பர் கொடு என்று

மீனா அபிராமியிடம் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

“வரும் ,வரும்” என்று அபிராமி காத்துக் கொண்டே இருந்தாள் …

ஆறு மாதங்கள் ஆகிறது இன்னும் எந்த பதிலும் இல்லை ….

சொல்லுவதோடு சரி ,யாரும் யாரிடமும் பேசியதாக தெரியவில்லை ….

ஒருவருடைய உதவி மற்றவர்களுக்கு தேவையில்லாத போது பேச்சிற்கு இடம் இல்லை போலும் ….

இதுதான் நெக்ஸ்ட் ஜென் போல ….

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_113300

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

42.நட ! போராடு !!

Motivation

நட! போராடு!

முடிவு, காதல், மனஅமைதி, வாழ்க்கை அனுபவங்கள் பற்றி ஆழமாக பேசும் கவிதைத் தொகுப்பு.

Tamil kavithai: Man with sad memories Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 12 May 2026, 11:50 am

பிறந்தவுடன் பறந்து,
கொண்டாடுகிறது.
ஈசல்.

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு என்பது நமக்கு தெரியும் தானே?

அந்த முடிவை நாம் ஏற்றுக் கொள்வது என்பதும் முக்கியம் தானே?

அப்படி என்றால் எந்த முடிவும் மொத்தமான முடிவு இல்லை தானே?

அப்படி இருக்க நாம் ஏன் முடிவை பற்றி முணுமுணுத்து முடங்கிப் போக வேண்டும்!

ஆதாலால் முடிவில் இருந்து தொடங்குவோம்.....

மனதில் அமைதி என்பது இறைவன் நமக்கு கொடுத்த பெரிய கொடை...

அதை 'நாம் நமக்காக' கொடுக்க மட்டுமே முடியும்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

'எல்லாவற்றையும் செய்து விட்டு எதையும் எதிர்பார்க்காமல் இருப்பது' இது ஒரு நேர்த்தியான முடிவு.

இது நம்முடைய 'அகத்திறனை' இரண்டு மடங்காக ஆக்கும்.

ஒரு தப்பான முடிவு நம் வாழ்க்கையில் சோதனையை இரண்டு மடங்காக அதிகரிக்கும்.

ஆதலால் எந்த 'சந்தர்ப்பத்திலும்' எந்த 'சூழ்நிலையிலும்' கவலை கொள்ளாதே மனமே!

எல்லாவற்றிலும் இருப்பது அனுபவமே!

ஆகவே வாழ்ந்துவிடு!

வாழ்வதே வாழ்க்கை!

வாழ்வது ஓர் உன்னதப் பயணம்....

என்றும் அது தொடரட்டும் தொடர்கதையாக.....

கண்ணதாசனே! கண்ணதாசனே!

கவிதை கொடு என்று கேட்டேன்...

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அவன் வாழ்வின் நேர் முரணை எடுத்துச் சென்னான்....

நான் கவிஞனும் இல்லை
நல்ல ரசிகனும் இல்லை
காதலென்னும் ஆசையில்லா பொம்மையும் இல்லை
நான் கவிஞனும் இல்லை
நல்ல ரசிகனும் இல்லை
காதலென்னும் ஆசையில்லா பொம்மையும் இல்லை
நான் அழுதால் சிரிக்கிறாள்
சிரித்தால் அழுகிறாள்
கொஞ்சினால் கொதிக்கிறாள்
கெஞ்சினால் மிதிக்கிறாள்
இருப்பதா? இறப்பதா?
அழுவதா? சிரிப்பதா?
அம்மா தாயே..தாயே..!

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_113833

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

43. "கொசு"வாகிய "நான்"..


முகப்பு கல்கி மங்கையர் மலர்

பசுமை / சுற்றுச்சூழல்

'கொசு'வாகிய நான்...

ஒரு கொசுவின் பார்வையில் மனிதன் என்பவன் - அறிவு இருந்தும் அமைதி இல்லாதவன், பேராசை கொண்டவன், இயற்கையைச் சீண்டிவிட்டு பிறகு அதற்காகப் புலம்புபவன்.

ஒரு கொசுவின் புலம்பல் image credit- AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 16 May 2026, 11:01 am

நான் கொசுதான்; என்னை பார்ப்பதற்கு உங்களுக்கு அருவருப்பாகத்தான் இருக்கும். இருந்தாலும் நான் சொல்வதை கொஞ்சம் செவிமடுத்து கேளுங்கள்.

நாங்களும் உங்களைப் போன்ற இந்த பிரபஞ்சத்தில் படைக்கப்பட்டு இருக்கிறோம். எங்களுக்கும் இந்த உலகத்தில் வாழ உரிமை இருக்கிறது. இப்படி உரிமைகள் இல்லாவிடில்

நாங்கள் எப்படி இந்த உலகத்தில் இவ்வளவு நூற்றாண்டுகளாக வாழ்ந்து இருக்க வாய்ப்பு இல்லை தானே?

ஆனால் எங்களுக்கு என்று ஒரு பாரம்பரியம் இருக்கிறது. கொஞ்சம் உற்று கவனியுங்கள். உங்களுக்கு புரியும்படி சொல்கிறேன்.

எங்கள் பிறப்பால் இந்த உலகத்தில் பல ஜீவ-ராசிகள் பிழைத்து வாழ்ந்து கொண்டிருக்-கின்றன.

உதாரணமாக நாங்கள் வாழும் குட்டைகள், சாக்கடைகள், தேங்கி நிற்கும் நீர்நிலைகள் ஆகியவற்றில் உள்ள எங்கள் முட்டைகளை உணவாக கொண்டு நீந்துவன (மீன்கள்) பறப்பன (பறவைகள்) ஊர்வன (மண் புழுக்-கள்) என பல உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்-கின்றன.

இவற்றையெல்லாம் நீங்கள் உணவாக்கிக் கொண்டு எங்களை மட்டும் ஒழித்துக்கட்ட நினைப்பதில் என்ன நியாயத்தை கடைப்பி-டிக்கிறீர்கள்!

நாங்கள் என்ன ‘வேண்டும் என்றா உங்கள் வீட்டிற்கு வந்து உங்களை கடித்து குதறவேண்-டும் என்று நினைக்கிறோம்?’.

ஏதோ தெரியாமல் உங்கள் உடலில் வந்து உட்காருகிறோம்.

எங்கள் வாழ்க்கை மிகவும் சொற்பமானது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அந்த சிறு நொடிகளில் வாழ உங்கள் உதிரத்தை சிறிது உறிஞ்சுகிறோம்.

அதற்காக இப்படி “டமில்” என்று அடிப்பதும், கூக்குரல் இடுவதும் உங்களுக்கு அழகு அல்ல என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

எங்களைப் படைத்த இறைவன்தான் உங்களையும் படைத்திருக்கிறான்.

நாங்கள் இந்த உணவு சங்கிலியில் கடை கோடியில் இருக்கிறோம். அதனால்தான் உங்களுக்கு எங்களைப் பார்த்தால் அலட்சியமாக இருக்கிறது போலும்.

இயற்கையின் விதி படி பார்த்தால் நாங்கள்தான் நொடிக்கு நொடி இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு இறப்பு பற்றி எந்த பயமும் கிடையாது. அப்படி நீங்கள் எங்களுக்கு செய்யும் அட்டகாசத்தால் நாங்கள் எங்கள் உடம்பில் immune systemஐ ஏற்படுத்திக் கொண்டோம். இப்படியாக போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

“எங்களுடைய வாழ்க்கை நித்திய கண்டம் பூர்ண ஆயுசு “.

நாங்கள் இந்த உலகப் பற்றை விட்டு விலகி பிரபஞ்சத்தோடு இணையவிடாமல் தடுப்பது உங்களுடைய போக்குதான்.

எங்களுக்கு உங்களைப் போன்று ‘நாளை என்ன செய்ய வேண்டும்’ என்கிற எண்ணங்கள் கிடையாது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ஆகவே ஆசைகள் கிடையாது. நாளை பற்றிய பயம் கிடையாது. இன்றைக்கே எல்லாவற்றையும் சேர்த்துவிட வேண்டும் என்கிற "பேராசை" கிடையாது .

"என்ன கொண்டு வந்தோம்; என்ன கொண்டு போக போகிறோம்: எதுவுமே கிடையாது".

எங்களுக்கு அறிவு கிடையாது. ஏன் இதயம் கூட கிடையாது. ஆனால் துளி கூட பயம் கிடையாது.

இரண்டும் இருக்கிற நீங்கள் ஏன் பயந்து பயந்து வாழ்கிறீர்கள்!

தோழர்களே எதிர்பார்ப்பு இல்லாமல் வாழ கற்றுக் கொள்ளுங்கள்!

எங்களை படைத்தவன் அவனே!

எங்கள் தலை எழுத்தை எழுதியவனும் அவனே!

எங்களை இயக்குபவனும் அவனே!

செயலும் அவனே !

செயல்பாடும் அவனே !

செயல்படுத்துபவனும் அவனே !

அவனிடம் முறையிட்டு ஒரு தீர்ப்புக்கான திராணி இல்லாத நீங்கள் எங்கள் மீது பழியை போட்டு எங்களை அலட்சியமாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அதற்காகத்தான் சொல்கிறேன் எங்களை சும்மா விட்டு விடுங்கள். நாங்கள் இந்த

உலகத்தில் மீண்டும் மீண்டும் பிறந்து உங்களிடம் அடிபட்டு சாக விரும்பவில்லை.

எங்களுக்கு உங்களைப் போன்று ஆறறிவு கிடையாது. அறிவே கிடையாது என்று வேணாலும் வைத்துக் கொள்ளுங்கள்.

அறிவுடைய நீங்கள் என்ன பெரிதாக செய்து விட்டீர்கள் என்று நினைக்கிறீர்கள்!

உங்களை நீங்களே அழித்துக் கொண்டு, பிறகு அமைதி அமைதி என்று அளப்பரிக்கிறீர்கள்.

மனித நேயம் பேசும் நீங்கள் மனிதன் மதத்தால், மொழியால், இனத்தால், சாதி வேற்றுமைகளால் சண்டையிட்டு அழிகிறான்.

இது தவிர அரசியல், ஆன்மீகம், அரசியல் என்று பல துறைகளில் உங்கள் வளர்ச்சி இருந்தாலும் உங்களால் அறம் சார்ந்த வாழ்வு வாழ முடியவில்லை.

அதனால்தான் நாங்கள் உங்களுடன் வாழ விரும்புவதில்லை.

உங்களுக்கு முக்தி தேவைப்படுகிறது.

தாங்கள் இந்த பிரபஞ்சத்தில் ஒரு இயக்கம். இந்த பிரபஞ்சத்தோடு இணைந்து வாழ விரும்புகிறோம்.

உங்களைப் போல நாங்கள் அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

எங்களை நீங்கள் “சீண்ட, சீண்ட” நாங்கள்

ஒரு அழியாத இனமாக உருவெடுத்து விடுவோம்.

உதாரணம் கரப்பான் பூச்சி.

அணுகுண்டு போட்டாலும் இந்த உலகமே அழியுமே ஒழிய; கரப்பான் பூச்சி அழியாது!

எங்களுக்கு உங்களைப் போன்று மீண்டும் பிறந்து வாழ விரும்பமில்லை.

உங்களால் தான் நாங்கள் திரும்பத் திரும்ப பிறந்து உங்களிடம் மாரடிக்கும் வேலையை செய்ய வேண்டி இருக்கிறது.

எங்களை சாதாரணமாக விட்டிருந்தால் நாங்கள் காட்டிற்குள் ஒரு சிறு பூச்சி இனமாக வாழ்ந்து இயற்கையாக மடிந்து போய் இருப்போம்.

எங்களை நாட்டுக்கு வரவழைத்து சித்திரவதை பண்ணி சின்ன பின்னமாக ஆகிய உங்களை சும்மா விடுவதாக இல்லை.

இப்படிக்கு கொசு....

என் கனவில் கொசு வந்தது. அது என்னை கடித்தது. அப்போதுதான் தெரிந்தது அது ஒரு கனவு என்று.

🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_114038

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

44.சிறுகதை: "காத்திருப்பு"-ஒரு வீரவணக்கம்!

கல்கி

சிறுகதை : காத்திருப்பு : ஒரு வீரவணக்கம்!

ஒரு கிராமத்தின் பெயருக்கும், அந்த மண்ணின் வீரத்திற்கும் பின்னால் இருக்கும் ஆழமான பிணைப்பை இந்தச் சிறுகதை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ஒரு சிப்பாய்க்கு முழு இராணுவ மரியாதை செலுத்திய கிராமம் Image credit- AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 16 May 2026, 11:30 am

Kalki Strip

“டேய் நம்ப ரமேஷ் சிப்பாயில் சேர்ந்துட்டான் டா”- இப்படியான பேச்சு 70களில், 80களில் அதிகமாக கேட்கும்.

அந்தப் பேச்சுக்கு சொந்தமான கிராமம் தான் காத்திருப்பு.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

'காத்திருப்பு' – இது தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் அருகே உள்ள ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்திற்கு 'காத்திருப்பு' என்கிற பெயர் எப்படி வந்தது என்பது தெரியவில்லை.

ஆனால் அங்கே 50 குடும்பங்கள் வசித்து வந்தன. ஒவ்வொரு குடும்பங்களில் இருந்தும் ஆண் வாரிசு பிறந்தால், அந்த ஆண் மகனை பட்டாளத்துக்கு அனுப்புவது என்பது வழக்கமாக இருந்தது.

அதனால்தான் என்னவோ பட்டாளத்துக்கு சென்று திரும்பி வரும்போது அந்த வீர மகனை வரவேற்க அந்த கிராமமே 'காத்திருந்து' வரவேற்ற விஷயம் அந்த ஊருக்கு 'காத்திருப்பு' என்கிற பெயரை வழங்கி சென்றிருக்க வேண்டும் .

இவ்வாறாக ரமேஷ் பட்டாளத்தில் சேர்ந்து பணியாற்றி, விடுப்பில் வீடு திரும்புவார்.

சிப்பாய் ரமேஷ் வருவதை அறிந்து அந்த கிராமமே அவருக்கு ஒரு ஹீரோ வெல்கம் கொடுக்கும்.

சின்னக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஊரே ஆர்ப்பரித்துப் போகும்.

அவர் பஸ்ஸிலிருந்து இறங்கி ஊரின் தெரு கோடியில் இருக்கும் தன் வீட்டிற்கு செல்வதற்கு முன் அவர் நடந்து வரும் நடையை பார்க்க கோடி கண்கள் தான் வேண்டும்.

அந்த மிடுக்கும், நடையும் அப்பப்பா !!

நம்ப “ரமேஷ் அண்ணா” வா இது ; எப்படி இருந்த புள்ள இப்படி ஆயிடுச்சு !!

ஹேர் கட், பருத்த வாலிப்பான உடம்பு, போதாக்குறைக்கு ஹிந்தி, இங்கிலீஷ் என பேசும் போது எல்லோரும் வாய் அடைத்து தான் போய் விடுவார்கள்.

ரமேஷ் – சும்மா சொல்ல கூடாது ; ஒவ்வொரு 2 வருடத்துக்கு ஒருமுறை வரும் போதும் அந்த ஊரில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் உடைகள், பொம்மைகள் என வாங்கி குவித்து கொண்டுதான் வருவார்.

இப்பவும் அவர் வருவது எல்லோருக்கும் தெரியும்; ஆனால் இப்போது அவர் தியாகி.

இதைப் புரிந்து கொள்ள குழந்தைகளுக்கு சில வருடங்கள் ஆகலாம்...

ஆனால் ஊருக்கு இது வெற்றியின் சின்னம்.

அரசு தன் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருந்தது ......

மரியாதை, மாலைகள் என சூழப்பட்டு ...

வேதனைகள் இருந்தாலும் வேற்றுமைகள் எல்லாம் கலைந்து ஒற்றுமையாய் ஒன்று கூடி அந்த கிராமமே அவருக்கு ஒரு ‘ராஜ மரியாதையை’, ஒரு ‘வீர வணக்கத்தை’ செலுத்தி கொண்டு இருந்தது.

அந்த சிறார்கள் மனதில் நாமும் அவராகவே இருக்க வேண்டும் என்கிற எண்ணம் சிறிது சிறிதாக சிறகடிக்க ஆரம்பித்து விட்டது.

சேவை என்பது ஒரு புனித பயணம்.

அதில் பயணப்பட காத்திருக்கிறது 'காத்திருப்பு' கிராமம்......

பின்னோட்டம் :-

ஒரு சிப்பாய் தனது உயிரைத் தியாகம் செய்து, அவர் உடல் கிராமத்திற்கு வந்தால், அவருக்கு முழு இராணுவ மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும்.

🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_114451

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

45. சிறுகதை :நண்பேன்டா !!

எனக்கு இது உறுத்திக் கொண்டே இருந்தது. நம்ம நிறைய படிக்கிறோம். நிறைய பேசு-றோம்; நிறைய கலந்துரையாடல்கள் செய்கி-றோம்; எல்லாவற்றிருக்கும் மேலாக சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இருக்-கிறோம். தத்துவத்துல Phd வாங்கியாச்சு. உலக இலக்கியத்திலிருந்து உள்ளூர் வரலாறு வரை பேசி ஆகிவிட்டது.

என்னதான் இருந்தாலும் ‘சுரேஷ்’ மாதிரி சிறுகதை, நாவல் என இலக்கியத்தில் பயணப்பட முடியவில்லை. அந்த பரிமாண வளர்ச்சி அவனுக்கு எப்படி வந்தது? இதை அவனிடமிருந்து நாம் கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்கிற ஒரு உந்தலில் சுரேஷை அழைத்தேன் நான்.

சுரேஷ் ஒரு தொழில்முறை எழுத்தாளன் கிடையாது. அவன் வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறான். எனக்கு தெரிந்து ரொம்ப படிப்பவனும் கிடையாது.

நானும் அவனும் பிளஸ் டூ முதல் காலேஜ் டிகிரி வரை ஒன்றாக படித்தோம்.

நான் இப்பவும் சாந்தோம்-இல் இருக்கிறேன். அவன் மயிலாப்பூரில் இருக்கிறான். இவ்வாறாக எங்களுடைய நட்பு 25 வருடங்களாக தொடர்ந்து வருகிறது.

எனக்கு அவனுடைய எழுத்துக்கள் பற்றி கொஞ்சம் பொறாமை தான். இதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

இருவரும் விடுமுறை நாட்களில் செயின்ட் தாமஸ் மவுண்ட் செல்வோம். பள்ளிப் பருவங்களில் எங்களுக்கு அதுதான் கோடை வாசஸ்தலம். எவ்வளவு முறை சைக்கிளில் சென்றிருப்போம் என்பது கூட எங்களுக்கு தெரியாது.

அங்கேயே ஒரு ஞாயிற்று கிழமை தொடங்கியது. உரையாடலை ஆரம்பித்தேன்...

“சுரேஷ் நீ இன்னைக்கு ஒரு கதை எழுதி இருந்த, அதை முடிக்கும் போது ஒரு பஞ்ச் டயலாக் இருந்தது. அது எனக்கு ஒரு கவிதையாக மனதில் மலர்ந்தது.

‘இருந்து என்ன ஆகப்போகிறது; செத்து தொலைக்கலாம்..

செத்து என்ன ஆகப்போகிறது; இருந்து தொலைக்கலாம்..’

ரொம்ப ரொம்ப அருமை டா!. எப்படி உன்னால் இந்த அளவுக்கு சிந்திக்க முடிகிறது. அதை வார்த்தையில் அடக்கி நீ கையாளுகிற விதம் மக்களுடைய மனதில் ஏதோ ஒன்றை செய்கிறது.

நான் எவ்வளவோ விஷயத்த உன்கிட்ட சொல்லி இருக்கேன். மறைச்சது ஒண்ணே ஒண்ணு தான். நானும் உன்ன மாதிரி எழுதணும்னு ஆசைப்பட்டு கடைசியில் ஒன்றுமே முடியல.

இந்த ரகசியத்தை கொஞ்சம் எனக்காக சொல்லேன்.”

“டேய் கணேசா.. இதுக்காக சிரமப்பட்டு மலையேறி வந்திருக்க வேண்டியது இல்ல... இத நான் உன்கிட்ட போன்லயே சொல்லி இருப்பேன். சரி பரவால்ல; ரொம்ப நாளுக்கு அப்புறம் சந்திக்கிறோம்... எப்படி இருக்க..”

“இதெல்லாம் போதும்டா! விஷயத்துக்கு வா!!”

“வந்துட்டேன்; வந்துட்டேன்; கூப்பிட்ட அதனால தானே வந்து இருக்கேன். எனக்கு தெரிஞ்சது சிம்பிளா சொல்லிடுறேன். துறவிக்கும், ஞானிக்கும் என்ன வித்தியாசம்?”

“முற்றிலும் துறந்தவன் துறவி! எல்லாம் தெரிந்தவன் ஞானி!”

“தப்பு. முற்றிலும் துறந்தவர்கள் இந்த உலகத்தில் யாருமே கிடையாது! துறவு என்பது ஒரு முயற்சி. அந்த முயற்சியை அவர்கள் ஒரு கட்டுப்பாடாக தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி யாருக்கும் எல்லாமும் தெரியாது… ஞானி உள்பட!!??

உனக்கு சிம்பிளா சொல்லணும்னா ‘இளையராஜா’ எடுத்துக்க. ‘எனக்கு இசையே தெரியாதுங்கறாரு’. ஆனா, அவரை ‘இசை ஞானி’ என்று தமிழகமே கொண்டாடுகிறது.

அதற்கு காரணம், கடைசி வரை அவர் ‘இசையை’ தெரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்.

துறவி விவேகானந்தரை எடுத்துக்க..

அவர் ராமகிருஷ்ணரிடம் ‘கடவுளை காண வேண்டும்’ என்று சொல்லும் போது; அதை உன்னிடத்தில் தான் காண வேண்டும். அதை போய் வெளியில் தேடுவது மடமை என்றார். ஆகவே சொல்கிறேன்….

'மனசு' வேற, 'அறிவு' வேற....

எழுதுறவனுக்கு மனசு 'உள் மூகமாக' பயணப்படும்.

அறிவுங்கிறது 'வெளியில் தான்' பயணப்படும்.

நாம் 'அறிவு' கொண்டு செயல்பட வேண்டும்.

அதற்கு முன் நம் "மனக்கண்களில்' நம் எண்ணங்களை, நம்முடைய செயல்களை தீர்மானித்து அவற்றை நாம் ஒழுங்கு படுத்த வேண்டும்.

அந்த 'ஒழுக்கம் புரியாத புதிர்' கிடையாது.

ஆனால், அதை 'புரிந்து கொள்ள' முயற்சிக்க வேண்டும்.

அந்த 'முயற்சி தொடர்ந்து' நடைபெற வேண்டும்.

இந்த உலகத்துல எல்லாம் 'சாத்தியம்' தான்.

'மனசு' ஒரு 'குரங்கு' மாதிரி. பல எண்ணங்கள் நம் மனசுல ஓடிக்கிட்டு இருக்கும். அவற்றை சீர்படுத்த வேண்டும். அதற்கு பேரு தான் Journaling.....

நம் 'அறிவு' கொண்டு நம் எண்ணத்தை எழுத தெரிந்து கொள்...

அவை சில குறிப்புகளாக இருக்கலாம்....

நமக்கு நடந்த 'நிகழ்ச்சிகளாக' இருக்கலாம்;

ஏற்பட்ட 'அனுபவங்களாக' இருக்கலாம்;

'அவமானங்கள்', 'அவதூறுகள்', 'வெற்றிகள்', 'தோல்விகள்' , 'கேட்டவைகள்', 'பார்த்த-

வைகள்’ என எல்லாவற்றையும் குறிப்புகளாக எடுத்துக் கொள்ள பழகிக் கொள்.

கடைசியா இப்படி சொல்றேன்.

உன்ன பத்தி உனக்கு என்ன தெரியும்?”

“ஒண்ணுமே தெரியாது.”

“பொய் சொல்லாத... உனக்கு இப்ப 51 வயசு... படித்ததை மறந்துட்டியா, கூடி விளையாண்டதை மறந்துட்டியா, சண்டை போட்டதை மறந்துட்டியா, அப்பா கிட்ட அடி வாங்கினதை மறந்துட்டியா, அம்மா கிட்ட பொய் சொன்னதை மறந்துட்டியா, அக்காவை மாட்டி விட்டதை மறந்துட்டியா, தம்பிக்கு உதவினதை மறந்துட்டியா, எதையும் உன்னால் மறக்க முடியாது. எனக்கு எவ்வளவு வாட்டி ‘காலேஜ்ல ஃபீஸ் கட்டி’ படிக்கிறதுக்கு உதவி செய்திருப்பே!!!

‘எழுது’, ‘எழுது’ எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு எழுதிக்கொண்டே இரு.... எழுத்து சீர்படும்... அதுவே வகைப்படும்.... அப்பொழுது அது கவிதைகளாக, சிறுகதைகளாக, நாவல்களாக இந்த சமுதாயத்தில் பிரதிபலிக்கும்.

நீ ஒரு ‘தேங்கி நிற்கும் குட்டை’ அல்ல. எப்பொழுதுமே ஓடிக் கொண்டிருக்கும் ஒரு ஜீவ நதி.... உன் எண்ணங்கள் உன் மனதை சிதைக்கலாம்...

அறிவு கொண்டு அவற்றை வகைப்படுத்தி முன்னேறிக் கொண்டே இரு..

'நாளை' என்பது 'நமக்காகவே' இருக்கட்டும். அதற்காக இன்றைக்கு ஓய்வெடுக்காதே! இப்போதே அதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டே இரு...

கணேஷ் இப்படி நான் உன்னிடத்தில் சொல்லிக்கிட்டு இருக்கேன் இல்ல!! ...

இத வச்சு நான் ஒரு கதை எழுதிடுவேன்.

இப்ப நான் உன்கிட்ட சொன்னது கூட ஒரு கதை தான்.

நம்ப முடியலையா!? நாளைக்கு பாரு!?

இது பத்திரிகையில் வரும்."

இருவரும் ஒன்றாக மலையில் இருந்து இறங்கினோம்.

Neither Leaders Nor Writers are Borne; They are Made.

🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_164354

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

46.சகிப்புத்தன்மை,பொறுமை,பெருமை-ஒரு ஆன்மீகப் பயணம்

முகப்பு கல்கி மங்கையர் மலர்

ஆன்மிகம்

சகிப்புத்தன்மை, பொறுமை, பெருமை: ஒரு ஆன்மீகப் பயணம்!

மனிதன் தன்னை நம்பும் 0.01% மனநிலைக்கான ஆன்மீகப் பயணத்தை சுட்டிக்காட்டும் சிந்தனைச் சாலை.

human-mind

ராமன். செல்வராஜ்

Updated on: 26 May 2026, 7:30 am

மனிதன் பிறக்கும்போது ஆசைகளுடன்தான் பிறக்கிறான். நம்பிக்கை நிலைகொண்டு இருக்கும் போதுதான் ஆசைகள் நிறைவேறும்.

ஆக ஆசைகள், நம்பிக்கைகள் மனிதனின் இரண்டு கண்கள்.

நான்தான் கடவுளா?

THIS BOOK WAS REPRODUCED WITH PRESSBOOKS

என்ன பைத்தியக்காரத்தனம்?

அது எப்படி நான் கடவுளாக முடியும்? இப்படியாக நாம் நம்மை நம்பாததால் நம்மிடையே பல நம்பிக்கைகளை வெளியில் இருந்து விதைக்கத் தொடங்கினார்கள்.

இப்படி உருவானதுதான் மதங்கள்.

மதம் சார்ந்த நம்பிக்கைகள்.

நம்மை நம்புவது என்பது எப்படி சாத்தியம்? அது முடியாதது?

இப்படியாகத்தானே 99.99% நம்பினார்கள். அவர்கள்தான் ஆளப்படுகிறார்கள். மீதமுள்ள 0.01% தன்னை நம்புபவர்கள்!

ஆகவே ஆள்கிறார்கள்!

ஆசைகள் இல்லாமல் நாம் வாழ்வது இயற்கைக்கு மாறானது. எளிதாக புரிந்தும் கொள்ளும்படி சொல்கிறேன்.

அதாவது நாம் கடவுள் நம்பிக்கைக்கு முரணாக செயல்படுகிறோம். காரணம் ஆசைகள்தான் நம்மை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

அந்த ஆசைகளுக்கு அடிமையாகாமல் அவைகளை பிரித்து மேய்வதில்தான் நம்முடைய “அறிவு” முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது.

அவர்களே இன்று அறிஞர்களாக, தத்துவஞானிகளாக, விஞ்ஞானிகளாக வளம் வருகின்றனர்.

ஆசையை துறந்து வாழ்வது வாழ்க்கை இல்லை. மாறாக ஆசைகளை வழிநடத்தி அதன் மூலம் உயர்வு காண்பதுதான் இயற்கை விதி.

கற்காலம் முதல் கொண்டு மனிதன் தன் உறைவிடத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை இருந்தது.

அந்த பயத்திற்கு காரணம் பிற உயிர்களில் இருந்து வந்த அச்சுறுத்தல். அப்படியாக வந்தது “வழிபாடு”. இவ்வாறு பிறந்ததே “மதம்” எனும் மார்க்கம்.

மனதின் பரிமாண வளர்ச்சி மனிதனை பல மடங்கு வளர்ச்சி அடைய செய்து இருக்கிறது .ஆனால் அடங்க மறுக்கிறது. மனிதன் அவைகளை கொல்லத் துடிக்கிறான்.

மனிதன் அதனால் மனதிற்கு அடிமை ஆகிறான். அதிலிருந்து மீள அதிகாரத்தை பற்றிக்கொள்ள பாடுபடுகிறான்.

அடிமைத்தனத்தை ஆதரிக்கிறான். இதன் விளைவுதான் அறிவினுடைய அழிவு.

‘AI’ வந்துவிட்டது. ஆற்றல் குறைந்துவிட்டது. உழைப்பின் உடைய கோட்பாடுகள் மாறிவிட்டன.

மனிதர்களுடைய மனங்கள் சுற்றித் திரியும் zombie என்கிற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய ஈடுபடுதல் (engagement) குறைய

தொடங்கும் போது அங்கே சிக்கல் (entanglement) வந்துவிடும்!

அதுவே நம்மை மனதை சரியாக வேலை வாங்காமல் இருந்தால் அது நமக்கு குந்தகத்தை விளைவிக்கும்.

ஒரு ஒழுங்கு கட்டுப்பாடு (Arrangement) இல்லாமல் மனம்போன போக்கில் வாழ்வது நம்மை முதல் குற்றவாளி (arraignment) ஆக்க வழிவகுக்கும். அதன் விளைவே 'போதை கலாச்சாரம்', 'மது அடிமைகள்'.

பலதரப்பட்ட லகிர வஸ்துக்கள்" வந்து விட்டன. அதுவே 'உணவு' என்று மாறும்போது நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்கிற சிந்தனையே இல்லாமல் போய்விடும்.

"ஆடை இல்லாத மேனி
அவன் பெயர் அந்நாளில் ஞானி
இன்றோ அது ஒரு ஹாபி
எல்லோரும் இனிமேல் பேபி".

என்று பாட வேண்டியதுதான்.

இதுவே ஹாபி என்று ஆகிவிட்ட பிறகு என்னத்தைச் சொல்ல? என்னத்தைச் செய்ய?

பரப்பிரம்மா! இவ்வுலகம் உன் கையில்,உன் திருவிளையாடலில்...

உன்னுடைய பல விளையாட்டுகளில் நாங்கள் குழம்பி போய் இருக்கிறோம். ஆனால் இப்போது இருப்பது மயக்கம். இந்த மயக்கம் தெளிய நல்ல உண்மையான, நேர்மையான

தைரியமுள்ள, மனங்களை மானுடம் எப்போது பெறும்?

அப்போதுதான் துன்பங்கள் குறைந்து இன்பங்கள் சூழ்ந்து, போர் மேகங்கள் கலைந்து, அமைதியான வெண் மேகங்கள் சூழ்ந்து ஒரு ஆழ்ந்து பரந்துபட்ட செழுமையான மன வெளி பிறக்கும்.

அதை நோக்கிய பயணத்தில்தான் இன்று ஆன்மீகவாதிகள், தத்துவ வாதிகள் மனிதர்களை அரசியல் படுத்தியும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

“சகிப்புத்தன்மை” என்பது நம்மை நாமே ஆட்கொள்வது. “பொறுமை” என்பது பிறறின் தவற்றை மன்னித்து வாழும் ஒரு தவ நிலை. இவை இரண்டும் இருந்தால் கிடைப்பதோ “பெருமை” என்னும் பெரும் கீதம்.

அந்த கீதத்தை எல்லோரும் இசைக்க, கேட்டு பரவசப்பட காத்துயிருக்கிறோம்.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_165447

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

47.102 முறை நிராகரிக்கப்பட்ட புத்தகம் காட்டிய வாழ்வியல் ரகசியம்

கல்கி

2 முறை நிராகரிக்கப்பட்ட புத்தகம் காட்டிய வாழ்வியல் ரகசியம்!

வாழ்க்கையை மெதுவாக அணுகினால் எப்படி புதிய அர்த்தங்கள் திறக்கின்றன என்பதை சொல்லும் கட்டுரை.

A man drink coffee | Life Philosophy   Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 26 May 2026, 6:02 pm

Kalki Strip

'Zen And The Art of Motorcycle Maintenance' Author Robert M. Pirsig.

இந்த புத்தகம் 102 முறை பதிப்பாளர்களால் நிராகரிக்கப்பட்டு 103 வது முறை பிரசுரிக்கப்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

பட்டு முதல் மூன்று மாதங்களில் 50,000 பிரதிகள் விற்று பிறகு 50 லட்சம் பிரதிகளை தாண்டி 50 வருடங்களுக்குப் பிறகு இப்போது மிகவும் பேசப்படும் ஒரு தத்துவ ஞான விளக்கம் (philosophy).

அந்த விளக்கமானது ஒரு மோட்டார் சைக்கிள் பயணத்தில் தொடங்கி எளிதாக புரிந்து கொள்ளும்படி ஒரு சுய சரித்திரம்.

இதனை மேலும் புரிந்துகொள்ள முடியும். தேடல் இருந்தால் தேடி வரும் ஞானம்.

இதோ அந்த புத்தகத்தின் ரத்தின கதை சுருக்கம்.....

ஒரு காரியத்தை நாம செய்றோம்னு சொன்னா அதை எடுத்த உடனே சிறப்பா செய்து விடுவோம் என்று நம்புறது எந்த விதத்திலும், நமக்கோ நாம் எடுத்துக் கொண்ட காரியத்திற்கும் ஒரு தீர்வாக அமையாது.

மாறாக எந்த ஒரு காரியத்தையும் நாம் மேற்கொள்ளும் முன் அதைப்பற்றிய ஒரு தெளிவும், அதனைப் பற்றிய பின்விளைவும் நம்மால் ஓரளவுக்கு கணிக்க முடியும் என்றால் அதுதான் நேர்த்தியான செயலாக இருக்கும்.

இந்த நேர்மை நம்மிடம் இருக்கும் போது அது பல உண்மைகளை நமக்கு சொல்லிக் கொண்டே இருக்கும்.

அப்படி செய்யும் செயலில் வரக்கூடிய பக்க விளைவுகளை நாம் சரியாக எதிர்கொண்டு,

மேற்கொண்டு எடுத்துக்கொண்ட காரியத்தை ஒரு படி மேலாக செய்ய அது உந்துதலாக இருக்கும்.

மேலும், இது நம்முடைய ஆர்வத்தை தூண்டி நம்முடைய படைப்பு திறனை மேலும் கூட்டி நமக்கு ஒரு உறுதுணையாக நம்மை வழிகாட்டிக் கொண்டு இருக்கும்.

ஒன்றை மட்டும் நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது ‘உண்மை’ என்பது வேறு ‘தரம்’ என்பது வேறு.

நாம் உண்மையை விரும்பும் போது, நம்முடைய செயல்பாடுகள் புறம் சார்ந்திருக்கும்.

நாம் தரத்தை நம்பி செயல்படும் போது அது நம்முடைய ஆக்கப்பூர்வமான முயற்சிக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கும் (அகம் சார்ந்தது).

இத்தகைய பண்புகளை நாம் வளர்த்துக் கொண்டிருந்தால் நம்முடைய சோர்வு, ஆர்வமின்மை ஆகியவற்றை போக்கி நம்மை ஒரு அழகான சித்திரமாக வடித்துக் கொண்டு அதன் மூலம் நம்முடைய உள் பயணத்தை உல்லாசமாக அனுபவிக்க முடியும்.

எனக்கு மிகவும் பிடித்த ஆசான் dostoysky (Russia’s greatest novelist) சொன்ன பொன்னான வாக்கியத்தை இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

அவர் சொல்கிறார்.......

“உன்னை அடுத்தவர்கள் புரிந்து கொள்ள

வேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு வாழ்வது தான் இந்த உலகத்தில் உள்ள ஒரு மிகப்பெரிய அடிமைத்தனம்”.

அடுத்தவர்கள் உங்களை புரிந்து கொள்ளப் போவது இல்லை. அவரவர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையில் ஆயிரம் பிரச்சனைகள்; அவர்கள் உங்களைப் பற்றி யோசிப்பதற்கு கூட நேரங்கள் கிடைப்பது கிடையாது; ஆகவேதான், சொல்கிறேன்.

இந்த உலகத்தில் உள்ள அடிமைத்தனத்திலிருந்து நீங்கள் விலக வேண்டுமானால் உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு உங்களுடைய திறமைகளை கண்டு ஆராய்ந்து அதற்கு மதிப்பளித்துக் கொண்டு இந்த சமுதாயத்தில் உங்கள் பங்கை இன்றே ஆற்ற தொடங்குங்கள்.

கீழே கண்ட இந்த கட்டுரைக்கு காரணமானது ஒரு பேஸ்புக் போஸ்ட்.

நான் ஒரு முறை ஜெய்ப்பூரில் உள்ள Rostery காபிக்கு சென்று இருந்தேன்.

அது ஜெய்ப்பூரில் உள்ள ஒரு மிகவும் பிரசித்தி பெற்ற காபி ஷாப்.

நாங்கள் நான்கு, ஐந்து பேர் நண்பர்களாக கூடி சென்று இருந்தோம்.

அது ஒரு ஃபேமஸ் டீ ஷாப் என்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் உள்ளே சென்றதும் அங்கே உள்ள பானங்கள் ஒரு ஒயின் ஷாப்

போல எல்லா டேபிள்களிலும் அழகாக நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அந்தப் பருகும் பானத்தில் மேலே இளம் சிவப்பு கலந்த ஒயின் போலவும், கீழே தெளிந்த பதநீர் போலவும் காட்சி அளித்தது.

நாங்களும் அதை பருகுவதற்காக ஆர்டர் செய்தோம். அந்த காபிக்கு பெயர் Cranberry coffee.

அப்படி என்னதான் இருக்கிறது என்பதற்கு முதலில் நான் அதை எடுத்து கொஞ்சம் பருகினேன்.

எனக்கு அது கசப்பாக இருந்தது. பிடிக்கவே இல்லை. இப்படி ஒரு பானத்தை அருந்துவதற்காகவா இந்த அளவுக்கு செலவு செய்து இப்படி அமர்ந்து நம்முடைய நேரத்தை வீணங்கி கொண்டிருக்கிறோம் என்ற ஒரு சலிப்பு வந்தது?

திரும்பவும் பருக ஆரம்பித்தேன். மேலும் எனக்கு சலிப்பும் வேதனையும் தான் கிடைத்தது. சரி இதனை இப்படியே விட்டு விடுவோம் என்று நான் வைப்பதற்குள் என்னை பார்த்த சர்வர் என்னிடம் வந்து மெதுவாக என் காதருகில் சொன்னார்....

“சார் கொஞ்சம் பொறுமையாக உங்கள் teaspoon எடுத்து அந்த பானத்தை கலக்கி அதன்பிறகு பருகவும். அவர் சொன்னபடியே செய்து பிறகு குடிக்க ஆரம்பித்தேன். அப்போதுதான்

புரிந்தது அதனுடைய உண்மையான taste மற்றும் அதனுடைய புத்துயிர்ப்பு தன்மை.

ஆக நான் செய்த தப்பு இதுதான்.

எடுத்தவுடனே எந்தவிதமான ஆராய்ச்சியும் இல்லாமல், என் முடிவுகளை நான் தான்தோன்றித்தனமாக எடுத்ததே காரணம்.

இதன் மூலம் நான் கண்டறிந்த உண்மை.

பிறரை அணுகும் போது நம் முடிவுகளைப் புறந்தள்ளி ஒரு சிறந்த மனத்தோடு பழக ஆரம்பித்தால், நமக்கு பல முடிச்சுகளை அவிழ்த்து பல அதிசயங்களை நமக்கு காட்ட இந்த உலகம் காத்துக் கொண்டிருக்கிறது.

Simple philosophy

Look, Pause, Stir….

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_165853

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

48.உலக அமைதி சாத்தியமா?-இந்திய தத்துவ ஞானி "ஜே.கே" தரும் விளக்கம்

தீபம்

உலக அமைதி சாத்தியமா? - இந்திய தத்துவஞானி 'ஜே. கே' தரும் விளக்கம்...

j krishnamurti philosophy for world peace Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 03 Jun 2026, 6:00 pm

Deepam strip

முதல் உலகப் போர் 1914 முதல் 1918 வரை நடந்தது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இரண்டாவது உலகப் போர் 1939 முதல் 1945 வரை நடந்தது.

இந்த இரண்டு உலகப் போர்களின் மூலம் சுமார் 2 கோடி மக்கள் உயிரிழந்தார்கள்.

இதன் முலம் நாம் கற்று எடுக்க வேண்டிய தேவைகள் அதிகமாக இருக்கின்றன.

இப்போது ...

இஸ்ரேல்.. பாலஸ்தினம்,

இஸ்ரேல்.. லெபனான்,

ரஷ்யா.. உக்ரைன்,

அமெரிக்கா.. ஈரான் என பல போர்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

இந்த உலகத்தில் யாரும், யாருடைய உதவி-யையும் நாடாமல் இருக்க முடியும் என்றால், யாரும் யாருடனும் பேச வேண்டிய அவசியம் இருக்காது!

அப்படி பேச்சுக்கே இடமில்லாத போது அமைதி என்பது எளிதாக கிடைத்துவிடும் இல்லையா?

இப்படித்தான் அமைதியை நாம் அடைய வேண்டி இருக்குமா?

உலகில் எல்லோருமே பேசித்தான் காரி-யத்தை முடிக்க வேண்டி இருக்கிறது.

மனிதனுடைய தேவைகள் இருக்க தானே செய்கின்றன?

அவற்றைப் பெற அவன் பேசத்தான் செய்கி-றான்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும், இந்த பிரபஞ்சத்தின் ஒரு அங்கமாக நினைத்தால், நம்மிடையே ஒரு நல்ல தீர்வு காண 'பாதை இல்லாத பாதையை' அமைக்க முடியும்!!!

இந்திய தத்துவஞானி 'ஜே. கே' என்று அழைக்கப்படும் ஜே. கிருஷ்ணமூர்த்தி தன் முன்னெடுப்புகளை இவ்வாறாக கூறுகிறார்.....(j krishnamurti philosophy for world peace)



J Krishnamurti Philosophy of World peace

நாம் சிறுவயதில் இருந்து சில கற்பிதங்களை கற்றுக்கொண்டு அதற்கு அடிபணிந்து நடக்கிறோம். அதனால் ஏற்படக்கூடிய 'பயம்'

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நம்முடைய சுயத்தை முன்னெடுக்காமல் நம்முடைய சுயநலத்தை முன்னெடுக்கிறது.

இதன் விளைவு பணம், புகழ், ஆசை ஆகிய மூன்று காரணிகளால் படிப்பு நம் சமுதாயத்தை ஒருங்கிணைக்காமல் ஓரங்கட்டுகிறது.

நாம் பிறரை 'மதிக்க வேண்டும்' என்கிற சமூக ஒழுக்கம் மாறி, 'போலித்தன்மை', 'பாசாங்கு' ஆகியவை கல்வி என்கிற பெயரில் விற்கப்படுவதால், அதையே நாம் விழுமியங்களாக பின்பற்றி நம்முடைய கட்டமைப்பை ஒழுங்கினமாக ஆக்கி வைத்துள்ளோம்.

எங்கே 'பயம்' இருக்கிறதோ அங்கே நம் முன் முடிவுகள் (presumption) பிரதானப்படுத்தப்பட்டு, அதன் மூலம் 'பிளவுகள்', 'உட் பிளவுகள்' என நம் சமுதாயமானது பல கூறுகளால் – மதத்தால், மொழியால், இனத்தால், பிராந்தியத்தால் – பிளவுபட காரணமாக இருக்கிறது.

J. கிருஷ்ணமூர்த்தி ஒரு
இருத்தலியல்வாதி.

அவர் தன் இருத்தலியல் வாதத்தை இவ்வாறு முன் மொழிகிறார்....

நாம் இந்த பிரபஞ்சத்தின் ஒரு அங்கம்; இந்த உலகத்தில் ஒரு குடிமகன் என்று நினைப்பு வரும்போது அங்கே தேசம் சார்ந்த சிந்தனைகள் அற்றுப் போகும்.

நம் தேவைக்காக பேசுகிறோம். அதற்கு ஒரு

அடையாளம் மொழி. அடையாளம் நம்மை அழித்து விடக்கூடாது. நம்முடைய உணர்ச்சிகள் உணர்வுகளை மதித்து செயல்படும் போது மொழியானது ஒரு பயன்பாட்டு பொருளாக மாறும். மொழிப் பிரச்சனைகள் தீரும்.

மதம் சார்ந்த கோட்பாடுகள் நம் ‘சிந்தனை சிறகுகளை’ வெட்டி நம்மைப் பறக்க விடாமல் தடுக்கின்றன.

நம்முடைய ‘கோட்பாடுகள்’ நம்முடைய முன்னேற்றத்திற்கு பெரும் ‘தடை கற்களாக’ இருக்கினறன.

நம்முடைய ‘கல்வி’, அறிவு சார்ந்து இயங்குகிறது. அது ‘இதயம்’ சார்ந்து இயங்க வேண்டும்.

அறிவு சார்ந்து இயங்குவதால் அது அலட்சியத்தையும், அதிகாரத்தையும் வலியுறுத்துவதாக இருக்கிறது.

எப்போது நம்முடைய ‘மனம்’, ‘உடம்பு’ மற்றும் ‘ஆன்மா’ ஒன்று சேர நாம் வழி வகுக்கிறோமோ, அப்போதுதான் நாம் அமைதியான வாழ்க்கையை முன்னெடுக்க முடியும்.

பார்வையாளனும், பார்க்கப்படுபவனும் (observer and the observed) ஒன்றாக கலந்து அது மறையும் போதுதான் மனிதாபிமானம் திழைக்கும். அங்கே சகோதரத்துவம் உண்டாகும்.

நாம் ‘கருத்து’ முதல் வாதத்திற்கு இடம்

கொடுக்க வேண்டும். அப்போது ‘மாற்று சிந்தனைகள்’ பிறக்கும்.

ஆசிரியர்கள் பணி என்பது ஒரு மாணாக்கனுடைய ‘திறமையை’ கண்டுபிடித்து வளர்த்து எடுப்பது.

அதை சமுதாய நலத்திற்காக பயன் அளிக்கும் வகையில் செயல் வடிவம் கொடுத்து ஊக்குவிப்பது அரசினுடைய வேலை.

எந்த மதமோ, எந்த தத்துவமோ, எந்த கோட்பாடோ ஒரு தனி மனிதனுடைய சிந்தனையை கட்டுப்படுத்தக் கூடாது.

எங்கே சுதந்திர சிந்தனை இருக்கிறதோ? அங்கே முழுமையான அறிவு வெளிப்படும்!

அதுவே உலக அமைதிக்கு (World peace) வழிகாட்டும்.

அப்போது, எல்லைகள் இல்லாத உலகம் பிறக்கும்.

இதயங்கள் விரியும் போது வார்த்தைகளுக்கு இடமே இல்லாமல் போய்விடும்.

‘உலக சகோதரத்துவம்’ நம்மை அழைக்கட்டும்!

அதுவே நம்மை வழி நடத்தட்டும்!!

போர்கள் இல்லாத உலகம் படைப்போம் !!!

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_170137
- Screenshot_2026_0730_170804

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

49.உப்பு மூட்டை விளையாட்டு முதல் ஜெயகாந்தன் தத்துவம் வரை 70S பள்ளிப் பருவ நினைவலைகள்

Motivation

உப்பு மூட்டை விளையாட்டு முதல் ஜெயகாந்தன் தத்துவம் வரை: 70s பள்ளிப் பருவ நினைவலைகள்!

சிறுவயது நினைவலைகளில் தொடங்கி, வாழ்க்கையின் ஆகச்சிறந்த தத்துவத்துடன் கதையை முடித்திருப்பது படிப்பவர்களின் மனதைத் தொடுகிறது.

Uppu Muttai AI Image

ராமன். செல்வராஜ்

d on: 08 Jun 2026, 3:04 pm

“உப்பு மூட்டை விளையாடுவதற்கு தான் நான்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உன்னை சோறு போட்டு வளர்க்கிறேனா? யார் அந்த பையன்? இதே மாதிரி நீ அவனை முதுகில் தூக்கி விளையாடுவது தெரிந்தால்; நான் வந்து உங்க பள்ளி ஆசிரியரிடம் சொல்லி உண்டு இல்லை என்று பார்த்து விடுவேன்? ஜாக்கிரதை!!” – இப்படியாக வசை பாட்டு பாடிய என் அம்மாவை இப்போது நினைத்தாலும் அந்த காட்சிகள் என் நினைவுகளில் பசுமையாக இருக்கின்றன.

வாசகர்களுக்காக; இந்த தலைமுறை GEN-Z க்களுக்காக சொல்கிறேன்.

உப்பு மூட்டை விளையாட்டு என்பது 70களில் ஒருவன் முதுகில் ஏறிக்கொண்டு எதிரே வரும் உப்பு மூட்டை சுமப்பவனிடம் எதிரும் புதிருமாக மோதிக்கொள்வது.

இதில் சுவாரஸ்யம் என்று பார்த்தால், இந்த விளையாட்டில் தடுமாறி விழுபவர்களை பார்த்து மற்ற மாணவர்கள் கேலியும், கிண்டல் செய்து சிரிப்பது தான்.

விழுவதும், மீண்டு எழுவதும், திரும்பவும் மோதிக் கொள்வதும் இந்த விளையாட்டினுடைய ஒரு அங்கம்.

இதன் மூலம் உடல் மற்றும் அணிந்திருக்கும் உடைகளில் படிந்து இருப்பது மண்வாசனை மட்டுமே!

அம்மாவிற்கு என்மீது பாசம் – எல்லா அம்மாவும் போல...

அதன் காரணமாக அப்படி சொன்னாள்.

இது அம்மாவிற்கு எப்படி தெரிந்தது? என்பதை நான் சில நாட்களில் தெரிந்து கொண்டு விட்டேன்.

அதாவது என் ‘பெரியப்பா மகள்’ நான் படித்த அதே பள்ளியில் சக மாணவியாக படித்துக் கொண்டு வந்தாள்.

இப்படி நல்லது செய்ய வந்த என் சகோதரி இடம் நான் பல நாட்கள் பேசாமல் இருந்தேன் என்பது ஒரு புறம்.

இதை நான் எப்படி என் நண்பனிடம் (நண்பன் என்று சொல்ல முடியாது; காரணம் அவன் என்னை மிரட்டி உப்பு மூட்டை சுமக்க வைத்தவன்) புரிய வைப்பது அல்லது இந்த அவஸ்தையில் இருந்து தப்பிப்பது என்பது ஒரு சவாலாக இருந்தது.

முடிவெடுத்தேன். ஒவ்வொரு இரவும் படுக்கும் முன் என் அக்குள் பகுதியில் சில வெங்காயத்தை வைத்துக்கொண்டு தூங்கினேன்.

இது காலையில் எழுந்தவுடன் என் உடலில் வெப்பத்தை அதிகரித்து பிறகு காய்ச்சலாக மாறியது.

இப்படியாக ஒரு வாரம் பள்ளிக்கு விடுப்பு எடுத்துக் கொண்டேன்.

மீண்டும் நான் பள்ளிக்கு செல்லும்போது என் உடம்பில் ‘மகமாயி’ வந்து விட்டதாகவும், ஆதலால் மற்றவரிடம் பழகும் போது தூரத்தில்

இருக்கும் படியும் மருத்துவர் சொன்னதாக பொய் சொன்னேன்.

இப்படியாக என் 'சுபாவம்' (நடிப்பு) எனக்கு ஒத்துழைத்ததால் அந்த சம்பவங்களிலிருந்து சமாளித்து வெளியேறினேன் என்பது ஒரு கதை.

இன்று நினைத்தாலும் இந்த சமாச்சாரங்களை பகிர்ந்து கொள்ள 'என் அம்மாவும் என்னுடைய உண்மையான அந்த நண்பனோ' இல்லை என்பது எனக்கு ஒரு பெரிய வெட்டவெளியை ஏற்படுத்தி இருக்கிறது.

இவ்வாறாக நாம் எல்லோரும் பல காலங்களில், பல சுமைகளை, சோதனைகளை, வேதனைகளை சுமந்து வாழ்க்கையில் போராடி வெற்றி பெற்று இருக்கிறோம்.

இதில் உண்மையான 'ரசனை' என்பது நம்முடைய அவமானங்கள் தான்.

அவை தான் நம்மை ஆழமாக சிந்திக்கவும், செயல்படவும் வைத்திருக்கிறது என்கிற உண்மையை யாராலும் மறைக்கவும் மறுக்கவும் முடியாது.

இங்கே என்னுடைய ஆசான் ஜெயகாந்தனுடைய (JK) வரிகளுடன் என் கதையை முடிக்கிறேன்.

அவமானங்கள் என்பது எல்லோருக்கும் அந்த நேரத்து நியாயங்கள்.

இதை புரிந்து கொண்டால் நாம் காலத்தோடு

கலந்து கரையாமல் கரை சேரலாம் – கால தேவனுக்கு நன்றி !
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_170938

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

50.சிறுகதை:மன்னிப்பால் மணக்கும் மனம் !!

கல்கி

சிறுகதை: மன்னிப்பால் மணக்கும் மனம்

மாணவரின் மனிதநேயத்தை கண்டு கண்கலங்கும் பேராசிரியர்: பணத்தால் அல்ல, மன்னிப்பால் மணக்கும் மனதின் மகத்துவம்

inspirational teacher Image credit: AI

ராமன். செல்வராஜ்

Updated on: 09 Jun 2026, 7:00 pm

கல்லூரி காலங்கள் முடிந்து கல்யாண காலங்கள் வந்து குடும்ப சகிதமாக வாழ்க்கை நகர்ந்து கொண்டு தான் இருக்கிறது .

அதி காலை 6.30 மணி ...அலை பேசி அழைத்தது ....சதீஷ் தம்பியா ? எப்படி இருக்க ? sorry ப்பா ?! காலையில உன்னை disturb பண்றேன்!

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கேட்பதற்கு ரொம்ப கூச்சமா இருக்கு? இருந்தாலும் பரவாயில்லை !உன்னிடம் தனியாக பேச வேண்டும்....
ஞாயிற்றுக்கிழமை இன்று .உன்னுடைய leisure time ;அதை நான் எடுத்துக் கொள்ள முயற்சிப்பதற்கு என்னை மன்னித்துவிடு!
எனக்கு ஒன்றும் புரியவில்லை !டாக்டர் நந்தகுமாரா ?என்ன ஆச்சு அவருக்கு? ஏன் இப்படி பேசுகிறார் ?என்னைப் பேசவிடாமல் இவர் தொடர்ந்து பேசுவதற்கு என்ன காரணம் ?அதுவும் அவர் என்னிடம் பேசி 5 வருடங்களுக்கு மேல் ஆகிறது; இதையெல்லாம் நான் யோசிப்பதற்குள் அவரே அலைபேசியை துண்டித்து விட்டார் .
‘நான் அவரைப் பற்றி எதுவும் விசாரிக்கவில்லை; எனக்கு அது கொஞ்சம் மனம் வருத்தமாக தான் இருக்கிறது. இருந்தாலும் திரும்ப அழைக்கலாமா ?தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன்’.
“அவருக்கு என்ன அவசரமோ ?தெரியவில்லை ; இப்படியாக என் யோசனை சென்று கொண்டிருந்தது”.
இன்றும் என் பேராசிரியர் சொன்ன அந்த பேர் உண்மைகள் தான் என் மனதில் ஆழப் பதிந்து இருக்கிறது.
யாரும் அவரை மறக்கவில்லை; அந்த அளவுக்கு மகத்தான மனிதர் தான் Dr. நந்தகு-

மார் .

1990 களில் இருந்து சென்னையில் உள்ள உள்ள ஒரு தனியார் கல்லூரியில் விரிவுரை ஆளராக தன் பணியைத் ஆரம்பித்து பிறகு doctorate வரை பெற்று H O D computer science department ல் திறம்பட நிர்வாகம் செய்து வருபவர் எங்கள் பேராசிரியர்.

நாங்கள் எப்பொழுதும் மறக்க மாட்டோம்.

அவர் கடைசி நாளான farewell party இல் சொன்னது இதுதான்

There are three methods by which you can obtain wisdom ; first one is by reflection which is noblest ;second one is by imitation which is easiest ; third one is by experience which is bitterest .

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” – இது தமிழருடைய வாழ்வியலாக 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்து வந்திருக்கிறது.

நான் ஒப்புக்கொள்கிறேன் .இதன் மூலம் நம்முடைய கலாச்சாரம், பண்பாடு மேற்கத்திய உலகத்திற்கு தெரிய வந்தது. அதையும் நாம் ஒப்புக் கொள்வோம். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற ஒரே முழக்கத்துடன் ஒரு உலகளாவிய சகோதரத்துவத்தையும், அன்பையும் போற்றி பேணிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம் .

அப்படிப்பட்ட அறம் சார்ந்த வாழ்வியலை நமக்கு திருவள்ளுவர் “திருக்குறள்” மூலம்

ஒவ்வொரு நாளும் சொல்லி நம்மை வழிநடத்-
திக் கொண்டுதான் இருக்கிறார். உண்மை-
தான்.
ஆனால் உங்களிடம் ஒரே ஒரு உண்மையை
பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். நாம்
திரவியம் தேடி அங்கே தங்கி விடாமல் நம் நாட்-
டிற்கும் நம் மக்களுக்கும் சேவை செய்யவே
உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதற்காக உங்களுடைய உழைப்பும் ஆதரவும்
மிகவும் தேவைப்படுகிறது.
இதை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு
நீங்கள் செயல்படுவீர்கள் ஆனால் அதுவே
எனக்கு செய்யக்கூடிய மாபெரும் கைமாறா-
கும் . நன்றி வணக்கம் என்று முடித்தார்
அப்படிப்பட்ட ஒரு ஆத்மாவை சந்திப்பதற்காக
“நடேசன் பூங்காவிற்கு”தயாரானேன்.
வர முடியுமா? இதைத் தவிர எனக்கு வேறு
என்ன வேலை ;எதுவாக இருந்தாலும் எங்களி-
டம் கேட்பதற்கு உங்களுக்கு எல்லாம் உரிமை-
யும் இருக்கிறது என்று நான் கூறினாலும்
அவர் கேட்பாரா !? என்பது தான் தெரிய-
வில்லை.
இந்த ஆட்டம் தான் எங்களை நிலை குழைய
வைத்தது.
ஏனென்றால் கடந்த பத்து வருடங்களாக அவர்
யாரிடமும் அதிகம் பேசவும் இல்லை. அதற்-
கான காரணம் எங்களுக்கு எல்லாம் தெரியும்;

அவரிடம் பயின்ற பல மாணவர்கள் இன்று CEO வாக கம்பெனி President ஆக பல மென்பொருள் நிறுவனங்களிலும் ,வங்கிகளிலும் உயர்ந்த பதவியில் வகித்துக் கொண்டிருக்கிறார்கள் .

அவர் எங்கள் மேல் வைத்திருந்த அக்கறை உழைப்பு எங்களுடைய தனி திறமையை கண்டு எடுத்து அவற்றை வளர்த்தெடுத்து எங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்தது அவருடைய நேர்மை தான்.

அந்த தேசப் பற்று எங்களிடம் ஒட்டிக் கொண்டதால் அவரை ஒவ்வொருவரும் எங்களுடைய தந்தையாக தான் போற்றிக் கொண்டிருக்கிறோம்.

“எந்த நேரத்திலும் எங்கள் சந்தேகங்களை 24*7 தீர்த்து வைத்த என் ஆசிரியரை நான் எப்படி எதிர் கொள்ளப் போகிறேன் என்பதை நினைக்கும் போது எனக்கு பயமாகத்தான் இருந்தது”.

அந்த வகையில் நானும் ஒரு மென்பொருள் கம்பெனியை வைத்து சென்னையில் இருந்து தொழில் புரிந்து வருகிறேன். என்னிடம் சுமார் 500 பேர் வேலை செய்கிறார்கள்.

என்னால் பண உதவி செய்ய முடியும். ஆனால் அவர் கேட்பாரா என்பது தான் தெரியவில்லை? பிறகு வேறு எதற்காக என்னை அழைக்கிறார் என்பதும் எனக்கு புரியவே இல்லை.

என் மனைவியிடம் சொன்னேன். அவளும் வருகிறேன் என்று சொன்னாள்.
அது நாகரீகமாக இருக்காது என்று நான் அதை நிராகரித்தேன்!
இப்படியாக நேரங்கள் போய்க் கொண்டே இருந்தது...
நடேசன் பூங்காவிற்கு 4.45 க்கே சென்று விட்டேன்.
சரியாக 5.30 மணிக்கு பூங்காவில் நுழைந்தார்.
நான் உடனே அவர் காலில் விழுந்து சாஷ்டாங்கமாக என் முதல் மரியாதையே செலுத்தினேன்.
என்னை ஆற தழுவி அணைத்துக் கொண்டார். அவர் கண்ணில் இருந்து நீர் தாரை தாரையாக ஊற்றியது.
என்னவென்று புரியாமல் தவித்தேன்.
பிறகு அவரே சொன்னார் ...
'சதீஷ்.... நான் ஓய்வு பெற்று விட்டேன்! என் மனைவி மக்களுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எந்த பணத் தொல்லையும் இல்லை .என்னுடைய மகன், மகளை நல்ல முறையில் கல்யாணம் செய்து விட்டேன் . பேரன், பேத்தி இருக்கிறார்கள்'.
'எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய சந்தோஷத்தை உன்னிடம் பகிர்ந்து கொள்ள தான் இன்று உன்னை அழைத்திருக்கிறேன் என்றார் '.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை !
பிறகு அவரே பேச ஆரம்பித்தார்...
“சதீஷ் நமக்கு பணம் ,பதவி வந்த பிறகு மற்றவரை மதிப்பதற்கு பதிலாக அவர்களிடம் இருந்து எதை பெறலாம் என்று கணக்கு போட்டு வாழ்க்கையில் லாபத்தை மட்டுமே குறிக்கோளாக வைத்துக் கொண்டு இருக்கும் இந்நாளில் நான் உன்னிடம் பல ஏழை மாணவர்களை வேலைக்காக அனுப்பியும் உள்ளேன்”.
‘அவர்களுடைய திறனை அதிகம் சோதிக்காமல் ,அவருடைய திறமையை நீ மேலும் பட்டையை தீட்டியது என்னை ஒரு கணம் திரும்பி பார்க்க வைத்திருக்கிறது’.
இந்த அளவிற்கு செயல்படும் ஒரு மாணவன் இருக்கிறான் என்று நான் நினைக்கும் போது இதைவிட எனக்கு ஒரு பாக்கியம் இந்த உலகத்தில் எதுவுமே இல்லை .
ஒன்று மட்டும் நிச்சயம் சதீஷ்.
இந்த உலகத்தில் பணத்தால் எதையும் வாங்கிவிடலாம் என்று நினைத்தால் அது தான் முடியாது ?
காரணம் மனம் பணத்தால்
ஆக்கப்பட்டது இல்லை !!
மாறாக அது மணப்பது மன்னிப்பில் தான்!!
“நமக்கு என்ன ஐந்து விரல்களும் ஒன்றாகவா இருக்கிறது?”

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

அவை எல்லாவற்றையும் நாம் சேர்த்து பயன்படுத்தும் போது தானே அதனுடைய முழு பயனையும் நாம் அனுபவிக்க முடிகிறது.
உன்னுடைய முயற்சி என்னை மேலும் சிந்திக்க வைத்து. உனக்கு நன்றி சொல்லத்தான் இந்த சந்திப்பு .வேற எதுவும் இல்லை.
இப்படியாக அவர் சொன்னது தான் என்னுடைய முக்தியின் ஆரம்பமாக நினைக்கிறேன். அதற்கான initiation அவர் தந்து விட்டார். இனி என்னுடைய பொறுப்பு மேலும் அதிகமாகத் தான் இருக்கிறது. அதையும் நான் உயிருள்ளவரை காப்பேன் என்று உறுதி மொழியை சொல்லி விட்டு விடைபெற்றேன்.
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_171324

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

51.அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

சிறுகதை: அமைச்சரவையில் அதிரடி மாற்றம்...!

பாதுகாப்பு அமைச்சரை நீக்கிவிட்டு கவிஞர்களை நிர்வாகத்தில் நியமித்த மன்னரின் துணிச்சலான முடிவு மற்றும் அதன் பின்னால் ஒளிந்திருக்கும் காரணங்கள் இதோ.

Tamil short story: Cabinet Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

மன்னர் தன் பாதுகாப்பு மந்திரியை அரசவைக்கு அழைத்தார்.

”மன்னரே! வணக்கம்! அழைத்தீர்கள்... காரணம் அறிய வேண்டுகிறேன்?”

”நம் பக்கத்துப் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் இன்னும் இரண்டு வருடங்களுக்குள் முடிவடையப் போகிறது. உங்களுக்கு தெரியும் அல்லவா?”

”ஆம் மன்னா நன்றாகவே தெரியும்!”

”ஆனால், எனக்குக் கிடைத்த துப்புளவின்படி சுமார் 2 லட்சம் கடலோரப் படை காவலர்கள் மாயமாக மறைந்துவிட்டதாகத் தகவல் வருகிறதே? இதற்கான காரணத்தைக் கண்டறிந்தீர்களா? இதற்கு என்ன காரணம் என்பதை எனக்கு நாளை சபையில் அறிவிக்க வேண்டும். இதை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய மிகப்பெரிய கடமையாக நான் கருதுகிறேன். உடனே அரசவையை நாளை கூட்டவும்.”

”ஆம் மன்னா அப்படியே செய்கிறேன்!” அடுத்த நாள் அவ்வாறே 10 மணிக்கு அரசவை கூடியது.

அங்கே மந்திரிகள் உட்பட மற்ற சேனாதிபதிகள், போர்த் தளபதிகள், விவசாயம் மற்றும் நீர்ப் பாசனப் பிரதிநிதிகள், தவிர பொதுநல விரும்பிகள், வெகு ஜனங்களுடைய உறுப்பினர்கள் எல்லோரும் கூடி விவாதத்திற்காகக் காத்திருந்தனர்.

அப்போது மன்னர் “நம் நாடு மூன்று பக்கமும் மலைகளால் சூழப்பட்டு இருக்கிறது. ஒரு பக்கம் கடல் எல்லைகள் சுமார் 450 கிலோமீட்டர் இருக்கின்றன. அவற்றை 3 லட்சம் பேர் பாதுகாத்து வந்தனர்.

அதில் இரண்டு லட்சம் பேர் என்ன ஆனார்கள் என்பது பற்றி தன்னுடைய பாதுகாப்பு மந்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

திரியிடம் கேட்டேன்!? அவருக்குச் சரியான விளக்கம் தரமுடியவில்லை!

அதற்காக என்னுடைய அரசாங்க கவிஞர் ‘அறிவு மதியை’ இங்கே அழைத்து உங்க-ளுக்கு நடந்ததைச் சொல்வேண்டும் என்பதற்-காக அழைக்கிறேன். அரசு சார்பாக இப்பொழுது அறிவுமதி பேசுவார்” என்றார்.

”பேரன்பும், பெரும் மதிப்பும் உடைய ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ குலோத்துங்க, ஸ்ரீ ல ஸ்ரீ குபேர வர்மனின் இளைய புதல்வர் ராஜவர்மரின் ஆணைப்படி நான் கடந்த ஒரு வருடமாக மலைப்பகுதியில் பணிபுரியும் சுமார் 2 லட்சம் போர் வீரர்களைப் பிரித்து கடலோரப் பாதுகாப்பு பணியில் அமர்த்தினோம்.

கடந்த ஒரு வருடமாக அவர்கள் கடலோரங்க-ளில் சவுக்கு மரங்களை வளர்த்து, பெரும் காடுகளாக மாற்றி உள்ளார்கள். அதனிடையே புதைக்குழிகளையும், பதுங்கு குழிகளையும் அமைத்து நம் நாட்டைக் காக்க பெரும் சேவை செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த ஒரு பெரிய பொறுப்பு எனக்கு வழங்கி என்னை கௌரவித்த என்னுடைய தெய்வத்திற்குக் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.”

பிறகு இன்னொரு ஆஸ்தான கவிஞரான ‘பிறை சூடன்’ ‘தனக்கு உளவுத்துறையில்

பணி வழங்கப்பட்டதையும், அதற்காக அவர்கள் இருவரும் புலவர்கள்போல எல்லா இடங்களையும் ஆய்வுசெய்து அதன்மூலம் பாதுகாப்பில் இருந்த மூன்று லட்சம் பேரில் 2 லட்சம் பேரைக் கடலோரப் பகுதிக்கு அனுப்பி எல்லா வேலைகளையும் முடித்ததையும்' எடுத்து உரைத்தார்.

ஆகவே, பொதுமக்களாகிய நீங்கள் கவலை இன்றி இருக்கலாம். இது நம்முடைய அரசுக்கும் அரசவைக்கும் கிடைத்த மாபெரும் ராஜதந்திரத்தினுடைய வெற்றி ஆகும்.

ஆகவே, இன்னும் 500 ஆண்டுகளுக்கு நம்முடைய கடல் மார்க்கமாக யாரும் நம் நாட்டைக் கைப்பற்றமுடியாது என்பதை பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்" என்று சூளுரைத்தார் பிறைசூடன்.

கடைசியாக அரசர் தனது உரையில்,

"மந்திரிகள் தங்களுடைய கடமையை மந்திரவாதி போன்று நினைத்துக்கொண்டு மன்னனைப் புகழ்ந்துகொண்டு இருப்பதிலேயே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கவே நான் இந்த அவையைக் கூட்டினேன்.

இந்நாள் முதல் என்னுடைய பாதுகாப்பு அமைச்சரும் வெளியுறவுத்துறை அமைச்சரும் நீக்கப்பட்டு அந்த இடத்திற்குச் சிறந்த பிரதிநிதியாக என்னுடைய ஆஸ்தான கவிஞர் அறிவு

மதியையும் அவருக்கு உதவியாக பணிபுரிய உளவுத்துறை பிறைசூடனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியை நீங்கள் இன்று பொதுமக்களுக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.”

இவ்வாறாக தன் நல்லாட்சியை நன்றாக நடத்தி மக்களுக்கும், அவர்களுடைய குறையை உடனே கேட்டறிந்து, உடனுக்குஉடன் கலைந்து மக்களின் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் மன்னருக்கு அவையில் நன்றி தெரிவிக்கப்பட்டது .

மேலும் புது செய்தியையும் வெளியிட்டார்;-

”அதாவது ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது நான்கு குழந்தைகள் பெற்றெடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

அவற்றில் ஒரு குழந்தையை விவசாயத்திற்கும், ஒரு குழந்தையைப் போர் புரிவதற்கும், ஒரு குழந்தையை வெளிநாட்டு வணிகத்துக்கும், கடைசியாக உள்ள குழந்தையைப் பெற்றோர்களைப் பாதுகாக்கவும், சமுதாயத்தைப் பேணுவதுமாக இருந்து நம் தமிழ்ச் சமூகம் மேலும் மேலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இந்த அவை உறுதிப்படுத்தி பொதுமக்களிடம் கொண்டு செல்கிறது.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_172641

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

52.சிறுகதை: வாழ்க்கை எட்டிப் பார்க்கும் தூரம் தான்!!

kalki online
முகப்பு கல்கி மங்கையர் மலர்

கல்கி

சிறுகதை: வாழ்க்கை எட்டிப் பார்க்கும் தூரம்தான்!

Happy Man - சிறுகதை AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 21 Jun 2026, 7:00 pm

Kalki Strip

நிம்மதியான உறக்கமும் வாழ்க்கை ரகசியம் தரும் மன அமைதியும்!

“கொஞ்சம் யோசிச்சோம்னா நம்ம வாழ்க்கையை நாம் சரியாக புரிந்துகொள்ளலாம்!”

THIS BOOK WAS REPRODUCED WITH PRESSBOOKS

“அப்படியா கோபி... கொஞ்சம் விளக்கமா சொல்லு?”

“அது ஒன்னும் புரியாத புதிர் கிடையாது... கேட்டுக்க? அதாவது நாம இறந்துபோனா நம்முடைய அஸ்திங்கிறது ஒரு அரை கரண்டி உப்புதான் (one tea spoon salt). அவ்வளவுதான் நம்முடைய இருப்புங்கிறது?”

“கோபி கோவிச்சுக்காம மேலே சொல்லு?”

“இதுதான் நம்முடைய இருப்பினுடைய அடையாளம். ஆனால், அந்த உப்பு மண்ணோடு மண்ணா போறதுனால அது எல்லா சுவைக்கும் காரணமா இருக்கு.

“O, I See!”

“என்ன ஆச்சரியமா பாக்குற... எட்டிப் பார்த்தா வாழ்க்கை எங்கே ஒளிந்து இருக்கு என்கிறதை கத்துக்கலாம்: அதிலிருந்து வெளி வருவதும் ஈசி.”

“அப்படியா மச்சான்... கொஞ்சம் கொஞ்சமா புரியுதுடா... மேலே சொல்லு மாப்பிளே?

“இந்த பாரு, நமக்கு ஈசி ஆக ‘வாழ்க்கை’ என்கிற அந்தச் சுவையை நாம சுவைக்கப் பிரபஞ்சம் ஒரு ஏற்பாட்டை எல்லோருக்கும் கொடுத்து வைத்துத்தான் இருக்கிறது.

அதைப் புரிஞ்சுக்கிட்டு வாழவேண்டிய ஒரு பிரபஞ்ச புரிதல் நமக்கு இருந்தா போதும்.

அதாவது, விஞ்ஞான ரீதியா நம்முடைய

THIS BOOK WAS REPRODUCED WITH PRESSBOOKS

காலமானது ஒரு நாளைக்கு 24 மணி நேரமா பிரிக்கப்பட்டு இருக்கிறது. சரியா?"

"டேய் என்னை என்ன மக்குன்னு நினைச்சியா? சொல்லு மாப்ள!"

"நம்ம தலைவர் பாணியில சொன்னா... வாழ்க்கையை எட்டு எட்டாக பிரிச்சுக்க என்று சொல்றாரு இல்லையா?"

"ஆமா... ஆமா..."

"நான் அதையும் சுருக்கி ஒரு மூணு எட்டு. அதாவது எட்டு, எட்டு, எட்டு மணி நேரமா பிரித்து செயல்பட்டா போதும்.

நாம எந்த எட்டு மணி நேரத்தில் என்ன செய்யணும்; sorry நம்ம என்ன செய்ய வேண்டாம்; அதுவே (பிரபஞ்சம்) சொல்லும்; அதுபடி நடந்தாலே போதும்."



Life Philosophy – வாழ்க்கை ரகசியம்AI Image

"டேய் நீ ஒரு தத்துவத்தை என் முன்னால நிலைநிறுத்தப் பார்க்கிறே; நல்லாவே புரியுது. எல்லாமே நல்லா நடந்தா, எல்லோருக்கும் நன்-

மைதானே. அருமையா இருக்குடா. சொல்லு! சொல்லு!”

“இதன் மூலம் நம் பிரபஞ்சத்தோட ஒட்டி, உறவாடி, வளமாக, மனமகிழ்ந்து, அகமகிழ்ந்து, ஆரவாரமிட்டு, அர்ப்பணிப்போடு, ஆனந்தமாக கொண்டாடி மகிழலாம்.
இதோ அந்தச் சூத்திரம் உங்களுக்காக...

முதல் எட்டு மணி நேரம்: ஓய்வு.

அடுத்த எட்டு மணி நேரம்; வேலை.

பிறகு வரக்கூடிய 8 மணி நேரம்: அமைதி.

ஓய்வு நேரங்களில் தூங்கவேண்டும்: அதாவது மனதிற்கு ஓய்வு கொடுக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்: அந்த நேரத்தில் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம்; தயவு செய்து reelல் மாட்டிக்கொண்டு உங்கள் real lifeஐ கெடுத்துக்கொள்ளாதீர்கள்!

அடுத்து வரக்கூடிய எட்டு மணி நேரம் என்பது நம்முடைய உடம்பிற்கான உழைக்கும் நேரம்; அந்த நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவழிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; முடிந்த அளவு பயனுள்ள வார்த்தைகளை பேசி, பழகக் கற்றுக்கொள்ளுங்கள்; மேலும், உங்களுடைய உறவுகளையும், நண்பர்களையும், தேடி அழையுங்கள்; அவர்கள் அழைப்புகளை ஏற்று மகிழுங்கள்; அவமானப்படுங்கள்; தப்பில்லை மனம் பதப்படும்; அவமானப்படுத்துபவர்களும் நம் சக மனிதர்கள்தானே?

எப்பொழுதுமே மற்ற உயிரினங்கள் நம்மை அவமானப்படுத்தாது? காரணம்! அதற்கு வேண்டியது உணவும் அதன் பிறகு அதன் சந்ததியினுடைய வாழ்க்கையும்தான்.

நாம்தான் பிறரைப் பற்றி அதிகமாக நினைத்து, பிறருக்காக வாழ்ந்து, சுயத்தை இழந்து, சுயநலமாக வாழ்ந்துபிறகு அதுவும் கெட்டு கீழ்த்தரமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் .

அவற்றைப் புறக்கணிப்பது நம்முடைய பிரபஞ்சத்தினுடைய விதி- ஏற்றுக்கொள்வோமா?

முடிந்தவரை உங்கள் பெற்றோரை, முதியோர்களை மதித்து மரியாதை செய்யுங்கள்.

'நாம் என்ன கொடுக்கிறோமோ? அவைதான் திரும்ப நமக்கு வரும்!

குடும்பத்தை பேணி காத்துக்கொள்ளுங்கள்; சமூகம் இல்லை என்றால் நாம் சின்னாபின்னமாக ஆகிவிடுவோம்; நாம் ஒரு சமூகப் பிரதி' என்பதை மறந்து விடக்கூடாது.

We are social animals; we can't live without society.

நம் சமுதாயத்தில் ஒரு கேடு என்றால், அது நமக்கும் கேடுதானே!

குறிப்பாக குடி, போதை. இவை இரண்டும் சமுதாயத்தில் இருக்கும்போது நாம் செய்யாவிட்டாலும் நம்மையும் தாக்கும்."

இந்த எளிய பிரபஞ்ச சூத்திரத்தைப் பின்பற்றுவதன் மூலம், ரீல்களுக்குள் (Reels) தொலைந்-

துபோன உங்கள் உண்மையான வாழ்க்கையை நீங்கள் மீட்டெடுப்பீர்கள். மன அழுத்தம் நீங்கி, குடும்ப உறவுகளையும் சமூகத்தையும் மதித்து, தினமும் 24 மணி நேரத்தையும் குற்ற உணர்ச்சியில்லாமல் ஆனந்தமாகக் கொண்டாடும் புதியதொரு மனப்பக்குவத்தை நீங்கள் அடைவது உறுதி.
🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_172923
- Screenshot_2026_0730_173645

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

53.அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்!!

கல்கி

சிறுகதை: அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

பணம் ஒரு பக்கம்; பாசம், நட்பு ஒரு பக்கம்; இறுதியில் வென்றது எது? ஓர் அழகான சிறுகதை.

தமிழ் கதை | Two friends meet each other Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 23 Jun 2026, 9:00 pm

கல்கி-23.06.26-

பணம் ஒரு பக்கம்; பாசம், நட்பு ஒரு பக்கம்; இறுதியில் வென்றது எது? ஓர் அழகான சிறு-கதை.

சரியாக காலை 9 மணிக்கு என் வீட்டில் ஒரு-வர் வந்து நின்றார்.

“நீங்கள் சாம்ராஜ் தானே? ஓய்வு பெற்ற நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனின் சூப்-

பர்வைசர். நான் சொல்வது கரெக்டா இருக்கும்னு நினைக்கிறேன்?

மேலும் சொல்கிறேன் நான் உங்கள் நண்பன் ஆண்டனி.

நாம ரெண்டு பேரும் டான் போஸ்கோ ஸ்கூல்ல கேகே நகரில் ஒன்றாக படிச்சோம். நாம 5, 6, 7 என 3 வருடம் படித்த பிறகு நான் சூலமேட்டுக்கு இடமாறிட்டேன். அதற்குப் பிறகு சுமார் 60 வருடங்கள் கழித்து இப்பதான் சந்திக்கிறேன்.

உங்க பிறந்தநாள் 5. 2.1962. உங்க கல்யாணம் மதுரையில் நடந்துச்சு... கல்யாண நாள் எனக்கு கரெக்டா தெரியும் 19. 9. 1989."

கையில் சூட்கேஸ் உடனும், முகத்தில் எந்த விதமான பதட்டமும் இல்லாமல் என்னைப் பற்றி தகவலை பரிமாறிக்கொண்ட அந்த நபரை என்னால் யூகிக்க முடியவில்லை.

"அதற்குள் என் மனைவி தெருவாசலில் வந்து உங்களை இவ்வளவு தூரம் விசாரித்துக் கொண்டு இருக்கிறார்... அவரை தெருவில் வைத்து பேசுவது நியாயம் இல்லை. உள்ளே வர சொல்லுங்கள்," என்றாள்.

தமிழச்சி மரபை தமிழர் காப்பது தான் தமிழ் பண்பாடு....

அவ்வாறே, வணங்கி, "வாருங்கள்! நண்பரே1" என்றேன்.

அவர் ஆசுவாசமாக, எங்கள் வீட்டு ஹாலில்

உட்கார்ந்து கொண்டு, காலை என்பதால், நாங்கள் அன்புடன் அளித்த கும்பகோணம் டிகிரி காப்பியையும் பருகி பேச ஆரம்பித்தார்...

"என் பெயர் ஆண்டனி என்கிற ஆண்டனி ராஜ். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள்; இருவரும் கல்யாணம் ஆகி இப்போது சென்னையில் தனி வீடு கட்டிக் கொண்டு சுகபோகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் எனக்கு எந்த குறைபாடுகளையும் வைக்கவில்லை...."

என்னுடைய மைண்ட் வாய்ஸ் வேறு வகையாக பேச ஆரம்பித்தது...

சென்னையிலேயே இரண்டு மகள்கள் இருக்கும்போது ஏன் என் வீடு தேடி வர வேண்டும் ?

இருவரும், "முதலில் குளித்துவிட்டு இளைப்பாரி சாப்பிடும்போது மற்றவற்றையெல்லாம் ஆசுவாசமாக பேசிக் கொள்ளலாம்" என்று சேர்ந்து சொன்னோம்.

அருமையான சிக்கன் 65, ஆட்டுக்கறி சூப், ஐஸ்கிரீம் உடன் என் மனைவி காலை உணவை அன்பாக பரிமாறி, வந்த விருந்தாளிக்கு ஒரு வியப்பை ஏற்படுத்தினாள்....

"இப்படியான உணவை நான் சாப்பிட்டு சுமார் 10 வருடங்கள் ஆகிறது," என்று சொன்னபோது என் மனைவி என்னை பார்த்து ஒரு

ஏளனப் பார்வை பார்த்தது என்னால் மறக்கவே முடியவில்லை.

இப்படித்தான் நாம் பலமுறை நம்முடைய கையாலாகாத தனத்தை வரும் விருந்தாளிக்கு விட்டுவிட்டு அபத்தமாக காட்சியளிக்கிறோம். எல்லாம் அவன் செயல் என்று விட்டுவிட்டேன்.

நண்பர் பேசும்போது “நான் காஷ்மீரில் படிக்கத் தொடங்கினேன்: என்னுடைய அப்பா ஒரு ஆர்மியில் ஒரு lieutenant general.

பிறகு என்னுடைய ஆர்வம் காரணமாக கோயம்புத்தூர் அக்ரிகல்சுரல் காலேஜில் சேர்ந்து பட்டம் பெற்றேன்.

பிறகு தரமணி சுவாமிநாதன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜியில் விஞ்ஞானியாக பணியாற்றி அவருடைய கனவு திட்டமான ‘பசுமை இந்தியா’ படைப்பதற்கு உறுதுணையாக இருந்து பல நாடுகளுக்கு பயணப்பட்டு இப்பொழுது எந்த குறையும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

சாம்ராஜ், கடவுள் எனக்கு ஒரே ஒரு குறையை வைத்து விட்டார்...”

“என்ன நண்பரே?”

“என் மனைவி 50 வயது இருக்கும் போது மாரடைப்பால் உயிரிழந்து விட்டாள். அந்த சோகத்தில் இருந்து மீளவே எனக்கு ஐந்து வருடங்கள் ஆனது.

எப்படியோ என் பிள்ளைகள் இருவரையும் நன்றாக படிக்க வைத்து கல்யாணமும் செய்து விட்டேன். மேலும், சாம்ராஜ் நான் நன்றாக prayer mass conduct செய்வேன்," என்று சொன்னார்.

உங்கள் வீட்டில் நான் இதை மேற்கொள்ள போகிறேன். இவ்வாறு சொன்னதும் என் மனைவிக்கு தலை சுற்றியது. அவளுடைய மைண்ட் வாய்ஸ்யை என்னால் கேட்க முடிந்தது.

"நண்பர் என்று சொல்கிறார்; எவ்வளவு நாள் இருக்கப் போகிறார் என்று சொல்லவில்லை; அதற்குள் பல புரோக்ராம்களை போட்டுக் கொண்டே போகிறாரே!

நாமும் தான் இரண்டு பெண் குழந்தைகளுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்தோம்.

அவர்களுடைய தயவில் நாம் வாழாவிட்டாலும் நம்முடைய பென்ஷன், நம்முடைய மெடிக்கல் எக்ஸ்பன்சஸ் மற்றும் இதர செலவுகளுக்கு சரியாக இருக்கிறது.

இப்படி திடீர் செலவு வந்தால் நம் பட்ஜெட்டில் பலவற்றை இழக்க நேரிடும்" என்று முணு முணுத்தாள்.

என்னதான் இருந்தாலும் பார்ப்பதற்கு நேர்மையாகவும், பழகுவதற்கு இனிமையாகவும் இருக்கிறார்...

"அவர் நம்முடைய குடும்பம் நன்றாக இருக்க

வேண்டும் என்பதற்கு தானே வீட்டில் ஒரு கூட்டுப் பிரார்த்தனை செய்கிறார்," என்று நான் என் மனைவியை சமாதானப்படுத்தினேன்.

"போதும்.. போதும்.. உங்களுடைய சமத்துத்தனம்! அவரை சீக்கிரம் கவனித்து அனுப்புவதற்கு வழியை பாருங்கள்!" என்று அவர் படுத்துக்கொண்டதும் என்னிடம் கூறியது எனக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

கடந்த மூன்று தினங்களாக அவருடைய கூட்டுப் பிரார்த்தனையில் எங்களுடைய மனம் லயித்துத்தான் போனது.

என் மனைவியும் எந்த குறையும் இல்லாமல் தினமும் மட்டன், பிரைடு ரைஸ் என்று அசத்திக் கொண்டுதான் இருந்தாள்.

இன்னும் ஒரு நாள் அவருடைய தங்குதல் அதிகமானால் அது நம்முடைய வருமானத்தில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதை நானும் உணராமல் இல்லை.

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு...'

திருவள்ளுவர் எனக்கு அடிக்கடி பாடம் எடுத்துக் கொண்டு தான் இருந்தார்.

திடீரென்று நான்காவது நாள் தன் சூட்கேஸை மூடி தன்னுடைய கிளம்புதல் அறிகுறியை தென்படுத்தினார்.

அது எங்களுக்கு ஒரு சங்கடமாகத்தான் இருந்தது.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

திடீரென்று ஒரு கவரை எடுத்து, 'கர்த்தர் கருணையால் உங்கள் வாழ்க்கையில் எல்லா வகையான அமைதியும் கிட்டட்டும்' என்று எழுதி அதில் ஒரு செக்கை எடுத்து வைத்ததை நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தோம்.

தமிழ் கதை | Two friends Two friends say goodbye to each other Image credit: AI Image

காலையில் அமைதியாக எங்களிடம் இருந்து விடைபெறும் போது மீண்டும் ஒரு பிரார்த்தனை செய்து "இப்படியான ஒரு குடும்பத்தில் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாத அன்பும் அக்கறையும் என் மனைவி இறந்தவுடன் எனக்கு கிடைக்கவில்லை; அது கர்த்தரால் இன்று நிறைவேறியது. நன்றி." என்று கூறி தன் வீட்டு விலாசத்தையும் அறிவித்துவிட்டு அவசியம் கோயம்புத்தூர் வரும்படி சொல்லிவிட்டு சென்றார்.அவர் சென்று கொண்டிருந்த பாதையை இருவருமாக பார்த்துக் கொண்டே இருந்தோம்.

எங்கள் மனதில் கவரும், அதில் உள்ள செக்கும் அடிக்கடி வராமல் இல்லை! அதில் ரூபாய் பத்தாயிரம் என்று இருந்ததைப் பார்த்து மனம் மகிழ்ச்சி அடைவதை விட மிகவும் குன்றித்தான் போனது.

இப்படிப்பட்ட உன்னதமான ஆத்மாவை தவறாக நினைத்து விட்டோமே என்று?!

என்ன செய்வது; மனம் எனும் பேயை அடக்கி ஆள்வது என்பது யாராலும் முடியாது என்பது ஒரு யதார்த்தமான உண்மை தானே!!

நண்பருக்காக நாங்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறோம்.

பணம் மனிதனை பாடாய்தான் படுத்துகிறது.

எங்களிடம் குற்றமில்லை என்று தோன்றினாலும் ஏதோ ஒரு குற்றம் எங்களை குருகுருக்கத்தான் செய்கிறது.

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை; என்னை சொல்லி குற்றமில்லை; இது ஏழ்மை செய்த குற்றமடி; இது ஏழ்மை செய்த குற்றமடி.
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_173943
- Screenshot_2026_0730_174327

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

54.ஜென் தத்துவம்:வார்த்தைகளுக்கு அப்பால் வாழ்க்கையை உணரும் ரகசியம்

தீபம்

ஜென் தத்துவம்: வார்த்தைகளுக்கு அப்பால் வாழ்க்கையை உணரும் ரகசியம்!

ஜென் கோட்பாடு என்பது ஜப்பானியர்களின் வாழ்வியலை ஒட்டி உண்டான வாழ்க்கை அனுபவத்தின் தேடல்..... அதன் மூலம் அவர்கள் கண்டடைந்த ஞானம்.
அதை புரிந்துகொள்ள நமக்கு தேவை ஒரு பயன்பாட்டு மொழி ; அந்த மொழியில் அடையாளங்கள் அழிக்கப்படும் ; மாறாக அனுபவங்கள் சங்கமிக்கும் ; அங்கே காட்சிகள் காட்சிகளாக, தோற்றங்கள் தோற்றங்களாக இருக்கும்.
எளிதாக சொல்ல வேண்டுமானால் உள்ளதை உள்ளபடி காணுதல். அனுபவங்களை அனுபவங்களாக அனுபவித்தல்.
காட்சிகளையும், அனுபவங்களையும் வார்த்தைகளில் விளக்குவது ஜென்.
அகங்காரத்தை அழிக்கும் ஜென் தத்துவம்:
ஜென் ஒரு மெய்ஞான தேடல்: இதன் மூலம் ஒருவன் தன் அறிவுக்கு அப்பால்; சிந்தனைக்கு அப்பால்; தான் காண்பதை , கண்டு உணர்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். அதுவாகவே மாறுகிறான்.
இது ஒரு நிலவு ஆகாயத்தில் மிதப்பது போன்றது . இந்த மிதவைதான் அனுபவம்.
அங்கே காண்பவனும் இல்லை;
காணப்படுவதும் இல்லை;
அதுவே பௌத்தம் ;
அதுவே ஞானம் ;

அதுவே மௌனம் ;
அதுவே மொழியற்ற விஞ்ஞானம் ;
அதுவே மெய்ஞானம்.
புத்தரை நாம் எப்படி பார்த்து இருக்கிறோம்?
அமைதியாக, மௌனமாக, நிதானமாக, தியானத்தில் அமர்ந்து கொண்டு... ஆனால் அந்த மௌனத்தின் மூலம் நம்மிடையே புகுந்து ஒரு மௌனப் புரட்சி செய்து கொண்டிருக்கிறார் .
அந்த புரட்சியானது வார்த்தைகளுக்கு அப்பால் இருக்கிறது, அர்த்தங்களுக்கு அப்பால் இருக்கிறது, அனுபவங்களை நமக்கு சொல்லிக் கொண்டிருக்கிறது.....
அங்கே ஐம்புலன்களின் வெளிப்பாடு என்பது உயிர்போடு இருக்கிறது. இயற்கை போற்றப்படுகிறது; அனுபவங்கள் தொகுக்கப்படுகின்றன.

இவ்வாறாக ஜப்பானியர்கள் தங்களின் வாழ்க்கை அனுபவங்களை அவர்களுடைய ஜப்பானிய பயன்பாட்டு மொழியில் உலகத்துக்கு தந்திருக்கிற கொடை தான் ஜென் என்கிற தத்துவ ஞானத் தேடல்.
உதாரணத்திற்கு ஜென் இயற்கையை போற்றுகிறது; இயற்கையை இயற்கையாகவே காண்கிறது; அந்த அனுபவங்களை அனுபவித்து அந்த இயற்கையாகவே மாறுவது.
அப்படியான ஒரு ஜென் கவிதை :-
புல் நிசப்தமாய் அமர்ந்திருக்கிறது,

எதுவும் செய்யாமல்,
வசந்தம் வருகையில்,
தானே வளர்கிறது.
அமைதியே ஜென் கோட்பாடு
மனமே புத்தர்,
விளங்குவது எளிது,
வாழ்ந்து காட்டுவது கடினம்.
ஜென் என்பது ஒரு இயக்கம்:
இந்த இயக்கத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு தேவை ஒரு மெய்ஞ்ஞானத் தேடல்; அந்த தேடலுக்கு முடிவே கிடையாது; அது அறிவுக்கு கட்டுப்படாது; அது அந்த கணத்தில் இருக்கிறது; செயல்படுகிறது ; அவ்வளவே! அது ஒரு சுயஅனுபவத்தை விட இயற்கையை தன் ஊடகமாக கொள்கிறது . மேகம் ஆகாயத்தில் இல்லை. அது ஒரு நகர்வு. தொடர் இயக்கம்.
உதாரணத்திற்கு...
வேப்ப இலையில் ஊர்ந்து செல்லும் பூச்சி நகரவும் செய்கிறது; அதே சமயம் இலையையும் தின்கிறது.
ஜென் இயற்கை பற்றிய முன் அனுபவங்களை கடந்து, கலைந்து, புதிதாக அந்த இயக்கத்தை பார்த்து அறிய தொடங்குகிறது.
ஜென் என்பது ஒரு குழந்தை போல; ஏற்றுக்கொள்வது எளிதல்ல: அதே நேரத்தில் அது சவாலும் அல்ல.
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

ஜென் வாசகன் தன் அனுபவத்தில் வயதை இழக்கிறான். ஜென் வாசகன் தன்னைப் பற்றிய சுய பிம்பங்களை நழுவ விடுகிறான். இப்போது அவன் அருகில் ஊறும் எறும்புக்கும் அவனுக்கும் எந்த பேதமும் இல்லை.

ஜென் என்பது ஒரு எல்லையற்ற பிரபஞ்சம்:

ஜென்னில் சமூகப் பிரச்னைகள், சக மனித உறவுகள், உளவியல் சிக்கல்கள் என எதுவும் இல்லை.

அது எல்லையற்ற பிரபஞ்சமும், ஒரே ஒரு மனிதனும் மட்டுமே இருப்பதைப் போலவே சித்தரிக்கப்படுகிறது.

ஜென் எனும் மெய்ஞானம் :

ஜென் தத்துவத்தில் உணர்ச்சிகளுக்கு இடமில்லை. வீழ்ச்சி, எழுச்சி எதிலும் சமநிலை வகிக்கிறது.

இந்த மெய்ஞான தேடல் என்பது தண்ணீரில் மிதக்கும் நிலவை போன்றது. நிலா நனைவதும் இல்லை. தண்ணீர் உடைவதும் இல்லை.

உயிர்களினுடைய உன்னதம் ஜென். எளிய சொற்கள் இயற்கையுடன் ஒன்றுபட்டு உறவாடி மகிழ்வது.

அது உணர்வுபூர்வமானது.

இதுவே ஜப்பான் உடைய வழி.

ஜப்பானுடைய மொழியினுடைய எதார்த்தம்.

ஜென் வழி நடப்பதன் மூலம் நாம் இயற்-

கையை நிரந்தரமாக துணையாக காணலாம். அதற்கு நாமும் அப்படியாக மாறவேண்டும்.

இதோ ஒரு சிறு கவிதை:

நள்ளிரவு அலைகள் இல்லை,
காற்றும் இல்லை,
வெற்றுப்படகு மிதந்து கொண்டிருக்கிறது நிலவெளியில்.
இங்கே வெற்றுப்படகு என்பது அடையாளங்களை துறப்பது.
நிலவெளி என்பது பேரின்பத்தின் வெளிப்பாடு.
மெய்ஞானம் புற உலகில் இயக்க சக்திகள் ஒழிந்து போனாலும் ஒரு மிதத்தல் இருந்து கொண்டு தான் இருக்கிறது.
அந்த மிதத்தல் எளிய அனுபவம் இல்லை; மாறாக அது ஒரு பேருண்மை.
உதாரணத்திற்கு ஒரு கவிதை:
நீர்ப்பறவைகள் வருகின்றன போகின்றன;
அதன் சுவடுகள் அழிந்துபோகின்றன;
ஆனால் அவைகள் பாதைகளை

மறப்பதே இல்லை.
இதுதான் Zen.
இதுதான் ஜப்பான் மரபு.
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_174618
- Screenshot_2026_0730_174756

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

55.பரம்பொருள் என்பது என்ன?பஞ்சபூதங்களின் ரகசியமும் செயற்கை நுண்ணறிவு எழுச்சியும்!!

தீபம்

பரம்பொருள் என்பது என்ன? பஞ்சபூதங்களின் ரகசியமும் செயற்கை நுண்ணறிவின் எழுச்சியும்!

Spiritual Awakening, - பரம்பொருள் ரகசியம் AI Image

ராமன். செல்வராஜ்

d on: 29 Jun 2026, 6:45 pm

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

தீபம்
பரம்பொருள் என்பது என்ன? பஞ்சபூதங்களின் ரகசியமும் செயற்கை நுண்ணறிவின் எழுச்சியும்!
பஞ்சபூதங்களின் வழியே வெளிப்படும் பரம்பொருள் ரகசியம்:
“பரம்பொருள் என்னும் ஞானக்கண்ணாடி”...
எங்கே “பொறுமை” இருக்கிறதோ அங்கே “பெருமை” வந்து சேரும்.
அந்தப் பெருமையானது நம்மை சிறுமைப்படுத்தாமல் பொருளை ஆதாரமாகக்கொண்டு செயல்படும்.
அந்தப் பொருள் முதல் வாதமே பரம்பொருளை அறியத் தோன்றிய ஒரு வாதமாக கொள்ளப்படுகிறது.
அதாவது இந்த உலகில் ‘எல்லா உயிர் உள்ளவைகள், உயிர் அற்றவைகள்’ -ஆகிய இரண்டும் பொருளாகவே காணும் ஒரு தத்துவ ஞான விளக்கம்.
நாம் கண்களால் காண்கின்றோம்!
காண்பதே உணர்கின்றோம்!
உணர்வதை செயல்படுத்துகின்றோம்!
செயல்படுத்துவதை வழிபாடாக மாற்றுகிறோம்!
வழிபடுவதை “இறை சக்தியாக” கொண்டு இயங்குகிறோம்!
இருந்தாலும் நம்மால் இந்த பிரபஞ்சத்தை

புரிந்துகொள்ள முழுவதுமாக முடியவில்லை. அந்த முயற்சியை ஒரு இயக்கமாக ஒரு ஞான மார்க்கமாக ஒரு தத்துவமாக கொண்டு சென்ற மகான்கள் புத்தர்களாக, இயேசுவாக கிருஷ்ணராக, அல்லாவாக மனிதர்கள் மனதில் நீக்கமாக நிறைந்து இருக்கிறார்கள்.

இவர்கள் காட்டிய வழி என்பது மனிதர்களுடைய மாண்பை போற்றி பரம்பொருளை அறியக்கூடிய ஒரு பயணம்.

இந்த தனித்துவம் எல்லா சமயங்களிலும் இருப்பதாக கொள்ளப்படுகிறது. நாம் இயங்குவதற்கு உடல் என்கிற பொருளோடு உயிர் என்கிற மெய் சாதகமாக இருக்கிறது.

அது ஞானம் பெறவேண்டுமானால் அது வெளியில் தோன்றிய, தோன்றுகின்ற காட்சிகளை, விழுமியங்களாக கொண்டு அந்த காரணிகள் மூலம் அர்த்தங்களை கண்டுபிடித்து அந்த அற்புதமான ஆனந்தத்தை அடைய நம்மிடையே ஒரு இயக்கம்வேண்டும் என்று மகான்கள் விரும்பினார்கள்.

அவைகளே கீதையாகவும், திருக்குர் ஆனாகவும் , பைபிளாகவும் தோன்றி நம்முடைய சிக்கல்களை தீர்க்க மனதை சீர்படுத்த “நான்” என்கிற சுயத்தில் இருந்து விலகி “நாம்” என்கிற பொது நலத்தை நோக்கி செல்லக்கூடிய வழியை சொல்லிக்கொண்டு இருக்கிறது.

நாம் பிறந்து வந்த கால கண்ணாடியை சற்று

பயணித்து வருவோம்...

மனிதன் பிற உயிர்களை பழக்கப்படுத்துகிறான். பழக்கப்படுத்தி பயன்படுத்துகிறான்.

அவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் அவன் விவசாயம், வானவியல், இயல்பியல், இயக்கவியல் கற்றான்,

ஆனால் பழக்க முடியாதவற்றை அடிமைப்படுத்தினான், காட்சிப்படுத்தினான்.

அவனால் படிக்க முடியாதது மேலும் இருப்பதாக உணர்ந்தான். அந்த உணர்வே அவனை வளர்ச்சியின் உச்சத்திற்கு கொண்டு சென்றது.

மாற்றம் ஒன்றே மாறாதது அதற்கு சிறந்த உதாரணம் “தேடல்”...

தண்ணீர்

மலைகளின் மூலமும் ,மழையின் மூலமும் வரும் உயிருக்கு ஆதாரமான நீரை நதிகளாகவும், ஆறுகளாகவும் பகுத்து குளங்களிலும் ,குட்டைகளையும் உருவாக்கி அவற்றை பாதுகாத்து ஒரு பசுமை இயக்கம் உருவாக தண்ணீர் என்கிற ஒரு பயன்பாட்டுக்காரணியை வணங்கினான்.

காற்று

விசையும் ,திசையும் அறிந்து அதன் சுழற்சி மூலம் மின் இயக்கம் கண்டு மின்சாரம் படைத்தான். அதன் வெளிப்பாடே காற்றாலை. (windmill)

மண்

மண்ணால் ஆகி மண்ணால் அழியும் இந்த பூத உடலின் முழு முதல் ஆதாரம் மண்ணின் பெருமை காப்பது .அதுவே எல்லா உயிர் உள்ளவைகள், அற்றவைகள் எல்லாவற்றிற்கும் ஆதாரம்.

இது பொருள் முதல் வாதத்தின் அடி வேர்.

தீ...

தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு

திருவள்ளுவர் நமக்குச் சொன்ன "நா" அடக்கம்.

ஆனால் இதுவே தீப்பொறிபோல பரவி தீ பிழம்பாய் உருவெடுத்து மனித சமுதாயத்தில் பல பிளவுகளையும், பிரிவுகளையும் உண்டு பண்ணி நம்மை அடிமை படுத்திக் கொண்டிருக்கிறது.

அந்த தீயை தீமையிலிருந்து அகற்றி மனிதன் மாற்று சக்தியாக பயன்படுத்தி இன்று உலகளாவிய அளவில் பல பிரமிப்பு மிக்க வகையில் பல படைப்புகள் உண்டு பண்ணிவிட்டான். அது நமக்கு ஆக்க சக்தியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அணு உலைகள் இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

இதுவும் ஒரு பொருளே

காலவெளி

இந்த பொருளைக் காணமுடியாது ஆனால்

கண்டு உணரலாம்.

அவையே அனுபவங்களாக, ஆவணங்களாக, படைப்புகளாக நம்மிடைய வளம் வந்து கொண்டிருக்கிறது. அதை நம்மை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கு இல்லை.

சிறந்த உதாரணம் விஞ்ஞான வளர்ச்சி, அதற்கு இணையான உதாரணம் ஆன்மீக கிளர்ச்சி.

இந்த வளர்ச்சியும், கிளர்ச்சியும் நம்மிடையே ஏற்படுத்துகிறது “எழுச்சி”.

இன்று அந்த எழுச்சி செயற்கை நுண்ணறிவு வரை சென்று அடைய வைத்திருக்கிறது.

ஓஷோ கூறினார் நான் ஒரு வெண்மேகம்.

வள்ளலாரை ஜோதியாக காண்கிறோம்.

கிருஷ்ணரை குழந்தைகளாக காண்கிறோம்.

இயேசுவை இரக்கத்தில் காண்கிறோம்.

அல்லாவை அன்பில் காண்கிறோம்.

புத்தரை மௌனத்தில் காண்கிறோம்.

Spiritual Awakening, - பரம்பொருள் ரகசியம்   AI Image

சுயத்திலிருந்து பொதுநலத்திற்கு மாறி பரம்பொருள் ரகசியம் அறிவோம்:

எல்லாம் பொருளும், பொருளற்று போகும்போது வரக்கூடிய ஞானம் என்பது நம்மிடம்தான் தோன்ற வேண்டும்.

அது நொடிக்கு நொடி,

கணத்துக்கு கணம் காண்பது; கண்டு உணர்வது;

உணர்வதை கடத்துவது; கடத்துவதில் மகிழ்வது;

மகிழ்வதை பகிர்வது;

பகிர்வதில் உன்னதம் காண்பது;

உன்னதத்தை உலகம் முழுவதும் பரப்புவது.

இந்த உலகத்தில் இருந்து நம் உள்ளத்தை அறிந்து செயல்படும்போது அது ஒரு வழிமுறையாக, பயன்பாட்டு முறையாக, ஆன்மீக முறையாக , வாழ்வியல் முறையாக மன வளர்ச்சியை மாண்பு பெறும் மார்க்கத்தை அடைய செல்லும் வழியாக மாறி அதுவே எப்போதும் ஆதாரமாய் நம்முடைய நிலை கொண்டு இருக்கும்.

அந்த நிலை கொள்வது நம்முடைய தொடர் முயற்சி.

அது சாத்தியமாகும்போது அந்தப் நொடி பொழுதில் நாமே பரம் பொருளாக நம்மையே நாம் ஏற்றுக்கொண்டு செயல்பட வைக்கக்கூடிய ஒரு அதிசயத்தை நாம் காண்போம்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

இந்தக் கட்டுரையை வாசிப்பதன் மூலம், அன்றாட வாழ்க்கையின் பிடியிலிருந்து விடுபட்டு பிரபஞ்சத்தின் ஆழமான இயக்கப் புரிதலைப் பெறலாம். சுயநலம் என்னும் குறுகிய வட்டத்தில் இருந்து விலகி, பேரானந்த நிலையை அடைந்து, உங்களுக்குள் இருக்கும் உன்னதமான ஆன்மீகச் சக்தியை உணர்ந்து செயல்படும் மாண்பை நீங்கள் அடைவீர்கள்.
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_175121
- Screenshot_2026_0730_175852

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

56.கும்பகோணம்-கற்கள் பேசும் காவியம்;அரட்டைகளும் ,அழகியலும்

கல்கி

கும்பகோணம்: கற்கள் பேசும் காவியம் - அரட்டைகளும், அழகியலும்!

கும்பகோணம் வாழ்வியல்: அரட்டைகளும், பக்தி மற்றும் வரலாற்று அதிசயங்களும்

கும்பகோணம் | Kumbakonam   Image credit: AI Image

ராமன். செல்வராஜ்

Updated on: 01 Jul 2026, 5:20 pm

கல்கி_01.07.2026-கும்பகோணம் வாழ்வியல்: அரட்டைகளும், பக்தி மற்றும் வரலாற்று அதிசயங்களும்

Kalki Strip

எங்கள் ஊரின் சிறப்புகளை நான் பின்னோட்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

டமாக சொல்கிறேன். முதலில் எங்கள் ஊரின் உடைய கோணங்கித்தனத்தை உங்களுக்கு பகிர்வதில் எனக்கு சந்தோஷமே!

எங்கள் ஊரில் எல்லாம் அழகு. அழகுக்கு அழகு சேர்க்கும் திண்ணைகள். அதில் பேசி தீர்க்கும் பெருசுகள். அந்தக் காலம் போய்விட்டது என்று தானே நினைக்கிறீர்கள்? இல்லை; இல்லவே இல்லை! அதன் சுவடுகள்தான் எங்கள் வாழ்விற்கு சுவாரஸ்யம் கூட்டுகிறது. எங்களுக்கு காரணிகளும், விழுமியங்களும் , தேவையில்லை. காரணங்களை நாங்களே உருவாக்குவோம். விவாதம் செய்வோம். விட்டு விலகியும் விடுவோம். பாதகம் எங்களுக்கு இல்லை. இது சிரிக்க சிந்திக்க மட்டும். ‘கதி கலங்கி விடாதீர்கள் அதற்கு நான் பொறுப்பல்ல’.

கதை இங்கே தொடங்குகிறது...

“80 லட்சத்துக்கு எல்லாம் அது போகாது” இப்படியாக குரல் கேட்டு திரும்பினேன். மாலையில் எங்கள் தெருவில் உள்ள சிவகுருநாதன் செந்தமிழ் நூலகத்திற்கு சென்று வருவது என்னுடைய அன்றாட வழக்கம். அப்போது என்னுடைய மாமா மற்றும் ஒன்றுவிட்ட சகோதரர் உடன் இருந்தனர். குரல் வந்த திசையை நோக்கி எல்லோரும் திரும்பினோம்.

எதிரே எங்கள் அண்ணன்- (என்னுடைய பெரியப்பா மகன்) எப்பொழுதுமே சாரம், சங்கீதத்து-

டன் தான் தன் பேச்சை தொடங்குவார். இந்த உபமானம் (ஒப்புகை) என்னைப் பற்றியது என்பதை நான் சற்று நேரத்தில் புரிந்து கொண்டேன்.

“நம்ம பையன் கிட்ட (என்னிடம்) இந்த வீடு பற்றி விசாரிக்க சொன்னேன்? அதற்காக காலை 5:00 மணிக்கு எனக்கு அலைபேசியில் வந்து என் தூக்கத்தை கெடுத்து விட்டான்” என்று ஆரம்பித்தார்.

கும்பகோணம் | Kumbakonam Image credit: AI Image

‘அவருக்கென்ன தூங்கிவிட்டார்! அகப்பட்டவன் நான் அல்லவோ’- என்று நினைத்துக் கொண்டு, என் அண்ணனை சீண்டினேன். இதை நான் உடனே சரி செய்யவில்லை என்றால் என்னுடைய பாட்டு திண்ணாட்டம் என்பதால்!? … “அண்ணே நான் பேசியது 6.30. இப்போதுதான் காலையிலே வெயில் வந்து விடுகிறதே?” என்று எதிர் விவாதம் செய்தேன். அதை புறம் தள்ளிவிட்டு என்னுடன் பேசுவது போல என் மாமாவிடம் ஒரு செய்தி சொன்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

னார்.... “அத்தான் கேட்டாரு 72 லட்சத்துக்கு. அதற்கு ஒத்துவரவில்லை. அங்க car parking வேற இல்ல.....” என்று இழுத்தார். ஏது இங்கே தொடர்ந்து இருந்தால் இடைஞ்சல் என்று மாமா மெதுவாக சாக்குப் போக்கு சொல்லி கிளம்பி விட்டார். உடன் இருந்த என் சகோதரனும் அவசர வேலை என்று சொல்லி நழுவி விட்டான்.

மாட்டிக்கொண்ட நான் என் அண்ணனிடம் சொன்னேன். “எதுவா இருந்தாலும் பரவாயில்லை அண்ணா! பாத்துக்கலாம்! அவன் என்ன 80 லட்சம் சொல்றான். வீடு 2001ல கட்டினது. நீங்க 72 லட்சம் சொல்றீங்க.

கிடைச்சா 8 லட்சம் லாபம்ன்னு தானே எல்லாரும் பாப்பாங்க. இங்க எல்லாம் square feet 2800 ரூபாய்க்கு போகிறது. கிட்டத்தட்ட ஒரு கிரவுண்ட் இருக்கு. அதுல பாதி வீடு கட்டி இருக்கான். மேல்மாடி வேற உண்டு. என்ன செய்யறது அவன் பாடு. பேசிப் பார்க்கலாம்,” என்றேன்.

நாய்க்கு அழகு அதனுடைய அடங்காத வால். எங்கள் ஊருக்கு அழகு அரட்டைகளும்! அரட்டைகளுக்கு அடங்காத வாக்குவாதங்களும்! ஆனால் நாங்கள் சண்டைகளை சச்சரவுகளாக மாற்ற மாட்டோம். அதற்காக சமரசமும் செய்து கொள்ள மாட்டோம். மேலும் மேலும் புதிய புதிய சமாச்சாரங்கள் வரும்போது

பழையன தானாகவே கலைந்து விடும். ஒன்றுமே ஆகாதது போல் ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பது தான் எங்கள் ஊரின் உடைய மகிமை! இந்த சுவாரஸ்யம் இல்லை என்றால் எங்கள் வாழ்க்கை அலுத்து போய்விடும். இப்போது குடந்தை உடைய உண்மையான அழகை குழந்தைத் தனமாக பார்ப்போம்.

எங்கள் ஊரைப் பற்றி உலகமே அறியும்! ஆம்! கோயில்கள் நிறைந்த கோவில் நகரம். இந்தியாவிலேயே இரண்டாவதாக மனிதர்கள் அதிகமாக கூடும் “மகாமகம்” எங்கள் ஊருக்கு ஒரு அதிசயம்!

எங்கள் ஊர் ராமசாமி கோயிலில் உள்ள பிரகாரங்களில் உலகப் புகழ்பெற்ற ஓவியங்களை காணலாம்! இது ரவிவர்மாவின் ஓவியங்களுக்கு இணையானது. “நாக தோஷம்” கலைய நாகேஸ்வரர் எப்பொழுதுமே அருள் பாளித்துக் கொண்டு இருப்பார். “ராகு தோஷம்” நீங்க வேண்டுமானால் நாகேஸ்வரர் கோவிலுக்கு வாருங்கள்!

காசிக்கு செல்ல முடியவில்லை! வயதாகிவிட்டது என்று கவலைப்படுகிறீர்களா? உங்கள் கவலைக்கு எங்கள் ஊரில் காசி விஸ்வநாதர் இருக்கிறார்.

இப்படியாக ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஆதி கும்பேஸ்வரர் அவருடன் உடன் உறைந்த மங்களாம்பிகையும் குடந்தையின் பக்தி,

கலாச்சார, பண்பாடுகளை காத்துக் கொண்டிருக்கக் கூடிய அவதார புருஷர்கள். அவர்களை காண, கண்டு அருள் பெற, பல ஆயிரம் பக்தர்கள் தினமும் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். சைவ வைணவ கோயில்கள் ஏராளம்! ஏராளம்!!

முடிக்க வேண்டும் என்பதற்காக கடைசியாக ஒன்று சொல்கிறேன். கவனமாக கேளுங்கள்!?

தாராசுரம் அருகே உள்ள “ஐராதீஸ்வரர் கோயில்” இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி கழகத்தால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது ஒரு கல் சிற்பங்களின் கலைக்களஞ்சியம். இந்த கோயிலில் உள்ள மணி மண்டபத்தின் உடைய கற்களின் நிறத்தை வைத்து, காலத்தை அளந்து கொள்ளலாம்.

அது எந்த அரசர்களுடைய காலம் என்பதை துல்லிதமாக கணிக்க முடியும்! அந்த அளவிற்கு அங்கே கலாச்சார பதிவுகள் கல்வெட்டுகளாக காணப்படுகின்றன. சோழர்கால தொடங்கி, களப்பிரர் காலம், மராத்தியர் காலம், விஜயநகர காலம் என பல படிமங்கள் இங்கே உள்ளன. “மகாபாரதப் போர்” – விளக்கும் தூண்கள் நம் கலாச்சாரக் கண்ணாடிகள்!!! இவற்றையெல்லாம் பார்த்தால் நாம் உண்மையிலேயே காலங்களின் கரைகளில் கரைந்து விடுவோம்

Media Attributions

- Screenshot_2026_0730_180102
- Screenshot_2026_0730_180350

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

57.வாழ்க்கையின் மதிப்பையும், காலத்தின் அவசியத்தையும் மிக நுணுக்கமாகப் பேசும் 2 சிறுகதைகள்

கல்கி

வாழ்க்கையின் மதிப்பை உணர்த்தும் 2 கதைகள்..!

வாழ்க்கையின் மதிப்பையும், காலத்தின் அவசியத்தையும் மிக நுணுக்கமாகப் பேசும் 2 சிறுகதைகள் 1. நீதியின் குரல் 2. அந்த 21 நிமிடங்கள்....

தமிழ் கதை | Couple and a wealthy man Image credit: A

Kalki dated 05.06.2026

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வாழ்க்கையின் மதிப்பையும், காலத்தின் அவசியத்தையும் மிக நுணுக்கமாகப் பேசும் 2 சிறுகதைகள் 1. நீதியின் குரல் 2. அந்த 21 நிமிடங்கள்....

கல்கி

வாழ்க்கையின் மதிப்பை உணர்த்தும் 2 கதைகள்..!

வாழ்க்கையின் மதிப்பையும், காலத்தின் அவசியத்தையும் மிக நுணுக்கமாகப் பேசும் 2 சிறுகதைகள் 1. நீதியின் குரல் 2. அந்த 21 நிமிடங்கள்....

Kalki Strip

“நீ அடித்தாயா?”

“ஆம் அடித்தேன்”

“எதற்காக அடித்தாய்?”

“குடிக்கிறாள் அடித்தேன்!”

“குடிப்பதால் அடிப்பதா? அதற்கு உனக்கு உரிமை இருக்கிறதா?”

“ஐயா, நான் கடுமையாக வேலை செய்கிறேன்; அதற்காக குடிக்கிறேன்.”

“வேலை செய்வதற்கு ஒரு சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறாய். எல்லாம் எனக்கு தெரியும்.... தினந்தோறும் அவள் சித்திரவதை படுவதை என்னிடம் பலமுறை சொல்லி அழுது இருக்கிறாள்.

உனக்கு தெரிய வாய்ப்பில்லை தான்! காரணம் உனக்கு குடிப்பது தான் ஒரே வேலை;

ஆனால் உன்னுடைய மனைவி தினம் 7, 8 வீடுகளில் பாத்திரம், பண்டங்கள் சுத்தம் செய்து குடும்ப வருமானத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறாள்.

உன் மனைவி எங்கள் வீட்டில் வேலை செய்வது கூட உனக்கு தெரியாது. அவள் வருமானத்தில் தான் உங்கள் குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகளும் படித்துக் கொண்டிருப்பதும் எனக்கு தெரியும்.

அப்படி உழைத்து கொட்டுவதை நீ வேடிக்கை பார்த்துக்கொண்டு, அதற்கு ஒரு சித்தாந்தத்தை தேடி, அவள் குடிப்பதை நீ கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாய்?

நீ கேள்வி கேட்க வேண்டும் என்று தான் அவள் குடிப்பது போல் நான்நடிக்க சொன்னேன்!? உனக்கு உண்மையிலேயே "ரோஷம்" இருக்கிறது; அது நல்லது தான்! நான் பாராட்டுகிறேன்!

உனக்காக தினமும் சாப்பிடுவதற்கு ஆட்டுக்கால் சூப், மீன் வறுவல், மட்டன் பிரியாணியும் செய்து கொண்டிருக்கும் அவளை கொஞ்சமாவது நினைத்துப் பார். அவள் குடும்பத்திற்காக பாடு படுகிறாள்."

ஒவ்வொரு வீட்டில் உள்ள குடும்ப பெண்களுடைய உழைப்பை மதிப்பிட்டு அவர்களுக்கு என்று ஒரு ஊதியத்தை கணவரிடம் இருந்து தனியாக பெற்று அதன்மூலம் அரசு உரு-

வாக்கி உள்ள “பெண்கள் சிறப்பு சேமிப்பு கணக்கில்” மாதாமாதம் வைப்பு வைக்க வேண்டும் என்றும்; அதைப் பெற மனைவி-மார்களுக்கு மட்டும் உரிமை இருக்கிறது என்-கிற அரசு அறிக்கையை காட்டி இவ்வாறாக தன் தீர்ப்பை வழங்கினார் நீதிபதி......

இப்படி “பாசாங்கு” செய்வதற்கே உன்னு-டைய “மானம்” போய்விட்டதாக சொல்கிறாய் நீ; தினமும் குடித்துவிட்டு மானங்கெட்ட தனமான நடந்து கொண்டிருப்பதை உன்னால் எப்படி ஜீரணிக்க முடிகிறது.

நீதிபதி குடிக்கும் மகனுக்கு பத்தாயிரம் ரூபாய் அபராதமும்; அந்தத் தொகையை அவன் மனைவி பெயரில் அரசு வழிகாட்டல் படி நெறிப்படுத்த பட்ட வங்கி கணக்கில் வைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்-கப்பட்டது.

அப்படி கட்டாத பட்சத்தில் ஆறு மாதம் என்-பது ஒரு வருடமாக அவனுடைய தண்டனை அதிகப்படுத்தப்படும்.

இந்த ஆறு மாதங்களில் அவனுடைய மனை-விக்கு சிறையிலேயே தங்கி பணியாற்ற வேலையும் கொடுக்கப்படுகிறது.

குடிமகனின் மனைவி நீதிபதியை பார்த்து கும்பிட்டு வணங்கினாள்.

குடி மகனோ! இனி குடிக்க மாட்டேன்! இது சத்திய மடி தங்கம்! என்று கெஞ்சினான்!.

எது எப்படியோ, அவர்களுடைய வாழ்க்கை நல்லபடியாக அமைய நீதிபதி ஒரு முன்னுதாரணமாக இருந்திருக்கிறார் என்பது எல்லா பத்திரிக்கைகளிலும் இன்று வந்த செய்தியாக இருக்கிறது.

****

கதை 2: அந்த 21 நிமிடங்கள்....

Qatar Airways மூலமாக நியூயார்க்கில் இருந்து மும்பை மார்க்கமாக சென்னைக்கு சரியாக காலை 9.10amக்கு வந்து அடைந்தான் வசந்த். தன் தமிழ்நாட்டு பயணத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு இருந்தான். ஏனென்றால் அவனுக்கு ஒவ்வொரு மணித்துளிகளும் பணம்.

பருந்து தன் 360 டிகிரி கண்களை ம எல்லா பக்கமும் எப்படி இறைக்காகப் பார்த்துக்கொண்டிருக்குமோ அப்படியான சந்தர்ப்பங்களைப் பார்த்துப் பழகி, அதுவே தொழிலாகி இன்று உலகத்திலேயே 50 பெரிய பணக்காரர் பட்டியலில் 41-வது இடத்தைப் பிடித்திருந்தான்.

அவனைப் பொறுத்தவரையில் காலம்தான் அவனை இந்த அளவிற்கு உயர்த்தி இருக்கிறது. அந்த அளவுக்குத் தன் மீதும், தன் தொழில் மீதும் அபார நம்பிக்கை.

இது அவனுடைய உலகம். அவன் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் யாருடனும் பழகமாட்-

டான். நேர விரயம் என்பது அவருடைய அகராதியில் இருந்ததே இல்லை.

இன்று அவன் சென்னை வந்ததுகூட ஒரு வியாபாரத்திற்குத்தான். அது தன் தந்தை மூலம் தனக்கு வரவேண்டிய மவுண்ட் ரோட்டில் அமைந்துள்ள மூன்று ஹோட்டல்கள் மற்றும் தேனாம்பேட்டையில் உள்ள இரண்டு பெரிய ஜவுளி நிறுவனங்கள் மற்றும் சைதாப்பேட்டை உள்ள ஒரு மல்டிபிளக்ஸ் என எல்லாவற்றிற்கும் ஆன சொத்துகள் அவன் பெயரில் வருவதற்கு சென்னையில் ரிஜிஸ்டர் அலுவலகத்தில் சரியாக 10:30 மணிக்கு அவனுக்கான நேரங்கள் ஒதுக்கப்பட்டது.

ஆகவே, மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து அவனுடைய கார் சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள தாஜ் கிளப் ஹவுஸ் ஹோட்டலை நோக்கி பயணப்பட்டுக்கொண்டிருந்தது.

சிறிது இளைப்பாரி, அதன்பிறகு ரிஜிஸ்டர் ஆபீசுக்குச் செல்ல திட்டமிட்டு இருந்தான் .

அன்று நல்ல மழை. இதன் காரணமாக தெருக்களில் பல மரங்கள் சாய்ந்துகிடந்தன. அவை வெட்டப்பட்டு மராமத்துப் பணிகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, இவனுடைய கார் இடர்பாடுகளை மீறி ஆழ்வார்பேட்டை எல்டாம்ஸ் ரோடு வழியாக மவுண்ட் ரோடில் தான் ஓய்வெடுக்க இருந்த ஹோட்டலை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

THIS BOOK WAS PRODUCED BY NOTION PRESS BOOKS

அப்போது திடீரென்று பாதையில் ஏற்பட்ட ஒரு பள்ளம் எதிர்பாராதவிதமாக இவன் சென்ற நேரத்தில் காரை உள்வாங்கிக் கொண்டது. பிறகு ஏற்பட்ட மணல் சரிவு மற்றும் தண்ணீருடைய வீச்சு காருக்குள்ளும் மெதுவாக பாய்ந்து வந்தது. அலைபோல வந்து இறங்கிய தண்ணீர் ஆனது அவனுடைய காரை மெல்ல மெல்ல மூழ்கடித்தது...

அவன் தன்னுடைய கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான் நேரமானது 9.27am, 9.28am ,9.29am ,9.30am, 9.31am.. ஒரு சில நிமிடங்களில் என்ன நடக்க கூடாதோ அது நடந்துவிட்டது...

இப்படியாக காலை 9.10 am இருந்து 9.31am அவன் சென்னையில் உயிர் வாழ்ந்த நிமிடங்கள் 21. அந்த 21 நிமிடங்களில் அவன் 21 சிந்தனைகளை உருவாக்கி, அதன்மூலம் பல திட்டங்களைச் செயல்படுத்தத் துணிந்தவன்.

இப்படியாக தந்தையார் இறந்தபோது அவருடைய உடலைப் பார்ப்பதற்குகூட நேரம் ஒதுக்கமுடியாமல் இருந்த ஒரு ஆத்மா காலத்தின் கொடூரமான கைகளில் மாட்டிக்கொண்ட 21 நிமிடங்களில்..

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_180902

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

58.."இயல்பாய் இரு": உங்கள் வாழ்க்கையை மாற்றும் ஜென் தத்துவத்தின் மந்திரம்!

கல்கி

"இயல்பாய் இரு": உங்கள் வாழ்க்கையை மாற்றும் ஜென் தத்துவத்தின் மந்திரம்!

அறிவுக்கும் ஞானத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து, பிரபஞ்சத்தின் இயக்கத்தோடு இணைந்து வாழும் ரகசியத்தை அறியுங்கள்.

Kalki Strip-08.07.2026-அறிவுக்கும் ஞானத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து, பிரபஞ்சத்தின் இயக்கத்தோடு இணைந்து வாழும் ரகசியத்தை அறியுங்கள்.

பிரபஞ்சம் – ஒரு அற்புதம்?

பிரபஞ்சத்தை புரிந்து கொள்ள அதுவாக மாறுவதனால் மட்டுமே சாத்தியம் – ஜென் பௌத்தம்.

எனக்கு எந்த குறையும் இல்லை; நன்றாக விழித்து எழுகிறேன்; என்னைச் சுற்றி நடக்கிற எல்லா விஷயங்களும் உண்மை தான்!!

எல்லாவற்றையும் அனுபவமாக தினமும் பார்க்கிறேன்!

என் கண் முன்னே பல நூறு எறும்புகள் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

இந்த இயக்கம் தான் 'பிரபஞ்ச சக்தி'. அதற்கும் பசி உண்டு; உணவு உண்டு; உறக்கம் உண்டு; எல்லாம் உண்டு.

நம்மை போல காலத்திற்குள் எல்லாவற்றையும் முடிக்க பாடுபடுகிறது. என்ன ஒரு விந்தை!

இந்த விந்தையை நான் சரியாக புரிந்து கொள்ள முயல்கிறேன்! அப்போது எனக்கு ஒரு 'அசரீதியாக' ஒரு பதில் வந்தது!

எல்லாவற்றையும் அறிவு கொண்டு அறிவது என்பது ஞானம் அல்ல! அப்படியானால் அது எது என்று வினவினேன்? பதில் கிடைத்தது.

இயல்பாய் இரு!

இருப்பதை உணர்!

ஒவ்வொரு கணமும்; உன்னை இயக்குவது ஒரு உணர்வு!அதனுடன் உறவாடு; உணர்ச்சிக்கு ஞானத்தில் இடமில்லை.

மாறாக எல்லாமாகவும் இருப்பது! எல்லா-

வற்றையும் அவ்வாறாகவே ஏற்றுக்கொள்வது. சரி அப்படி என்றால் உயிரற்ற மலை, மண், கடல், வானம் இவற்றை எப்படி புரிந்து கொள்வது?

சரியாக சொல்ல வேண்டுமானால் உனக்கு மட்டும் தான் இயக்கம் உண்டு என்று நினைப்பது மடமை.

உன் இயக்கத்திற்கு காரணமாக இருப்பது தான் மலை. அதன் ஊடாக வருவது மழை. அதற்குக் காரணம் ஆக இருக்கின்றவை வானம், காலம், வெளி எல்லாம்.

இவை தான் உன்னை உணர்வுப்பூர்வமாக இருக்க வைத்திருக்கிறது.

உன்னுடைய அடையாளங்களை எப்பொழுது நீ மறக்க கற்றுக் கொள்கிறாயோ? அப்போதுதான் நீ மற்ற அடையாளங்களுடன் ஐக்கியமாக முடியும்.

பிரபஞ்சத்தில் உள்ள எல்லா படைப்புகளிடமும் நாம் நம் அடையாளங்களைத் துறந்து அவ்வாறாகவே மாறுவது.

இது உணர்வுபூர்வமாக சாத்தியம் என்கிறது – ஜென் பௌத்தம்.

அப்பொழுது அடையாளங்கள் அற்று ஒரு ஆனந்த பேரியக்கம் உன்னை வந்து அடையும்.

எல்லாம் ஆக மாறுவது என்பது....

உதாரணத்திற்கு நான் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறேன். அதாவது எழுதிக்

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

கொண்டிருக்கிறேன். இந்த எழுத்தின் மூலம் வாசகர்களாகிய உங்களுடன் உறவாடிக் கொண்டிருக்கிறேன்.

இதற்குக் காரணம் அறிவு!

ஞானம் அல்ல!

ஆனால், மாறாக 'தேடுவது' என்பதுதான் நம் அடையாளமாக எப்பொழுதுமே தொடர்ந்து கொண்டு இருக்க வேண்டும்.

அப்பொழுது தான் அந்த இயக்கம் முடிவில்லாத எங்கோ மலையில் பிறந்து பேரருவியாக, நதியாக மாறி தன் தொடர் பாய்ச்சல் மூலம் தன்னை மாற்றிக் கொள்ளாமல் இயங்கிக் கொண்டிருக்க முடியும்.

அப்படிப்பட்ட இயக்கமாக நீ மாறுவது தான் ஞானத்தின் உடைய முதலும் முடிவும் ஆகும்.

மாறாக உன் பாதையை மாற்றி குளமாகவும், குட்டையாகவும் நீ சேரும்போது உன்னுடைய சுயத்தை இழக்கிறாய்!

அப்பொழுது உன்னுடைய இயல்பு தன்மை மாறி சுருங்குகிறது.

சுருங்குவது அல்ல ஞானம்!

விரிந்து கொண்டே வருவது!

அவ்வாறு விரிந்து கால வழியில் அன்பை பரப்பி அந்தப் பேரன்பு பேரானந்தமாக எப்பொழுதும் வெளிப்படும்.

அப்போது உன்னுடைய இயக்கத்திற்கு எந்த

தடையும் இல்லை; நீ பிரபஞ்சத்தினுடைய ஒரு இயக்கமாகவே மாறிவிடுவாய்!!

தேவையற்ற அடையாளங்களின் பிடியிலிருந்து விடுபடுவதன் மூலம், உங்கள் வாழ்க்கை ஒரு குளத்தைப் போல தேங்கி நிற்காமல், நதியைப் போல தடையின்றிப் பாய்ந்து, புதிய வாய்ப்புகளையும் தெளிவான சிந்தனையையும் உங்களுக்கு வழங்கும்.

எல்லையற்ற இந்தத் தத்துவத்தைப் புரிந்துகொள்வதன் மூலம், வாழ்க்கையின் சவால்களைக் கண்டு அஞ்சாமல், பிரபஞ்ச இயக்கத்தின் ஒரு பகுதியாக உங்களை உணர்ந்து, எதைக் கண்டும் கலங்காத ஒரு பேரானந்த நிலையை நீங்கள் அடைவீர்கள்.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_181255

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

59.கதை எழுதுவது எப்படி? ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் ரகசிய டைரிப் பக்கங்கள்!

கலை / கலாச்சாரம்

கதை எழுதுவது எப்படி? ஒரு புகழ்பெற்ற எழுத்தாளரின் ரகசிய டைரிப் பக்கங்கள்!

எழுத்தாளரின் உழைப்பு - Creative writing Tamil

Updated on:
18 Jul 2026, 10:45 am

ஒரு எழுத்தாளரின் டைரியில் இருந்து எழுதப்-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

பட்ட இந்தக் கட்டுரை, கதைகள் எப்படி உருவாகின்றன என்ற வாசகர்களின் நீண்டநாள் சந்தேகத்துக்கு பதிலளிக்கிறது. தனிப்பட்ட உழைப்பு, தொடர்ந்து படித்தல், எழுதுதல், பயணங்களில் மனதை சீண்டும் காட்சிகள் ஆகியவை ‘ஆத்ம ராகங்கள்’ ஆக எழுத்தாக மாறும் விதத்தை, நுணுக்கமாக விளக்குகிறது.

ஒரு எழுத்தாளரின் டைரியில் இருந்து...

‘அவர் ஒரு பிரபல எழுத்தாளர்; அவருக்குத் தினமும் நிறைய கடிதங்கள் வரும். அவற்றில் பெரும்பாலானவை கதைகள் எப்படி எழுதுவது? என்பதை பற்றித்தான் இருக்கும். இதைப்பற்றி விளக்கங்களைத் தன் எழுத்துகள் மூலமும், பேச்சுகள் மூலமும் பலமுறை கூறியிருந்தாலும் வாசகர்கள் அவரிடம் இந்தக் கேள்வியே கேட்டது என்பது ஒரு வாடிக்கையாகத்தான் இருந்தது. அந்த அளவுக்கு அதில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதாகவே வாசிப்பவர் களுக்குத் தெரிந்தது.’

ஆனால், எதற்கும் சலித்துக்கொள்ளாமல்; சொன்னதையே திரும்பவும் சொல்லாமல் எழுதுபவரின் மனநிலையை எழுத்தில் இருந்து புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப அவர்களை உற்சாகப்படுத்துவது அவருடைய வழக்கம்.

அவருடைய மனைவிக்கு ஒரு சந்தேகம் வந்து-

விட்டது!

ஒருமுறை கேட்டே விட்டார்.

“என்னங்க... நமக்குக் கல்யாணம் ஆகி 33 வருடம் ஆகிறது; நானும் பார்த்துகிட்டுத்தான் இருக்கேன்; நீங்களும் மற்றவர்கள் மாதிரி அலுவலகம் செல்வதற்கு 10 மணிக்கு எல்லாம் கிளம்பிடறீங்க! சாயந்திரம் அஞ்சு மணி அளவில் வீட்டுக்கு வந்துடுறீங்க! கேட்டால் லைப்ரரிக்கு போனேன் அப்படின்னு சொல்றீங்க! சில நேரத்துல மாலையில் அஞ்சு மணிக்கு கிளம்பி நைட் 11 மணிக்கு வறீங்க! எங்க போறீங்கன்னு கேட்டா வாசகர் வட்டம், வாசகர் சாலை, வாசகர்கள் சந்திப்பு என்று பல்வேறு காரணங்களைச் சொல்றீங்க! நான் இதை ஏன் கேட்கிறேன் என்றால் என்னை எல்லா நிகழ்வுகளுக்கும் கல்யாணம் ஆகி 5 வருடங்களாக அழைத்துக்கொண்டுதான் சென்றீர்கள். குழந்தைகள் படிப்பு என்று வந்துவிட்ட பிறகு நான்தான் உங்களோடு வரவில்லை.

ஆனாலும் என்னால் உங்களை முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை? காரணம் கதைக்காக நீங்கள் ஒன்றும் யோசிப்பதாகவும் தெரியவில்லை; அதற்காக நேரம் எடுத்துக்கொண்டு தனிமையாக தனிமையில் இருப்பதற்கும் நீங்கள் விரும்புவதில்லை...”

எனக்கே இதைப்பற்றி ஒரு கட்டுரையாக

எழுதி வாசகர்களுடைய சந்தேகத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நினைத்தேன்.

சிந்திப்பதற்கு என்று நம்முடைய மனம் நேரத்தை ஒதுக்குவதில்லை.

நாம் பயணப்படும்போது நம்முடைய பார்வைகள் விரிகின்றன.

காணும் காட்சிகள் நம்மை ஆட்கொள்கின்றன.

எல்லா வகையான நிகழ்வுகளும் நம்மை கடந்துதான் செல்கின்றன.

ஆனால் எல்லாம் சில காலம்தான்.

அந்த சில காலத்திற்குள் சில நிகழ்வுகள் நம் ஆன்மாவைச் சீண்டுகின்றன.

நம் ஆன்மா நம்மை அறியாமல் நம் சிந்தனையில் ஒரு உந்துதலை ஏற்படுத்துகிறது.

இந்த உந்துதல்தான் என்னுடைய கதையில் பல பாத்திரங்களாக, பல படிமங்களாக, பல சமயங்களில் வெளிப்படுகிறது.

நீங்கள் கொண்டாடுகிறீர்கள். அதனால்நான் கொண்டாடப்படுகிறேன். நான் என் ஆன்மாவைத் தரிசிக்கிறேன்.

ஆன்மா என்று நான் சொல்லும்போது அது நம்மைவிட்டு வெளியில் உள்ள ஒரு பூதமோ அல்லது ஒரு கடவுளோ கிடையாது.

அது நம் அகத்திலேயே உள்ள ஒரு அகண்ட சக்தி. அது ஒரு பிரபஞ்ச சக்தி.

அந்தச் சக்தியை நாம் வளர்த்துக்கொள்ள

வேண்டும்
இப்படியாக ஒரு எழுத்தாளனுக்கு தேவை உழைப்பு. அந்த எழுத்தாளரின் உழைப்பு என்பது தொடர்ந்து படிப்பதில்தான் வரும். தொடர்ந்து எழுதுவதில்தான் வரும். இதுதான் அந்தச் சூத்திரம்.
அவன், தன் கதை வெளிவர வேண்டும் என்று எழுதக்கூடாது! தினமும் படிக்க வேண்டும்! தினமும் எழுத வேண்டும்!
எப்போது அவனுடைய எழுத்து ஆத்மாவிற்கு இணக்கமாக மாறி ராகமாக அவனுடைய காதுகளில் ரீங்காரமிடுகிறதோ அந்த ஒன்றை அவன் பிரசுரம் ஆவதற்கு அனுப்ப வேண்டும்.
ஆக ஒரு மனிதனுடைய creative ability பல வகையில் வெளிப்படும். அதில் ஒன்று எழுத்து.
ஒரு முன்னோடி எழுத்தாளர் "உன்னுடைய எழுத்து நன்றாகவே இருக்கிறது. நீ தனித்தனியாக உன்னுடையக் கதைகளை அனுப்புவதற்குப் பதிலாக ஒரு ஐந்து முக்கிய கதைகளை ஒருசேர அனுப்பி அந்த ஆசிரியரிடம் தொடர்ந்து தொடர்பில் இருக்கவும்" என்று எனக்கு ஆலோசனை கூறினார்.
அவர் கூறியதற்கு ஏற்ப ஒரு மாதம் கழித்து அந்த வார இதழ் ஆசிரியர் என்னிடம் தொடர்புகொண்டு அதில் இரண்டு கதைகள் தொடர்ந்து வரும் என்று கூறி என்னை உற்சாகப்படுத்தினார்.

வாசகர்களுக்காக...
ஒன்று சொல்லிக்கொள்கிறேன்.
காலத்திற்கு ஏற்ப நம்முடைய தொழில்நுட்பம் பல வசதிகளை செய்து கொடுத்தாலும், சிந்திப்பதும், செயல்படுவதும் நம்முடைய 'ஆத்மாவை' பொறுத்து அமையும் என்பதை என்னால் ஆணித்தரமாக சொல்ல முடியும்.
நான் ஏன் எழுதுகிறேன்?
எழுதுவதால் என்ன பயன்?
எழுதுவதால் எதை சாதித்தேன்?
எழுதுவது என்பது சடங்கா?
எழுதுவது என்பது கொண்டாட்டமா?
யாருக்காக எழுதுகிறோம்?
இதில் என்னால் ஒன்று மட்டும் உண்மையாக கூறமுடியும்.
நான் விரும்புகிறேன்; அதனால் எழுதுகிறேன்!
பயன்கள் வந்தடையும்போது என்னை வந்து அடைகின்றன.
நான் சாதித்தது என்பது வாசகர்களுடைய அன்பையும், ஆதரவையும்தான் .
என் எழுத்தை நான் வழிபடுகிறேன்.
அதன்படி நடக்கிறேன்.
என் பார்வை ஆனது விரிந்துகொண்டே போகிறது.
அதற்கு காரணம் என்னுடைய வாசகர்கள். அவர்களுடைய உணர்வுகளையும், உள்ளங்களையும் மதித்து நான் செயல்படுவதாக

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

நினைக்கிறேன்.

(ஒரு எழுத்தாளனின் டைரியில் இருந்து கிடைத்த தகவல்கள்)

இந்த உன்னதமான பதிவை வாசிப்பதன் மூலம், கற்பனைத் திறனை ஒரு கதையாக மாற்றுவதற்கான நிஜமான உழைப்பையும், உங்கள் அக உணர்வுகளை எழுத்தாக்கும் உந்துதலையும் நீங்கள் முழுமையாகப் புரிந்துகொள்வீர்கள். வெற்றிகரமான எழுத்தாளராக மாறுவதற்கான ஆத்மார்த்தமான சூத்திரம் உங்களுக்குக் கைக்கூடும்.

🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_181913

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

60.புத்தகம் படிக்கும் பழக்கம் எப்படி உங்களை சிறந்த மனிதராக மாற்றும்?

கல்கி

புத்தகம் படிக்கும் பழக்கம் எப்படி உங்களை சிறந்த மனிதராக மாற்றும்?

பாரதிராஜா அவர்களின் அனுபவத்தின் வழியே வாசிக்கும் பழக்கம் எவ்வாறு ஒரு மனிதனின் கவனத்தை ஒருமுகப்படுத்தி, சமுதாயப் பார்வையை மாற்றுகிறது என்பதை அறியுங்கள்.

பாரதிராஜா அவர்களின் அனுபவத்தின் வழியே வாசிக்கும் பழக்கம் எவ்வாறு ஒரு மனிதனின் கவனத்தை ஒருமுகப்படுத்தி, சமுதாயப் பார்வையை மாற்றுகிறது என்பதை அறியுங்கள்.

Kalki Strip

புத்தக பிரியர்கள் பல வகைப்படுவார்கள். அந்த வகையில் நான் கண்ட, கேள்விப்பட்ட, கண்டு உணர்ந்த புத்தகத்தை வாசித்து அதன்மூலம் வாழ்க்கையில் நிலைநிறுத்திக்கொண்ட வாசகர்களைப்பற்றி உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன்.

புத்தக வாசகர்கள் என்பவர்கள் புத்தகங்களைச் சேமிப்பவர்கள் அல்ல....

அதாவது பலருக்கு பல வகையான பழக்கங்கள் உண்டு. இதை நாம் அறிவோம். அதுபோல புத்தகங்களை பெற்று பொருள் போல் சேமிப்பது என்பது பல பேரிடம் இருக்கத்தான் செய்கிறது.

இது ஒரு சொத்து என்பதில் எந்த ஐயப்பாடும் கிடையாது. புத்தகங்களை சேகரிப்பதிலும், பாதுகாப்பதிலும் கவனமாக இருப்பவர்கள் அதைப் படிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

அவற்றை காட்சிப் பொருளாக மட்டுமே வைத்திருப்பார்கள். எந்த வகையில் முன்னேறி பிறரையும் வழிநடத்த முடியும் என்பது சந்தேகமே.

மேலும், பலர் புத்தகங்களை வாங்கியவுடன் அதில் உள்ள சாராம்சத்தைப் புரிந்துகொள்வதற்காக படிக்கத் தொடங்குவார்கள்; படிக்கத் தொடங்கியவுடன் அவர்களுக்கு அது பிடித்திருந்தால் தொடர்ந்து படிப்பார்கள்; இல்லை-

யேல் அவற்றை மூடி வைத்துவிட்டு மற்ற வேலையைப் பார்ப்பார்கள்; இந்த வகையில் இவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

மேலும், சிலர் புத்தகங்களை வாங்குவதற்கு முன் அது தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றனவாக இருக்கிறதா? என்பதை படித்தவரிடம் கேட்டு அறிந்து வாங்குபவர்கள்.

இவர்களிடம் அந்தப் புத்தகத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவும் இருக்கும்; அதை அவர்கள் பிறரிடம் பகிர்ந்துகொண்டாடுவார்கள்.

சரி இதெல்லாம் இருக்கட்டும்; ஒரு புத்தகம் என்பது நமக்கு முதலில் பிடிக்க வேண்டும்; அவ்வாறு அது நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு இருக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக படிப்பதை நாம் ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்.

பிறகு அந்த வழக்கமானது பழக்கமாக மாறவேண்டும்.

பிறகு பழக்கம் நம் பண்பாடாக மாறி, நம்முடைய கல்வியில், கலையில், கலாச்சாரத்தில் ஒன்றி உறவாடி நம்மை வாழ்நாள் முழுவதும் மகிழ்வித்து கொண்டிருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் படிப்பவர்களுக்கு இருக்க வேண்டாம்.

இயக்குனர்களின் பார்வையில் புத்தக வாசிப்பு தரும் நுணுக்கங்கள்:

இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களிடம் 'ஒரு நல்ல இயக்குனருக்கான தகுதி என்ன?' என்பது பற்றி கேட்கப்பட்டது!

அதற்கு அவர் சொல்லிய பதிலை இங்கே உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன்.

"இது இயக்குனர் ஆவதற்கான தகுதி என்பதைவிட நம் கவனத்தை எப்படி எல்லாம் நாம் ஒருமுகப்படுத்தி முன்னேறக்கூடிய ஒரு வாய்ப்பாக கருதிக்கொள்ளலாம்.

எந்த ஒரு தொழிலிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமானால் அதற்கு முதலில் நமக்கு தேவை ஒரு ஈடுபாடு. அந்த ஈடுபாடு என்பது படிப்பதில்தான் நமக்கு கிடைக்கும்."

இதைத்தான் 'பாரதி ராஜா' தன்னுடைய நேர்காணலில் தான் படித்த சிலாகித்த பல நாவல்களைக் கூறுகிறார்.

அவ்வாறு படிக்கும்போது நம்மிடையே ஒரு கவனம் நம்மைத் தொற்றிக்கொள்ளும்.

அவர் இவ்வாறு கூறுகிறார்:

நம்மைச்சுற்றி நடக்கக்கூடிய நிகழ்வுகளை நாம் உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.

அந்தக் கவனித்தல் என்பது நமக்கு சமுதாயத்தில் ஒரு ஈடுபாடு ஏற்படுத்தித் தரும்.

அந்த ஈடுபாடு பிரதிபலிக்கும்போது அது கலையாக உருவெடுக்கும்.

There is no distinction between commercial cinema and art

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

cinema.

Everything is an art.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான சுவை பிடிக்கும்.

அதை வகைப்படுத்தி பெருமை கொள்வதோ? அல்லது சிறுமை கொள்வதோ? தேவையற்றது!

ஆனால், நாம் படைக்கும் அந்தக் கலையானது சமுதாயத்தில் நல்ல ஒழுக்கத்தையும், நல்ல மேன்மையையும் கொண்டுவரக் கூடிய அளவுக்கு இருக்கவேண்டும்.

உங்களை நீங்களே முதலில் கவனித்துக்கொள்ளுங்கள்.

உங்களுடைய விருப்பம் என்ன என்பது அப்போது புரியும்.

நாம் சராசரியாக பார்க்கின்ற பல விஷயங்கள் நம் கவனக் குவியலால் பல பிரமிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்து விடும்.

ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுக்கிறான்- என்றால் ‘அவன் எதனால் அப்படி ஆனான்’ என்பதை யோசிப்பதுதான் ஒரு கலைஞனுடைய வேலை!

அவனுக்கும் ஒரு கதை இருக்கிறது. எல்லோருக்கும் ஒரு கதை இருக்கிறது.

ஒரு கதையை நாம் ஒரு சமுதாய கதையாக மாற்றும்போது அந்தப் புரிதல் ஆனது சமுதாய ஒருங்கிணைப்புக்கு உறுதுணையாக இருக்-

கும் என்பதில் நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன்.

அதனால் நான் எடுக்கும் படங்களில் violence, sex இவை மிகாமல் பார்த்துக்கொள்கிறேன்."

எந்தெந்த புத்தகங்களை படிப்பது ?

பாரதிராஜா சொல்வதுபோன்று எல்லா புத்தகங்களும் வாசிக்கப்பட வேண்டியதே!

நம்முடைய சுவைக்கு ஏற்ப நாம் புத்தகத்தைப் படித்தால் அதை நாம் உண்மையாக முழுமையாக உணர முடியும்.

புத்தக வாசிப்பில் இப்போது பல வழிகள் உள்ளன...

நாம்...

Ebooks படிக்கலாம்; Podcast வந்து விட்டது; புத்தகங்களைப் பற்றிய வீடியோஸ் இப்பொழுது youtube இல் நிறைவே படித்தவர்கள் பேசுகிறார்கள்.

Instaவில் இப்பொழுது எல்லாம் 'book recommendations ' எல்லாம் அதிகமாக பகிரப்படுகிறது.

என்னைப் பொருத்தவரை புத்தகம் என்பது அச்சு அசலாக, புத்தக வடிவில் நம் கண்முன்னே பார்த்து, பக்கங்களைப் புரட்டி, அந்த வாசத்தை உணர்ந்து, அதனுடைய நின்று, சிலாகித்து, ஒட்டி, உறவாடி பயணப்படுவதுதான்!

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

உண்மை என்னவென்றால்:-

நவீன உலகில் புத்தக வாசிப்பு தரும் ஆக்கப்பூர்வமான நன்மைகள்:

படித்தலின்போது நமக்குள்ளே கற்பனையானது மேலோங்கி எழுகிறது. அந்த “திறன்” நம்மைப் பல சமயங்களில் நம்முடைய வாழ்நாள் சோதனைகளிலும், நாம் எதிர்பாராத சிக்கல்களிலும் நமக்கு ஒரு ஆயுதமாக செயல்பட்டு நம்மை விடுவிக்கிறது.

இதை இப்படிச் சொன்னால் உங்களுக்கு புரியும் என்று நினைக்கிறேன்

Reading creates creativity in human beings. This trait if practiced continuously, would set the standard for peaceful living.

It creates solutions for the unexpected problems and unwanted situations.

பொறுமையே பெருமை! அதற்கு தேவை கவனக் கூர்மை!! இவை ஒன்றுகூடி வர படிப்போம்! அறிவார்ந்த சமுதாயம் படைப்போம்!!

இந்தப் பதிவின் மூலம், வெறும் தாள்களாக இருந்த புத்தகங்களை உங்கள் வாழ்வின் வழிகாட்டியாக மாற்றும் நுணுக்கங்களைப் பெறுவீர்கள். அன்றாட வாழ்க்கையில் குழப்பங்கள் நீங்கி, தெளிவான சிந்தனையுடனும், புதிய படைப்பாற்றலுடனும் சவால்களை எதிர்கொள்ளும் மனதிடம் உங்களுக்குக் கிடைக்கும்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

Media Attributions

- Screenshot_2026_0730_184051

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS
THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

61.சிறுகதை: புனர்ஜென்மம்!

கல்கி

சிறுகதை: புனர்ஜென்மம்!

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் ஒருவரின் மூன்று தசாப்த கால எழுத்து வாழ்க்கை, இலக்கிய தத்துவங்கள் பற்றிய சுவாரசியமான கதை

புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் ஒருவரின் மூன்று தசாப்த கால எழுத்து வாழ்க்கை, இலக்கிய தத்துவங்கள் பற்றிய சுவாரசியமான கதை...

Kalki Strip

அப்போது நான் ‘புனர்ஜென்மம்’ என்கிற மாத சஞ்சிகையில் நிருபராகப் பணியாற்றிக்கொண்டிருந்த சமயம். எனக்கான ஒரு சந்தர்ப்-

பம் கிடைத்தது. அது திருநெல்வேலியில் இருக்கும் திரு ‘காத்தாடி கணேஷ்’ என்கிற எழுத்தாளரைப்பற்றி ஒரு நேர்காணல்...

அப்போது நான் நினைக்கவில்லை அவர் பிற்காலத்தில் ‘சாகித்திய அகாதமி’ மற்றும் pulitzer prize வரை சென்று தன் புகழை தமிழ்நாட்டுக்காக வழங்க இருக்கிறார் என்பது. காரணம் என்னுடைய ஞானம் அவ்வளவே!

இப்போது அவருக்கு வயது 65. அவருடைய 30 வருடத்திற்கு முன்பான நேர்காணலைக் காண்போம்...

நான்: உங்களுடைய famous lines in prime stories ‘வாழ்க்கை என்பது அபத்தமாக இருக்கலாம். அந்த அபத்தத்திலும் ஒரு அர்த்தம் இருக்கத்தான் செய்யும்.’ சற்று விரிவாக விளக்கவும்!?

காத்தாடி: வாழ்க்கையை வாழ்ந்து விடு. வாழ்க்கையை அனுபவமாக ஆக்கிக்கொள். அந்த அனுபவத்திலிருந்து நல்ல சிந்தனை ஆனது உருவாகட்டும். அந்தச் சிந்தனை உன் செயலைச் செதுக்கும். அப்படியான ஒரு செதுக்கப்பட்ட வாழ்க்கை நீ தேர்ந்தெடுத்த வழியைச் செம்மைப்படுத்தும். அந்த வழியானது முடிவற்றது. அது ஒரு தெளிந்த நீரோடை போன்றது. அது ஒரு ‘இயக்கம்’. அதைக் ‘கண்டுகொள்’. இதுவே ‘பொருள்கோள்யியல்’ ஆகும்”.

நான்: கடவுள் இருக்கிறாரா... இல்லையா?

காத்தாடி : என்னிடத்தில் வரும் உண்மையான பதில் இதுதான். கடவுள் இருக்கட்டும். அவர் ‘அவர்’ வேலையை செய்யட்டும். நாம் இந்த பிரபஞ்சத்தில் இருக்கிறோம் என்று உணர்ந்து நம் வேலையை நாம் செய்வோம். அதற்கான வழியை நம் அனுபவத்திலிருந்து பெற்றுக்கொண்டு மீண்டும் அதை செம்மைப்படுத்த ஒரு சிறந்த வழியை அவர் மூலம் கண்டு அடைவோம்.

நான்: மறுபிறவி இருக்கிறதா? காரணம் காரியம் பற்றி நிறைய எழுதி இருக்கிறீர்கள்.. எங்களை மாதிரி எளியவர்களுக்கு உங்களுடைய பதில் ?

காத்தாடி: என்னைப் பொருத்தமட்டில் நாம் வாழ்வதே முதலும் முடியுமான ஒரு எல்லையற்ற வாழ்க்கை. ஒரு கருவியாகப் பயன்படுகிறோம். அந்தக் கருவியானது இரக்கம், இனிமை, இன்சொல் இவற்றினால் உருவாக்கப்பட்டால் நம் வாழ்க்கையானது நாம் வாழும்போதே பல பிறவிகளை எடுத்து பிறருடைய வாழ்க்கையை நம்முடையதாக ஆக்கிக்கொண்டு வாழ்ந்துவிடலாம்.

இப்போது எனக்கு வயது 55 ஐயாவுக்கு 65. மீண்டும் சந்தித்தேன்; உரையாட வாய்ப்பு கிடைத்தது .

ஒரு சுயசரிதை எழுதிக்கொண்டிருக்கிறார். அதைப்பற்றி விவாதம் தொடங்கியது...

“பேரு என்னவோ காத்தாடி கணேசன்னு சொல்றான். கதை எழுதுகிறான். இவனை நம்பி வாக்குபட்டா உன் வாழ்க்கை என்ன ஆவது ?” – இப்படி கேட்டவர்கள்தான் அதிகம் நித்யாவை நோக்கி.....

எல்லோரையும்விட அவளுடைய பெற்றோர்கள் அவள்மீது நம்பிக்கை வைத்தார்கள். காரணம் அவள் படித்தது காத்தாடியை அல்ல. மாறாக காத்தாடிக்கு உயிர் கொடுத்து, பறக்கவிட்டு, உல்லாசமாக உலாவவிட்ட அந்த ஆன்மாவான கணேஷைத்தான்!!

அவருக்கென்று குடும்பம் உண்டு. அவருடைய மகனும், மகளும் இப்போது கல்யாணமாகி அமெரிக்காவில் நல்லபடியாக வாழ்வுரிமை பெற்று வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவருடைய மனைவி ‘நித்யா’ சென்னை செயலகத்தில் செய்தி தொடர்பு துறையில் முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கிறார்.

இப்படியாக இவருடைய வருமானத்தில் தான் எல்லோருக்குமான ஒரு இடம் இவரால் கிடைத்தது என்பதை அந்தக் குடும்பம் எப்போதுமே மறந்ததில்லை.

இப்படியாக வாழ்க்கை 30 ஆண்டுகள் ஓடி உருண்டுவிட்டன.

அவருடைய பாணி என்பது ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்கள் சென்னை கன்னிமாரா மற்றும் அண்ணா நூற்றாண்டு நூல் நிலை-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

யத்திலும் படிப்பதற்காகச் செல்வார்.
வாரம் ஒரு நாள் வாசகர்களைச் சந்திப்பதற்காக, உரையாடுவதற்காக அவர் பயன்படுத்திக்கொள்வார்.
இதன்மூலம் அவருக்கு ஒரு சமுதாயப்புரிதலும் மனிதர்களுடைய மாண்பையும் அவரால் எளிதாக புரிந்துகொள்ள முடிந்தது. மீதமுள்ள நான்கு நாட்களில் இரண்டு நாட்கள் எழுத்துப் பணியில் ஈடுபடுவது என்பது இன்றியமையாதாக இருந்தது.
அவர் குடும்பத்திற்காக செலவிட்ட கணங்கள் என்பது வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே!
இதன்மூலம் அவர் தன் குடும்பத்தையும் அதன்மூலம் தன்னை வளர்த்தெடுத்த சமுதாயத்தின் மீதும் ஒரு தீராத பற்றுகொண்டிருந்தார் என்பதை தமிழ் சமுதாயம் நன்கு அறியும்.
ஒரு நாள் அவருக்கு அவருடைய பிள்ளைகள் அன்போடு அழைப்பு விடுத்தனர்.
30 வருடங்களாக உங்களுடைய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் எங்களுக்காக செலவழித்தீர்கள். மிஞ்சிய நாட்களை நீங்கள் எங்களுடன் சேர்ந்து வாழ நாங்கள் இருவரும் அழைக்கிறோம் .
இதற்கு எந்தப் பரபரப்பையும் காட்டிக்கொள்ளாமல் தன் மகன் மற்றும் மகளுக்கு நல்வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டு பதிலாக இவ்வாறு கூறியிருந்தார் .

'அதாவது நீ சொல்வது போன்று உன்னையும் உன் சகோதரனையும் வளர்த்து ஆளாக்கி படிக்க வைத்து நல்ல வேலை கிடைத்தவுடன் மணமுடித்து அனுப்பியதற்கு என்னுடன் சேர்ந்து என் துணையான நித்யாவுக்கும் பெரும் பங்கு இருக்கிறது. அவளுக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கிறது ஓய்வு பெற.
அவளுடைய பொறுப்பு அதிகமாக இருப்பதால் நான் என் எழுத்துப்பணியைக்கூட கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு அவளுக்காக வீட்டு வேலைகளை மிகவும் ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் செய்துகொண்டிருக்கிறேன். இப்போதுதான் என் வாழ்க்கை முழுமையை நோக்கி சென்றுகொண்டு இருப்பதாக உணர்கிறேன்.
ஆகவே, ஒரு வருடம் கழித்து நான் வருவதற்குள் நீங்களே ஒரு முறை வந்துவிட்டு செல்லலாம் என்பது எங்களுடைய அவா!
உங்களுடைய வாழ்க்கையில் நாங்கள் மதிப்பு கூட்டலை ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதே எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.
வாருங்கள்! வரவேற்கிறோம்! விரைவில் பிறகு வருகிறோம்!
இப்படிக்கு
காத்தாடி கணேஷ்
பின்னோட்டமாக நான் அவரைப் பற்றி புரிந்து-

கொண்டது....

வாழ்க்கை என்கிற பொருளை (அர்த்தத்தை) நாம் மற்றவரிடம் பகிர்ந்துகொள்ள எண்ணங்கள் தேவைப்படுகிறது. அந்த எண்ணங்களே எழுத்தாக மாறுகிறது. அவை சித்திரங்கள் ஆகவும், ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும், கலைகளாகவும், இசையாகவும், பாடலாகவும் மாறி நம் கலாச்சாரம், பண்பாட்டை உருவாக்குகின்றன.

பக்தி இயக்கம் இதற்கு ஒரு சான்று.

இதைத்தான் அவர் இப்போது எழுதிக்கொண்டிருக்கும் நூலான 'பொருள் கொள் இயல்' என்ற தத்துவத்தில் முன்னிலைப்படுத்தி ஒரு மகாதான படைப்பாக (magnus opus) மாற்றிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார்.

'காத்தாடி கணேஷ்' உடைய வாழ்க்கை என்பது "ஒரு காத்தாடி காற்றில் நளினமாக பறந்து, காற்றின் திசைக்கு ஏற்ப தன் வழியை மாற்றிக்கொண்டே இருக்கும்".

அந்த வகையில் மக்களுடைய நாடி நரம்புகளை அறிந்து அவர்கள் வழியில் சென்று அவர்களுக்கான வழியை அவர்களே தேர்ந்தெடுத்துகொள்வதற்கான ஒரு எழுத்துமுறையை கண்டுபிடித்தவர் என்பதில் தமிழர்களாகிய நாம் பெருமை கொள்ளலாம்.

அவர் 'புனர்ஜென்மமாக' கருதுவது – தன்னுடைய 'எழுத்துலகம் '- அது விதிக்கப்பட்டதாக

நம்புகிறார்.
🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋🖋

Media Attributions

- Screenshot_2026_0730_184358

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

62.அபத்தத்திற்கு அர்த்தம் தந்தவர்கள்!

மங்கையர் மலர்

அபத்தத்திற்கு அர்த்தம் தந்தவர்கள்!

வாழ்க்கையின் அர்த்தம் என்ன? அபத்தமும் இருத்தலியல் தத்துவமும்

இருத்தலியல் தத்துவம் | The existential philosophy of Albert Camus, Søren Kierkegaard, and Dostoevsky. AI Image

ராமன். செல்வராஜ்

ஆல்பர்ட் காம்யு, சோரன் கீர்க்கேகார்ட் மற்றும் தஸ்தயேவ்ஸ்கி ஆகியோரின் இருத்தலியல் தத்துவம் மூலம் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறியுங்கள்.

சற்று யோசித்துப் பார்த்தால் வாழ்க்கை என்பது ஒரு அபத்தமாகத்தான் தெரிகிறது.

அந்த அபத்தத்திலும் ஒரு அர்த்தத்தைத் தேடு என்பது ஆல்பர்ட் காம்யுவின் கோட்பாடாக

இருக்கிறது.

யோசித்துப் பாருங்கள்... நாம் படிக்கும்போது ஒரு கனவோடு படிக்கிறோம். அந்தக் கனவானது நிறைவேற முடியாமல் போவதற்கான சந்தர்ப்பங்களும் நிறையவே இருக்கின்றன.

இருந்தாலும் அந்தப் போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆக போராட வேண்டும். அதில் ஒரு நீதி வேண்டும். அது சமுதாய நலனுக்காக இருக்கவும் வேண்டும். அப்படியான ஒரு வாழ்க்கை வாழ்வதே வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுப்பதாக அவர் எண்ணுகிறார்.

சுருக்கமாகச் சொன்னால் “நான் ஏன் பிறந்தேன்? வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்?” போன்ற கேள்விகளுக்கு உலகம் பதில் தராத நிலையை அவர் ‘அபத்தம்’ என்று சொல்கிறார்.

மனிதன் விடாமல் அர்த்தத்தைத் தேடி வாழ வேண்டும் என்பதுதான் அவருடைய சிந்தனை மற்றும் கோட்பாடு.

இப்படியாக வாழும்போது ஒருவனுக்கு மூன்று வகையான சிக்கல்கள் வருகின்றன...

1. உடல் தற்கொலை
2. தத்துவார்த்த தற்கொலை
3. அபத்தத்தோடு வாழும் கிளர்ச்சி

இவர் மூன்றாவது நிலையைத்தான் ஆதரிக்கிறார்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

வாழ்ந்து விடு! எப்படியாவது வாழ்ந்து விடு!!

முதல் உலகப்போரிலும் இரண்டாவது உலகப் போரிலும் அவர் கண்ட காட்சிகள் அவரை பல சிக்கல்களுக்கும், துயரங்களுக்கும் ஆட்படுத்தினாலும், அவருடைய சிந்தனைகள் நம்மை வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன.

அவர் எழுதிய 'அந்நியன்' ('stranger') அல்லது 'தி பிளேக்' ('The Plague) ஆகிய நாவல்கள் வாசகர்களுக்கு பல உள்ளார்ந்த புரிதல்களை ஏற்படுத்துகின்றன.

சோரன் கீர்க்கேகார்டின் கோட்பாடும் ஆல்பர்ட் காம்யுவின் கோட்பாட்டை ஒட்டி வருகிறது.

சோரன் கீர்க்கேகார்டின் தத்துவத்தையும் மூன்று பாகங்களாக பிரிக்கலாம்.

1. தனிமனிதன்,
2. அவன் உள்ளுணர்வு தெரிவுகள்,
3. அவனுக்கும் கடவுளுக்குமான உறவு

சுருக்கமாகச் சொன்னால்... மனிதர் கூட்டமாக அல்ல, தனிப்பட்ட உள்ளமாக எப்படித் தன்னைக் கண்டுபிடிக்கிறார் என்பதில்தான் அவரது கவனம் மற்றும் தத்துவமானது விளக்கப்படுகிறது.

மனிதன் தனிமையில், தன் உள்ளக் கவலை, பயம், குற்ற உணர்வு ஆகியவற்றை எதிர்கொண்டு எடுத்துக்கொள்ளும் தீர்மானங்களினால்தான் உண்மையான 'நான்' உருவாகிறது என்று கூறுகிறார்.

அதாவது ஒரு தனி மனிதனுடைய மன எழுச்சியே – leap of faith – அவனை அர்த்தமுள்ளவனாக மாற்றுகிறது.

சொல்லப்போனால் அவனுக்கு ஏற்படக்கூடிய பயம், அச்சம், இயலாமை அதன் மூலம் ஏற்படக்கூடிய உணர்வுகள், அந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் காரணிகள், அதன் மூலம் கிடைக்கும் விழுமியங்கள் ஆகியவை எல்லாம் சேர்ந்து ஒருவருடைய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

அதே சமயத்தில் மதம் ஏற்படுத்தும் அடிமைத்தனத்தை சோரன் ஏற்கவில்லை.

மாறாக அவனே ஒரு கடவுளை தனக்குத்தானே கண்டுகொள்ள வேண்டும்.

அதற்கு மதத்தினுடைய நம்பிக்கை ஒரு மார்க்கத்தை ஏற்படுத்த வழி செய்யும்.

கடவுள்–மனிதன் உறவு நேரடி, உள்ளார்ந்த, தனிப்பட்ட தொடர்பு; மதம் என்பது சமூகச் சடங்குகளைப் பின்பற்றுவதல்ல, தனி மனிதன் உள்ளம் முழுதும் இறைவனை நோக்கிப் போராடும் ஓர் உள் பயணம் என்று அவர் வலியுறுத்துகிறார்.

‘கூட்டம்’ என்ற சமூகம் மனிதரை மந்தமாக்கி, உண்மையான நெஞ்சுரம் கொண்ட முடிவுகளை எடுக்கத் தடையாக இருக்கும்; அதற்கு மாறாக, தனிமனிதனின் நேர்மை மற்றும் உள்ளார்ந்த பொறுப்பை அவர் உயர்த்திப் பேசுகி-

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

றார்.
கடைசியாக உலகத்தினுடைய மிகச் சிறந்த எழுத்தாளரான தஸ்தயேவ்ஸ்கியின் தத்துவத்தைச் சுருக்கமாகச் சொன்னால்:
அவருடைய தத்துவத்தை நான்கு பாகங்களாக பிரித்து காணலாம்....

இருத்தலியல் தத்துவம் | The existential philosophy of Albert Camus, Søren Kierkegaard, and Dostoevsky. AI Image

1. மனிதன் முழு சுதந்திரம் கொண்டவன்;
2. அந்த சுதந்திரத்துடன் வரும் குற்ற உணர்வு, துன்பம், பொறுப்பு ஆகிய உள்ளுணர்வுகள்தான் ஒருவனை இந்த உலகத்திற்கு அடையாளம் காட்டுகிறது.
3. அந்தச் சுதந்திரமானது மனிதனை இயற்கை, சமூகம், தர்க்கம் ஆகியவற்றைக் கடந்து, தன் விருப்பப்படி முடிவு எடுக்கச் செய்யும் என்று அவர் விளக்குகிறார்.
4. அவ்வாறு எடுக்கும் முடிவுக்கு அவன் முழு பொறுப்பும் ஏற்க வேண்டும்.
தஸ்தயேவ்ஸ்கி ஒரு துன்பியல் வாதி என்றே

சொல்லிவிடலாம்...
அவருடைய ‘குற்றமும் தண்டனையும்’ இதற்கு ஒரு உதாரணம்.
மரணத்தின் விளிம்பிற்கே சென்றுவந்த தஸ்தயேவ்ஸ்கி இவ்வாறு சொல்கிறார்: ”துன்பத்தைச் சமாளிக்கும்போதுதான் மனத்தின் ஆழம், பாவ உணர்வு, மன்னிப்பு, அன்பு ஆகியவை வெளிப்படுகின்றன.”
வாழ்க்கையின் வெறுமை, மரணம் நிச்சயம், உலகம் அபத்தம் போன்ற இருத்தலியல் கேள்விகள் அவரது நாவல்களில் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன.
துயரங்களைத் தாண்டி இருத்தலியல் தத்துவம் காட்டும் வெளிச்சம்:
“வாழ்க்கை எப்படி இருக்கிறதோ அப்படியே அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்ற அணுகுமுறையால், மனிதன் வெறுமையிலும் அர்த்தம் தேடும் போராட்டமே அவரது “தத்துவம்”.
மனிதர்களில் இரண்டு வகையான பிரிவுகளைப் பார்க்கிறார்.
அசாதாரண மனிதன்- தன் இலட்சியத்திற்காக பிறரைத் துன்புறுத்தி வாழ்பவன்.
சாதாரண மனிதன் – “சரி” என்று நம்பும் எல்லா அபத்தமான எல்லைகளையும் கேள்வி கேட்காமல் அப்படியே அடிபணிந்து நடப்பவன்.
நாம் அன்பே சிவம் என்று சொல்கிறோம்.

அவரோ 'அன்பும், கருணையும்' இருக்கும் பட்சத்தில் அதையே அவர் மதமாக காண்கிறார். இவருடைய நாவல்கள் இவற்றை மையப்படுத்தியே எழுதப்பட்டிருக்கின்றன.

மேலே சொன்ன மூவரும் இருத்தலியல் (Existentialism) வாதிகள்.

ஒவ்வொருவரும் தங்களுடைய இருப்பை கண்டுகொள்ள வேண்டும். அதற்கான முயற்சியே தத்துவார்த்த புரிதல்.

"வாழ்க்கையின் தத்துவம் செயலில்தான் இருக்கிறது"

'Philosophy-in-action is more important than philosophy perse'

🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️🖋️

Media Attributions

- Screenshot_2026_0730_184718
- Screenshot_2026_0730_185001

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

63. "கேலி"யை "வேலி"யாக்கி

கல்கி

சிறுகதை: ‘கேலி’யை வேலியாக்கி...!

பள்ளியில் உருவ கேலிக்கு ஆளான மாணவன், தலைமை ஆசிரியரின் வழிகாட்டுதலில் கால்பந்தில் சாதனை படைத்து அனைவரையும் வியக்க வைத்த நெகிழ்ச்சி கதை.

தமிழ் கதை | headmaster and student AI Image

சிறுகதை: ‘கேலி’யை வேலியாக்கி....!
பள்ளியில் உருவ கேலிக்கு ஆளான மாணவன், தலைமை ஆசிரியரின் வழிகாட்டுதலில் கால்பந்தில் சாதனை படைத்து அனைவரையும் வியக்க வைத்த நெகிழ்ச்சி கதை.

தமிழ் ஆசிரியர் இன்னும் ஒரு வருடத்தில் ஓய்வுக்காக காத்திருக்கிறார். பெயர் தமிழ் இனியன். சுமார் 35 வருடங்கள் பள்ளி கல்வித்-

துறையில் அனுபவம். தலைமை ஆசிரியராக கடந்த 10 வருடங்களாக சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார். இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் விருதுகளையும், ஒருமுறை மத்திய அரசாங்கத்தின் சிறந்த ஆசிரியருக்கான விருதையும் பெற்றவர்.

அவர் தன் பணி நிறைவு முடிவதற்குள் இந்த மாணவ சமுதாயத்தை ஒரு நல்ல வரையறைக்குள் கொண்டு வர வேண்டும் என்பதற்காக பெரும்பாடு பட்டு வருகிறார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை தமிழ் ஆசிரியருடைய வீட்டிற்கு பாரியினுடைய பெற்றோர்கள் வந்தார்கள். அவர்களுடைய கவலை எல்லாம் தன் மகனுடைய படிப்பு பற்றியது அல்ல. மாறாக அவன் உருவம் மற்றும் உயரம் மற்றும் நிறம் பற்றி சக மாணவர்கள் ‘உருவ கேலி’ செய்வதை தலைமை ஆசிரியரிடம் பக்குவமாகச் சொல்லி தன் மகனுக்கு ஒரு வழியைத் தேடி வந்தார்கள்.

இப்படியான சம்பவங்கள் பள்ளிகளில் தினமும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இவற்றுக்கான வழியைச் சிந்தித்து அதற்கான ஒரு பாதையை நாம் இருக்கும்போதே செய்துவிட வேண்டும் என்பது தமிழாசிரியரான தமிழ் இனியனுக்கு குறிக்கோளாக இருந்தது.

தலைமை ஆசிரியர் ஓய்வு பெறுவதற்கு ஒரு மாதம் முன்பாக எல்லா ஆசிரியர்களுக்கும்

ஒரு விழா சம்பந்தப்பட்ட சுற்றறிக்கை வந்தது. அந்த விழாவில் தலைமை ஆசிரியர் தமிழ் இனியன் உரையாற்றினார்...
‘பாரியின் சிறந்த கால்பந்தாட்டம் மூலம் நம் பள்ளிக்குப் பேரும் புகழும் கிடைத்திருக்கிறது. மேலும், அந்தப் புகழினுடைய உயரத்திற்கு அவன் அடைந்ததாக கூறுவது அவனுடைய அவமானங்கள்.
அவமானங்களை ஏற்படுத்திய சக மாணவர்களை அவன் இதுவரை காட்டிக்கொடுக்காதது நாம் செய்த பாக்கியம் என்று கருத வேண்டும். இது ‘சமுதாய குற்றம்’ என்று தெரியாமல் சக மாணவர்கள், அவனுடைய உயரத்தையும், உருவத்தையும் , நிறத்தையும் கேலி செய்வதை ஒரு உந்துசத்தியாக கொண்டு சரியான முறையில் தன் நண்பர்களை ‘சொல்லால்’ அடிப்பதைவிட ‘பந்தால்’ அடித்து நம் பள்ளியை தமிழ்நாட்டிலேயே சிறந்த கால்பந்தாட்ட குழுவாக உருவாக்கி, மேலும் அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்று, குழு மனப்பான்மையுடன் செயல்பட்டதால் நம் பள்ளி ஆனது இந்த ஆண்டில் மாநில அளவில் நடந்த ‘உதை பந்து’ போட்டியில் முதல் இலக்கை அடைந்தது.
ஆகவே நான் மாணவர்களைவிட, அவர்களைக் கண்காணிக்கும் ஆசிரியர்களுக்கு இந்தப் புத்தகத்தை காணிக்கையாக்குகிறேன்.
பாரியினுடைய அம்மா சொல்லும்போது....

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

“ஐயா என் மகன் இப்போது +1 வகுப்பு படிக்கிறான். தமிழிலும் மற்ற பாடங்களிலும் நன்றாக படிப்பதும் மட்டுமல்லாமல் தன்னிடம் சந்தேகம் கேட்கும் வரும் மாணவர்களுக்கும் சந்தேகங்களைத் தீர்த்து வைக்கும் ஒரு தோழமையோடுகூடிய ஒரு பண்பாட்டையும் அவன் வளர்த்து வந்திருக்கிறான். ஆனால், அவனுக்கு உள்ள ஒரே தாழ்வு மனப்பான்மை என்பது தன்னை தன் சக மாணவர்களே கேலி செய்வதுதான்...”
இப்போது அவனுடைய தந்தையார் பேச ஆரம்பித்தார்...

தமிழ் கதை | Headmaster and students AI Image

“இதனை நான் உங்களிடம் குறையாக முறையிடாமல் இதற்கு ஒரு தீர்வை நீங்கள் கண்டுபிடிப்பதன் மூலம் அது சமுதாயத்திற்கு பெரும் உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்றார்.
பாரியினுடைய பெற்றோர்களைப் பாராட்டி அதற்கான தீர்வு நிச்சயம் உண்டு என்று கூறி விடை கொடுத்தார் ஆசிரியர். “உங்கள்

மகனை நான் என் மாணவன் போல் பாது-காத்து அவனுக்கான வழியை ஒரு வருடத்திற்-குள் வழங்குகிறேன்” என்றார். “நீங்கள் என்னை சந்தித்ததையோ, முறையிட்டது பற்-றியோ யாரிடமும் சொல்ல வேண்டாம்” என்-றார்.

காலங்கள் முடிந்து அவன் +2 வில் முதல் மூன்று மாணவனாக பள்ளியில் தேர்ச்சி பெற்-றான்.

இந்தப் புத்தகத்தை நீங்கள் படித்து, அதை உள்-வாங்கி, மேம்பட்ட ஒழுக்கமான மாணவர் சமு-தாயத்தை உருவாக்க வேண்டும்.

அந்த மாணவன் கடந்த இரண்டு வருடங்க-ளாக இந்தப் பேச்சுக்கும், ஏச்சுக்கும் உள்ளான-தைக் கவனிக்காத ‘சக ஆசிரியர்களை’ நான் வன்மையாக கண்டிக்கிறேன். அவனுடைய பெற்றோர்களுடைய அரவணைப்பு அதிகமாக இருந்ததால் அவன் தன் அவமானங்களை அஸ்திரமாகக்கொண்டு நமக்கெல்லாம் சவுக்-கடி கொடுத்திருக்கிறான். இந்த சவுக்கடி ஆனது நமக்கு மாலைகளையும், மரியாதை-யையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. எனவே, இந்தத் தருணத்தில் அவனைக் கௌரவப்படுத்துவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

அவன் மரடானாவை தன் தலைவனாக கொண்டான். 1986இல் தன் அர்ஜென்டினா

இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை எதிர்கொண்டது. அப்போது மரடோனா நம் சக வீரர்களை பார்த்து 1982ல் falklands warsல் நம்முடைய குடும்பத்தையும் சமூகத்தையும் சின்னாபின்னமாக்கிய இங்கிலாந்தை நாம் உதைக்கும் உதைப்பந்து மூலம் ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றார். இதுவே, அவர் அடித்த இரண்டு கோல்களில் ஒன்று கலையாகவும் மற்றொன்று காலத்தைக் கடந்தும் சொல்லப்படுகின்ற hands of God கோலாகவும் மாறியது.”

எல்லா மாணவர்களும் எழுந்து நின்று “பாரி , பாரி” என்றும் முழக்கம் இட்டனர்.

அது எட்டு திசையிலும் பரவி பிறகு ஓய்ந்தபோது ஒரு மயான அமைதி ஏற்பட்டது.

பாரி தன் தலைமை ஆசிரியரிடம் தன் பள்ளிக்கான பதக்கத்தை பெற்றான் எல்லோரும் அழுதனர். அந்த அழுகையில் பள்ளியில் மாற்றம் வந்துவிட்டது என்பது தெளிவானது.

தமிழ் இனியன் எல்லோருக்கும் பரிசாக கொடுத்த அந்த குறிப்புகள்...

1. ஆசிரியரே தன்னைப் பயில வேண்டும்.

2. கல்வி என்பது தகவல் சொல்லித் தருவது அல்ல.

3. அறிவை, விழிப்புணர்வை, சுய-ஆராய்ச்சியை எழுப்புவதுதான் கல்வி.

4. ஆசிரியர் அதிகாரியாக அல்ல.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

5. மாணவருடன் சேர்ந்து கற்றுக்கொள்பவர்-தான் ஆசிரியர்.

நடைமுறைப்படுத்தும் முக்கிய வழிகள்:

1. வகுப்பில் அச்சம், போட்டி, தண்டனை குறைத்து, திறந்த உரையாடலை ஊக்குவிக்க வேண்டும்.

2. பாடத்துடன் சேர்த்து மனநிலை, ஒழுக்கம், கவனம், கேள்வி எழுப்புதல் ஆகியவற்றையும் பயிற்றுவிக்க வேண்டும்.

3. இயற்கை, சூழல், அனுபவங்களைப் பயன்படுத்தி கற்றலை வாழ்வுடன் இணைக்க வேண்டும்

4. மாணவர் தன் எண்ணங்கள் மற்றும் நடத்தை பற்றி தானே கவனிக்கச் செய்யும் செயல்பாடுகள், தியானம், அமைதியான சிந்தனை நேரம் ஆகியவற்றை சேர்க்கலாம்.

முக்கிய செயல்முறைகள்:

A) ஜினியர் மற்றும் மிடில் பள்ளியில் flexible curriculum பயன்படுத்தப்படுகிறது;

B) தேர்வு அழுத்தம் குறைவாக இருக்கும்.

C) ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தருவதை-விட, கேள்வி எழுப்புதல் மற்றும் ஆர்வம் வளர்ப்பதை முக்கியமாகக் கொள்கிறார்கள் .

D) மாணவர்கள் அறிவு மட்டுமல்லாமல் நடத்தை, பொறுப்பு, சமூகத் திறன் ஆகியவற்றிலும் வளர்ச்சி அடையச் செய்யப்படுகிறார்கள்.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

தமிழ் இனியன் தன் இலக்கை அடைந்துவிட்-
டார்!

₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹₹

Media Attributions

- Screenshot_2026_0730_185434
- Screenshot_2026_0730_185509

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

This is where you can add appendices or other back matter.

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

47 வது புத்தக கண்காட்சி சென்னை

ஐந்திணை இருநூற்றைம்பது

மகிழ்வை மனதில் கொடுக்கும் திணையே !

மலைகள் குகைகள் கொண்டது குறிஞ்சி
மலைகளை குடைந்து இருப்பிடம் கண்டு,
சிலைகளை வடித்து குன்றுகள் தோறும்
சிற்பங்கள் வரைந்து சிந்தனை வளர்த்தனன்!

ஓசைகள் கேட்டு ஒலியினை வடித்து,
எண்ணம் வளர்த்து எழுத்துகள் படைத்து
தமிழை வளர்தனன் பண்பாடு காத்தனன்!

சமயம் வளர்ந்தது சமணம் நிலைத்தது,
சித்தன்ன வாசல் வரலாற்று சான்று,
சைவம் வந்தது கோயில் பிறந்தது,
குளங்கள், குட்டைகள் குடிகள் போற்றினன் !

மாறுதல் ஒன்றே மாறாதது என்பதால்,
தமிழும் மாறியது , தமிழரும் மாறினர்,
முல்லை, மருதம், நெய்தல், பாலை ,
குடிகள் பிறந்தன தமிழும் வளர்ந்ததுவே!
மலைகள் குகைகள் கொண்டது குறிஞ்சி
மகிழ்வை மனதில் கொடுக்கும் திணையே

9095522841

பாவலர் செல்வராஜ் ராமன் :

181

47வது புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் அரங்கில் கீதம் பதிப்பகத்தாரால் ” ஐந்திணை 250” என்கிற நூல் ஜனவரி 2024 அன்று வெளியிடப்பட்டது. அந்த நூலில் வெளியிடப்பட்ட என்னுடைய படைப்பு.

நன்றி : திரு.முத்துசாமி அவர்கள் (கீதம் பதிப்பகம்) மற்றும் சிவராசன் அவர்கள் (நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்)

Media Attributions

- Screenshot_2026_0730_190242

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS

48 வது புத்தக கண்காட்சி சென்னை



கவி விடு தூது

சீரிய சென்னை படைப்பீர்

கிழக்கே கடற்கரை சாலை ,
தெற்கே மத்திய கைலாஷ் ,

என்று விரிந்து வளர்ந்து,
இருந்த கருணை பறவைகளின்
பள்ளிக் கூடம் பள்ளிக்கரணை

சென்னையின் சுமை தாங்கி;
நீர் , நிலவளம் , காக்கும்!
பறவையின் சரணாலயம் பார்த்து !
பூரித்து , பரவசம் அடைவீர்!!

இன்று நிலை உணர்வீரோ?
மரகத மைகறை களாக ,
திட்டாய் !! தீவுக் கூட்டமாய் ???

தொலைத் தொடர்பு பூங்கா நடுவில் ;
உயர்த்து நீர்க்கும் மேம்பாலம் ஒரத்தில்;
விரிந்து வரும் சாலைகள் இடுக்கில்

சிந்தித்து செயல்படுவீர் ! அநு தினமும்
கழிவுகளைக் கொட்டாதீர் ! இனி தினமும்

நாடும் வீடும் வளம் பெறுக!
நிலமும் நீரும் என்றும் செழிக்க!
ஆழியை அழிக்கும் ஆற்றல் வளர்ந்திட !

சிங்காரச் சென்னை படைத்த மேயர்,
சீரிய சென்னை படைக்க கோருவோமே. .!

9095522841 பாவலர் செல்வராஜ் ராமன்

225 கவிஞர்கள்

48வது புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் அரங்கில் கீதம் பதிப்பகத்தாரால் " கவி விடு தூது" என்கிற நூல் ஜனவரி 2025 அன்று வெளியிடப்பட்டது. அந்த நூலில் வெளியிடப்பட்ட என்னுடைய படைப்பு.

நன்றி : திரு.முத்துசாமி அவர்கள் (கீதம் பதிப்பகம்) மற்றும் சிவராசன் அவர்கள் (நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்)

Media Attributions

- Screenshot_2026_0730_190309

THIS BOOK WAS PRODUCED WITH PRESSBOOKS